உ

கணபதி துணை.

# வைத்தியராஜ சிந்தாமணி

## முதல் பாகம்.

தஞ்சைமாநகரம்

ஹிஸ். ஐநெஸ். இராஜஸ்ரீ. சத்ரபதி

சரபோஜி மஹாராஜா சாஹேப் அவர்கள்

தன்வந்திரி மாலில்

சுவய அநுபவசித்தமாய்த்திரட்டி

மஹாராஷ்ட்டிர பாஷையில் எழுதிவைக்கப்பட்டதை

ஷை மகாராஜா அவர்கள் தௌத்திரராகிய

கல்யாணமால்

ஸ்ரீ யோகநாத ஆவாரோவ் சாஹேப்

அவர்களால்

தமிழில் மொழிபெயர்ப்பித்தது.

காணியம்பாக்கம்

முருகேச முதலியார் குமாரர்

சண்முக முதலியாரால்

சென்னை:

ஸ்ரீ ஆதிமூலம் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1922

...ht Registered

[...பாய் ஒன்று.]

T004497
Sarasvati Mahal Library. Thanjavur

# பிரகடனப்பத்திரம்.

காலஞ்சென்ற தஞ்சாவூர் வைத்தியர் ம-ா-ா-ஸ்ரீ, கலியாணமால் கோபால பிள்ளை அவர்கள் பேரில் காபிரயிட் ரிஜிஸ்டராகி பதிப்பித்திருந்த புத்தகங்களெல்லாம் சில வழிந்து போய் மறுபடியும் பதிப்பிக்காமலிருந்த இவ்வைத்திய ராஜசிந்தாமணியை மறுபடி பதிப்பிக்க வேண்டுமென்று அநேகர் கேட்டுக்கொண்டபடியால் ஷை கோபாலபிள்ளையவர்கள் குமாரர் ம-ா-ா-ஸ்ரீ கலியாணமால் கண்ணுசாமிபிள்ளை யவர்களிடமிருந்து (1897 வரு செப்டம்பர்மீ 27. உ) ரிஜிஸ்டர் பத்திரமூலமாக சர்வசுதந்தரத்தையும் விக்கிரயத்துக்கு வாங்கி அது முதல் நான் அச்சிட்டு வெளிப்படுத்திக்கொண்டு வருகிறபடியால் இப்புத்தகத்தையாவது அல்லது இப்புத்தகத்திலுள்ள ஏதேனுபாகத்தை வேறு புத்தகங்களில் சேர்ந்தேனுமாவது அச்சிடுவார்களேயானால் அதனால் நேரிடும் சகல நஷ்டத்தையும் கட்டிக்கொடுக்க நேரிடுமென்று இதனால் தெரிவிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| முதல் பாகம் பிரதி 1-க்கு விலை ரூபா | 1 | 0 | 0 |
| இரண்டாவது பாகம் பிரதி 1-க்கு ரூபா | 1 | 0 | 0 |
| ஷை இரண்டு பாகமும் ஒன்றாய் கட்டியது கலிகோ கட்டடம். | 2 | 0 | 0 |

வேண்டியவர்கள் நம்மிடத்திலும், சென்னை நையினியப்பநாய்க்கன்வீதியில் சாரதாபுத்தகசாலையில் ம-ா-ா-ஸ்ரீ டி. துரைசாமி முதலியாரிடத்திலும், மதுரை புதுமண்டபத்தில் புத்தகவியாபாரம் ம-ா-ா-ஸ்ரீ இ. மா. கோபாலகிருஷ்ண கோன் அவர்களிடத்திலும், கோயமுத்தூர் பெரியகடை வீதியில் புத்தகவியாபாரம் ம-ா-ா-ஸ்ரீ உச்சைய கவுண்டர் அவர்களிடத்திலும், தஞ்சாவூர் கோட்டை ஐயன்கடை வீதியில் புஸ்தகவியாபாரம ம-ா-ா-ஸ்ரீ டி. கே. நாராயணசாமி நாயுடு அவர்களிடத்திலும், கும்பகோணம் கடை வீதியில் புத்தகவியாபாரம் ம-ா-ா-ஸ்ரீ கோவிந்தசாமிநாயுடு அவர்களிடத்திலும் விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

கா. சண்முக முதலியார்
ஆறுமுகவிலாச புத்தகசாலை
பொம்பூர் போஸ்டு, சென்னை.

உ

கணபதிதுணை.



# சிறப்புப்பாயிரம்.

தஞ்சைமாநகரம் ம-ா-ா-ஸ்ரீ சதாவதானம்

சுப்பிரமணிய ஐயரவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

உலகமெலாம் புகறஞ்சைச் சரபோஜிமகராஜ னுயர்மாராட்ரத்
தலகிலவாம் பன்னூலு மந்நாளி லோர்ந்துசேர்த் தரிதில்வைத்த
திலகமெனத்தகும்வைத்யராஜசிந்தாமணிதமிழாற்றிகழச்செய்தா
னிலகுபுகழ்நிறையோகநாதவாவா ரேசாகேப்பெனும்பேரோனே.

உ

# சாற்றுக்கவிகள்.

இஃது,

ம-ா-ா-ஸ்ரீ புரசை அஷ்டாவதானம்

சபாபதிமுதலியார் அவர்களியற்றிய

## நேரிசை ஆசிரியப்பா.

நிலைபெறுங்கடற்புவி நெடிதுமகிழ்சிறப்பத்
தலைமைசால்வடமொழி தமிழ்மொழியறிஞர்
மயர்வருமேனை யியலிசைவல்லோர்
குலவுநலத்தது கோதிலாச்செல்வ
நிலவுமாண்புடைமை நிகழும்வளத்தது
வீற்றுவீற்றாகத் தோற்றும்பற்பல
செயற்கைவடிவப் பயிற்சிகூர்நுண்ணிய
தொழிற்கைவந்த எழிற்புலமிக்கோர்
நாளுமிடையறா நீளியற்பொற்பது
தஞ்சையம்பதிக்கண் விஞ்சியவரசியற்
செங்கோல்நடாத்தி யங்கணமர்ந்துறை
வரபோஜனைநிகர் சரபோஜேந்திரன்
உலகத்தென்று மலகிலாமன்பதை
உட்புறக்கருவியாற் பெட்புறும்யாக்கைகட்
கொருவிலாவளிமுதல் உரைதகுமூன்றும்
விரவுறக்குறையினு மிகினுமங்குதிக்கும்
நோயெனும்பனிக்கு வீயாச்சுடரெனக்
கிளர்ந்தெழுமியல்பின் வளங்கெழுமனந்த
ஆயுள்வேதநூ லாங்காங்குள்ளன
மேயதோருணர்ச்சி விழுப்பமெய்திய
முதியராலாய்ந்து மொழிந்தவவ்வவ்
விதியினவுடத விவிதமனைத்தும்
செய்முறைகைமுறை திறம்பாவண்ணம்
ஐதினியற்றி யனுபவத்திறத்தின்
முடித்தனவெல்லா முறைகளுமொருங்கு
பாற்படவரைந்து போற்றித்தொகுத்தவை
மாராஷ்டகத்தின் வகைபெறவிருந்தன

மேற்புகல்தஞ்சைப் பார்த்திபன்புதல்வி
ஈன்றசீரிய தோன்றலென்னும்
யோகநாதஆ வாரைராவவர்கள்
வாகுறத்திரவிட மதிஞரைக்கொண்டு
விழுமியதுபயப்ப மொழிபெயர்த்தமைத்த
வயித்தியராஜசிந் தாமணியென்று
வியத்தகுபெயரால் விளங்குமிப்பெருநூல்
இந்நாள்காறு மன்னதோரரசியல்
பெருகுநெடும்பொன் னரண்மனைப்பாங்கர்
மன்னியவுபர்தன் வந்திரிமாலெனத்
தன்னிகர்வயித்திய சாலையிலுள்ளது
பின்னரந்நகரிற் பிறங்கியமேன்மைப்
பூவாதிபகன சீவாஜிராஜ
சேகரனருளிய செழுந்தவக்கோமகள்
நிறையறிவமைவு பொறையருளிருக்கை
ராஜாசகாராம் எனவெண்டிசையினும்
தேசார்கீர்த்தி திகழ்கம்பீர
மிகுமணிமகுட வேந்தர்கோமான்
புகலுறுங்கல்விப் புநிதர்முதலோர்க்கு
வரையாதுகொடுக்கும் வள்ளலெஞ்ஞான்றும்
மனங்களிகூரும் வாழ்க்கைத்துணையாய்
அனந்தபங்கற்பெனு மணிபூணருந்ததி
பூஜிதமாயிஜி ராஜாவவர்கள்
பரோபகாரப் பயன்றரவெவர்க்கும்
திரோபவமின்றிச் செவ்விதின்வழங்கி
மல்குகவெனத்தன் வண்மையினயந்து
பல்கநீடச்சிற் பதித்துநல்கியது
முன்னைநாட்டேவரு முகுந்தனுமொருங்கே
இன்னமுதங்கடைந் தெடுத்தாற்போலா
ததனையோர்சிறி[illegible] மவலப்படாமைக்
கதுமெனத்திரட்டிக் கரைக்கண்
வைத்ததுபோலும் வாழிமாநிலத்தே.

திரிசிரபுரம் - மஹாவித்வான்-மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் மாணு
அரன்வாயல்-வேங்கடசுப்புப்பிள்ளை
இயற்றிய
அறுசீர்க்கழிநெடில்டியாசிரியவிருத்தம்.

சீர்பெருகுதஞ்சைநகர்ச்சரபோஜிமன்னர்பிரான்றிரட்டிவைத்த
ஏர்பெருகுமனுபோகமுதிர்ந்தபல கைமுறைகளெண்ணிலாத
பார்பெருகுமாந்தர்கணேயிரிந்தோடப்பண்டிதர்கள்பரவப்பாரு
நேர்பெருகுநலவைத்யராஜசிந்தாமணிக்கெந்நானிகரதாமே.

தெய்வமுறைமுதலாக நெய்யீருவமிர்தம்போற்றிகழுமிந்த
வுய்வருளுநலவயித்யராஜசிந்தாமணியுமிதையுலகில்யார்க்கும்
கைவருமாறருள்யோகநாதவாவாரேசாகேப்கனவான்ரூனும்
மெய்வளருங்காரணனுங்கோபாலவிற்பனனுமிளிர்கமாதோ.

---

கி-பி-348 வரு முதல் 1530-வரையில்,

## சோழதேசத்தின்வரலாறு.

### அரசர்களினது ஆளுகை விபரம்.

சம்புத்தீவினுள்ள பரதகண்டத்தில், சோழநாடாகிய தென் தேசத்தில், பூர்வம் குபேரன் இராவணனால்தனது இராச்சியமாகிய இலங்காபுரியையும் புட்பவிமானத்தையும் இழந்து, தஞ்சைபுரீஸ்வரரையும் ஆனந்தவல்லித்தாயாரையும் பூசித்து, அவர்களினது கிருபையினால் அருள்பெற்றபோது, தட்சண அளகாபுரியெனப் பெயர் பெற்றதான நிரட்சரேகைக்கு வடக்கில் (74) காதத்திலும் இலங்காமேரு சமசூஸ்திரத்துக்குக் கிழக்கில் (24) காதத்திலும் மகாபெருமைபொருந்திய காவேரியாற் சூழப்பட்ட சோழதேசத்தின்கண் தில்லை நடேசரது கிருபைபொருந்திக் கீர்த்திபெற்ற தஞ்சைமாநகரமானது முனிசிரேஷ்டர்களாகிய வசிஷ்டர், பராசரர், கொங்கணவர் முதலிய பிரம்மரிஷிகள் பிரதிஷ்டை செய்த மூர்த்திகரங்களாலும், சிவகங்கைமுதலான தீர்த்த விசேஷங்களாலும் பூதேவிக்குலலாட ஸ்தானம்போல் சிறப்புற்றோங்கிய நகரத்தைப் பூர்வத்தில் ஆண்ட தஞ்சன் தாரகன் என்கிற இரண்டு அசுரர்களையும் நவதுர்க்கைகளால் சங்காரஞ்செய்து, தஞ்சைபுரீஸ்வரரும் ஆனந்தவல்லித்தாயாரும் மகிழ்ச்சியாய் நின்றகாலத்தில் காவடக்கிராமமென்கிறவூரில் விவசாயஞ்செய்துக்கொண்டுகுலோத்துங்கனென்னும் சிவபக்தன் கற்புநிலை வழுவாத மாண்புடைய மனைவியாகிய கோமளாங்கியுடன் எப்போதும் சிவபக்தியும் சிவ பணிவிடைகளும், சிவனடியார்களுக்கு அன்னதானமுதலானதுஞ் செய்துகொண்டு வருங்காலத்தில், தஞ்சைபுரீஸ்வரரும் ஆனந்தவ

ந்தாயாரும் அவன் செய்யும் சிவபூசைகளில் களிப்புற்று, நமபரனைவரவழைத்து, பூலோகத்தில் அனேக சிவஸ்தலங்களும் விஷ்ணுஸ்தலங்களும், அனேகதீர்த்தங்களும் அசுரரால் ஜீரணமாகிப்போனவைகளை ஜீரணோத்தாரஞ்செய்து, அறம்வழங்கிவரும்படியாய் நீ சீக்கிரத்தில் எனதன்பனாகிய குலோத்துங்கனுக்கு மகுடாபிஷேகஞ்செய்து, தனங்களால்பூரணம்செய்திவையென்று ஆக்ஞாபித்தவுடன் குபேரன் குலோத்துங்கனையும் மனைவியாகிய கோமளாங்கியையும் வரவழைத்து, நல்ல சுபமுகூர்த்தத்தில் திவ்விய பீதாம்பர பூஷணங்களால் அலங்கரித்து, வெண்பூச்சக்கரக் குடைநிழலில் ஜயவிஜயபவாவென்று வேதியர்கள் ஆசீர்வதிக்கவும், பலர் துதிக்கவும் மங்கள ஓசையுடன் அவ்விருவரையும் சிங்காதனத்தில் உட்காரவைத்து நவரத்தினகசிதமானபட்டத்தை நெற்றியிற் கட்டிக் கோடிசூரியப்பிரகாசமான ரத்தினகிரீடத்தைச் சிரசிற் சூட்டி, பலபுண்ணிய தீர்த்தங்களால் அபிஷேகஞ்செய்வித்தார். அன்றுமுதல் குலோத்துங்க சோழமஹாராஜாவென்று வழங்கிவந்தது. இவ்வித ஈஸ்வரப்பிரசாதமகிமையால் பூமியைவெட்டி அனேக திரவியங்களை யெடுத்து இராஜாங்கத்துக்குரிய ரதகஜதுரகபதாதிகளும், அரணமும், மாடமாணிகைகூடகோபுரங்களும் அமைத்து அங்கிருந்து மனுநீதிதவறாமல் செங்கோல்செலுத்தி, அநேகஸ்தலங்களைச் சீரணோத்தாரஞ்செய்து சையபருவதபுத்திரியாகிய காவேரியின் ஆதியாகிய சையாசலேஸ்வரர் பாதகமல முதல் மாயூரநாதர் சமுத்திரசங்கம் வரையில் நூறுமுகமாய்ப்பிரித்துக்கரைகட்டிக் குடிப்பயிர்களை இரட்சித்து (90) வருஷம் நீதிசெலுத்திவந்தார். அவர்குமாரனாகிய

| நெம்பர். | பெயர். | வருஷம். |
|---|---|---|
| 2 | தேவசோழமகாராஜா | 60 |
| 3 | சசிசேகரசோழமகாராஜா | 70 |
| 4 | சிவலிங்கசோழமகாராஜா | 76 |
| 5 | வீரசோழமகாராஜா | 87 |
| 6 | கரிகாற்சோழமகாராஜா | 90 |
| 7 | பீமசோழமகாராஜா | 77 |
| 8 | இராஜேந்திரசோழமகாராஜா | 78 |
| 9 | வீரமார்த்தாண்டசோழமகாராஜா | 66 |
| 10 | கீர்த்திசோழமகாராஜா | 78 |
| 11 | ஜெயசோழமகாராஜா | 66 |
| 12 | கனகசோழமகாராஜா | 70 |
| 13 | சுந்தரசோழமகாராஜா | 60 |
| 14 | காலகாலசோழமகாராஜா | 77 |
| 15 | கலியாணசோழமகாராஜா | 67 |
| 16 | பத்திரசோழமகாராஜா | 70 |



ஹிஸ்ஹைஹநெஸ்

சிவாஜிமஹாராஜா.



ஹிஸ்ஹைஹநெஸ்

சரபோஜிமஹாராஜா.



ஹெர்ஹைஹநெஸ்

மாயிஜிராஜா.

கி-பி-1530 ஞு முதல் 1662-வரையில்.

1 விஜயமன்னார்நாயகர்
2 விஜயசொக்கலிங்கநாயகர்
3 விஜயசேவப்பநாயகர்
4 விஜயராகவநாயகர்

போசலே அரசர்கள் 1676 ஞு முதல் 1855 வரையில்.

| நெம்பர். | பெயர், | வருஷம். |
|---|---|---|
| 1 | ஏகோஜிமகாராஜா | 8 |
| 2 | சாஜிமகாராஜா | 27 |
| 3 | சரபோஜிமகாராஜா | 18 |
| 4 | துக்கோஜிமகாராஜா | 8 |
| 5 | பாவாசாயேப்மகாராஜா | 1 |
| 6 | சுசான்பாயிராணி | 3 |
| 7 | காட்டுராஜா | 1 |
| 8 | பிரதாபசிம்மமகாராஜா | 24 |
| 9 | துளஜாமகாராஜா | 23 |
| 10 | அமரசிம்மமகாராஜா | 12 |
| 11 | சரபோஜிமகாராஜா | 33 |
| 12 | சிவோஜிமகாராஜா. | 24 |

இவ்வாறு குலோத்துங்கசோழன் முதலாக 16-பேர் சோழ மகாராஜர்களும், பிறகு நாயகர்வமிசத்து அரசர்கள் நான்குபேரும் பிறகு போசலேவம்சத்து மகாராட்டிர அரசர்கள் ஏகோஜிமகாராஜா முதல் சிவாஜிமகாராஜா அவர்களீருக 12-பேரும் தஞ்சையை 1855-ம்-ஞு வரையில் ஆண்டனர். பிறநு சிவோஜிமகாராஜா அவர்கள் புத்திரியாகிய மாயிஜிராஜா அவர்கள் 1885-ம்-ஞு ஜன்வரிமீ வரையில் ஆங்கிலேய துரைத்தனத்தில் உபகாரச்சம்பளமும், அந்தஸ்துக்குரிய மரியாதையும் பெற்று வாழ்ந்திருந்தார்கள். இவ்வாறு பிரசித்திபடைந்த இத்தஞ்சையராசாங்கமானது இனியும் சிறப்புற்றோங்கும்படி ஸ்ரீ ஆனந்தவல்லி சமேதராகிய ஸ்ரீதஞ்சைபுரீஸ்வரர் அருள் புரிவாராக. சுபம். சுபம்.

# முகவுரை.

சச்சிதானந்த மூர்த்தியாய்ச் சகலபுவன கர்த்தாவாகிய கடவு
ளாற் சிருஷ்டிக்கப்பட்ட ஆன்மகோடிகட்குக் கருவியாய் இதனுட்
கூறப்படும்பல அவிழ்தமுறை அட்டவணைக்கு வைத்திய அனு
போக சாரசங்கிரகமெனப்பெயர் அமைதியேயாயினும் தஞ்சை
அரசர் கையாண்ட அருமைநோக்கிப் பலர் வைத்தியராஜசிந்தா
மணி யெனப்பெயரிட்டனர். அஃதெவ்வாறெனின்-

அரசர்கள் ௩௨-வகை ஆயுதங்களுடன் நால்வகைச் சேனைச
முத்திரங்களைக்கொண்டு காலமறிந்து சத்துருக்களை வென்று உயி
ர்களை ரக்ஷிப்பதுபோல, தேவ சிகிச்சை-௧, இராக்கதசிகிச்சை-௧
மானிடசிகிச்சை-௩௰ என்கிற சிகிச்சாயுதங்களையும், ஒஷதியென்
கிற நால்வகைச்சேனைகளையுங்கொண்டு, காலமறிந்து வியாதிகளெ
ன்கிற பகைவர்களைவென்று தேகத்தை இரட்சிப்பதுபோல, தஞ்
அரசர்களிற் சரபோஜிமகாராஜாவானவர் சக்கீத முதலிய பலரச
முள்ள விநோத அரசபோகங்களிற் சிறப்புற்றவரா யிருந்தனரெ
ன்பதும், அதனாற் றஞ்சையிற்பற்பல விற்பத்திகள் சிறந்துள்ளன
வென்பது மியாவருக்கு மெளிதிற்றெரிந்த விஷயமாதலின் அவை
நிற்க உயிர்க்குறுதிபயப்பதாங் கல்விச்சாலைகளு மிலக்கிய விலக்க
ணபலபுராண காவியங்களிற் றேர்ச்சியுள்ள பலவித்வான்கள் சேர்
க்கையுள்ள கல்விச்சபையும், உடற்குறுதிபயப்பதாம் வைத்திய
சாலையும் தமதிருகண் போற் சிறப்பித்துப்பரிபாலித்து வந்தனர்.
அவைகளிற் கல்விச்சபை மகத்துவங்கேள்வியுற்ற துரைத்தனத்
தார் ஆதியிற்சென்னையில் காலேஜ் ஏற்படுத்துங்காலத்தில் மகா
ராஜாவைக் கேட்டுக்கொண்டதின் பேரில் மேற்படி கல்விச்சபை
வித்வான்களிலொருவராகிய கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தே
சிகரை அனுப்ப அவராற் சென்னைக் கல்விக்சாலை சிறப்புற்றது.
அன்றியும் இக்காலமும் தஞ்சையில் அநேகபாஷாந்திரங்களில் வ
ரையப்பட்டனவாகிய அநேக நூல்களமைந்துள்ள சரஸ்வதி மா
லென்றொன் றிருக்கின்றது. ஷை சரபோஜிமகாராஜா அவர்கள்
வைத்தியசாலையை விருத்திசெய்யுங்காலத்தில் ஆயுள்வேதத்தேர்
ச்சியனுபோகங்களிற் சிறப்புற்ற முத்துச்சாமிதீக்ஷிதர், சேதுபண்
டிதர், வேங்கடபதி ஐயர், பரங்கிப்பேட்டை அப்புவைத்தியர்,
கோபாலபிள்ளை, ஐயாகண்ணுபிள்ளை, சிதம்பரப்பிள்ளை, ராமராவ்,
துமாள்ராவ் என்னும் பண்டிதர்களைக்கொண்டு தமதுராஜ குடும்ப
த்திற்கும் தமது நகரவாசிகளுக்கு முபயோகமாகும்பொருட்டு
விசேஷதிரவியங்களைச் செலவிட்டநேக அவிழ்தங்க ளமைத்துக்
கையாண்டுவந்த அனுபோகமுறைகள் மாராட்ரபாஷையில் வசன
ரூபமாய் எழுதப்பட்டிருந்தவைகளைச் சிலமாராட்ரபண்டிதர்களா
லும் தமிழ்ப்பண்டிதர்களாலும் தமிழில் மொழிபெயர்த்து ஷை
மகாராஜாவின் பெண்பாலினது பௌத்திரராகிய கலியாணமால்
ம-ா-ா-ஸ்ரீ யோகநாத ஆவாரேசாகேப் அவர்கள் தம்முன்னிலையில்
எழுதுவித்து லோகோபகாரமாய் அச்சிற்பதிப்பிக்கச் செய்தனர்.

உ

கடவுள் துணை.

# வைத்தியராஜசிந்தாமணி.

தஞ்சைமாநகர்க் கீழ்வாயில்

## வெள்ளைவிநாயகர் துதி.

நேரசை வெண்பா.

சீர்வைத் தியராஜ சிந்தா மணியென் ம
ஓர்வைத் தருமிந்நூற் கோர்காப் ட -பார்வைப்பில்
விஞ்சுசுக்குப் போலெவர்க்கு மேலாகி முன்னுப
தஞ்சைவெள்ளைக் குஞ்சரத்தின் றாள்.

## தஞ்சைபுரீஸ்வரர் துதி.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

பொன்பதிக்கு முயர்வேளூரினில் வயித்யநாதப்பேர் புனைந்தானுந், தன்பதிக்குப் பதியானேன் றிரட்ட பதென்றோர் பக்கஞ் சார்தலானும், இன்பதிக்குமியல் வயித்யரா சிந்தாமணியென்னுமிந்நூற்கன்னன், அன்புதிக்கு மெனத்த சை புரீசனடிமலரை முடிக்கணியாக் கொள்வாம். (க)

## ஆனந்தவல்லியம்மை துதி.

அலகிலவாமண்டங்களனைத்தையுந்தன் கருப்பையிடையடைக்காதீன்று, விலசவிலா துணைவளித்துக் காத்திடுகாலவ்வுர்க்கு வினைநோய்விட்டநு, குலகினிடை யிவ்வயித்ய ராசசிந்தா மணிநாலு முற்றதென்றே, இலகுமனத் தருள்சுரக்கு மானந்த வல்லிபத மிறைஞ்சி வாழ்வாம். (உ

## தஞ்சைப் பெரியாவுடையார் துதி.

விரிவா யலைகடல்சூழ் மேதினியோர் கைக்கனிக்குச்
சரியாம்வயித்தியசிந்தாமணியா நூன்மல்கப்
பரியாமறைநான்கும் பரவவெழிற் றஞ்சையில்வாழ்
பெரியா வுடையானைப் பேணிப் பணிந்திடுவாம். (ங)

## சங்கரநாராயணர் துதி.

இக்காலத்தியல்வயித்யராசசிந்தாமணியென்னுமிந்நூலோங்க
வக்காலத்தலை டலைக்கடைந்திடுகால்வெளிவந்தவமுவதையேந்து
முக்காலநாடி தெரிந்தவனுமெல்லாம்வல்லசித்தமுனிவன்றானும்
எக்கா ழ நவனெனச்சங்கரநாராயணனையேத்திவாழ்வாம். (ச)

## முருகக்கடவுள் துதி.

தன்னுரியமாணவனுங் குடமுனிமுன்னுப பலதவத்தின்மிக் கோர்,பன்னியவாயுள்வேதக்கடலிலெழும முதாகிப்பாரிலென்றும் மன்னியொளிர்தருவயித்யராசசிந்தாமணிவிளங்கும் வண்ணஞ்செ ய்தல், பொன்னுறைதஞ்சைக் குடவாய்க்குமரனுக்கே கடமை யென்று போற்றல் செய்வாம். (ரு)

## வயிரவர் துதி.

கயிரவமனையவாய்க் கானமாதர்தந்
தயிரவியளவிடுந் தன்வந்தரியின்மாற்
செயிரறுவயித்தியந் திரட்டுமிந்நூற்கருள்
வயிரவனடிமலர் மனத்திருத்துவாம். (சா)

## திருநந்திதேவர் துதி.

அந்திவானிகர்சடை யண்ணல்சந்நிதி
வந்தவானவர்தமை வகுத்தொழுங்குறப்
பந்தியினிறுத்துசீர் படைத்தசூரல்கொள்
நந்திநாதன்பதநளினம் போற்றுவாம். (எ)

## சரஸ்வதி துதி.

காமனை முன்னைநாட் கண்டவாயிர
நாமமுற்றவனெழி னுபித்தாமரைப்
பூமனையாக்குடிபுக்கா னுவில்வாழ்
பாமகளடியிணை பாடியேத்துவாம். (அ)

## தன்வந்தரியார் துதி.

மெய்யதாய் வயித்தியம் விளம்பு நூலினை
வெய்யமாப் பிணிக்களை மெலிந்து தீர்தர
வையகத்துயிர்ப்பயிர் வளரத்தந்தரு
ளையர்தன் வந்தரியாரைப் போற்றுவாம். (கூ)

## அகத்தியமுனிவர் துதி.

கலையெனும்பெரியதோர் கடலைப்புறு
டலைகடலொடுகுடித் தம்பரத்துபர்
சிலைதனைக்கரமலர் தீண்டித்தாழ்த்திய
மலையமாதவனடி மனத்திற்கொள்ளுவாம். (க0)

## குருவணக்கம்.

பஞ்சினினெருப்புருபரிசெனுமடம்
விஞ்சியவிருளினை வீட்டிமாணவர்
உஞ்சுரச்செயுமருளுதிக்குயாகரன்
அஞ்செழுத்தினனடி யகத்துட்கொள்ளுவாம். (கக)

உ

கணபதிதுணை

# வைத்தியராஜசிந்தாமணி

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பொன்பூத்த மணிமகுடம் புனைந்து தஞ்சை
யுறைந்துலகைப் புரந்தளித்த
மன்பூத்த சரபோஜி மகராசன் றன்வந்திரி
மாலி னூலோர்
வன்பூத்த வுதவிகொடு சேர்வயித்ய
ராசசிந்தா மணி விளங்கத்
தென்பூத்த குணவாயி லுறை வெள்ளைக்
களிற்றிருதாள் சேவிப்பாமால்.

## முத்துசாமி தீக்ஷிதர்

### கணபதி மூலரசம்.

சீந்திற்கொடியை மேல்தோல் போக்கித் தண்டுகளை நறுக்கிய ரசம் வீ ரு, தேன் வீ க, கோமூத்திர சிலாசத்துபற்பம் பணவிடை-உ, வெள்ளைத்தாளக பற்பம் - பணவிடை-உ, இவைகளை ஒன்றாய்ச்சேர்த்து உள்ளுக்குக்கொடுக்க விஷமேகசம்பந்த க்ஷயரோகங்களை நிவாரணஞ்செய்யும். இச்சாபத்தியம்.

### சண்முகசேந்தூரம்.

2. பாலரசம், லிங்கம், பூரம், வீரம், தாளகம், வகைக்கு பூ க, ஊசிகாந்தம், சீமை அதிவிடயம் வகைக்கு பூ வ, இவைகளை மைபோல் கல்வத்தில் கருவூமத்தையிலைச் சாற்றைவிட்டு நாலுசாமமரைத்து, பில்லைசெய்து ரவியிலுலர்த்தி, சட்டியில் வைத்து, மேல்சட்டியால்மூடி, அஞ்சுசீலைமண் வலுவாய்ச்செய்து அடுப்பிலேற்றி, தீபாக்கினியில் நாலுசாமம் எரித்திடுக. பிறகு ஆறவிட்டு எடுத்து, கற்றாழைச்சோற்றைப் பிசைந்து அந்தச் சாற்றைவிட்டு நாலுசாமம் அரைத்து, பில்லைசெய்து ரவியிலுலர்த்தி முன்போலவே சட்டியில் சீலைமண்செய்து, தீபாக்கினியால் நாலுசாமம் எரித்து ஆறவிட்டு, முன்போலவே கற்றாழைச் சாறு விட்டு அரைத்து நாலுசாமம் எரித்தால், செந்தூரமாகும். எடுத்துத் தூள்செய்து வைத்துக்கொள்க. அரிசியிடை காலைமாலை அநுபானங்களில் ஆறுபொழுது கொடுக்கும்போது சன்னிசுரங்

கள் தீரும்; நாள்-௨௦-காலைமாலை அந்பானங்களில்கொள்ள மேக ரணம், யோனிப்புற்று, லிங்கப்புற்று, பவுத்திரம், காசம், வாதம் எண்பதும் தீரும். பத்தியம் - காலம், சக்தி, தேசம் பார்த்துச் செய்துகொள்க. கடவுள்பேர்கொண்ட செந்தூரமாதலால் கற்றோர் பெரியோர்கள் தெரிந்து செய்வார்களென்று விரித்துச் சொல்லவில்லை.

---

## முத்துக்குமாரசாமிமுதலியார்

### காயசித்திலேகியம்.

3. சாதிக்காய், ஏலரிசி, வால்மிளகு, லவங்கம், அக்கிராகாரம் வகைக்கு பூ க, சீரகம் பூ டு, சித்திரமூலவேர்ப்பட்டைச் சூரணம் பூ உ, அதிமதுரச்சூரணம் பூ டு, பறங்கிச்சக்கை பூ க௦, இச்சரக்கெல்லாம் ரவியிலுலர்த்தி யிடித்துச்சூரணித்துக்கொண்டு நெய் பூ ௨௦, ஒரு சட்டியில்விட்டு ஷை சூரணம் தூவிக் கொஞ்சம் வேகவிட்டு வெள்ளைச்சக்கரை பூ ௨௦, நாற்பது எலுமிச்சம்பழச்சாற்றில் கரைத்து வடிகட்டிக்கொண்டு, கொஞ்சங் கொஞ்சமாய்விட்டு லேகியபதத்தில் இறக்கி குங்குமப்பூ பூ ஹ, கோரோசனை பூ வ, பொடிசெய்து தூவி, கிளறி வைத்துக்கொண்டு காலை மாலை கழற்சிக்காயளவு உட்கொள்க. இச்சாபத்தியம். சகல வியாதிகளும் தீரும்.

---

## ஐயாகண்ணுபிள்ளை

### அஸ்வகந்திரசாயனம்.

4. அமுக்கிராக்கிழங்கு பூ உசு, ஏலம், லவங்கப்பட்டை லவங்கபத்திரி, சிறுநாகப்பூ,கொத்தமல்லி, கொடிமுந்திரிப்பழம், சந்தனம், சன்னலவங்கப்பட்டை, கர்க்கடகசிங்கி, கர்ட்டெருமைப்பால், சுக்கு, மிளகு, திப்பிலி, வெட்டிவேர், கிராம்பு, திப்பிலிமூலம், சித்திரமூலம், செவ்வியம் தினுசுக்குவீ ந-இடித்து வடிகட்டி நாலுபடிப்பால் ஒரு சட்டியில் வார்த்து பூ டு௦ சீனிச் சர்க்கரை போட்டு வடிகட்டிப் பக்குவம் செய்து கொண்டு, ஷை சூரணத்தைப்போட்டு, நெய் படி-உ, தேன்படி-க, சேர்த்து ரசாயன பக்குவமாய்ச்செய்துகொண்டு வேளைக்குக் கொட்டைப் பாக்கு அளவாக நாள் ஒன்றுக்கு இரண்டுவேளை ஒருமண்டலம் சாப்பிட்டு வந்தால் மேகசுரம், ரக்ததபயித்தியம், பித்தரோகம், அஸ்த்திசுரம் முதலான வியாதிகள் தீரும். இச்சாபத்தியம்.

### அஸ்வகந்திலேகியம்.

5. சுக்கு, மிளகு, திப்பிலி, லவங்கப்பத்திரி, தாளிசப்பத்திரி, சிறுநாகபூ, கிராம்பு,கொடிமுந்திரிப்பழம்,பேரீச்சம்பழம்,

ஏலம், சீரகம், லவங்கப்பட்டை, கண்டதிப்பிலி, அரத்தை, வகைக்கு பூ க, பொன்னிறமாய் வறுத்துக்கொண்டு அமுக்கராக்கிழங்கு பூ உ0, தூதுவளைவேரின்பட்டை பூ க, கண்டங்கத்திரிவேரின் பட்டை பூ க, சேர்த்து இடித்து வடிகட்டி, பால் சேர்-க-ல், சீனிசர்க்கரை பூ க0, கலந்து பாகுபோல் செய்து பக்குவமாகிற காலத்தில் ஷை சூரணத்தைப்போட்டு, நெய் சேர்-க, தேன் சேர்-க விட்டு, லேகியபக்குவமாய்ச் செய்துகொண்டு, வேளைக் குக் கொட்டைப்பாக்கு அளவு நாள் ஒன்றுக்கு இரண்டு வேளை யாக ஒரு மண்டலம் சாப்பிட இருமல், அக்கினிமந்தம், அந்தர் கதசுரம் நீங்கும். இச்சாபத்தியம்.

சுரத்துக்கு மெருகன்கிழங்கு கடுகு.

6. வெதுப்படக்கியிலை ஒரு பிடியையொரு சட்டியில்போட்டு, மெருகன்கிழங்கு பூ வ, மிளகு பூ உ, பசுவின்மோர் சேர்-உ சேர்த்து உபாயமாய் சுவாலைபோட்டு வேகவைத்து மோர் சுண் டிப் போகிறவரையில் அடுப்பின்மேல் வைத்திருந்து இறக்கிக் கொண்டு, பனவெல்லம் ஒருபலம் சேர்த்து அரைத்துக்கொண்டு சட்டியிற் போட்டு. வீசம்சேர் நெய்விட்டு அடுப்பின்பேரில் வைத் துச்சொற்ப சுவாலைபோட்டு, அடியில் ஒட்டிக்கொள்ளாதபடி கரண்டியினல் கிளறி லேகியபக்குமாய்ச் செய்து எடுத்துக் கொண்டு, வேளைக்குச் சிறு கழற்சிக்காயளவு இரண்டுவேளை பத்துநாள் புசித்தால் எவ்விதமான ஜீரண சுரம் இருந்தாலும் அனுகூலப்படும்.

பத்தியம்—மோரும் புளியும் சேர்த்துக்கௌள்ளலாம். குழந் தைகளுக்கும், ஐந்துவயதுக்கு மேற்பட்டுப் பதினறுவயதுக்குட் பட்டவர்களுக்கும், சுரம்வந்து ஒன்பதுநாளாயும விடாமல் தொந் திரவு படுத்தினல் முக்கியமாய் இந்த மருந்தைக் கொடுக்கவேண் டியது. பெரியவர்களுக்குச் சுரமவந்து அது அஜீரணசுரமாய் இ ருந்து அசக்தியினலாவது அல்லது அரோசிகையினலாவது புளி சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று அபேட்சையிருந்தால் இந்த மருந்தைக் கொடுத்துப் புளியையும் மோரையும் சேர்த்துக்கொ ள்ளலாம்.

பலவெதுப்பு என்கிற ஜீர்ணசுரத்துக்கு
சிருங்காதி சூரணம்.

7. லவங்கப்பட்டை வீ க, சிறுநாகப்பூ வீ உ, ஏலம் வீ ச, மிளகு வீ அ, திப்பிலி வீ கசு, சுக்கு வீ ௩உ, அமுக்கிருங்வேர், வீ சுச, சர்க்கரை வீ கஉஅ, சரக்குகளை இடித்து வடிகட்டி சூரணமாகசெய்துகொண்டு, சர்க்கரைசேர்த்து நன்ருய்க் குழை த்து, புதியகலயத்தில் பொட்டு வைத்துக்கொண்டு, வேளைக்கு இரண்டு வராகனிடை வீதம் இருபதுநாள், நாள் ஒன்றுக்கு

இரண்டுவேளை சுத்த ஜலத்தில் சாப்பிட்டால் ஜீர்ண சுரம், அரோசிகம், அஸ்திசுரம், சரீர இளைப்பு முதலான வியாதிகள் நீங்கும். இச்சாபத்தியம்.

### கபரோகத்துக்கும் இருமலுக்கும் நெய்.

8. வெந்தயம், சீனுகாரம், அதிவிடயம், கொத்தமல்லி, கல்நார், சந்தனம், சுக்கு, திப்பிலி, மிளகு வகை க-க்கு-வீடு, பசுவின்நெய் சேர் ஒன்றில் வறுத்து, மிகுதியாயிருக்கிற நெய்யையும் அதோடேசேர்த்து, மெலிய அரைத்துக் கழற்சிக்காய் அளவான உருண்டைகளாய்ச் செய்துகொண்டு, வேளைக்கு ஒரு உருண்டைவீதம் நாள் ஒன்றுக்கு இரண்டு வேளையாக அரைமண்டலம் சாப்பிட்டால் கபரோகம், இருமல், உளைமாந்தம் என்கிறரோகம் க்ஷயரோகம் முதலானவைகள் அனுகூலமாகும்.

### இருமலுக்கு லேகியம்.

9. திப்பிலி, விருட்சியினுடையவேர், இந்த இரண்டையும் இடித்து வடிகட்டி, பசுவின் நெய்யிலாவது அல்லது பசுவின் வெண்ணெயிலாவது வேளைக்கு-கஉ வீ வீதம் நாள் ஒன்றுக்கு இரண்டு வேளையாக ஒரு மண்டலம் சாப்பிட்டால், கபரோகம், லாகிரி சொஸ்தமாகும். ஸ்திரீகள் புருஷர்களை வசியம் செய்துக் கொள்ளவேணுமென்று மருந்திடு என்கிற ஔஷதம் கொடுத்து அதினலே உளைமாந்தம் என்கிற வியாதி வந்திருந்தாலும் இந்த மருந்தினல் அனுகூலமாகும்.

### இருமலுக்கு வாய்விளங்காதி சூரணம்.

10. வாய்விளங்கம், சுக்கு, சிற்றரத்தை, திப்பிலி, பெருங்காயம், இந்துப்பு, கண்டுபரங்கி, இவை சமபாகஞ்சேர்த்துக் கொண்டு, சூரணம்செய்து, அந்தச்சூரணத்தில் நாலில் ஒருபாகம் எவச்சாரம் பொடிசெய்து சேர்ந்து, வேளைக்கு உ-வீ, தேனில்கலந்து, நாள் ஒன்றுக்கு இரண்டுவேளை சாப்பிட்டால் இருமல், இரைப்பு, ஆரோசிகம், சுரம், அக்கினிமாந்தம் இவை அனுகூலமாகும்.

### பஞ்சகாசம் இருத்துரோகத்துக்குப்
### பிப்பலாதி ரசாயனம்.

11. திப்பிலி பூ கசு, சர்க்கரை பூ அ, வாய்விளங்கம், கண்டுபறங்கி, மிளகு, சீரகம் வகைக்கு பூ ச, திப்பிலிமூலம், செவ்வியம், கொடிவேலி, சுக்கு, லோகசெந்தூரம், கையாந்தகரைசூரணம் வகைக்கு பூ உ, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஏலம், கடுக்காய், தாணிக்காய், நெல்லிமுள்ளி வகைக்கு பூ க, ஜாதிக்

காய் பூ உ, தேன் சேர்-அ, இந்த மருந்துகளையெல்லாம் இடித்து வடிகட்டி, சர்க்கரையும் தேனும் சேர்த்து அரைத்து, ஒருபாத்திரத்தில் எடுத்துவைத்துக்கொண்டு, வேளைக்குப் பெரிய கழற்சிக்காய் பிரமாணம் நாள் ஒன்றுக்கு இரண்டுவேளை ஒருமண்டலம் சாப்பிட்டால் பஞ்சகாசம், இருத்துரோகம், பாண்டுரோகம், சுரம், வாயு, அக்கினிமந்தம் முதலான வியாதிகள் அனுகூலமாகும். இந்தமருந்து அனுபோகத்துக்கு வந்தமருந்து. இச்சாபத்தியம்.

### சிலேஷ்மம் முதலானதுக்கு அரத்தை லேகியம்.

12. பேரரத்தை பூ உரு, சிற்றரத்தை பூ உரு, கொடிவேலி பூ ரு௦, செவ்வியம் பூ ௩உ, மிளகு, திப்பிலி, கண்டுபாங்கி, சிற்றுமுட்டி, பேராமுட்டி, லவங்கப்பட்டை, அகில்பட்டை, செம்முள்ளிவேர், ஆடாதோடைவேர், நெருஞ்சில்வேர், வெள்ளைச்சங்கங்குப்பி, கறுப்புச்சங்கங்குப்பி, பிரண்டைவேர், சிறுகாஞ்சிவேர், நீலிவேர், முக்காவேளைவேர், சாட்டரணைவேர், நாரத்தம் இலை வகைக்கு பூ கசு, இவைகளையெல்லாம் இடித்து ஒருபானையில் போட்டு கசு-படி ஜலத்தைவிட்டு உ-படி ஆகும்படி காய்ச்சி வடிகட்டிய ஜலத்தோடு அ௦பூ பழைய நல்ல வெல்லம் சேர்த்துப்பாகுசெய்து, பக்குவமாகிற சமயத்தில் சுக்கு, மிளகு, திப்பிலி, யானைதிப்பிலி, திப்பலிமூலம், அதிவிடயம், சிறுதேக்கு, வாய்விளங்கம், லவங்கம், கர்க்கடகசிங்கி, மெருகன்கிழங்கு, பூலாங்கிழங்கு, சிறுநாகப்பூ, தக்கோலம், கொத்தமல்லி, ரேணுகம், வகைக்கு பூ ரு, இடித்துவடிகட்டி ரசசெந்தூரம் பூ ரு, லோகசெந்தூரம பூ ரு, வெண்காரப்பொரி பூ ச, பொடிசெய்துபோட்டு, தேன் சேர்-அ விட்டுப் பக்குவமாய்ச் செய்துகொண்டு, வேளைக்குக் கொட்டைப்பாக்களவாக நாள் ஒன்றுக்கு இரண்டுவேளை ஒருமண்டலம் சாப்பிட்டால், இருபதுவகையான சிலேஷ்மரோகங்கள், பஞ்சகாசம், சுவாசகாசம், மந்தாக்கினி, மல்பந்தம், அன்னத்வேஷம், ஆரோசிகம், வாந்தி, மார்நோவு, விக்கல், தலைவலி, பீனிசம், வாயுரோகம் முதலானவைகள் சொஸ்தமாகும்.

### வாய்வுக்கும் க்ஷயத்துக்கும் திப்பிலியாதிலேகியம்.

13. திப்பிலி பூ அ, மிளகு, சுக்கு, வாயுவிளங்கம், அமுக்கிராவேர் வகைக்கு பூ உ, கொடிவேலி, செவ்வியம், அரத்தை, உலர்ந்த கையாந்தகரை வகைக்கு பூ க, இடித்து வடிகட்டி லோகசெந்தூரம் பூ க, சேர்த்து சர்க்கரை பூ ரு, தேன் பூ அ, கலந்து மெலிதாக அரைத்து வேளைக்குக் கொட்டைப்பாக களவாக நாள். ஒன்றுக்கு இரண்டுவேளை சாப்பிட்டால் வாய்வு, க்ஷயம், சுவாசகாசம் அனுகூலமாகும்.

## இருமலுக்கு லேகியம்.

14. வெண்காரம், திப்பிலி, புழுங்கலரிசி, மிளகு, கிராம்பு வகைக்கு பூ ௨, புழுங்கலரிசி மாத்திரம் நெய்யில் வறுத்து இடித்துக்கொண்டு மற்றச்சரக்குகளை இடித்து வடிகட்டி சேர்த்து நெய்யும் அதில்கலந்து லேகியமாகச்செய்துகொண்டு, கழற்சிக்காய் அளவான உருண்டைகள் வேளைக்கு ஒரு உருண்டையாக உட்கொண்டுவந்தால் இருமல் சொஸ்தமாகும்.

## இருமலுக்குத் தேற்றான்கோட்டைலேகியம்.

15. தேற்றான் விதை பூ ௪ ஜலத்தில் முப்பது நாழிகை ஊறவைத்து, ஓட்டுப்பில்லையின்மேல் நன்றாய்த்தேய்த்து மேல் தோலை யெடுத்துப்போட்டு, துணியால் துடைத்து சுக்கு, திப்பிலி, மிளகு, சித்தரத்தை வகைக்கு, பூ ௧, சேர்த்து பால் விட்டு, மெலிதாக அரைத்து, ஒரு சட்டியில் எடுத்துகொண்டு, சர்க்கரை பூ ௮, நெய் சேர் வ, பால்சேர் ௧, விட்டு நன்றாய்க்கிளறி அடுப்பின்மேல்வைத்து லேகியபக்குவமாய்ச்செய்துக்கொண்டு, வேளைக்குக் கழற்சிக்காயளவு இரண்டுவேளைசாப்பிட கபச்சுரம், கபத்தினால் உண்டான இருமல் சொஸ்தமாகும்.

## க்ஷயரோகத்துக்கு மகாக்ஷாபகாதி லேகியம்.

16. அத்திமுள்ளி பூ ௧00, பாதிரிவேர், வட்டத்திருப்பிவேர், சீந்திற்கொடி, ஆடாதோடை, சிற்றாமுட்டி, பேராமுட்டி, காட்டா மணக்குக்கிழங்கு, ஓரிலைத்தாமரை. மூக்குத்திப்பூண்டு, தழுதாழை, வில்வம், சித்திரமூலம், பெரியாமணக்கு, நொச்சி, அம்மையார் கூந்தல், சிறுவழுதலை, தூதுவளை, குமிழ், கண்டுபாங்கி, செவ்விபம் இந்த வேர்வகைகளெல்லாம் வகைக்கு பூ ௨0, சுக்கு பூ ௪0, கடுக்காய் பூ ௧00, இவைகளைச் சேர்த்து இடித்து ஆறுபானையில் சமபாகமாகப் போட்டு ஆறு அடுப்பின் பேரில வைத்துப் பானைஒன்றில் பதினாறு மரக்கால் தண்ணீர் ஊற்றி, நாள் ஒன்றுக்கு ஒருஜாமம் அதின் கீழ் சுவாலைபோட்டு ஒவ்வொரு அடுப்பிலும் ஒருபெரிய கட்டையையிட்டு நெருப்பு அவியாதபடி எப்பொழுதும் அனல் இருக்கும்படியாக செய்கு இவ்விதமாக ஆறுநாள் சுவாலைபோட்டு மீதிவேளையில் கட்டையின் நெருப்பு அவியாதபடி வைத்திருந்து ஏழாம் நாள் ஒவ்வொரு பானையிலும் ஒரு மரக்கால் கியாழமிருக்கும் படியாக சுவாலை போட்டு எரித்த ஒவ்வொரு மரக்கால் கியாழத்தை எடுத்துக்கொண்டு எல்லாம் ஒரு பாத்திரத்திற் போட்டு, அதை மறுபடியும் அடுப்பில்வைத்து ஒரு மரக்காலாகும்படியாகக் காய்ச்சி, அதில் பழையவெல்லம், பூ ௪00, சேர்த்து, மெலிதான சல்லாவின் ஒரு சவுக்கத்தினால் அதை வடிகட்டி, மறுபடியும்

அந்த வடிகட்டின ஜலத்தை அடுப்பின்பேரில்வைத்து சுவாலை போட்டுப் பாகு செய்யும்பொழுது நொச்சிவேர், கரிசலாங் கண்ணி, வசம்பு, மஞ்சள், இஞ்சி, ஆடாதோடைவேர், சீந்திற் சர்க்கரை, வல்லாரைசமூலம், அத்திமுள்ளிவேர், எருக்கமொ ட்டு, வெள்ளைச்சாட்டரணைவேர், வாய்விளங்கம், கருஞ் சீரகம், நல்லசீரகம், இந்துப்பு, வளையலுப்பு, பொட்லுப்பு, சுக்கு, சமுத் திரலவணம், பெருங்காயம், கோஷ்டம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, செவ்வியம், கர்க்கட கசிங்கி, கண்டுபரங்கி, தாம ரைவளையம், அதிவிடயம், கடுகுரோகிணி, சித்தரத்தை, பேரரத் தை, ஓமம் இவைகள் தினுசுக்கு, வ௨, ஆகசரக்கு வகை முப்ப த்தி மூன்றுக்கு வ௬௬, திப்பிலி வ௬௬, இவைகளை இடித்து வடிகட்டி அந்தப்பாகத்தில் போட்டுப் பக்குவமாகிற சமயத்தில் தேன் ஒருமரக்கால் ஊற்றிக் கரண்டிபிறைக்ளறி இலேகிய பத மாய்ச் செய்துகொண்டு, வேளைக்குக் கொட்டைப்பாக்களவு நாள் ஒன்றுக்கு இரண்டுவேளை ஒருமண்டலம் சாப்பிட்டால் பதினெ ருவித க்ஷயரோகங்களும், காசசம்பந்தமான அநேக ரோகங்க ளும் சொஸ்தமாகும். இச்சாபத்தியம்.

### இரத்தகாசத்துக்கு மருந்து.

17. கடுக்காதோல், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு வகை க்கு வ௧௬, வாலுளுவை அரிசி, வ௨, கையாந்தகரைப்பொடி, நொச்சியிலைப்பொடி, கொடிவேலி, தகரவிதை, கருவாப்பட்டை, சீந்திற்கொடி, வகைக்கு வ௬௨, இடித்து வடிகட்டி வெல்லம், வ௮0, பாகுசெய்து அதில் இந்தச்சூரணத்தைப்போட்டுக் கல ந்து ௩00, உருண்டைகளாகச் செய்துக்கொண்டு, வேளைக்கு ஒரு உருண்டையாக ஒருமாதம் சாப்பிட்டுக்கொண்டுவந்தால் சரீரத் தில் இருக்கிற வியாதியெல்லாம் நீங்கி அநுகூலமாகும். இரண்டா மாதத்தில் சரீரம் கெட்டியாகும். மூன்றும்மாதத்தில் சரீரத்தில் இருக்கிற வறட்சி நீங்கும். நாலாம்மாதத்தில் சரீரத்தில் பலமுண் டாகும். ஐந்தாம்மாதத்தில் மேனியில் நல்ல நிறமேறும். ஆறும் மாதத்தில் சரீரத்தில் அதிக பலமுண்டாகும். ஏழாம்மாதத்தில் கண்களில் தேஜஸ் உண்டாகும். எட்டாம்மாதத்தில் அதிக பிரக் ஞையிருக்கும். ஒன்பதாமாதத்தில் சித்தசுத்தி ஆகும். பத்தாம் மாதத்தில் சித்தசுத்தியின் சித்தி அடையலாம்.

### வாதசிலேத்ம அக்கிணிமந்தத்துக்குத் தாளிசவடகம்.

18. தாளிசபத்திரி, மிளகு, செவ்வியம், கிராம்பு, ஏலம், சிறு நாகப்பூ, லவங்கப்பட்டை, விலாமிச்சைவேர் வகைக்கு பூ௨ க௨,

திப்பிலிமூலம், திப்பிலி வகைக்கு பூ உ, சுக்கு பூ ந, இடித்து வடிகட்டிச் சேலம்சர்க்கரை சேர்-உ சேர்த்து, அரைச்சேர்பாலைத் தெளித்து நன்றாய்க்கிளறி, ஒருகுண்டு சட்டியில் இரண்டுபடி பசுவின்பாலையும் இரண்டுபடி ஜலத்தையும் ஊற்றி, அந்தகுண்டு சட்டியின் வாயை ஒருசவுக்கத்தால்மூடி, அந்தசவுக்கத்தின்மேல் அந்தச் சூரணத்தைவைத்து, ஆவிவெளியே போகாதபடி அதின் பேரில் ஒருசட்டியைக்கவிழ்த்து, அடுப்பின்பேரில் வைத்துப் பால்சுண்டுகிற வரைக்கும் சுவாலைபோட்டு, பிறகுவெந்திருக்கிற சூரணத்தை ஒருபலகையின் பேரில் கொட்டி அதின்பேரில் ஒரு சேர் பசுவின் நெய்யைவிட்டு, ஆறுமலிருக்கும் பொழுதே கொட்டைப்பாக்களவான பில்லைபில்லையாகத் தட்டி ஒரு பீங்கானில் வைத்துக்கொண்டு, வேளை ஒன்றுக்கு ஒரு பில்லையாக நாள் ஒன்றுக்கு இரண்டுவேளை வீதம் சாப்பிட்டால் வாதரோகம், சிலேத்தும‌ம், வறக்ஷி, கிராணி, பாண்டுரோகம், மார்வலி, சுரத்தினுல் உண்டான பாண்டுரோகம், வாயுவினல் உண்டான மூலரோகம், குன்மம், கபம், பீனசம், இரைப்பு, இருமல், நெஞ்சுவறட்சி, நெஞ்சுவலி முதலானரோகங்கள் அனுகூலமாகும்.

### பீனிச சுவாசத்திற்குத் தைலம்.

19. நொச்சி, கருநொச்சி, எருக்கம்பழுப்பு, பேப்பீர்க்கு, பச்சைமஞ்சள், பருத்தியிலை, ஆதொண்டஇலை, தினுசுக்கு-வ-படிரசம், அரத்தை, சிறுதேக்கு, மிளகு, சுக்கு, செவ்வியம், ஏலம், அகிற்பட்டை, வெள்ளைப் பூண்டு வகைக்கு வ உ, நல்லெண்ணெய் சேர்-ச, இந்தமருந்துகளையெல்லாம் மேற்சொல்லிய இரசத்தில் அரைத்து மீதியிருக்கிற இரசமும் ஔஷதமும் எண்ணையிற் கலந்துமெழுகுபக்குவமாய் எண்ணெய் காய்ச்சி தேய்த்துக் கொண்டால் சுவாசகாசம், பீனசம், தும்மல், மண்டைக்குத்தல், முதலானரோகங்கள் சொஸ்தமாகும், பத்தியம்.—இந்தயெண்ணெய்தேய்துக்கொள்ளுகிற நாளில் வாயுபதார்த்தங்களும், புளியும் தள்ளுபடி செய்க.

### க்ஷயத்துக்குத்தைலம்.

20. சுக்கு, திப்பிலி, கண்டதிப்பிலி, மிளகு, சீரகம், தாளிச்சபத்திரி, குராசானி ஓமம், அக்ராகாரம், ஏலம், ஜடாமாஞ்சி வகைக்கு வ உ, இடித்துவடிகட்டி க-சேர் சிற்றுமணக்கெண்ணையில் இந்தச் சூரணத்தையும், கவ கற்கண்டு பொடிபோட்டு நன்றாய்க்கலக்கி சூரியபுடம்வைத்து இராத்திரி சாப்பிட்டுத் தூங்குகிற சமயத்தில் ஒரு வ அளவு உட்கொள்ள வேண்டியது. இவ்விதமாக ஒரு மண்டலம் செய்யின் க்ஷயரோகம் அனுகூலமாகும். இச்சாபத்தியம்.

## பெரும்பாட்டுக்கு நெய்.

**21.** நாகல்பட்டை வீ⁻உரு, கியாழஞ்செய்து வடிகட்டி யெடுத்துக்கொண்டு, உ-படி பசுவிநெய்யையூற்றி, ஏலம்,லவங்கப் பட்டை, கர்க்கடகசிங்கி, காட்டத்திப்பூ, காசிக்கட்டி, மரமஞ் சள், சீரகம், சிறுநாகப்பூ, அதிமதுரம், கோஷ்டம், விளாம்பிசின் வகைக்கு பூ⁻உ, அபினி பூ⁻சு, மெலிதாக அரைத்துபோட்டுக் குழப்பி அடுப்பிலேற்றி, மெழுகுபக்குவமாகக் காய்ச்சிக்கொண்டு, வேளைக்கு உ-வீ⁻ வீதம் நாளொன்றுக்கு இரண்டுவேளை ஒரு மண்டலம் உட்கொண்டால் பெரும்பாடு, எலும்புருக்கி, புருஷமேகம் முதலிய வியாதிகளும் அனுகூலமாகும். இச்சாபத்தியம். இது அனுபவத்திற்கு வந்த மருந்து.

## வறட்சி எலும்புருக்கிமேகத்துக்கு பூசனிக்காய் நெய்.

**22.** கல்யாணபூசினிக்காய்ச்சாறு, தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு, வாழைக்கிழங்குச்சாறு, வெள்ளரிக்காய்ச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, வாழைப்பூச்சாறு, மாதுளம்பின்பழச்சாறு, வெட்டிவேர்த்தண்டின்சாறு, நெருஞ்சில்சாறு, கருப்பஞ்சாறு, இளநீர், பொன்னாங்காணிச்சாறு, சிறுகீரைச்சாறு, பசுவின்பால், சீந்திற்றண்டுசாறு, செங்கழுநீர்க்கிழங்கின்சாறு, அமிர்தவல்லிக்கிழங்கின்சாறு, பசுநெய் வகைக்கு படி-கு, ஒன்றுபடக்கலந்து, அடுப்பிலேற்றிச் சுவாலைத்தீயாலெரித்து, பக்குவமானவுடனே, அந்த நெய்யை வடிகட்டி எடுத்துக்கொண்டு, அதில் வ-படி சீனிச்சர்க்கரையை கலந்துகொண்டு, காலைமாலைகளில் ஒரு சிறிய உருத்ரணி அளவு உட்கொள்ள வறட்சி, எலும்புருக்கி, பிரமேகம், பித்தம், காதுவலி, கைகாலெரிவு, உடம்பெரிவு, குத்தரிப்பு, இரத்தமேகம், சொறிசிரங்கு நீங்கும். தாதுவிருத்தியுண்டாம்.

நெய்யுருக்காதபடி ஔஷதம் வாங்கவேண்டியதானாலும், அந்த நெய்யிலுள்ள கடுகைவாங்கவேண்டியதானாலும், மேற்சொல்லிய படி ஒருபடி நெய்யைச்சேர்க்காமல், (உ) படி நெய்யைச் சேர்த்துக்கொண்டு, மேற்சொல்லியபடி மருந்துசெய்துகொண்டு இம்மருந்தை வேளை ஒன்றுக்கு இரண்டு வீ⁻யளவு நாள் ஒன்றுக்கு இரண்டுவேளை ஒரு மண்டலம் உட்கொண்டால் மேற்சொல்லிய வியாதிகள் நீங்கும்.

## விக்கலுக்கும் வாந்திக்கும் நெய்.

**23.** பொன்னாங்காணிவேர், சிறுகீரைவேர், நெய்ச்சட்டிவேர், ஒரிலைத்தாமரைவேர், கோரைக்கிழங்கு, நன்னாரிவேர், நீர்பூலாவேர், ஆவாரைவேர்ப்பட்டை, குவளைவேர், நெல்லிமுள்ளி, சந்தனம் வகைக்கு வீ⁻ரு, பெருஞ்சாதிக்காய்-உ, சண்பகப்பூ,

ஏலம், லவங்கம், அதிமதுரம், கோஷ்டம், திப்பிலி, வகைக்கு வீசு, வெவ்வேறாக அரைத்து சீந்திற்றண்டின்சாறுசேர்-க, பசு நெய்படி-உ, பசுவின்பால்படி-உ, சேர்த்துக்குழப்பிப் பக்குவமாய்க் காய்ச்சி எடுத்துக்கொள்க. இதனைத்தலையிலும் மார்பிலும் தடவலாம். நசியமும் செய்யலாம். உள்ளுக்குக்கொடுத்தால் வாந்தி, விக்கல் அனுகூலமாகும்.

## இரத்தகாசத்துக்கு நெய்.

24. நன்னாரிவேர், வரைச்சுண்டிவேர், வட்டத்திருப்பிவேர், தூதுவளைவேர், தூதுவளைஇலை, மாதுளைச்சாறுமாதுளம்பூச்சாறு, வாழைக்கிழங்குச்சாறு, வாழைப்பழச்சாறு, சிறுகீரைவேர், அத்திப்பட்டை, மாங்கொட்டை, ஆலம்பட்டை, அரசம்பட்டை, நாவற்கொழுந்து, ஆலங்கொழுந்து, அரசங்கொழுந்து, தண்ணீர்விட்டான்கிழங்கு, கல்யாணபூசினிக்காய்ச்சாறு, வெட்டிவேர், விலாமிச்சைவேர், சீந்திற்றண்டு, நெய்தற்கிழங்கு, தாமரைவளையம், பொன்னாங்காணிவேர், முசுமுசுக்கைவேர் முசுமுசுக்கைப்பழம், சங்கயிலை, சங்கம்பழம், கொட்டைக்கரந்தைச்சாறு, வல்லாரை, கர்ப்பூரவல்லிச்சாறு, அதிமதுரம், கொத்தமல்லி,கோஷ்டம், சந்தனம், திப்பிலி, ஈரவெண்காயம், தினுசுக்கு வீஉ, பசுவின்நெய் சேர்-க,பசுவின்பால் சேர்-க, சேர்த்து மெழுகுபதமாய்க்காய்ச்சிக்கொண்டு, வேளைக்குஒரு முட்டைபிரமாணம்உட்கொண்டால் இரத்தவாந்தி சொஸ்தமாகும்.

## தலைநடுக்கல், கைநடுக்கல் முதலான பித்தத்துக்கு அதிமதுரக்கிருதம்.

25. அதிமதுரம் பூச, சீரகம், விலாமிச்சைவேர்; கொத்தமல்லி, ஏலம், லவங்கப்பத்திரி, கிராம்பு, சிறுநாகப்பூ,கோஷ்டம், சந்தனம், நெய்தற்கிழங்கு, நன்னாரிவேர், கூகைநீர், நெல்லிமுள்ளி, கொடிமுந்திரிப்பழம், தாமரைவளையம், வெட்டிவேர், சிறுகீரைவேர், பொன்னாங்காணிவேர், நெருஞ்சில்வேர், தினுசுக்கு பூவ, நெய் சேர்-ச, பால்சேர்-உ இந்தச் சரக்குகளையெல்லாம் சேர்த்து நெய்யாகக்காய்ச்சிக்கொண்டு, வேளைக்கு இரண்டு வீ வீதம் சாப்பிட்டுக்கொண்டு வந்தால் தலைநடுக்கல், கைநடுக்கல், லான வியாதிகள் சொஸ்தமாகும்.

## சகல உஷ்ணத்துக்கும் ஏலாதி சூரணம்.

26. ஏலம், சீரகம், சன்னலவங்கப்பட்டை, லவங்கப்பட்டை அதிமதுரம், நெல்லிமுள்ளி, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, கருவேப்பிலைஈர்க்கு, சந்தனத்தூள், ஜடாமாஞ்சி, சோம்பு தினுசுக்கு

பூ க, கொத்தமல்லி பூ கஉ, இடித்து வடிகட்டி உசபூ கற்கண்டை பொடிசெய்து சேர்த்துப் புதியகலயத்திற்போட்டு வாயைக்கட்டி வைத்துக்கொண்டு, வேளைக்கு உ-வ வீதம் இரண்டு வேளையாக ஒரு மண்டலம்சாப்பிட்டால் சகலஉஷ்ணரோகங்களும், பித்தரோகங்களும், மூத்திரஎரிவு, ஆரோசிகம், கைகாலெரிவு, அனுகூலமாகும். இது அனுபோகத்துக்கு வந்தமருந்து.

## பலபித்தத்துக்கும் ஏலாதி சூரணம்.

27. ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, திப்பிலிமூலம், சீரகம், செண்பகப்பூ, கூகைநீர், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, நாகேசுவரம், பெருநாகேசுவரம், சைந்துலவணம், வாய்விளங்கம், பேரீச்சம்பழம், கொடிமுந்திரிப்பழம், இலுப்பைப்பூ, வெட்டிவேர், விலாமிச்சைவேர், அதிமதுரம், நெற்பொரி வகைக்கு உ-பூ வீதம் ஒரு சட்டியிற்போட்டு வெவ்வேறாக வறுத்துக்கொண்டு இடித்துவடிகட்டிச் சூரணத்துக்குச் சமானமாக சர்க்கரையும் சேர்த்துப் புதுகலயத்திற் போட்டுக் கலயத்தின் வாயைக் கட்டிவைத்துக்கொண்டு, வேளைக்கு மூன்றுவிரல் கொண்டது எடுத்து நெய்யிலாவது, அல்லது தண்ணீரிலாவது, அல்லது தேனிலாவது நாள் ஒன்றுக்கு இரண்டு வேளை ஒருமண்டலம் உட்கொண்டால் பலபித்தம், அனல்பித்தம், பைத்தியம், இருமல், பலவெதுப்பு, மார்நோவு, எரிகுன்மம் பித்தப்பாண்டு, இரக்தபித்தம் அனுகூலமாகும்.

## ஆம்பல்பித்தம், கிறுகிறுப்புக்கு ஏலாதிசூரணம்.

28. ஏலம், சிற்றேலம், அதிமதுரம், இலுப்பைப்பூ, சீரகம் கருஞ்சீரகம், கொடிமுந்திரிப்பழம், கிரந்திதகரம், நன்னாரிவேர், சுக்கு, திப்பிலி, தண்ணீர்விட்டான்கிழங்கு, கிலேப்பனங்கிழங்கு, அமுக்கிராவேர், முத்தக்காசு, வெட்டிவேர், நெல்லிமுள்ளி, வேம்பின்ஈர்க்கு, கொத்தமல்லி, தாமரைவளையம், ஒரிலைத்தாமரை, நல்லப்பாளைவேர், கோஷ்டம், சந்தனம், தக்கோலம், ஜடாமாஞ்சி, சிங்கிரிகிழங்கு, ஜாதிக்காய், நெருஞ்சிற்காய், பூனைக்காலி, இலவம்பிசின், சிறுநாகப்பூ, கல்மதம், முசுமுசுக்கைவேர் வகைக்கு பூ வ, வெவ்வேறாக இடித்து, பிறகு எல்லாம் சேர்த்துவடிகட்டி, அந்தச்சூரணத்துக்குச் சமபாகமாய் சர்க்கரையும் கஸ்தூரி இரண்டுபணவிடை, குங்குமப்பூ இரண்டுபணவிடை சேர்த்து ஒரு புதிய கலயத்திற்போட்டு வைத்துக்கொண்டு, வேளைக்கு ஒரு கடிபிரமாணம் நாள் ஒன்றுக்கு இரண்டுவேளை ஒரு மண்டலம் நெய்யிலாவது, தேனிலாவது, அல்லது வெந்நீரிலாவது

புசித்தால் அலறுபித்தம், ஆம்பல்பித்தம், தலைதிருப்பு, மூக்குநீர்ப்பாய்ச்சல் முதலானவியாதிகள் அனுகூலமாகும்.

### ஆரோசிகத்துக்குச் சூரணம்.

29. காளிசப்பத்திரி வ௧, மிளகு வ௨, சுக்கு வ௪, திப்பிலி வ௮, கூகைநீர் வ௧௬, ஏலம் வ௧, கிராம்பு வ௧ இடித்துவடிகட்டிச் சூரணமாகச் செய்துகொண்டு சர்க்கரை வ௬௪, சேர்த்து நன்றாய்க்கலக்கி ஒருபுதியகலத்திற்போட்டு வாயைக் கட்டி வைத்துக்கொண்டு, வேளைக்கு ௨-வ வீதம் நாள் ஒன்றுக்கு இரண்டு வேளையாகச் சாப்பிட்டுக்கொண்டுவந்தால் (௪௪௪௮) விதமான வியாதிகள் சொஸ்தமாகும்; ஆனால் அந்தந்த வியாதிக்குத் தக்கபடி அனுபானமேதமாய் கொடுத்திடுக.

### பித்தவாய்வு, அஜீர்ணசுரம், அக்கினிமந்தம் இவைகளுக்கு மகாதாளிசசூரணம்.

30. தாளிசபத்திரி, மிளகு, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, சுக்கு, வாய்விளங்கம், திப்பிலி, செவ்வியம், அரத்தை, கிரந்தித்தகரம், கொத்தமல்லி, பூலாங்கிழங்கு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, கொடிவேலி, கிராம்பு, விலாமிச்சைவேர், தக்கோலம், ரேணுகம், கோரைக்கிழங்கு, ஜடாமாஞ்சி, நல்லசந்தனம், அகிற்கட்டை, வகைக்கு பூ௨, இடித்து சூரணித்து, வடிகட்டின பிறகு சூரணத்துடன், சமபாகம் சர்க்கரையைச்சேர்த்து நன்றாய்க் கலந்து, வேளைக்கு ௨-பணவிடை பூரணசந்திரோதயமும் இச்சூரணத்தில் ஒருகடி பிரமாணமும் எடுத்து இரண்டையும் சேர்த்து நாள் ௧-க்கு ௨-வேளை உட்கொண்டுவந்தால், வாதம், பித்தம், சிலேத்துமம், பாண்டு; சோகை, அதிசாரம், சுவாசகாசம், சுரம், சீதம், சிரோப்பிரமை, மரணவேதை, அமாரணம், அக்கினிமந்தம், அன்னத்துவேஷம், ஆரோசிகம், ஊர்க்காரம், வனசூலம், அசீர்ணம், சுதிகாசம், விக்கல், இரமாட்சபம், வெருவயம், சர்வாங்கவாயு, நானாவிதசுரம், நாட்பட்டசுரம், உடம்பு இளைப்பு, வன்னம், தாதுநஷ்டம், அசுராகராதிரணம், உதிரமேகம், மூர்ச்சை, ருதுசூனியம், மதிப்பிரமை, நாவின் அருசி, முகவாட்டம், பாசம், கண்டதோஷம், வேதனம், முழங்கால்நோய், விலாப்புறநோய் இவை நீங்கித் தேகம் சுகப்படும்.

### பித்தவாய்வுக்கு கண்டாமலக லேகியம்.

31. நெல்லிக்காய்ச்சாறு சேர்-௧, பால் சேர்-௧, தாளிசபத்திரி, மிளகு, சீரகம், கந்தவெடியுப்பு, சித்திரமூலம், ஜாதிக்காய், கிராம்பு, ஜாதிபத்திரி, மூங்கிலுப்பு, கூகைநீர், திப்பிலிமூலம், செவ்வியம், சுக்கு, கொத்தமல்லி, ஆனைத்திப்பிலி, திப்பிலி, கொடிமுந்திரிப்பழம், கண்டதிப்பிலி, விலாமிச்சைவேர், வகைக்கு

வீ உ, சிவதைவேர் பூ உ, சர்க்கரை சேர்-ங, நெய்சேர்-வ, தேன்சேர்-ஒ, இவைகளை ஒன்ருய்ச்சேர்த்து லேகியம் செய்து க்கொண்டு, வேளைக்கு நெல்லிக்காய் பிரமாணம் நாளொன்று க்கு உ-வேளை ஒருமண்டலம் உட்கொண்டால் சகலபித்தவாய் வும் நீங்கும். ஆரோக்கியமுண்டாம்.

### மேகபித்தவாய்வுக்கு கர்ச்சூராதிலேகியம்.

32. பேர்ச்சம்பழம், கொடிமுந்திரிப்பழம், நெல்லிமுள்ளி, இலுப்பைப்பருப்பு, நல்லசந்தனம், அதிமதுரம், நெருஞ்சிற்காய், பூச்சர்க்கரைக்கிழங்கு, கல்யாணபூசினிக்காய்விதை, தண்ணீர் விட்டான்கிழங்கு, கொத்தமல்லி, வெங்கம், நீர்முள்ளிவிதை, சமபாகமாகச் சேர்த்து, சூரணித்து வடிகட்டியபின், அந் தச்சூரணத்துடன் சமபாகம் சர்க்கரையை கலந்துக்கொண்டு, காலையில் சாப்பிடுவதற்குமுன், இதை யொருகடிபிரமாணம் ஒரு மண்டலம் உட்கொண்டால், மூத்திரகிரிச்சரம், அக்கிராணபித் தம், சர்வமேகம், அங்கதாகம், சிரோதாகம், கப்போர்வு, கை காலெரிவு, அரோசிகம் முதலியவியாதிகள் நீங்கும்.

### இரத்தபித்தம், ஆம்பல்பித்தத்துக்கு கர்ச்சூராதிரசாயனம்.

33. பேரிச்சம்பழம் பூ கஉ, சர்க்கசை பூ கஉ, சுக்கு, திப்பிலி, மிளகு, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஏலம், ஜடா மாஞ்சி, சிற்ருமுட்டிவேர், பேராமுட்டிவேர், நாகமல்லிவேர், சத குப்பை, பூலாங்கிழங்கு, சிறுநாகப்பூ, கோரைக்கிழங்கு, நல்லசந் தனம், நன்னாரிவேர், காட்டெருமைப்பால், இலந்தைவிதை, தக் கோலம், ரேணுகம், கொடசப்பாலைவிதை, கிராம்பு, கருஞ்சீரகம், நல்லசீரகமும், வெட்டிவேர், விலாமிச்சைவேர், கோஷ்டம், விளாம் பழம், கொடிமுந்திரிப்பழம், குங்குமப்பூ, பருத்திக்கொட்டைப் பருப்பு, சாதிக்காய், சாதிபத்திரி, நையாந்தகரைசூரணம், வகைக்கு பூ உ, பசுநெய் படி-ச, பசுவின்பால்படி-உ, தேன்படி-க, சே ர்த்துரசாயனம்செய்துகொண்டு, வேளைக்கு இந்தரசாயனம் நெல் லிக்காயளவெடுத்து அதனுடன் அரைப்பணவிடை இராஜமிரு காங்கம் என்கிறமருந்தைச்சேர்த்து நாள் க-க்கு உ-வேளை ஒரு மண்டலம் உட்கொண்டால் இரத்தபித்தம், ஆம்பல்பித்தம், சி ரோபிரமணம், அனல்பைத்தியம், மனப்பைத்தியம், மூர்ச்சை, ஊர்க்காரம், பீடகம், தொடக்குப் பைத்தியம் உக-வகையும், நானாவிதசுரமும், க்ஷபம், உளைமாந்தம், அரமானசூலை, சந்தாபம், அசீர்ணம், அரோசிகம், தாகம், கண்டகோஷணம் முதலியவியா திகள் நீங்கும்.

### பித்தத்துக்கும், இரத்தவாந்திக்கும் கர்ச்சூராதிலேகியம்.

34. பேரிச்சம்பழம் பூ கஉ, கொடிமுந்திரிப்பழம் பூ கஅ, தண்ணீர்விட்டான்கிழங்கு சூரணம் பூ அ, கொத்தமல்லி,

பற்பாடகம், சதகுப்பி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஏலம், சிறுநாகப்பூ, வெட்டிவேர், விலாமிச்சைவேர், லவங்கம், திப்பிலிமூலம், சீரகம், ஓமம், பூலாங்கிழங்கு, பெருநாகப்பூ, வாய்விளங்கம், முத்தக்காசு, அதிமதுரம், கோஷ்டம், அதிவிடயம், நல்லசந்தனம், கோரோசனை, சடாமாஞ்சி, வகைக்கு பூ௨, சேர்த்து இடித்து வடிகட்டிச் சூரணித்துவைத்துக்கொண்டு அறுகம்வேரின்சாறு, பசுவின்பால், தண்ணீர்விட்டான்கிழங்கின்சாறு, இந்தச்சாறுவகைக்குப்படி ௨-சேர்த்து அதில் சர்க்கரை படி-௨ சேர்த்து வடிகட்டிப்பாகுசெய்து அந்தப்பாக்கில்மேற்சொல்லியசூரணத்தையும் தேன் சேர்-க நெய் சேர்-க சேர்த்து பக்குவமாய்லேகியம் செய்துகொண்டு அந்தலேகியத்தில் சுo-பணவிடை ரசபஸ்பம் சேர்த்து நெல்லிக்காய்பிரமாணம் நாள் க-க்கு ௨-வேளை ஒரு மண்டலம் உட்கொண்டால் எவ்விதபித்தமும், பித்தத்தினுலுண்டாகிற கூகூ-வியாதிகளும், இரத்தவாந்தியும், கக-விதமான வாதரோகங்களும் நீங்கும்.

### பித்தத்துக்கு நிம்பாதிலேகியம்.

35. எலிமிச்சம்பழம், புளி இலை, முசுமுசுக்கை, வில்வவேரின்சாறு, துரிஞ்சி, தினுசுக்கு ஹ-படி, ரசத்தையெடுத்து ஏலம், லவங்கம், சீரகம், அதிமதுரம, திப்பிலி, நெற்பொரி, வகைக்கு வீ௳ச, சர்க்கரை பூ-ச, தேன், சேர்-� 𝔬, சேர்த்து லேகியம் செய்துகொண்டு பித்தாதி, விக்கல், குனமம், ஆரோசிகம், ஆகிய இவை, இந்தலேகியத்தைக் காலையில் உட்கொண்டால் தீரும்.

### கைகால் எரிவுக்கு மருந்து.

36. இலந்தையிலை, கருவையிலை, சிகைக்காயிலை, நெல்லியிலை, முசுமுசுக்கையிலை, இடித்து ஒருபானையிற்போட்டுத் தண்ணீர் விட்டு ஓர் இராமுழுவதும் ஊறவைத்து காலையில் அதை மத்தினால் கடைந்து மேலே நுரையைப்போல் வருகிற வெண்ணெயை யெடுத்துக்கொண்டு கையிலும் காலிலும் பூசுக இப்படி மூன்றுநாள் பூசினால் கைகால் எரிவுதீரும் மேற்சொல்லிய ஐந்து தினுசு இலைகளின் ரசத்தைப் பசுவின்பாலில் சேர்த்துக் காய்ச்சித் தயிராக்கிக்கடைந்து வெண்ணெயெடுத்து அதைக் கைகாலிற் பூசினால் பித்தத்தால் அல்லது மேகத்தாலுண்டான எரிவந்தமாயிருந்தாலும் நீங்கும்.

### அக்கினிமந்தம், ஆரோசிகத்துக்கு பஞ்சகோலாதிசூரணம்.

37. திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், கல்லுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, பெர்ட்லுப்பு, சீரகம், ஓமம், சதகுப்பை, சதிசாரம், எவாச்சாரம், மிளகு, பெருங்காயம், வகைக்கு பூ-க, ஒன்றாகச்சேர்த்து இடித்து வடிகட்டி அந்தசூரணத்

துக்குச் சமபாகமாகச் சர்க்கரைசேர்த்து உ-வீ அளவெடுத்து திருஞ்சிரசத்திலாவது, அல்லது நார்த்தம்பழத்தின் ரசத்திலாவது கலந்து நாள் ஒன்றுக்கு இரண்டுவேளை ஒரு மண்டலம் உட்கொண்டால், அக்கினி மந்தம், ஆரோசிகம், உப்பிசம், முதலானரோகங்கள் நீங்கும்.

அக்கினிமந்தத்துக்கு அஷ்டாதிசூரணம்.

38. சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு, ஓமம்; வகைக்கு பூ க, பெருங்காயம் பூ வ, இடித்து வடிகட்டிச் சூரணத்துக்குச் சமபாகம் சர்க்கரையைச்சேர்த்து வேளைக்கு உ-வீ வீதம் நாள் ஒன்றுக்கு உ-வேளை ஒருமண்டலம் உட்கொண்டால் அக்கினிமந்தம் சர்வாங்கவாதம் நீங்கும்.

சூசிகவாய்வு கிரஹணி குன்மம் பொருமலுக்கும்
படாத்கரம் அரிதகிலேகியம்.

39. வட்டத்திருப்பி, பெருமரப்பட்டை, கருவேப்பிலைத் தண்டு, முக்காவேளைவேர், வேலம்பட்டை, பொடசைப்பாலைப் பட்டை, வில்வவேர், மாதுளைவேர், சாரணைவேர், பெரண்டை தண்டு, வகைக்கு பூ டு, சுக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், மிளகு, ஓமம், குராசானிஓமம், காட்டத்திப்பூ, கொடசப்பாலைவிதை, வாலுளுவையரிசி, ஏலம், கிராம்பு, லவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, சாதிக்காய், ஜாதிபத்திரி, பஞ்சலவணம், கோஷ்டம், அதிவிடயம், சீரகம், வில்வவோடு, மாதுளைஓடு, விளாம்பிசின், இலவம்பிசின், காசுக்கட்டி, வகைக்கு பூ ௨ சுடுக்காய்-கூ0, இந்தக்கடுக்காய்களைப் புளித்தகாடியில் அறுபதுநாழிகை யூறப்போட்டு பிறகு காயவைத்து அதன் விதைகளை நீக்கி, மேல்தோலையும் மற்றமருந்துகளையும் வெவ்வேறாக வறுத்து வேர்களையும் பட்டைகளையும் வேறாக எடுத்திடித்து ஒரு பானையிற்போட்டு அதில் கூ-மரக்கால் தண்ணீர் விட்டுக்காய்ச்சி ஒருபடி கியாழமாக்கி வறுத்துவைத்திருக்கிற மருந்துகளை இடித்து வடிகட்டிச்சூரணமாகச்செய்து அந்தக் கியாழத்தோடு க-படி எருமைத்தயிரையும் க-சேர் சர்க்கரையையுஞ்சேர்த்து வடிகட்டி, பாகுசெய்துகொண்டு அந்தபாகத்தில் மேற்சொல்லியிருக்கிற சூரணத்தைக் கொஞ்சங்கொஞ்சமாகப் போட்டு வேண்டியபசுவின் நெய்யையும் ൦-சேர் நல்லெண்ணெயையும், அதில்விட்டுப் பக்குவமாய் லேகியம் செய்துகொண்டு, வேளைக்கு கொட்டைப்பாக்களவாக நாள் க-க்கு உ-வேளை ஒரு மண்டலம் உட்கொண்டால் சூசிகவாய்வு, கிராணி, பொருமல், குன்மம், எரிச்சல் முதலான வியாதிசொஸ்தமாகும். பத்தியம். கசப்பு புளிப்பு தள்ளுபடி.

## சூசிகவாய்வுக்கு சௌபாக்கியசுண்டி.

40. சுக்கு பூ கசு, திப்பிலி பூ அ, மிளகு, கிரந்திதகரம், வாய்விளங்கம், ஓமம், வகைக்கு பூ ச, கொத்தமல்லி பூ ரு, கோஷ்டம், காட்டெருமைப்பால், சீரகம் லவங்கப்பட்டை நவாச்சாரம், சதிச்சாரம், வகைக்கு பூ உ, வெள்ளைப்பூண்டு பூ அ, எவாச்சாரம் பூ க0, பொரித்த வெண்காரம் பூ க, பஞ்சலவணம் ஐந்தும் பூ ரு, கார்கோலி பூ க, மேதை பூ க, சர்க்கரை பூ கசு, ஏலம் பூ க, சர்க்கரை தவிர மற்றதினுசுகளையெல்லாம் வருத்து உப்புவிதங்களெல்லாம் கல்வத்திற் போட்டுப் பொடிசெய்து பாக்கிமருந்துவகைகளெல்லாம் இடித்து வடிகட்டி உப்புப்பொடியையும் சர்க்கரையையும் அதோடுசேர்த்து அதில் கஉ-படி தேனைவிட்டரைத்து லேகியம் செய்துகொண்டு வேளைக்கு மூன்று வீ நாள் ஒன்றுக்கு இரண்டு வேளையாக ஒரு மண்டலம் சாப்பிட்டால் சூசிகவாய்வு ஜன்னி கிராணி சுரம் முதலான வியாதிகள் சொஸ்தமாகும்.

பத்தியம்.—கசப்பும் புளிப்பும் தள்ளுபடி.

## சகலவாய்வுக்கும் தீபனத்திற்கும் இங்காஷ்டகம்.

41. சுக்கு, திப்பிலி, மிளகு, கண்டதிப்பிலி, வெள்ளைப்பூண்டு, சீரகம், வகைக்கு பூ க, பெருங்காயம், இந்துப்பு, கந்தகம், வகைக்குப்பூ வ, கல்வத்திற்போட்டு எலுமிச்சம்பழச்சாறுவிட்டு நாலு சாமம் அரைத்து ஒரு வீ இடையுள்ளதாக மாத்திரைகள் செய்து வெய்யிலில் காயவைத்து எடுத்துக்கொண்டு, வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் இரண்டு வேளை சாப்பிட்டுக்கொண்டு வந்தால் அக்கினிமந்தம், வயிற்றுவாய்வு சொஸ்தமாகும். பசியுண்டாகும்.

## தீபனத்துக்கு பஸ்பம்.

42. சீனாகாரம் வீ ச, கர்ப்பூரசிலாசத்து வீ கசு, பொட்ளுப்பு, வெண்காரம், இந்துப்பு, வகைக்கு வீ-ச, கல்வத்திற்போட்டு குப்பைமேனிரசம்சேர்த்து நாலுஜாமம் அரைத்துப்பில்லை செய்து, காயவைத்துப் புடம்போடவேண்டியது. அதனால் பஸ்பமாகிவிடும். அதைப்பொடிசெய்து ஒருடப்பியில் வைத்து வேளைக்கு உ-பணவிடைவீதம் தேனிற்கலந்து உட்கொண்டால் தீபனம் உண்டாகும்.

## அக்கினிமந்தத்திற்குச் சுயஅக்கினி.

43. ரசம்பூ ச, மனோசிலை பூ உ, கந்தகம் பூ சு, காந்தம் பூ கசு, இரும்பு அரப்பொடி பூ ருஉ, கல்வத்திற்போட்டுக் கற்றாழைச்சோறு சேர்த்து கஉ-ஜாமம் அரைத்து ரொட்டியைப் போல் தட்டி வெண்கலக்கிண்ணியிற்போட்டு வெய்யிலில் வைத்

தால் அக்கினி உண்டாகும். பிற்கு பொடிசெய்து டப்பியில் வைத்துக்கொண்டு, வேளைக்கு ஒரு பணவிடை பிரகாரம் உட்கொண்டால் அக்கினிமாந்தாதி வாய்வு அனுகூலமாகும்.

அக்கினிமாந்தத்திற்குச் சுயஅக்கினி.

44. காந்தம், இரும்பு அரப்பொடி, சிட்டம், சங்கு, கடல் நுரை, நவாச்சாரம், வெண்காரம், கல்நார், கந்தகம். தினுசுக்கு பூ உ, கற்றாழைச் சோறுபோட்டு கஉ-ஜாமம் அரைத்த பிறகு சுயம் அக்கினி உண்டாகின்றது. வேளைக்கு பணவிடை அளவாக இரண்டுவேளை உட்கொண்டால் அக்கினிமாந்தாதி வாய்வுரோகம் அனுகூலமாகும்.

சகலமேகம் பித்தவெட்டை ரத்தக்ஷயம்
இவைகளுக்கு வில்வாதிகுழம்பு.

45. வில்வஇலை தூக்கு ச, இடித்துப் புட்டவித்துப் பிசைந்தெடுத்துக்கொண்டு சர்க்கரைசேர்-ச, அந்தரசத்திற்போட்டு வடிகட்டிப்பாகம்செய்து, அந்தப் பாகத்தில் வெண்டாமரைக் கொட்டைப்பருப்பு பூ ச, சீரகம், திப்பிலி, நெற்பொரி வகைக்கு பூ உ, கொத்தமல்லி, கூகைநீர், தாளிசப்பத்திரி, லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை வகைக்கு பூ க, இவையெல்லாம் இடித்து வடிகட்டிச் சூரணஞ்செய்து, அந்தச்சூரணத்தையும் வேண்டியபசுவின் நெய்யையும் தேனையும் சேர்த்துக் குழம்பு பக்குவமா யாகும்போது கீழே இறக்கி வைத்துக்கொண்டு, வேளைக்கு களஞ்சிபிரமாணம் இரண்டுவேளை ஒரு மண்டலம் சாப்பிட்டால் ரத்தக்ஷயம், பித்தவெட்டை, கைகால் எரிவு, அஸ்திசுரம், அங்கதாகம், பித்தவெப்பம், அன்னத்துவேஷம், அரோசிகம், வாய்புகைச்சல், ரத்தப்பிரமேகம், வாய்நீர் விழுதல், சகலமேகம், அநேக வியாதிகளும் சொஸ்தமாகும். இச்சாபத்தியம்.

தீபனம் இல்லாதவர்களுக்கு மகா வில்வாதிலேகியம்.

46. வில்வவேர் பூ ௫0, விலாமிச்சைவேர், தூதுவளை, நன்னாரிவேர், முன்னைவேர், பெருவாகைவேர், கண்டங்கத்திரிவேர், குமிழம்வேர், செங்கம்வேர், வேலின்வேர், பாதிரிவேர், நெருஞ்சில்வேர், நார்த்தம்வேர், முசுமுசுக்கைவேர், சிற்றாமுட்டிவேர், தேற்றான்வேர், பேராமுட்டிவேர், வகைக்குபூ க0, இடித்து ஒரு பெரியபானையிற்போட்டு அ-மரக்கால், தண்ணீரைவார்த்து அஷ்டபாகம்காய்ச்சிக்கியாழமெடுத்துக்கொண்டு, நாரிஞ்சிரசம், எலுமிச்சம்பழரசம், நார்த்தம்பழரசம், இஞ்சிரசம் வகைக்குப்படி-வ, சர்க்கரை பூ ௫0, சேர்த்துப் பாகுசெய்து, கோஷ்டம், சுக்கு, திப்பிலி, மிளகு, கொத்தமல்லி, ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், அதிமதுரம், கொடி முந்திரிப்பழம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லி

முள்ளி, ஜாதிபத்திரி, சிறுநாகப்பூ, தாளிசப்பத்திரி, சண்பகப்பூ, ஜடாமாஞ்சி, மரமஞ்சள், தேவதாரம், பேரீச்சம்பழம், விளாம் பழம், திப்பிலி மூலம், செவ்வியம், சீரகம், இலுப்பைப்பூ, வெட் பாலைப்பட்டை, வெட்பாலையின் சூரணம், வகைக்குபூ உ, பழம் வகையராக்களைத்தவிர மீதி சரக்குகளை இடித்து வடிகட்டிச் சூர ணமாகச்செய்து, பழங்களை யெல்லாம் பிசைந்து இந்த சூரணத் தோடுசேர்த்து மேற்சொல்லி யிருக்கிற பாகத்திலே போட்டு லே கிய பக்குவமா யாவதற்கு வேண்டிய பசுவின் நெய்யும் தேனும் விட்டு லேகியம்செய்துகொண்டு, வேளைக்குக் கொட்டைப்பாக்கள வாக இரண்டுவேளை ஒருமண்டலம் உட்கொண்டால் வாதபித்தம், கபம், பிண்டசூலை, சரீரத்தின்சூடு, அஸ்திசுரம், விக்கல், பிர மேகம், பாண்டுரோகம், சத்தி, வயிற்றுவலி, சுவாசகாசம், ஆரோ சிகம், இன்னும் அனேகசில்லரை வியாதிகளெல்லாம் சொஸ்தமா கும். இச்சாபத்தியம்.

## எரிவு மயக்கம் பித்தத்துக்கு வில்வாதிலேகியம்.

47. வில்வவேர் பூ ௩0, சிற்றுமுட்டிவேர் பூ ௩0, கரிவேப் பிலையீர்க்கு பூ க0, முக்காவேளைவேர் பூ க0, இந்தநாலு வகை களையும் இடித்து ஒரு பானையில்போட்டு அ-மரக்கால் ஜலத்தை வார்த்துக்காய்ச்சி அஷ்டபாகமாயிறக்கிக்கொண்டு, பழயவெல் லம் பூ ௩0, போட்டுப் பாகுசெய்து திப்பிலி, திப்பிலி மூலம், வகைக்கு பூ உ, சித்திரமூலம், சுக்கு, ஏலம், சீரகம், கிராம்பு, இந்துப்பு, மிளகு, லவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, தாளிசபத்திரி வகைக்கு பூ க, தக்கோலம், லவங்கப் பத்திரி, வகைக்கு பூ உ, பொன்னிறமாய் வறுத்துக்கொண்டு இடித்து வடிகட்டி, சூரணஞ் செய்துகொண்டு, ஷ பாகத்திற்போட்டு வ-படி தேனையும் விட் டுப் பக்குவமாய் இறக்கிக்கொண்டு, வேளைக்கு கொட்டைப்பாக்கு பிரமாணமாக இரண்டுவேளை ஒருமண்டலம் சாப்பிட்டால் வாயில் நீர்ஊறுதல், கைகால் எரிவு, மயக்கம், ஈரல்எரிவு, சங்கடம், அக் கினிமந்தம், அன்னத்வேஷம், வாந்தி, இவைகளெல்லாம் சொஸ்த மாகும். பசுவின்பால், நெய், தயிர், மோர் இவைகளைச் சேர்த்துக் கொள்ளலாம், புளிப்பும், கசப்பும், தள்ளுபடி.

## ஊஷ்ணவாய்வு பித்தவாய்வுக்குச் சரபங்க வில்வாதிலேகியம்:

48. வில்வவேர், முக்காவேளைவேர்வகைக்கு பூ ௩0, சங்கம் வேர் பூ கரு, அமுக்கிருவேர், அகில்பட்டை, மூக்கரட்டைவேர், அத்திமுள்ளிவேர், தூதுவளைவேர், முசுமுசுக்கைவேர், பெருங்கா ஞ்சிவேர், முடக்கத்தான், சிற்றுமுட்டிவேர், பேராமுட்டிவேர், வகைக்கு பூ எ, இடித்து கரு-மரக்கால் தண்ணீரைவிட்டு அஷ்ட

பாகமாக கியாழம் செய்துகொண்டு, ௪௦பூ வெல்லம் போட்டு, இஞ்சிசாறு படி-க, நார்த்தம்பழம்சாறு படி-௨, சேர்த்து பக்குவமாய்செய்து பக்குவகாலத்தில் ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, தாளிசபத்திரி, கொத்தமல்லி, பேரரத்தை, கர்க்கடகசிங்கி, லவங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம், சீரகம், கருஞ்சீரகம், கொடிவேலி, அதிமதுரம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, வகைக்கு பூ ரு, இடித்துச்செய்த இந்த சூரணத்தையும், தேன்படி இரண்டையும் போட்டு லேகியம் செய்துகொண்டு, வேளைக்குக் கொட்டைப்பாக்கு பரிமாணமாக இரண்டுவேளை ஒரு மண்டலம் சாப்பிட்டால் ஊஷ்ணவாய்வு, பித்தவாய்வு, சொஸ்தமாகும்.

## இடுப்புவலிக்கும், வீரியம்விர்த்தியாகிறதற்கும் லேகியம்.

49. புரசன்பிசினி வீ க௨, ஜாதிக்காய்,ஜாதிபத்திரி, கிராம்பு வகைக்கு வீ ௨, நிலக்கடம்பு வீ க, நீர்முள்ளிவிதை பூ உ, எள்ளு பூ க, பச்சைக்கடலைமாவு பூ க, ஒரு தேங்காயில் நிரப்பி அதன்வாயைமூடி அந்தத்தேங்காயைச்சுற்றி-உ விரற்கடை தளமுள்ளதாக சாணியைப்பூசிக் காயவைத்துப் புடம்போட்டுத்தேங்காய்வெடித்த உடனே வெளியே எடுத்து மேல்ஓட்டை எடுத்துப் போட்டு உள்ளே யிருக்கிற மருந்தை எடுத்துக்கொண்டு அதோடு வ-பூ வெல்லத்தையும் சேர்த்து லேகியஞ் செய்துகொண்டு, வேளைக்கு சுண்டக்காய்பிரமாணமாக உ-வேளை உட்கொண்டுவந்தால் இடுப்புவலி தீர்ந்து, வீரியவிர்த்தியாகும். இந்தமருந்தைச் சபதம் போட்டுக்கொண்டு கொடுத்துப்பார்க்கலாம்.

## தாதுவிர்த்திக்கு மன்மதசிந்தாமணிலேகியம்.

50. சாம்பிராணி, சன்னலவங்கப்பட்டை, சிறுநாகப்பூவகைக்கு பூ உ, கஞ்சா சேர்-௨, நெய் சேர்-௨, நிலாவிரை பூ க, வெல்லம் சேர்-௨, கஞ்சாவில் நெய்யையும், சலத்தையும் விட்டு வேகவைத்து, அந்தநெய்யை இறக்கிக்கொண்டு, மீதியானசாமான்களை இடித்து வடிகட்டி, சூரணஞ்செய்துகொண்டு இந்த சூரணத்தை மேற்படி கஞ்சாவிலிருந்திறக்கிய நெய்யோடு சேர்த்து லேகியஞ் செய்துகொண்டு, வேளைக்குசுண்டக்காய் பிரமாணமாக உ-வேளை சாப்பிட்டுவந்தால் வீரிய விர்த்தியாகும்.

## வீரியவிர்த்திக்கு லேகியம்.

51. அதிமதுரம், நெருஞ்சில்விதை, பூனைக்காலிவிதை, நிலப்பனைக்கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, முள்ளிலவம்பிசின், சர்க்கரை, தேன், சமபாகமாகச் சேர்த்து லேகியம் செய்துகொண்டு நாள் ஒன்றுக்கு உ-வேளை உட்கொண்டு வந்தால் வீரிய விர்த்தியாகும்.

### வீரியவிர்த்திக்கு லேகியம்,

52. அமுக்கிரான் கிழங்கு, எள்ளு, உளுந்து, தண்ணீர்விட்டான்கிழங்கு, சாட்டரணை, சர்க்கரை, தேன் சமபாகமாகச் சேர்த்து லேகியம் செய்துகொண்டு, நாள் ஒன்றுக்கு உ-வேளை உட்கொண்டுவந்தால் வீரியவிர்த்தியாகும்.

### தாதுவிர்த்திக்கு லேகியம்.

53. பேரீச்சங்காய், ஊமத்தைவிதை, கோதுமைமாவு, பாலரசம், கந்தகம், அபினி, கெஞ்சா, முருங்கைவிதை, குங்குமப்பூ, பச்சைக்கர்ப்பூரம், சாதிக்காய், ஜாதிபத்திரி, ஏலம், கிராம்பு, கசகசா, பூனைக்காலிவிதை, நிலப்பனைக் கிழங்கு, பலகாரணைபஸ்பம், இஸ்கோல்விதை, முருங்கைப்பூ, நீர்முள்ளிவிதை, ஆனைதிப்பிலி, இனுசுக்கு பூ௨ ௦, கல்வத்திற் போட்டுப் பால்விட்டு அ-ஜாமம் அரைத்துப் பிறகு மருந்துக்குச் சமபாகமாக கற்கண்டைச் சேர்த்து நாலுசாமம் அரைத்துத் தூதுவளைக்காய் பிரமாணமாக மாத்திரைசெய்து உலர்த்திவைத்துக்கொண்டு, வேளைக்கு ஒரு மாத்திரையாக இரண்டுவேளை உட்கொண்டுவந்தால்வீரியவிர்த்தியாகும்.

### தாதுவிர்த்திக்கு லேகியம்.

54. கெஞ்சா, அபினி, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கிராம்பு, நீர்முள்ளிவிதை, இஸ்கோல்விதை, பூனைக்காலிவிதை, நிலப்பனைக்கிழங்கு, முருங்கைவிதை, ஜாதிலிங்கம், சிறுநாகப்பூ, கருவாப்பட்டை, வால்மிளகு, வகைக்கு வீ ௲ ந, வாங்கி யிடித்துக் கல்வத்திற் போட்டுப் பசுவின் பாலைவிட்டு நன்றாய் அரைத்து, முதிர்ந்ததேங்காயில் இந்த மருந்தை நிரப்பி, வாய்மூடித் தேங்காயின் பேரில் சாணிதடவிக் காயவைத்து, அந்த தேங்காயின் மேலோடு வேகிற வரையில் பக்குவமாய் புடம்வைத்து, பிறகு அந்த தேங்காயிலிருக்கிற மருந்தை எடுத்துக்கொண்டு, அதோடு சமபாகமாகச் சர்க்கரையைச் சேர்த்து, ச-ஜாமம் மெழுகுபதமாய் அரைத்து, சுண்டக்காய் பிரமாணமாக உருண்டைகள் செய்து சரீரத்துக்கு தக்கபடி கொடுத்துக்கொண்டு வரவேண்டியது. வீரிய விர்த்தியாகும்.

### தாதுவிர்த்தி மதனகாமேசரி தைலம்.

55. ரஸ்தாளிப்பழம்-ரு௦, கொடிமுந்திரிப்பழம் ரசம்மரக்கால்-க, அன்னுசிப் பழமென்று வழங்கும் பரங்கித்தாழையின் ரசம் மரக்கால்-க, தேனில்ஊறப்போட்ட கொடிமுந்திரிப்பழம்சேர்-ந, பத்தாய்சாராயம் புட்டி-உ௦, பசுவின்நெய் சேர்-கஉ, சுத்தசலம்மரக்கால்-அ, யெல்லாம் ஒருபானையிற்போட்டு வைத்துக்கொண்டு, கசகசாசேர்-ந, நீர்முள்ளிவிதை, சமுத்திராசோகி, வாலுளுவைஅரிசி

அரலிவித்து, நிலப்பனேக்கிழங்கு, பூனேக்காலிவிதை, அத்திவிதை, அமுக்கிரான்கிழங்கு, வால்மிளகு, ஏலம், அதிமதுரம், கிராம்பு, சாலம்பர், சாதிக்காய், சாதிபத்திரி, ஆலம்விதை, இச்சிவிதை, அரசம்விதை, அன்னுச்சிப்பூ, வகைக்கு பூ உ, எல்லாம் இடித்து அந்தப்பானேயிற்போட்டு, கடு-சேர் கற்கண்டும், சேர்த்து கூ-நாள்வரையில் ஊறவைத்து, கo-வது நாளில் அந்தப்பானேயின் பேரில் திராவகம் இறக்கிறபாலே என்கிற எந்திரத்தைப் பானேவாயின்மேல்வைத்து, புகை வெளியில் போகாதபடிக்கு உளுந்துமாவைப்பூசி, பாலே யெந்திரத்தின்பேரில் சலத்தைவிட்டு ந-சாமம் கீழ்சுவாலேபோட்டு, அந்தகாலத்திற்குள் இறங்குகிற திராவகத்தை ஒருசீசாவில் நிரப்பிவைத்துக்கொண்டு உ-வேளேக்கும் சரீரத்திற்குத் தக்கபடி கொஞ்சங்கொஞ்சமாக வ-சேர் செலவாகும் வரைக்கும் சாப்பிட்டுக்கொண்டுவந்தால் தாதுவிர்த்தியாகும். சரீரத்தில் அதிக பலமுண்டாகும்.

## தாதுவிர்த்திக்குத் தேற்றுன்லேகியம்.

56. சீரகம் படி-க, தேற்றுன்விதை பூ ச, இந்த விதையை சிறுதுண்டுகள்செய்து சீரகத்தோடுகலந்து ஒருபானேயிற்போட்டு அதில், ச-மரக்கால் தண்ணீர்வார்த்து அடுப்பின்மேல் வைத்து, நாள் ஒன்றுக்கு ச-நாழிகை பிரகாரம் அது ஒ-படி யாகிறவரைக்கும் அதன்கீழ் சுவாலேபோட்டு, பிறகு அதை வடிகட்டிக் கீழேயிறக்கிக்கோண்டு, சன்னலவங்கப்பட்டை, லவங்கப்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, வெட்பாலேஅரிசி, குராசானி ஓமம், சீரகம், கொத்தமல்லிவிதை, வகைக்கு பூ ௨, ஜடாமாஞ்சி பூ வ, அமுக்கிரான்வேர் பூ உ, பரங்கிப்பட்டை பூ ச, கோஷ்டம், அதிமதுரம், நன்னுரிவேர் வகைக்கு பூ ௨, சிறுதேக்கு, செல்வியம், விலாமிச்சைவேர் வகைக்கு பூ வ, எல்லாமிடித்து வடிகட்டிச் சூரணமாகச் செய்துகொண்டு, ஏலம் வீ உ, ஜாதிக்காய் வீ ௨, கிராம்பு வீ க, ஜாதிபத்திரி வீ ௨, இந்தத்தினுசுகள் நாலேயும் வெவ்வேறுகப் பொடிசெய்து வடிகட்டிவைத்துக்கொண்டு, மேனிற்சொல்லியிருக்கிற கியாழத்தில், சீனிச்சர்க்கரை சேர்-உ, சேர்த்து வடிகட்டிப் பாகுசெய்து, அது பாகு ஆகிறகாலத்தில் சுயம்தேன் ஒ-சேரும், இந்த சூரணமும் அதில் சேர்த்து நன்றுய்க்கிளறி ௨-சேர் பசுவின் நெய்யையும் அந்த வெவ்வேறுன நாலுதினுசு சூரணத்தையும் சேர்த்துப்பக்குவமாய் லேகியம்செய்துகொண்டு, வேளேக்கு ஒரு வீ வீதம் உ-வேளே ஒருமண்டலம் சாப்பிட்டால் ஆரோசிகம் தீரும். தீபனமாகும், சுரத்தைத்தீர்க்கும், உக-விதமான மேகவியாதிகள் சொஸ்தமாகும். இந்தமருந்தை வேங்கடபதி ஐயரென்பவர் துளஜா மஹாராஜாவுக்குச் செய்துகொடுத்தனர்.

## தந்தவாய்வுக்குப்போடி.

57. சேராங்கொட்டை-௩௦, கொட்டைப்பாக்கு-௩௦, களிப்பாக்கு, துரிசு, காசிக்கட்டி வகைக்கு ௵ க, உப்புபடி ௫, இலுப்பையிலை தூக்கு-க, உப்புசேர்ந்த பழைய மாங்கொட்டை-௩௦, எருக்கம்பழுப்புசேர்-க, காசிக்கட்டியும், துரிசும் பொடிசெய்து வைத்துக்கொண்டு, மீதிசரக்குகளையெல்லாம் கரிபக்குவமாய் வறுத்துக்கொண்டு பிறகு பொடிசெய்து, துரிசு, காசிக்கட்டி இவைகளின் பொடியை மற்ற சரக்குகளுடைய பொடியோடு சேர்த்து ஒரு டப்பியில் நிரப்பிவைக்க, நாள்தோறும் அந்தப் பொடியைக் கொண்டு பல்தேய்த்தால் பல்வலிநீங்கும்.

## தந்தரோகத்துக்குப்போடி.

58. துரிசு, சேராங்கொட்டை, கடுக்காய்த்தோல், களிப்பாக்கு வகைக்கு வ௵ அ, பொரித்த சீனகாரம் வ௵ க, காசிக்கட்டி வ௵ க, ஏலம், மிளகு, கோரைக்கிழங்கு வகைக்கு வ௵ ச, வறுத்துப் பொடிசெய்து ஒரு தேங்காய்குடுக்கையில் நிரப்பிக்கொண்டு நாள்தோறும் பல்தேய்த்தால் தந்தரோகம் டுசாஸ்தமாகும்.

## பல்வலிக்கு மருந்து.

59. கரிவேலன்பட்டை சேர்-௧௦, மகிழம்பட்டை சேர்-௧௦, இடித்து ஒரு பானையிற்போட்டு ௧௬-சேர், தண்ணீரைவிட்டு ச-சேர், தண்ணீராகிறவரைக்கும் அடுப்பின்பேரில்வைத்து, சுவாலை போட்டுப் பிறகு அந்த ச-சேர, தண்ணீரைவடிகட்டி எடுத்துக்கொண்டு ஒரு சட்டியில்விட்டு, ஒரு சேர் சேராங்கொட்டையின் தைலம் எடுத்து, அதையும் மேற்சொன்ன கியாழத்திற்சேர்த்து, ஒரு சேர் கொட்டாங்கச்சிகளைத் தைலமெடுத்து அந்ததைலத்தையும்சட்டியில் வைத்திருக்கிற கியாழத்திற்போட்டு கையாந்தகரைச்சாறு சேர்-உ, அதிற்சேர்த்து இரும்பு அரப்பொடி, எருக்கம்பால் சேர்-வ, ஒரு எலுமிச்சம்பழத்தின் ரசத்தை விதையில்லாதபடி அந்த அரப்பொடியில்விட்டு, எருக்கம்பாலையும் அதில்விட்டு கலக்கி வெய்யிலில்வைத்துக் காய்ந்தபிறகு பொடிசெய்து வேறே வைத்துக்கொண்டு களிப்பாக்கு, காசிக்கட்டி, துத்தம், துரிசு, கடுக்காய்த்தோல், வகைக்கு வ௵ ௬, ஜாதிக்காய் வ௵ க, இந்த சரக்குகளையெல்லாம் வெவ்வேறாகப் பொடிசெய்துகொண்டு மேற்படி அரப்பொடியில் சேர்த்து ஷை கியாழத்தை அடுப்பின்பேரில்வைத்துக் கூழ்பக்குவமாகிற காலத்தில் இந்தப்பொடிகளை எல்லாம் அதில்போட்டு நன்றாய்க்குழப்பிப் பிறகு எடுத்துக்கொண்டு வெய்யிலில் வைத்துக் காய்ந்தபிறகு சட்டியிலிருக்கிற மருந்தையெல்லாம் சுரண்டி யெடுத்துக்கொண்டு பொடிசெய்து ஒரு குடுக்கை

யில் நிரப்பிவைத்துக்கொண்டு நாள்தோறும் இதைக்கொண்டு பல் தேய்த்தால் தந்தவியாதிகள் எல்லாம் சொஸ்தமாகும். பல்லீறுகள் நன்றாய்வளரும்.

### தந்தவியாதிக்கு வாய்கொப்புளிக்கிறகியாழம்.

60. மருக்காரை, சுக்கு, மருதம்பட்டை, வெள்வேலன்பட்டை, எருக்கம்வேர், ஆவாரம்பட்டை, பிராயம்பட்டை, இவ்வேழும்வகைக்கு ஒரு சேராக சேர்த்துக்கொண்டு இடித்து, அந்தத் தூளை ஒரு பானையிற்போட்டு, அதில் அ-படி, சலத்தைவிட்டு ச-ல் கீ-பங்கு கியாழமாகிறவரைக்கும் காய்ச்சிப்பிறகு அந்த கியாழத்தைக்கொண்டு வாய்கொப்புளித்திடுக. இவ்விதமாய் ஏழுநாள் கொப்புளித்தால் தந்தவாய்வு சொஸ்தமாகும். இந்த கியாழம் புளிப்பானால் வேறே கியாழத்தைச் செய்துகொள்க.

### மூலவாய்வுக்கு எண்ணெய்.

61. இம்புராவேரின் பட்டையை மெலிதாக அரைத்து எண்ணெயில் பழக்கிய ஒரு சட்டியிற்போட்டு, சிற்றாமணக்கெண்ணெய்சேர் ஒன்றைவிட்டு சிறுகாஞ்சிவேர், கண்டங்கத்திரிவேர், வகைக்கு பூ௳ க, பஞ்சுபோலிடித்து வேறொரு சட்டியிற் போட்டு, அதில் உ-படி சலத்தைவிட்டு அஷ்டபாக கியாழஞ்செய்துகொண்டு வடிகட்டி, மேற்சொல்லியிருக்கிற எண்ணெயிற்போட்டு, ஒரு சேர் வெண்காயத்தை மெல்லியதாய் அரிந்தும் வெட்பாலை அரிசி வ-பலத்தைப்பொடிசெய்தும், மேற்சொல்லியிருக்கிற எண்ணெயிற்போட்டு வெண்காயம் வறுபடுகிறவரையில் காய்ச்சிப் பிறகு அந்த எண்ணெயை எடுத்துக்கொண்டு ஒரு பாத்திரத்தில் விட்டு வைத்துக்கொண்டு, ரு-நாள் அல்லது எ-நாள் இந்த எண்ணெயை உட்கொண்டால் மூலவாய்வு சொஸ்தமாகும். இச்சாபத்தியம். தயிர், சுடுசாதம், வெண்காயம் தள்ளுபடி.

### ஆசனம்வெளியில் விழிந்திருப்பதற்குநெய்.

62. ஒணாங் கொழுந்து பூ௳ உ, வெண்காயம் பூ௳ உ, முலைப்பால் சேர்-க, சிற்றாமணக்கெண்ணெய் சேர்-க, இவைசேர்த்துப் பக்குவமாய் எண்ணெய் செய்துகொண்டு, காலையில் ஒரு வராகனிடை சாயரக்ஷை ஒரு வராகனிடையாக கo-நாள் உட்கொண்டால் கணத்தினால் குழந்தைகளுக்கு ஆசனம் வெளியேயிருந்தாலும் ரத்தசீதமிருந்தாலும் பெரிய பிள்ளைகளுக்கு கo-வருஷம் வரைக்கும் ஆசனம் வெளியே விழும்படியான எவ்வித வியாதியிருந்தாலும் சொஸ்தமாகும். இது அனுபோகத்துக்கு வந்தமருந்து. ஒணான்கொடி பெரிய கொடியாயெடுத்து அதில் ஒருஜாண் அளவுக்கு நறுக்கிக்கொண்டு நறுக்கின உடனே வாயில்வைத்து

ஊதிஞல் அதிலிருந்து பால்வரும் அந்தப்பாலே ஒருபாத்திரத்தில் எடுத்துக்கொண்டு ஆசனம் வெளியே விழுந்திருந்தால் அதற்குத் தடவிஞல் சொஸ்தமாகும். இந்தப்பாலே ஹ-சேர் அல்லது பஅ-சேர் எடுத்துக்கொண்டு மேற்சொல்லிய் எண்ணெயோடு கலந்து காய்ச்சிஞல் அதில் அதிக குணமுண்டாகும்.

## வயிற்றுக்கடுப்புக்கு லேகியம்.

63. வரப்பூலாவேர், காரைவேர், மாதளேவேர், அருநெல்லி வேர், வாழைப்பூ, கோரைக்கிழங்கு, தென்னம்பாளே, விச்சுப்பூ, மாம்பட்டை, துத்திவேர், வரச்சுண்டிவேர், நாவற்பட்டை, ஆவாரம்வேற்பட்டை, நிலமாதளேவேர், இலந்தைவேர்வகைக்கு அரை சேர்வீதங்கொண்டுவந்து அவைகளில் நஉ-படி தண்ணீரைவிட்டு அட்டபாகமாக கியாழம்செய்துகொண்டு எலுமிச்சம்பழம்சாறு, கருவேலன்காய்சாறு, துருஞ்சி, மாதளம்பழச்சாறு, வில்வஇலேச் சாறு முசுமுசுக்கைச்சாறு, கரும்புரசம் வகைக்கு சேர்-வ, இந்தச்சாறுகளே யெல்லாம் அந்த கியாழத்தில்போட்டு, வடிகட்டிப் பாகு செய்துகொண்டு பாகு ஆகிற சமயத்தில் கர்க்கடகசிங்கி, இஸ்கோல்விதை, குராசானி ஓமம், அதிவிடயம், கடுக்காய்பிஞ்சி சிறுநாகப்பூ, சீரகம், மாம்பருப்பு, புளியங்கொட்டைத்தோல், சாதிக்காய், வில்வப்பிஞ்சி, மாதள ஓடு, கோரைக்கிழங்கு, வெள்ளரி விதை, ஆனேத்திப்பிலி வகைக்கு பூ-வ, சேர்த்துச் சூரணம்செய்து வடிகட்டி இந்த சூரணத்தையும் ஒருசேர் பசுநெய்யையும் அந்த பாகத்திற்போட்டு லேகியம் செய்துகொண்டு, வேளே ஒன்றுக்கு கழற்சிக்காய்பிரமாணம் இரண்டுவேளே இருபதுநாள் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட வயிற்றுக்கடுப்பும் அதிசாரமும் சொஸ்தமாகும்.

## கிராணிகபாடம்.

64. பெருமரப்பட்டை, நர்மாமடிப்பட்டை, இலுப்பைக்கட்டி, வில்வப்பழம், ஆவாரம்பிசினி, பொடசப்பாலே, மாங்கொட்டை பருப்பு, புளியங்கொட்டைதோல், கசகசா, சீரகம், வெந்தயம், லவங்கம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, சிறுநாகப்பூ, ஓமம், கஞ்சா, வசம்பு, அதிவிடயம், கடுக்காய்த்தோல், இலவம்பிசின், காசிக்கட்டி, கர்க்கடகசிங்கி, பொன்முசுட்டைவேர், பெருஞ்சீரகம் சன்னலவங்கப்பட்டை, லவங்கப்பட்டை, காட்டத்திப்பூ, பருத்திப்பருப்பு, வகைக்கு வீ-உ, இவை யாவற்றும் வறுத்து ஒரு சேர் போஸ்தக்காய் கியாழம்செய்து, இந்த கியாழம்விட்டு, வறுத்த சரக்குகளேக் கல்வத்திலிட்டு நாலுஜாமம் அரைத்து, ஆவாரம்பட்டைச்சாறு, நாவற்பட்டைச்சாறு, எடுத்துத் தனித்தனி அதிற்போட்டு நாலுஜாமம் அரைத்து, பிறகு எலுமிச்சம்பழ ரசத்தை

விட்டு ஒரு சாமம் அரைத்து இலந்தம்பழம் பிரமாணமாக மாத்திரை செய்துகொண்டு வேளைக்கு ஒரு மாத்திரைவீதம் இரண்டு வேளையாய் ௨-மண்டலம் சீரககியாழத்திலாவது தயிரிலாவது கிராம்பு கியாழத்திலாவது அல்லது பச்சை சலத்திலாவது அரைத்து சாப்பிட்டால் கிராணி, வயிற்றுக்கடுப்பு, அதிசாரம், அனுகூலமாகும். இச்சாபத்தியம்.

சுகவிரேசனத்துக்கு ஹைபதிசூரணம்.

65. நெல்லிமுள்ளி, கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், கடுக்காய், மிளகு, திப்பிலி, சுக்கு, லவங்கம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஏலம், இவை வகை ஒன்றுக்கு வீ௧, சுத்திசெய்த செவதைவேர் வீ௩௦, இந்தவகைகளெல்லாவற்றையும் சூரணம் செய்து வடிகட்டி, சர்க்கரை வீ௪௧, அந்தச் சூரணத்தோடு சேர்த்து நன்றாய்க் கலக்கி ஒருபுதிய கலயத்திற்போட்டு வைத்துக்கொண்டு, காலையில் ஒரு விராகனிடை சூரணத்தை வெந்நீரிற் போட்டுச் சாப்பிட்டால், ௯-தடவை மலசுத்தியாகும். சுகவிரேசனமாகும். புளிசேர்த்துக்கொண்டு ரசான்னம் சாப்பிடலாம் இராத்திரிக்கு சுக்கு வீ௧, சீரகம் வீ௧, சேர்த்துக் கியாழஞ் செய்து சாப்பிடலாம். சரீரத்துக்குத் தக்கபடியும் வயதுக்குத் தக்கபடியும் அதிகசூரணமும் சாப்பிடலாம்.

காதில் சீழ்வருகிறதற்குத் தைலம்.

66. நல்லெண்ணெய், கையாந்தகரைச்சாறு, நெல்லிக்காய் சாறு, பசுவின்பால் வகைக்கு சேர்-௨, அதிமதுரம் பூ௨, ஒரு பாத்திரத்திற்போட்டுப் பக்குவமாய்க் காய்ச்சிக்கொண்டு ஸ்நானம் செய்துவரவேண்டியது.

காதில் குத்தலுக்கு எண்ணெய்.

67. நல்லெண்ணெய் சேர்-வ, வலம்புரிக்காய்-௪, வசம்பு வீ௧௭, காய்ந்தமுளகாய் - ௫, சேர்த்து எண்ணெய் காய்ச்சிக்கொண்டு வேளைக்கு ௩-சொட்டு வீதம் இரண்டுவேளை மூன்று நாள் காதில் வார்த்துக்கொண்டு மேற்சொல்லியிருக்கிற எண்ணெயைத் தேய்த்து இவ்விரண்டு சிகிச்சையும் செய்தால் காதின் உபத்திரவம் சொஸ்தமாகும்.

அண்டவாதத்துக்கு துவாலைக்கட்டு விடமருந்துப்போடி.

68. கரிவளையல் வீ௩, மிளகு வீ௩, இரண்டும் கல்வத்திற் போட்டு மெல்லியதாகப் பொடிசெய்து மனோசிலை வீ௨, பெருங்காயம் வீ௨, இந்த இரண்டையும் பொடிசெய்து முன்னேசெய்த பொடியோடு சேர்த்து ௪-ஜாமம் அரைத்து ஒரு டப்பியில் நிரப்பி வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு பணவிடையாக ௧௦ - நாள்

இரண்டு வேளையும் உட்கொண்டால் அண்டவாதம் சொஸ்தமா கும். அண்டத்தில் வீக்கமிருந்தால் சொஸ்தமாகும். ஸ்திரீகள் மாதருதுவாகும்பொழுது உதரச்சிக்கலிருந்தால் மூன்றுநாள் இந்த மருந்தைக் கொடுத்தால் சொஸ்தமாகும். பிரசவமானபின்பு ஸ்தி ரீகளுக்கு வயிற்றில் உதரச்சிக்கலிருந்தாலும் கல்மிஷமிருந்தா லும் இம்மருந்தை மூன்றுநாள் அல்லது ரு - நாள் கொடுத்தால் உதிரம் விழுந்துபோய் வியாதி சொஸ்தமாகும்.

## இருமல், சுவாசம், பழயசுரத்துக்கு அரக்கெண்ணெய்த்தைலம்.

69. கொம்பரக்கு பூ௨ க௦, இதையிடித்துப் பானையிற்போட்டு ச - படி சலத்தைவிட்டு ௨-படி கியாழமாகச் செய்துகொண்டு அரத்தை, தேவதாரி, நெல்லிமுள்ளி, அயிற்கட்டை, சந்தனக் கட்டை, விஷ்ணுகிராந்தி, சீந்திற்றண்டு, பேராமுட்டி, சிற்ரு மூட்டி, நன்னரிவேர், முத்தக்காசு, அமுக்கிரான்வேர், விருகங் கிழங்கு, மருள்கிழங்கு, நெய்ச்சட்டிவேர், தண்ணீர்விட்டான் கிழங்கு, தாமரைவளயம், வெட்டிவேர், நிலப்பனைக்கிழங்கு, விலா மிச்சம்வேர், மூக்குத்திப்பூண்டு, வகைக்கு ரு-பலமாக இடித்து ஒருபானையிற்போட்டு அ-படி தண்ணீர்விட்டு அடுப்பில் வைத்து அஷ்டபாககியாழ மிறக்கிக்கொண்டு ஒருபடி நல்லெண்ணெயில் இந்த இரண்டுவித கியாழத்தையும் ஊற்றி அதோடுகூட ஏலம், லவங்கப்பட்டை, சண்பகப்பூ, கோஷ்டம், கடுகுரோகிணி, அதி மதுரம், கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், பெருஞ்சீரகம், சிறு நாகப்பூ, செவ்வல்லிக்கொடி, பெருங்குரும்பை, சதகுப்பை, சாம் பிராணி, ஜடாமாஞ்சி, கற்பூரம், பூலாங்கிழங்கு, தேவதாரம், வகைக்கு பூ௨ வ, ஜாதிக்காய், கிராம்பு, கோரோசனம் வகைக்கு வ௨ க, பசுவின்தயிர் ஒருபடிகொண்டுவந்து அதிலிருக்கிற நீர் வடிந்து போகும்படியாக ஒரு சவுக்கத்திற்கட்டி அந்த மூட்டை யின்கீழ் ஒருபாத்திரம் வைத்து ஒருபடிநீரை அதிலிருந்து வடித் துக்கொண்டு மேற்படி சரக்குவகைகளெல்லாம் இந்த நீரைவிட் டரைத்து மேற்படி எண்ணெயிற் சேர்த்துக்கொண்டு அந்த எண் ணெயை மெழுகுபக்குவமாய் காய்ச்சிக்கொண்டு, இந்த எண்ணெ யைத் தேய்த்துக்கொண்டால் இருமல், சுவாசம், அஸ்திரம், அனேகவுஷ்ணம், இவையெல்லாம் சொஸ்தமாகும். எண்ணெய் தேய்த்துக்கொண்டால் புளிப்பும், கசப்பும் தள்ளுபடி.

## நேத்திரரோகம் கூசு-க்கும் தைலம்.

70. பொன்னுங்காணிச்சாறு, சிறுகீரைச்சாறு, சீந்திற்சாறு, பால், நார்த்தம்பழச்சாறு வகைக்கு படி ஹ, கோரைக்கிழங்கு, அதிமதுரம், ஏலம், சண்பகப்பூ, கிராம்பு வகைக்கு வ௨ உ, நல் லெண்ணெய் படி-க, சரக்குவகையெல்லாம், மேற்சொல்லியிருக்

கிற ரசங்களில் அரைத்து எண்ணெயோடுகலந்து, மெழுகுபக்கு மாய்க் காய்ச்சிக்கொண்டு, இந்த எண்ணெயை அ-நாளைக்கு ஒரு தரம் தேய்த்துக்கொள்ள, நேத்திரரோகங்கள் கூசுஉ-ம் சொஸ்த மாகும். பத்தியம் எண்ணெய் தேய்த்துக்கொள்ளுகிறநாளில் புளி மோர், பால் தள்ளுபடி; இலுப்பைக்கட்டி, சிகைக்காய் உபயோ கிக்கலாம்.

நேத்திரநோய்க்கு தாம்பிராதிமாத்திரை.

71. ரசம் வ௲ க, காரீயம் வ௲ உ, துத்தம் வ௲ ச, சங்கு வ௲ அ தாம்பிரம் அரப்பொடி வ௲ கசு, எலுமிச்சம்பழச் சாற்றில் இந்த தினுசுகளைச் சேர்த்துக் கல்வத்தில் ௩உ-ஜாமம் அரைத்து மாத் திரை செய்துகோண்டு நேத்திரரோகங்கள் சகலத்திற்கும் உரை த்துப் போட்டுக்கொண்டால் சொஸ்தமாகும்.

கண்ணோய்க்கு மாத்திரை.

72. வெள்ளிபஸ்பம், உடும்பின்நகம், நத்தையின்மேலோடு, யானைத்தந்தம், கோழிநெஞ்செலும்பு, துரிசு, யெல்லாம்சேர்த்து எலுமிச்சம்பழ ரசத்தைவிட்டு கஉ-ஜாமம் அரைத்து மாத்திரை செய்து முலைப்பாலில் உரைத்துக் கண்ணிற்போட்டால் கண்ணிற் பூ விழுந்திருந்தால் சொஸ்தமாகும்.

பூனுகஜயநீர் சரக்குகட்டு.

73. துரிசு, இந்துப்பு, சூடம், சீனம், கல்லுப்பு, பூநீர், நவாச் சாரம் வகைக்கு பூ௲ க, நாலாங்காய்ச்சு வெடியுப்பு பூ௲ ச, புளி யிலை பூ௲ அ, எல்லாம் கல்உரலில் இடித்து ஒரு சட்டியிற்போட்டு அடுப்பில்வைத்து உ-ஜாமம் எரித்தால் சுண்ணாம்பு உண்டாகும். அந்த சுண்ணும்பை எடுத்துவைத்துக்கொண்டு, அந்தசுண்ணும்பு நிறையின் நாலில் ஒருபாகம் பூநாகம் சுண்ணும்பில் சேர்த்துவைத் தால் அதில் ஜயநீர் உண்டாகும். அப்படியானவுடனே நாயுருவிச் சாம்பலில் எடுத்த உப்பு, கள்ளிப்பழுப்பில் எடுத்த உப்பு, இவ்வி ரண்டுவித உப்பையும் ஒவ்வொன்றும் கால்சேராக பூநாகத்தோடு சேர்த்து ௩-நாள் வைத்திருந்தால் ஜயநீராகும். அந்த ஜயநீரால் எந்த சரக்குக்கும் ஒருஜாமம் வரையில் சுருக்கு ஒத்தடம் கொடு த்தால் அந்தசரக்கு அக்கினிஜயமாகும். இவ்விதமாய் கட்டபட்ட சரக்கு எந்தமருந்தில் சேர்ந்தாலும் அது அதிக குணத்தைக் கொடுக்கும்.

அஷ்டகுன்ம முதலானதற்குத் தும்மட்டிக்காய்கடுகு.

74. பேய்த்தும்மட்டிக்காய்சாறு படி-௨, பொண்டைச்சாறு படி-க, ஒருசட்டியில் சேர்த்து அடுப்பில்வைத்து, மெதுவான சுவாலைபோட்டுப் பாகுபக்குவமாகிறகாலத்தில், பஞ்சலவணமைந்

தும் வகைக்கு பஞ-சேராக மொத்தம் காலேவீசம் சேரையும் கருஞ்சீரகம் பூ வ, இந்த சு-தினுசுகளையும் பொடிசெய்து அந்த பாகத்திற் போட்டுத் தேன் சேர்-௧ விட்டுப் பக்குவமாய் லேகியத்தைப்போல் கடுகுசெய்து இந்தக்கடுக்கை வேளைக்குக் கொட்டைப்பாக்களவாக இரண்டுவேளை ௧௦-நாள் உட்கொண்டால் அஷ்டகுன்மம், குடல்வாதம், மஹோதரம், பெருவயிறு, அக்கினிமந்தம், கபரோகம், சுவாசங்கள்,வயிற்றிற்பிறந்த கட்டிகள் சொஸ்தமாகும். இச்சாபத்தியம். சரீரத்துக்குத் தக்கபடி கொடுக்கவேண்டியது. விசேஷ ரோகமிருந்தால் உ௦-நாள் கொடுக்கலாம். அன்னத்துவேஷமிருந்து அதிகபித்த உபத்திரவமாயிருந்தால் இம் மருந்தைக் கொடுக்கக்கூடாது.

### வங்குக்குமேலே தடவும்மருந்து.

75. இலந்தைக்கொட்டை வீ உ, திப்பிலி வீ உ, மஞ்சள் வீ ச, வேண்டியதேனைவிட்டுமெலிதாக அரைத்து ஒருமண்டலம் தடவினால் வங்கும் அதன் கருஞ்சிட்டைகளும் நீங்கும்.

### அண்டவாதத்திற்கு மெழுகு.

76. கழற்சிவிதை, வெள்ளைக்குண்டுமணி, முடக்கத்தான், எருக்கம்விதை, காட்டுக்கொள்ளு, இவை சமபாகமாகச்சேர்த்து, கல்லுரலிற்போட்டு இடித்து, வேண்டிய ஆமணக்கின் எண்ணெயைவிட்டு அந்தச் சூரணத்தைக் கல்வத்திற்போட்டு நாலுஜாமம் அரைத்து மெழுகுபக்குவமாய் செய்துகொண்டு கொட்டைப்பாக்களவாக உண்டைகள் செய்துகொண்டு ௩-நாள் உட்கொண்டால் அண்டவாய்வு அண்டவீக்கம் சொஸ்தமாகும். உப்பு தள்ளுபடி. அண்டத்தில் வீக்கமிருந்தால் ஒட்டைலத்தி, கழற்சியிலை,இடித்து வறுத்து ஒத்தடம் கொடுத்தால் அனுகூலமாகும்.

### எலிகடிக்கு மருந்து.

77. ஆகாசகருடன்கிழங்கு ஒருவராகனிடையை வெள்ளாட்டுப்பாலில் மெலிதாக அரைத்து ௩-நாள் உள்ளுக்குக் கொடுத்தால் சொஸ்தமாகும். உப்புதள்ளுபடி.

### புழுவெட்டுக்கு மை.

78. பொரித்தவெண்காரம் ஒருவராகனிடையை வெண்கலத் தட்டில்வைத்து அதின்பேரில் கையாந்தகரை ரசத்தைவிட்டு இரும்பு பாத்திரத்தினால் ௩-நாழிகை அரைத்து பிறகு வெண்ணெய் சேர்த்து, சங்கினால் ௩-நாழிகை அரைத்து ஒரு டப்பியில் எடுத்துவைத்துக்கொண்டு, புழுகினால் மயிர் உதிர்ந்துபோனால் ரு-நாள் தடவினால் மயிர் மறுபடியும் முளைக்கும்.

### மலட்டுவேலிக்குக் கடுகு.

79. பொண்டை கொழுந்துபடி-௨ அரைத்து,பொண்டைநடு தண்டு இடித்தசாறுபடி-௨ யோடுசேர்த்து மிளகு, சுக்கு, வசம்பு, வெள்ளைப்பூண்டு, ஓமம், சீரகம், கருஞ்சீரகம், கடுகு, நாய்க்கடுகு வகைக்கு பூ வ, இந்துப்பு, ஆனைத்திப்பிலி வீ உ, இடித்து ஷை ரசத்திற்போட்டு அடுப்பில்வைத்து சுவாலைபோட்டு, கால்சேர் காணும்படியான சமையத்தில் முதல்தடவை இறக்கினசாராயம் அரைபடியைவிடுக. விட்ட உடனே சுவாலை உண்டாகும். அதின் பேரில் ஒரு சட்டியைக்கவிழ்த்து அந்தச்சுவாலையை அணைத்து அருணோதயகாலத்தில் அந்த கியாழத்தில் சேர் ஹ-கொடுத்து, அந்தக்கடுகும் கழற்சிக்காய்பிரமாணம் எடுத்துக்கொடுக்க. இவ் விதமாக ங-தினம் அல்லதுரு- தினம்கொடுத்து நிறுத்துக. மிகு தியாயிருக்கிறகடுகை வெயிலில் காயவைத்து எடுத்துக்கொண்டு, வேப்பங்கொழுந்து, இண்டங் கொழுந்து, குமிழின்கொழுந்து வகைக்கு புளியங்கொட்டை பிரமாணம் அரைத்து ஷை கடுகில் கழற்சிக்காய் அளவு சேர்த்து உருண்டையாகச் செய்து ருதுவா யிருக்கும்காலத்தில் காலையில் ஒரு உருண்டைகொடுக்க. இவ்வித மாய் ங-நாள்கொடுத்தால் ருதுவாகிறகாலத்தில் வயிற்றுவலி, உத ரச்சிக்கல், உடம்புவலி ருதுவின் சம்பந்தத்தினால் உண்டாகிற வியாதிகளெல்லாம் சொஸ்தமாகும்.

### சோரிசிரங்குக்கு மருந்து.

80. ஆம்பல்கிழங்கு பூ க, வெம்பாடம்பட்டை பூ க, அவு ரிச்சாறுபடி-க, வேப்பங்கொழுந்து அரைத்த உருண்டை பூ க, கார்போகரிசி பூ ௨, துத்தம், துரிசு வகைக்கு பூ வ, வேப்பம் விதை அரைத்த உருண்டை பூ க, இவையெல்லாம் அரைத்து கூ-படி நல்லெண்ணெயிற்போட்டு வெயிலில் வைத்துக்கொண்டு அருணோதயத்துக்கு இந்த எண்ணெயைச் சிரங்குக்குத் தடவிக் கொண்டு ங-மணிவரைக்கும் இருந்து பிறகு இலுப்பைக்கட்டியி னாலாவது பச்சைப்பயறு அரைத்தாவது உடம்புக்குத் தடவிக் கொண்டு ஸ்நானஞ்செய்தால் அனுகூலமாகும்.

### உன்மாதபித்தத்திற்கு நசியம்.

81. கால்சேர் நல்லெண்ணெயில் உடும்புப்பிச்சைபோட்டுக் காய்ச்சி நசியமாகச் செய்துகொண்டு பித்தம் உபரியாயிருக்கிற கா லத்தில் இந்த நசியத்தை நாசியிற்பிழிந்தால் உபரியாயிருக்கிற பித் தம் இறங்கிப்போகும்.

### பீனசத்துக்கு கல்பம்.

82. நெல்லிமுள்ளி, மிளகு, கடுக்காய், கஸ்தூரிமஞ்சள், வே ப்பம்விதை வகைக்கு ஒரு பலமாகச்சேர்த்துக் கையாந்தகரைச்சா

ற்றில் ௪-ஜாமம் அரைத்து, பத்துபில்லைகளாகத் தட்டி வெயிலில் காயவைத்துக்கொண்டு, பசுவின்பாலில் ஒருபில்லையை அரைத்துத் தலைக்குத்தடவிக்கொண்டு நன்றாய்த்தேய்த்துப் பிறகு வெந்நீரில் ஸ்நானம்செய்குக. இவ்விதமாய் நாலுநாளைக்கு ஒருதடவை ஸ்நானம்செய்தால் பீனச உபத்திரவம் சொஸ்தமாய் கண்ணுக்கும் தேஜஸ் உண்டாகும்.

### மூலிகை விஷ அறிவிப்பு.

83. தான்றிக்காயின் கொட்டைவிஷம், சித்திரமூலத்தின் மேற்பட்டை மருந்துக்கு உபயோகம், உள்வேர் விஷம்; செவதை வேரின்பட்டை மருந்துக்கு உபயோகம், உள்வேர் விஷம்; பாதிரி வேர், வில்வவேர், முன்னைவேர், சுக்கு, இஞ்சி, எள்ளு, முருங்கப் பட்டை, இந்த சரக்குகளின்மேல் தோல்விஷம்.

### ஊறலுக்கு சாமிநாத எண்ணெய்.

84. சிற்றாமணக்கெண்ணெய் சேர்-க, எலுமிச்சம்பழச்சாறு சேர்-க, பூந்திப்பட்டை பூ க, கழற்சிபருப்பு-ந, அரைத்து எண்ணெயிற்சேர்த்து மெழுகுபக்குவமாய்க் காய்ச்சிக்கொண்டு இந்த எண்ணெயில் ஒருதரம் பேதிக்குவாங்கிப் பிறகு ௧௦-நாள் கொஞ்சங்கொஞ்சமாய் உள்ளுக்குச்சாப்பிட்டால் ஊறல் சொஸ்தமாகும்.

### ஆயுசு கிண்ணியைச்சோதிக்கிறவிதம்.

85. ஆண்டோடாகில்தெற்காகி ஆறும்மாதம் வடக்காகி, நீண்டுகிழக்கேமுத்திங்கள் நேர்மேற்கே திங்களொன்றரையாம், ஆண்டாரறிந்து சொன்னபடி யறிவாலறிந்துபாருங்கள், மாண்டேபோனார் கண்டீரோமதியேற்குறைந்து தோன்றிடுமே. பதினாறுபலம் நிறையுள்ள தாம்பிரகிண்ணியில் பசுவின்நெய் பூ கசு.

### உன்மத்தம், வெறிபித்தம், சித்தபிரமம் அடிக்கடி மூர்ச்சைவந்துவிழுகிறது பித்தஎரிகுன்மம்மாரெரிச்சலுக்குமருந்து.

86. கோஷ்டம் ௩-வராகனிடையை வெந்நீர் விட்டரைத்து உருண்டையாகச்செய்து அந்த உருண்டையை உ வீசையுள்ளதேனில் கலந்து உட்கொள்க. மெலியசரீரத்துக்கும் சாதாரண சரீரத்திற்கும் ௨-வராகனிடை கோஷ்டத்தைத் தண்ணீரில் அரைத்துக்கொடுக்க. இச்சாபத்தியம். ௧௦-நாள் உ-வேளையுட்கொண்டு வந்தால் மேற்சொல்லியிருக்கிற வியாதிகள் தீரும். மருந்து அப்போதைக்கப்போது செய்துகொள்ள வேண்டியது. அடுத்தநாள் செய்திருந்த மருந்து உதவாது.

## மாறெரிவு, வயிறெரிவு, எரிகுன்மம், ஆரோசிகம், வாந்திக்குக்கியாழம்.

87. நெல்லுப்பொரிபூ க, காட்டுமல்லிகைவேர், வில்வவேர், பச்சைப்பயறைவறுத்து உடைத்து உமியோடுகூடியது, நெல்லி முள்ளிவகைக்கு பூ ௨, சீரகம் பூ வ, ஏலம் பூ வ, எல்லாம் இடித்து ஒருசட்டியிற்போட்டு ௨-சேர் தண்ணீரைவிட்டு அஷ்டபாக கியாழம் செய்துகொண்டு ௨௦-சேர் இளநீரைவிட்டு ஒவ்வொருவேளைக்கும் அப்போதைக்கப்போது சுடவைத்து ௨-வேளை ஏழுநாள் உட்கொண்டால் மேற்சொல்லியிருக்கிற வியாதிகள்தீரும். வியாதி பிரபல்மாயிருந்தால் அரைப்பணவிடை காளகண்டம் தேனில் உரைத்துக்கொடுத்து, அதின்பேரில் இந்த கியாழத்தைக் கொடுக்க. இச்சாபத்தியம். இந்த கியாழத்தில் சரீரத்துக்குத் தகுந்தபடி ஒருவராகனிடை சுக்கும் சேர்த்துக்கொள்ளலாம்.

## காளகண்டமேக நாராயணசெந்தூரம் செய்வதற்கு திராவகம் இறக்குகிறவிதம்.

88. ஆரம்பத்தில் விநாயகர் பூசைசெய்து, அருணசலசுவாமியைத் தியானித்து, நாலங்காய்ச்சுப்பொட்ளுப்பு சேர்-௩, சீனகாரம் சேர்-௨, நன்றாய்ப்பொடிசெய்து ஒரு மண்தோண்டியில் போட்டு, அந்ததோண்டியின்கழுத்தை எடுத்துப்போட்டு, அதின்பேரில் வாலை என்கிற எந்திரத்தைக்கவிழ்த்துப் புகை வெளியே போகாதபடிக்குத் துணிகட்டி அந்த தோண்டியை அடுப்பின்மேலேவைத்து மண்வாலைஎன்கிற எந்திரத்தில் தண்ணீரை ஊற்றிக்கொண்டிருக்க, அந்த எந்திரத்தின் குழாவின்கீழ் ஒரு பாத்திரத்தைவைத்து அந்தப்பானையின்கீழ் பெரியசுவாலைபோடுக. அந்த எந்திரத்தில் தண்ணீரை மேலுக்குமேல் வார்த்துக்கொண்டிருக்க முதலில் இறக்கிய திராவகம் காரமில்லாமலிருக்கும். அதை எடுத்து வேறே வைத்துக்கொண்டு, பிறகு இறங்குகிற திராவம் காரமாயும் மஞ்சள்நிறமாயும் இருக்கும் அதை எடுத்து ஒரு சீசாவில் வார்த்து வைத்துக்கொள்க. இந்ததிராவகம் இரும்பை உருக்கும். திராவகம் இறங்குகிறது நின்ற உடனே அந்தபானையை எடுத்துவிடுக. இவ்விதமாய் இரண்டுவிசை திராவகத்தை இறக்கிக்கொள்க. இரண்டுவிசையும் இறங்கின காரமுள்ள திராவகத்தைச்சேர்த்துக் காளகண்ட செந்தூரத்திற்குப்போடுக. காரமில்லாத திராவகங்களைச்சேர்த்துக் குன்மரோகத்துக்குச் சங்கதிராவகத்திற்காக உபயோகிக்கலாம்.

## காளகண்டம்செய்யும்விதம்.

89. பூமியில் ௫-வரட்டியைவைத்து அதில் நெருப்பைமூட்டி பாதிவரட்டிகள் பற்றிக்கொண்ட உடனே பானை ஓட்டை ஒரு

ஜாண் அகலமுள்ள சக்கரமாகச்செய்து, அந்த நெருப்பின்மேல் வைத்து ௧௨-வீ கந்தகத்தைப்போட்டு, நெருப்பு பற்றிக்கொள்ளாதபடிக்கு உருக்கிக்கொண்டு, பின்பு அதின்மேல் ௯௦-வீ ரசத்தைபோட்டு ஒரு கையால் அந்த சக்கரத்தைப் பிடித்துக்கொண்டு மற்றொரு கையில் ஒரு கத்தியை எடுத்துக்கொண்டு ரசம் முழுவதும் அந்த கந்தகத்தோடு சேர்த்து கரியைப்போல் கறுப்பாகிறவரைக்கும் கிளறிக்கொண்டிருந்து கறுப்பான உடனே எடுத்து ஜாதிலிங்கம் வீ கரு, பொன்னரிதாரம் வீ ௧௦, மனோசிலை வீ ௪, சேர்த்து மொத்தம் ௭௧-வீ களையும் கல்வத்திற்போட்டு, மேற்சொல்லியிருக்கிற காரமுள்ள திராவகத்தைவிட்டு ௩-நாள், ௧௨-ஜாமம் (நாள் ௧-க்கு ௪-ஜாமமாக நாள் மூன்றுக்கு ௧௨-ஜாமம்) அரைத்து, பிறகு அந்தப்பொடியைத் துணிகட்டியிருக்கிற காசிகுப்பியிற்போட்டு, அடுப்பில் ஒருசட்டியைவைத்து ௨-கை மணல்போட்டுஷை மருந்தைநிரப்பிவைத்திருக்கிறசீசாவை அதில் வைத்து, அந்தசீசாகழுத்துவரைக்கும் சுற்றிலும் மணல்போட்டு, அந்த சீசாவின்வாயைச் சக்கரமான ஒருஜல்லியினால் மூடி ஒரு சாமம்வரைக்கும் கமலாக்கினி என்று சொல்லப்பட்ட இரண்டு விறகின் சுவாலைபோட்டு, பிறகு இருகமலாக்கினி என்று சொல்லப்பட்ட நாலுவிறகால் ஒருஜாமம் எரித்து, பிறகு ரு-சாமம்வரைக்கும் படாக்கினி சுவாலைபோட்டு, இவ்விதமாய் ௭-சாமம் சுவாலை போட்டுப் பிறகு அந்த சீசாவை எடுத்துத் தண்ணீரில் நனைத்து, அதை உடைத்து அதின் வாயிடத்திருக்கும் மருந்தையெடுத்து ஒரு சாண் துணியில்கட்டி, சீந்திற்கொடி சேர்-௬, கொண்டுவந்து அதன் மேல்தோலை எடுத்து இடித்து ஒருபானையிற்போட்டு ௧௬-படி தண்ணீரைவிட்டு, ஷை மருந்தின் மூட்டையைத் தோளந்திரமாய் தொங்கவிட்டு, ஒருபடி தண்ணீராகும்படி சுவாலைபோட்டு, பிறகு அந்தமருந்தை எடுத்துக்கொண்டு சுத்திசெய்த கல்வத்திலிட்டு இரண்டுநாள் பொடிசெய்து ஒரு டப்பியிலாவது டப்பாவிலாவது எடுத்துவைத்துக்கொண்டு, வேளைக்கு ௨-புணவிடை இரண்டுவேளையும் அனுபானத்தில் உட்கொண்டுவந்தால் சகல வியாதிகளும் சொஸ்தமாகும். மேற்சொல்லியிருக்கிற காசிகுப்பி காசி தேசத்துக்குப்பிஎன்று தெரிந்துகொள்க.

மூத்திரகிருச்சரத்துக்கும் ஸ்ரீகள் சரியானகாலத்தில் ருதுவாகாமலிருக்கிறதற்கும், அக்கினிமாந்தத்திற்கும்

பஞ்சாக்கினி செந்தூரம்.

90. பூநீர் வீ ௨, நவாச்சாரம் வீ ௧, ரசம் வீ ௨, நாலாங்காய்ச்சுவெடியுப்பு வீ ௬, நெல்லிகந்தகம் வீ அ, சிட்டம் வீ ௧௦, ஊசிகாந்தம் வீ ௧௨, உளியின் அரப்பொடி வீ ௧௪, கல்வத்தி

விட்டு எருக்கம்பால் உ-சேர் விட்டு ச-சாமம், அரைத்து பொற்ற லைக்கையாந்தகரைச் சாற்றைவிட்டு ச-சாமம் அரைத்து, பிறகு ஒருசட்டியின் மத்தியபாகத்தில் இந்த மருந்தையெல்லாம் ஒரு சாண் அகல சக்கர அடையாகத்தட்டிக் காயவைத்துக் காய்ந்த பிறகு இன்னொரு சட்டியை அதின்பேரில் கவிழ்த்து, மண்சீலை செய்து அடுப்பில்வைத்து கo-சாமம் வடவாக்கினி சுவாலைபோட்டு, தானே ஆறினபிறகு மருந்தை யெடுத்து ஒரு கல்வத்திற் போட்டு மிருதுவாகப் பொடிசெய்து ஒரு குப்பியில் நிரப்பிவைத்துக்கொண்டு, வேளைக்கு ௨-பணவிடையாக தேனிற்கலந்து உள்ளுக்குக்கொடுத்துப் பிறகு நாய்வேளை வேரோடு வீ-உ வறுத்துக் கொண்டு, பின்பு க-வீ-மிளகையும்சேர்த்து சிறுவறலாக வறுத்து ஈ-வீ-சித்தரத்தை நறுக்கிப்போட்டு உ-சேர் தண்ணீரைவிட்டுக் காய்ச்சி, கால்சேர்கியாழமாக இறக்கிக்கொண்டு உள்ளுக்குக்கொடுக்க. இவ்விதமாய் உ-வேளை கo-நாள் கொடுத்தால் மூத்திரக்கிருச்சிரம், மூத்திரம் அடைதல், ஸ்ரீகளுக்காவது புருஷர்களுக்காவது மூத்திரத்தானத்தில் கல் அடைத்துக்கொண்டிருக்கிறதும், துர்மாமிச மிருக்கிறதும், சரபி அடைத்துக்கொண்டிருக்கிறதும், நீங்கிச்சொஸ்தமாகும். கல்லடைத்துக்கொண்டிருந்தால் கண்ணுக்குத்தெரியும். மேல் எழுதியிருக்கிற அனுபானத்தோடு இம்மருந்தை உட்கொண்டுவந்தால் மூத்திரசம்பந்தமான சகல வியாதிகளும் சொஸ்தமாகும். பிரசித்தமானமருந்து. மூங்கில் மேற்றோல் மூங்கில்இலை, தராய்என்கிற சாந்தரசத்தின்வேர், கண்டங்கத்திரியின்வேர், சீரகம் வகைக்கு வீ-க, ஒன்றாய்சேர்த்துக் கியாழம் செய்துகொண்டு மேற்சொன்ன மருந்தைத் தேனிற்கலந்துகொடுத்ததின்மேல் கொடுக்கவேண்டியது. இவ்விதமாய் உ-வேளை ஒரு மண்டலம் உட்கொண்டால் வாய்வு சம்பந்தமாய் சரீரம் ஸ்தூலமாயிருந்து சுரோணிதம் அடைத்துக்கொண்டிருக்கிற ஸ்திரீகளுக்குக் கிரமமாய் மாதத்துக்கு ஒருதரம் ருதுவுண்டாம். சொல்ப உதரம் விழுந்து பாக்கிவாய்வினால் அடைத்துக்கொண்டிருந்து ருதுவாகிறதற்கு உ-அல்லது ௩-நாள் அப்பியந்தரமானால் ரு-நாள் இந்தமருந்தைக் கொடுக்க. இவ்விதமாய் ச-அல்லது ரு-மாதம் கொடுத்தால் வியாதிநீங்கும். இரத்த விருத்தியில்லாமல் சரீரம் அத்தியந்த கிருஷியாயிருக்கிற ஸ்ரீகளுக்கு உதரம் கிரமப்படி விழாமலிருந்தால், இந்த மருந்தைக் கொடுக்கலாகாது. திப்பிலி, மிளகு வறுத்துப் பொடிசெய்து அந்தப்பொடியை ஒரு சிமிட்டா எடுத்துத் தேனிற்கலந்து மேற்சொல்லியிருக்கிற மருந்தை ௨-பணவிடையாக சேர்த்துக்கொடுத்துப் பிறகு அதின்மேல்க௨-வீ-சுக்கின்கியாழம் செய்துகொடுக்க. இவ்விதமாய் இரண்டுவேளை ஒருமண்டலம் கொடுத்தால் அக்கினிமந்தம் சொஸ்தமாகும்.

## சிதம்பரம் பிள்ளை

### க்ஷயம் முதலானரோகங்களுக்கும் தாதுவிர்த்திக்கும், பூரண சந்திரோதயம்.

91. தங்கம் பூ க, ரசம் பூ அ, கந்தகம் பூ கசு, இந்த ௩-மருந்தையும் பொற்றலைக்கையார்தகரைச் சாற்றைவிட்டு ஒருநாள் அரைத்து, கற்றாழைசாற்றைவிட்டு ஒருநாள் அரைத்துக் காய வைத்து காசிக்குப்பியிற்போட்டு அதின்வாயை மாவுக்கல்லால் அடைத்து, அதின்மேல் மண்துணிசுற்றி, ஒருபானையில் பாதிவரையில் மணல்போட்டு அதில் இந்தக்குப்பியைவைத்து, குப்பியை மூடிக்கொள்ளும்படியாக அந்தப் பானையில் மணல்போட்டு பானையை அடுப்பின்மேல் வைத்துத் தீபாக்கினியைப்போல் ஒருநாள் சுவாலைபோட்டு, இரண்டாம்நாள் கமலாக்கினி, மூன்றாநாள் காடாக்கினி, இவ்விதமாய் மூன்றுநாள்செய்து ஆறவைத்து, அந்த மருந்துக்குப்பியை உடைத்து மருந்தை எடுத்துக்கொண்டு மருந்துக்கு நாலில் ஒருபாகம் பச்சைகர்ப்பூரத்தைச்சேர்த்து கிராம்பு, கும்குமப்பூ, சாதிக்காய், கஸ்தூரி இந்தமூன்றில் ஒவ்வொன்றும் மருந்துக்கு அ-ல் ஒருபாகம் சேர்த்துக்கொண்டு இம்மருந்துகளை எல்லாம் வெற்றிலைச்சாறுவிட்டு மிருதுவாக ௩-நாள் அரைத்து, பிறகு குன்றிமணியைப்போல் மாத்திரை செய்தும், பொடிசெய்தும் வைத்துக்கொள்ளலாம். வேளைக்கு கால் பணவிடையாக தேனிற்கலந்து வெற்றிலைச்சாறும் அதோடு சேர்த்துக்கொண்டு உ-வேளை அரைமண்டலம் சாப்பிட்டால் க்ஷயம்முதலான ரோகங்களும் நிவர்த்தியாய் தாதுவிர்த்தியாகும். அனுபான விசேஷத்தோடும் கொடுக்கலாம்.

### வசந்தகுசுமாகரம்.

92. வெள்ளிபஸ்பம் பூ உ, சுவர்னபஸ்பம், வங்கபஸ்பம், ஈயபஸ்பம், காந்தபஸ்பம் வகைக்கு பூ க, அப்ரகபஸ்பம், ரசபஸ்பம், முத்துப்பஸ்பம் வகைக்கு பூ ச, கல்வத்திற்போட்டு முறையேபசுவின்பால், கரும்புரசம், ஆடாதோடைசாறு, நல்லசலம், வெட்டிவேர்கியாழம், மஞ்சள்தண்ணீர், வாழைக்கிழங்குச் சாறு விட்டு ஒவ்வொருநாளும் அரைத்து, க-வீ பில்லைகளாகச்செய்து நிழலில் காயவைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு குன்றிமணியளவு தேனும், சர்க்கரையும் கலந்து, இரண்டுவேளை சாப்பிட்டுக் கொண்டுவந்தால் மேகம், க்ஷயம், பித்தக்ஷயம் சொஸ்தமாகும். பிரமரோகமும் சொஸ்தமாகும்.

### இராஜமிருகாங்கம்.

93. ரசபஸ்பம் பூ ௩, சுவர்ணபஸ்பம், வெள்ளிபஸ்பம், தாம்பிரபஸ்பம், முத்துப்பஸ்பம், கந்தகம், தாளகம் வகைக்கு பூ க,

எல்லாம் கல்வத்திற்போட்டு அரைத்து அந்தப்பொடியை மஞ்சள் பலகறையில் நிரப்பி வெண்காரம் பூ_க, வெள்ளாட்டுப்பாலில் அரைத்து பலகறைவாயில்தடவி, மூடிக்காயவைத்து, ஒருபானை யில் நாலுவிரற்கடை உயரமாக உப்பைப்பரப்பி, அதின்பேரில் இந்தப் பலகறைகளைவைத்து அதின்மேலும் உப்புபோட்டு, ஒரு சட்டியைப் பானையில்மேல் கவிழ்த்து, இடுக்குவழியில்லாதபடி மண்சீலைசெய்து, கெஜபுடம்போட்டுத் தானே ஆறினபிற்பாடு அந்தப் பலகறையையெடுத்து அந்தப்பலகறையையும் அதிலிருக் கிற மருந்தையும்சேர்த்துப் பொடிசெய்து டப்பியில் நிரப்பிவைத் துக்கொண்டு, திப்பிலி, மிளகு, பொடிசெய்து தேனிற்கலந்து ௨- பணவிடை மருந்துசேர்த்து ௨-வேளை அரைமண்டலம் உட் கொண்டால் சகல க்ஷயரோகமும் சொஸ்தமாகும். பத்தியம் பசு விஃபால், பசுவின்நெய், சம்பா அரிசி, கத்திரிப்பிஞ்சு சேர்த்துக் கொள்ளலாம். சொர்ணபாத்திரத்திலாவது, வெள்ளிப்பாத்திரத்தி லாவது, வாழையிலையிலாவது சாப்பிடவேண்டும்.

## திரிலோக்கியசிந்தாமணி.

94. ரசபஸ்பம், வச்சிரபஸ்பம், சொர்ணபஸ்பம், வெள்ளி பஸ்பம், பச்சைநாபி, கந்தகம், முத்துபஸ்பம், தாம்பிரபஸ்பம், எஃகுபஸ்பம், தாளகபஸ்பம், அப்பிரகபஸ்பம், சங்குபஸ்பம், பவ ளபஸ்பம், மனேசிலைபஸ்பம், வகைக்கு பூ_க, ஒரு கல்வத்திற் போட்டு பொடிசெய்து, சித்திரமூலகியாழத்தினல் ஏழுநாள் கை விடாமல் அரைத்துப் பிறகு எருக்கம்பாலைவிட்டு ௩-நாளும், காட் டுக் கருணைக்கிழங்கின் சாற்றைவிட்டு ௩-நாளும் அரைத்து, நிழ லில் காயவைத்துச் சூரணித்து, அந்தக் கல்விலேவைத்து ஆறின பிறகு அந்தமருந்துக்குச் சமபாகமாக ரசபஸ்பம் சேர்த்து,முருக் கம்வேர் கியாழம்விட்டு எ-நாள் அரைத்து, பிறகு சித்திரமூல கியாழம்விட்டு எ-நாள் அரைத்து, நிழலில் காயவைத்து மறுபடி யும் சித்திரமூலகியாழத்தினல் கசு-நாள் அரைத்து, பிறகு இஞ் சிசாறுவிட்டு ௩-நாளும், கஞ்சாயிலைச்சாற்றைவிட்டு ௩-நாளும், எலுமிச்சம்பழச் சாற்றைவிட்டு ௩-நாளும், குமிட்டி மாதளச் சாற்றைவிட்டு ௩-நாளும் அரைத்து, நிழலில் காயவைத்துச் சூரணித்து, அந்தச்சூரணத்திற்கு ௬-ல் ஒருபாகம் வெண்கார த்தைச் சுத்திசெய்து பொரியாக்கி சேர்த்து, இந்த வெண்கா ரத்துக்குச் சமமாகச் சுத்திசெய்த நாபியை சேர்த்தரைத்துக் கிராம்பு, திப்பிலி, சுக்கு, ஜாதிக்காய், தினுசு ஒவ்வொன்றுக் கும் பச்சைநாபிக்குச் சமமாக சேர்த்து, மேற்சொல்லி யிருக்கிற மருந்துகள் யாவையும் சேர்த்துப் பில்லையாகச் செய்யவேண்டுமா னல் மேற்சொன்னமருந்தை அரைத்த ரசவகையராக்களில் எந்த

ரசத்திலாவது இந்தமருந்துகள் யாவையும் அரைத்துப் பில்லையாகச்செய்துகொண்டு சூரணமாகச் செய்துவைக்க விரும்பினால் சூரணஞ்செய்து நிழலில் காயவைத்து மூங்கில் குழாவில் நிரப்பி வைத்துக்கொள்க. அனுபானம் திப்பிலியும், தேனும், சேர்த்துக்கொண்டு அதில் நாலுகுன்றிமணி இடையுள்ள மருந்தைச்சேர்த்துக்கொடுத்தால் சிலேஷ்மம், கபசம்பந்தமான எல்லாரோகங்களும் சொஸ்தமாகும்.

## பஞ்சாமிர்தம்.

95. ரசசெந்தூரம், கவர்ணசெந்தூரம், காந்தசெந்தூரம், அப்ரகசெந்தூரம், வெள்ளிபஸ்பம், இந்த ஐந்தும்வகைக்கு க-பூ கல்வத்திற்போட்டு நன்றாய் அரைத்து ஒரு டப்பாவில் நிரப்பி வைத்துக்கொண்டு, க்ஷயரோகத்துக்கு ஒருபணவிடை திப்பிலி சூரணம், நெய் சேர்த்துக்கொடுத்தால் சொஸ்தமாகும். பாண்டு ரோகத்திற்கு கிராம்பு, சீரகம், மல்லி, மிளகு, இடித்துச் சூரணித்து ஷை மருந்து ஒருபணவிடைசேர்த்து நெய்யில் கலந்து கொடுத்தால் சொஸ்தமாகும். கிராம்பு, ஜாதிக்காய், அதிவிடையம் சீரகம், வறுத்துச் சூரணித்துக்கொண்டு ஒரு பணவிடையுள்ள ஷை மருந்தையும் சேர்த்து தேனில்கொடுத்தால் கிராணி சொஸ்தமாகும். மேலும் அனுபானபேதமாய் கொடுத்தால் சகலவியாதிகளும் சொஸ்தமாகும்.

## சஞ்சீவனம்.

96. சுத்திசெய்த ஜாதிலிங்கம், சுத்திசெய்த பச்சைநாபி, திப்பிலி வகைக்கு பூ க, கல்வத்திற்போட்டு இஞ்சிரசத்தைவிட்டு ஒருநாள் அரைத்து, பச்சைப்பயிறு அளவு மாத்திரைகள்செய்து நிழலில் காயவைத்து டப்பாவில் நிரப்பிவைத்துக்கொண்டு, ஒரு மாத்திரையை எடுத்துத் தண்ணீரில் உரைத்துக்கொடுத்தால்சுரம் சொஸ்தமாகும். மேலும் அனுபானபேதமாய் கொடுத்தால் சமஸ்தவியாதிகளும் சொஸ்தமாகும்.

## சொர்ணனந்தபயிரவன்.

97. பாதரசம், கெந்தகம், பச்சநாபி வகைக்கு பூ க, ஜாதிக்காய் பூ உ, கல்வத்திற்போட்டுச் சூரணித்து கண்டதிப்பிலி பூ ௯உ, பொடிசெய்து சேர்த்து வெற்றிலைச் சாற்றைவிட்டு ஒருநாளைக்கு அரைத்து, பிறகு இஞ்சிசாற்றைவிட்டு ஒருநாள் அரைத்துப் பொடிசெய்து டப்பாவில்போட்டு வைத்துக்கொண்டு, சீதசுரத்திற்கு வெற்றிலைச்சாற்றில் கொடுக்க. சுரத்துக்கும், சன்னிபாதத்திற்கும் இஞ்சிரசத்தில் கொடுக்க. விஷசுரத்திற்கு, கிராம்பு அரைத்து அதில் சேர்த்துக்கொடுக்க. மற்ற சுரங்களும் அனுபானபேதங்களாய்க் கொடுத்தால் சொஸ்தமாகும்.

### ஆனந்தபைரவன்.

98. வெண்காரம், ஜாதிலிங்கம், திப்பிலி, பச்சநாபி, பாதரசம், கெந்தகம், மிளகு வகைக்கு ஒரு வராகனிடை கல்வத்திற்போட்டு எலுமிச்சம்பழ ரசத்தைவிட்டு ௩-நாள் அரைத்து, குன்றிமணி அளவாக மாத்திரைசெய்து நிழலில்காயவைத்து டப்பாவில் நிரப்பி வைத்துக்கொண்டு, இந்தமருந்தை அனுபானபேதமாய் கொடுத்துக்கொண்டுவந்தால் சகல சுரமும் சொஸ்தமாகும்.

### வீரவிக்கிரமரசம்.

99. பாதரசம் பூ அ, மனோசிலை பூ ௯, கெந்தகம் பூ ௨, தாளகம் பூ ௬ கல்வத்திற்போட்டுச் சூரணித்து, பூமாதளைச்சாற்றைவிட்டு ௩-நாள் அரைத்து, பிறகு அந்தமருந்தை ஒரு காசிக்குப்பியில் நிரப்பி அதின்வாயில் மாக்கல்லையடைத்து மண்துணி சுற்றி ஒருபானையில் ௬-விரற்கடை உயரம் மணல்போட்டு, அந்தக்குப்பியை அதின்பேரில்வைத்து, அந்தக்குப்பி முழுகிறவரைக்கும் மணல்போட்டு ஒரு சட்டியினால் பானையின்வாயைமூடி அடுப்பின்மேல்வைத்து, தீபாக்கினி ஒருநாளும், கமலாக்கினி ஒருநாளும், காடாக்கினி ஒருநாளும், இவ்விதமாய் ௩-நாள் சுவாலைபோட்டு அது ஆறினபிறகு குப்பியில் இருக்கிறமருந்தை எடுத்துப் பொடிசெய்து ஒரு டப்பாவில்போட்டு வாதத்திற்கு இஞ்சிரசத்தில்கொடுக்க. அனுபானபேதமாய் கொடுத்தால் எல்லாவியாதிகளும் சொஸ்தமாகும்.

### சீதபஞ்சரசம்.

100. பால்துத்தம், மயில்துத்தம், கெந்தகம், ரசம், எவிபாணம், சுக்கு இனுசுக்கு ஒருவராகனிடை கல்வத்திற்போட்டு, பாகலிலைரசத்தைவிட்டு ஒருநாள் அரைத்து, உருண்டைசெய்து குகையில்நிரப்பி, அதன்வாயில் ஒட்டைவைத்து மண்துணிகட்டி, பள்ளம் தோண்டி அதில்மணல்போட்டு, அதின்மேல் இதைவைத்து, அந்தப்பாத்திரம் தெரியாதபடிக்குமணல்நிரப்பி அதன்மேல் ௧௦-வரட்டியைவைத்துப் புடம்போட்டு, ஆறினபிறகு உடைத்து மருந்தை எடுத்துக்கொண்டு கல்வத்திற்போட்டு மீன்பித்தை மருந்தோடே சேர்த்து, ஒருஜாமம் அரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைசெய்துகொண்டு நிழலில் காயவைத்து, மூங்கில் குழாவில் நிரப்பிவைத்துக்கொண்டு சீதசுரத்துக்குச் சர்க்கரையோடு கலந்துகொடுக்க வேண்டியது. பத்தியம் பச்சைப்பயிறு கஞ்சிசெய்துகொடுக்க, இவ்விதமாய் ௩-நாள் கொடுத்தால் நாலு நாளுக்கொருதரம் முறையாய்வருகிற சீதசுரம் சொஸ்தமாகும்.

## மகாசுராங்குசம்.

101. பாதரசம், கெந்தகம், சுத்திசெய்தநாபி, சுத்திசெய்த ஊமத்தன்விதை பருப்பு, இனுசுக்கு க-வீ சுக்கு, திப்பிலி, மிள குஇனுசுக்கு உ-வீ சேர்த்து, கல்வத்திற்போட்டு அரைத்து பிறகு எலுமிச்சம்பழத்தின் ரசத்தைவிட்டு க-நாளும், இஞ்சிரச த்தைவிட்டு க-நாளும் அரைத்து, குன்றிமணிபிரமாணமான மாத் திரைகள்செய்து நிழலில் காயவைத்து டப்பாவில் நிரப்பிவைத் துக்கொண்டு, சுரத்திற்கு இஞ்சிரசத்தில்கொடுக்க, முறையே வருகிற சுரமும் மற்றும் அனேகசுரங்களும் சொஸ்தமாகும்.

## பிரதாபமார்த்தாண்டம்.

102. பச்சைநாபி வீ க, வெண்காரம் வீ உ, சுத்திசெய்த நேர்வாளம் வீ ச, ஜாதிலிங்கம் வீ அ, கல்வத்திற்போட்டு, எலு மிச்சம்பழ ரசத்தைவிட்டு இரண்டுநாளைக்கு அரைத்து, குன்றி மணி பிரமாணமான மாத்திரைகள்செய்து நிழலில் உலர்த்தி டப் பாவில்போட்டுவைத்துக்கொண்டு, இஞ்சிரசத்தில் ஒருமாத்திரை உரைத்துக் கொடுத்தால் வாதசுரம், அசீர்ணசுரம், அபிகாதம் முதலான வியாதிகள் சொஸ்தமாகும்; இந்தமருந்தினால் பிராந்தி யும் ஆகும்.

## கிராணிகபாடம்.

103. ரசம், கெந்தகம், அதிவிடயம், கடுக்காய்பிஞ்சு, அப் பிரகசெந்தூரம், சதிச்சாரம், எவாச்சாரம்வகைக்கு வீ க, இவை யெல்லாம் கல்வத்திற்போட்டுச் சூரணித்து, வேண்டிய இலவம் பிசின் கொண்டுவந்து அதில் தண்ணீரைவிட்டு ஊறவைத்து, அந்த ரசத்தைவிட்டு ஒருநாளும், கஞ்சா இலைச்சாறுவிட்டு ஒரு நாளும், எலுமிச்சம்பழம் ரசத்தைவிட்டு ஒருநாளும் அரைத்து, குன்றிமணி அளவு மாத்திரைசெய்து டப்பாவில்போட்டுவைத் துக்கொண்டு தேனில் ஒருமாத்திரை உரைத்துக் கொடுத்தால் கிராணி சொஸ்தமாகும்.

## இரசசெந்தூரம்.

104. பாதரசம் பூ க, கெந்தகம் பூ க, இரண்டையும் கல் வத்திற்போட்டு முறையே, எலுமிச்சம்பழம், கற்றாழைச்சாறு, கொடிவேலிச்சாறு, தான்றிக்காய்கியாழம், கிருஷ்ணதுளசிரசம், இலுப்பை இலைச்சாறு, சகாதேவி மூலிகையின்வேரின் ரசம், வே ப்பம்பட்டைகியாழம், வேலிப்பருத்திச்சாறு விட்டு ஒவ்வொருநா ளும் அரைத்து பிறகு காசிக்குப்பியில்நிரப்பி, அந்தக் குப்பிவா யில் மாவுக்கல்துண்டை வைத்து அடைத்து, மண்துணிகட்டி, ஒருபானையில் இரண்டுவிரற்கடை மணலைப்போட்டு, அதின்மேல் அந்தக் குப்பியைவைத்து, குப்பியின்வாய் வரைக்கும் மணற்போ ட்டு, சட்டியை அந்தப்பானையின் பேரில் கவிழ்த்து, அடுப்பின்

மேலேவைத்து, காடாக்கினி சுவாலையாய் ௩-நாள் எரித்து, ஆறி னபிற்பாடு அந்தக்குப்பியை எடுத்துடைத்துப்பார்த்தால் செந்தூ ரம் இருக்கும். இந்தச் செந்தூரத்தை அனுபானபேதமாய்க் கொ டுத்தால் சகல வியாதிகளும் சொஸ்தமாகும்.

## கோடாசுளிரசம்.

105. பாதரசம், கெந்தகம், வெண்காரம், பச்சைநாபி, சுக்கு நெல்லிமுள்ளி, தாளகம், வகைக்கு வீ௧, கல்வத்திற் போட்டு ௩௦-வீ சுத்திசெய்த நேர்வாளத்தைச்சேர்த்து, புரசம்பட்டை ரசத்தைவிட்டு ஒருநாள் அரைத்து, குன்றிமணி அளவு மாத்தி ரைசெய்து நிழலில் உலர்த்தி, மூங்கிற்குழாயில் நிரப்பிவைக்க. இஞ்சிரசத்தில் ஒருமாத்திரை உரைத்து உட்கொண்டால் சீத சுரம், தாபசுரம், அசீரணசுரம், வாதசுரம், அபிகாதசுரம், வாத சூலை, பித்தசூலை, குன்மம், க்ஷயம், மூலரோகம், சொஸ்தமாகும். மேலும் அனுபானபேதமாய்க் கொடுத்தால் சகல ரோகமும் சொ ஸ்தமாகும். ரோகத்தையும் அனுபானத்தையும், சரீரத்தையும், அறிந்து மருந்துகொடுக்கவேண்டும்,

## குன்மத்துக்கு சங்கடசாரகுளிகை.

106. சுத்திசெய்தபாதரசம், கெந்தகம், பச்சைநாபி வகை க்கு வீ௪, மிளகு, சுக்கு, பெருங்காயம், வகைக்கு வீ௨, பஞ் சலவணம் வீ௫, புளியம்பட்டையை வறுத்து சாம்பல்செய்து பூ௭, எல்லாம் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழ ரசத்தைவிட்டு ஒருநாள் அரைத்து, ஒருவிராகனிடையுள்ளதாக மாத்திரைகள் செய்துகொள்க. இஞ்சிரசத்தில் ஒருமாத்திரை உரைத்துக்கொடு த்தால், சூலை, குன்மம், மந்தம், அசீர்ணம், அதிசாரம், இந்த வியாதிகள் சொஸ்தமாகும்.

## சுரநாதகுளிகை.

107. அரிதாரம் பூ௪, துரிசு பூ௩, இரண்டையும் பாக லிலைவேர் சாற்றிலரைத்து, உளுந்து அளவுமாத்திரைகள் செய்து கொண்டு இஞ்சிரசத்தில் ஒருமாத்திரை ஒருவேளை உரைத்துக் கொடுத்தால் சீதசுரம் சொஸ்தமாகும்.

## சீதசுரத்துக்குமாத்திரை.

108. வெள்ளைப்பாஷாணம் பூ௪, சாதிலிங்கம் பூ௨, மோ ரைத் தெளியவைத்து அதில் கீழே இறங்குகிறவண்டல் பூ௩, சேர்த்து மெலிதாக ஒருசாமம் அரைத்து, பச்சைப்பயறு அளவு மாத்திரை செய்துக்கொள்க. மோரில் ஒருமாத்திரை உரைத்துக் கொடுத்தால் குளிர்சுரம் சொஸ்தமாகும்.

### வெள்ளைப்பாஷாணச்சுத்தி.

109. வெள்ளைப்பாஷாணம் வேண்டிய அளவுகொண்டுவந்து எருக்கம்பாலில், எலுமிச்சம்பழரசத்தில் முறையே ஒவ்வொருநாள் ஊறவைத்து, பிறகு எடுத்து அதைக் காடியினால் கழுவி, மெருகன்கிழங்கு ஒன்றில் போதுமான பள்ளம்செய்து, அதில் அந்த பாஷாணத்தைவைத்து அதின்பேரில் ஷை கிழங்கின் அறுத்ததுண்டைமூடி, அதற்குச் சாணிதடவி, அந்த மெருகன்கிழங்குப்பாதி எரியும்படியாக கெஜபுடம்வைத்து ஆறினபிறகு பாஷாணத்தை எடுத்துககொள்க.

### சுவாச க்ஷயம் ரு-க்கும்-தாம்பிரப்பிரயோகம்.

110. ஆறுகாசுநிறை தாம்பிரகிண்ணிசெய்து, புளியாரைக்கிழங்கில் உப்புசேர்த்தரைத்து அந்தக்கிண்ணிக்கு உள்ளும்புறமும் தடவி, அந்தக்கிண்ணி சிவப்பாகிறவரையில் காய்ச்சி, தண்ணீரிற்போட்டு ஆற்றுக. இவ்விதமாய் ச-தரம்செய்து பிறகு அந்தக்கிண்ணியில் காரீயம் ச-காசு இடையும், ரசம் ச-காசு இடையும், சேர்த்து உருக்குக. இந்த இரண்டும் சேர்ந்தவுடனே கிண்ணத்தை எடுத்துமடக்கிபங்தைப்போற்செய்து குகையிற்போட்டு, ஓட்டுப்பில்லையால் வாயைமூடிச் சீலைமண்செய்து, பிறகு குகையைநெருப்பில் வைத்து உருக்குக. உள்ளேயிருப்பது நன்றாக உருகினபிற்பாடு அந்தமருந்தைக் கல்வத்திலிட்டுப் பொடிசெய்துகொண்டு, வேளைக்கு அரைப்பணவிடையுள்ள அந்த மருந்தை சுக்கு, திப்பிலி, மிளகு, ஒவ்வொன்றும் பொடிசெய்து அரைக்காசு இடைசேர்த்து பசுவின்வெண்ணெயிற்கலந்து, காலையில் ஒருவேளை உட்கொண்டால் சுவாசகாசம், க்ஷயம், ஈழை என்கிற ஒருவித இருமல் சொஸ்தமாகும்.

### பாரிசவாய்வுக்கு பூப்புடத்தைலம்.

111. நொச்சிவேர், கற்றாழைவேர், எருக்கம்வேர், தாழைவேர், வில்வவேர், வேம்பின்வேர், தழுதாழைவேர், சமமாகச்சேர்த்து குக்கிலம்சேர் உ, சாம்பிராணி ூ கo, இவையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து, பசுவின்பாலோடும், எருக்கிலைச்சாற்றோடும், கலந்துவைத்தால் மருந்துகள் கெட்டிப்படும். அவற்றை வெய்யிலில் வைத்து நன்றாய்க்காய்ந்த பிறகு ஒருபானையிற்போட்டு, பூப்புடம் போட்டால் தைலம் இறங்கும். இந்தத்தைலத்தைப் பாரிசவாய்வுக்குத் தடவினால் சொஸ்தமாகும். இது அனுபவத்துக்கு வந்த மருந்து.

### எஃகுபஸ்பம்.

112. எஃகுவின் அரப்பொடியை வேண்டிய அளவுக்கு ஒரு பானையிற்போட்டு, அதில் கோமூத்திரத்தை நிரப்பி அ-சாமம்

ஊறவைத்து எடுத்து, கற்றாழைச்சாறுவிட்டு ௪-சாமம் அறைத்து எடுத்து ஒருகலயத்தில் வைத்து, பூமியின்மேல் ஒருகூடை வரட்டி அடுக்கி, அதின்மத்தியில் இந்தக் கலயத்தைவைத்து, அதின் மேல் மறுபடியும் ஒரு கூடைவரட்டியை அடுக்கிப் புடம்போடுக. இவ்விதமாய் கரு-புடம்போட்டுப் பிறகு கையாந்தகரைச்சாறு, எருக்க இலைச்சாறு, கள்ளிச்சாறு, நெல்லிக்காய்சாறு, தான்றிக் காய்சாறு, பசுநெய், பசுவின்பால், இவ்வேழுதினுசாலும், எ-தரம் அரைத்து கoரு-புடம்போட்டால் பஸ்பமாகும். அந்தபஸ்பத்தைத் தண்ணீரில்போட்டால் மிதக்கும். அப்படி மிதக்காவிட்டால் மேற்சொல்லியிருக்கிற ரசவகைகளில் எதையாவது விட்டரைத்துப் புடம்போடுக. அந்தபஸ்பம் தண்ணீரில் மிதக்கிற வரைக்கும் இவ்விதமாய்ச்செய்குக. ஊஷ்ணசரீரத்துச் சீதள அனுபானத்தோடும், சீதள சரீரத்துக்கு ஊஷ்ணானுபானத்தோடும் இந்தமருந்தை உட்கொண்டால், சகலவியாதிகளும் சொஸ்தமாகும். மேலும் நரைதிரைமாறும், நரைத்துப்போனமயிர் கறுப்பாகும். சரீரத்தில் சுருங்குதல் உண்டாகாது.

### பெரும்பாடு வியாதிக்கும், இரத்தசோஷணத்தினால்

### வாடிப்போகிறதற்கும், வயிற்றெரிவுக்கும், காந்தச்செந்தூரம்.

113. கையாந்தகரைச்சாறு ஒருமரக்காலை ஒருபாத்திரத்தில் வைத்துக்கொண்டு ஒரு ஊசியைப் பிடிக்கும்படியான நல்லகாந்தம் பூ ௪, ஒரு குகையிற்போட்டுக் கொல்லன் உலையில்வைத்துக் சிவக்கக்காய்ச்சி ஊற்றுகிறது; இவ்விதமாய் எ-தரம் செய்த பிறகு கழுவி, பிறகு கையாந்தகரைச்சாறு மேற்சொல்லிய கணக்குப்பிரகாரம் பிழிந்து, கழுவியெடுத்த காந்தத்தைக்காய்ச்சித் துவைத்திடுக. இவ்விதமாய் ௩-தடவை உக-தரம் ஊற்றி மறுபடி அந்தமருந்தை எடுத்து ஒரு கல்வத்திற்போட்டு, கையாந்தகரை ரசத்தைவிட்டு, கஉ-ஜாமம் அரைத்து மருந்தை அடையாகத்தட்டி ஒருசட்டியின் மத்தியில் வைத்து,உலர்ந்தபிறகு அதின் பேரில் ஒருசட்டியைமூடி மண்துணிசுற்றி, வடவாக்கினி சுவாலையால் கஉ-சாமம் எரித்து, தானே ஆறினபிறகு அந்தமருந்தை எடுத்துப் பொடிசெய்து ஒரு குப்பியில்நிரப்பி வைத்துக்கொள்க. அனுபானம்-ஜாதிக்காய் பூ க, கிராம்பு பூ ரு, பழைய பட்டுத் துணியில் கெட்டியாய்கட்டி பந்தாய்ச்செய்து காற்றில்லாத இடத்தில் நெருப்பில்கொளுத்திவைத்தால் பஸ்பமாகும். பொடிசெய்து பஸ்பம் ஒருபணவிடையும், செந்தூரம் ௨-பணவிடையும், பசுவின் வெண்ணெயிலாவது அல்லது நெய்யிலாவது கலந்து இரண்டு வேளை ௨-மண்டலம் உட்கொண்டால் பெரும்பாடும், யோனித் துவாரத்தின் வழியாய் ரத்தம்விழுகிற வியாதியும்சொஸ்தமாகும்.

வெண்ணெய் வீசு உ, கற்கண்டுபொடி வீசு உ, செந்தூரம் ஒரு பணவிடை, இம்மூன்றும் கலந்து உ-மண்டலம் இரண்டுவேளை உட்கொண்டால் பெரும்பாடுசொஸ்தமாகும். இம்மருந்து பெரும்பாட்டு வியாதிக்காரர் அனேகருக்குக்கொடுத்து அனுகூலமானதாய் அனுபவத்திற்கு வந்திருக்கிறது. இம்மருந்தை தேனிற் கலந்து ஒருமண்டலம் உட்கொண்டால் ரத்தவிர்த்தியாகும், சோகை பிடித்திருந்தாலும் சொஸ்தமாகும். ஊஷ்ணரோகத்துக்குக் கொடுக்கிற ஏலாதி சூரணத்தோடு உ-பணவிடை செந்தூரத்தைச் சேர்த்து ஒருமண்டலம் உட்கொண்டால் வயற்றில் எரிவு, பித்தவாய்வு சொஸ்தமாகும். இது காந்தியும் பித்தமும் செய்யாது. இரத்தவிர்த்தியும், சரீரபுஷ்டியும் உண்டாம்.

## இருமலுக்கு வங்கபஸ்பம்.

114. வெள்ளீயம் சேர்-உ, ஒருசாண் அகலமுள்ள இரும்புப் பாணில்போட்டு உருக்கி வேறொருபாத்திரத்தில் உ-சேர் நெல்லெண்ணெய்விட்டு அதில்ஊற்றுகிறது. இவ்விதமாய் எ-தரம் செய்தபிறகு வேறேபாத்திரத்தில் உ-சேர் நல்லெண்ணெய்விட்டு முன்போலக்காய்ச்சி ஈயத்தை உருக்கி அதில் ஊற்றுகிறது. இவ்விதமாய் உக-தரம் எண்ணெயில் ஊற்றினபிறகு அதேவிதமாய் உக-தரம் இலுப்பெண்ணெயில் ஊற்றுகிறது. பிறகு, ருoo-எலுமிச்சம்பழத்தில்ரசத்தை எடுத்து ங-பாகமாகச்செய்துகொண்டு ஒரு பாகத்தைக் கல்லுரலில் ஊற்றி, அதின்மேல் திருகை சிறுத்துவாரம் விட்டடைத்து, ஈயத்தை யுருக்கி அந்ததுவாரத்தின்வழியாக உறலில் ஊற்றுகிறது. ஈயம் சேதமாகாமல் எடுக்கும்படி கொஞ்சம் நல்லெண்ணெய் சேர்த்துருக்கி, அந்தரசத்தில் ஊற்றவேண்டும், இந்தவிதமாக ஒவ்வொருபாகம் பழரசத்தில் தனித்தனி எ-விசையாக உக-தரம் ஈயத்தை உருக்கி ஊற்றுக. பிறகு சூ-மாசத் துக்காடியில் உக-தரமும், புளித்தமோரில் உக-தரமும், பிறகு கோமூத்திரத்தில் உக-தரமும், ஈயத்தை உருக்கி ஊற்றுக. ஆக மொத்தம் கஉசூ-ஆகின்றது. பிறகு கொஞ்சம நல்லெண்சேர்த்து ஈயத்தை உருக்கிப் பில்லையாகவார்த்து அந்தபில்லையை புளியிலை போல் தகடாக அடித்து, அந்தத்தகட்டை. நறுக்கிக்கொண்டு பிறகுநன்றுய்க்காய்ந்த வெண்ணொச்சியிலையும்பூவும் ஒருமணங்கு நன்றுய்ப் பொடியாகும்படி இடித்து உ-முழ அகலமும் ச-முழ நீளம் உள்ள ஒருதுணியைக் கீழே விரித்துப்பரப்பி, அதின்மேலிந்தப் பொடியைப்போட்டு, அகலத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் ச-விரற்கடைவிட்டு நீளத்தில் ஒரு முழம்விட்டு, மிகுதியான இடத்தில் இந்தத்தூளைப்பரப்பி, அதின்மேல் சுத்திசெய்து கத்தரித்துவைத்திருக்கிற ஈயத்தை அரைக்கால்சேர் நிறுத்துக்கொ

ண்டு, தகடு ஒன்றின்மேல் ஒன்று இராமலும் அத்துணியிற்படாமலும் பொடியின்மேல் பரப்பி, பிறகு துணியை தீவர்த்தியைப் போல்சுற்றி, நாலு ஐந்து இடத்தில் கயிற்றைக்கட்டி, காற்றில்லாத இடத்தில்வைத்து இருபக்கத்தையும் வேறே தீவர்த்தியாற் கொளுத்திவிடுக. இது எரிந்துதானே ஆறினபிற்பாடுபார்த்தால் வங்கமெல்லாம் பொறியாகியிருக்கும். சாம்பலைவேருக்கி வங்கத்தை எடுத்துக் கல்வத்திவிட்டு அரைத்துவடிகட்டி பஸ்பத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு ஒரு குப்பியில் நிரப்பிக்கொள்க. அனுபானம்-சீரகத்தை வறுக்காமல் பொடிசெய்து ஹ-சேரும் கற்கண்டின்பொடி ஹ-சேரும்சேர்த்து அதில் ஒரு வராகனிடை பொடியும் மருந்தில் அரைப்பணவிடையும் எடுத்துக்கொண்டு இரண்டையும் நெய்யிற்கலந்து இரண்டுவேளை கால்மண்டலம் உட்கொண்டால் எவ்விதமான இருமலும், கபரோகமும், சொஸ்தமாகும். தீபனம் உண்டாகும். பத்தியம் - வெள்ளாட்டுமாமிசம் அவசியம் சேர்த்துக்கொள்ளவேண்டியது. பட்டினியாயிருக்கக் கூடாது. மேற்சொல்லிய விதமாய் சீரகப்பொடியும் கற்கண்டு பொடியும் வெண்ணெயும் சேர்த்து உட்கொண்டால் வயிற்றுக் கடுப்பு சொஸ்தமாகும். காந்தசெந்தூரம் ௧-பணவிடை, வங்கஸ்பபம் ௧-பணவிடை, சீரகப்பொடி இவற்றைத் தேனிற்கலந்து உட்கொண்டால் அதிசாரம், கிராணி, சொஸ்தமாகும். வெள்ளை மேகத்துக்கு சீரகம், வெண்ணெய் கற்கண்டுபொடி யோடாவது அல்லது நெய்யோடாவது ௧-பணவிடை மருந்துசேர்த்து உட்கொண்டால் மேகம்சொஸ்தமாகும். இது அனுபவத்திற்கு வந்த மருந்து.

## முத்துசாமிதீக்ஷதர்.

### பூர்ணசந்திரோதயரசம்.

115. தங்கரேக்கு வ-க௦, இதை முக்கால்வாசி பஸ்பமாய் கால்வாசி அரைகுறையாக பஸ்பம்செய்து, சுத்திசெய்தரசம் வ- அ௦, சுத்திசெய்த கெந்தகம் வ-௨௦, இம்மூன்றையும் சேர்த்து, செம்பருத்திப்பூவின் கியாழத்தில் ௪-சாமமும், கற்றாழைச்சாற்றில் அ-சாமமும் அரைத்துக்காயவைத்து வேண்டிய ஆமணக்கு எண்ணெயைவிட்டு உருண்டையாகச்செய்து, அந்த உருண்டைகளை வெவ்வேறாகத் தாப்தாவில்கட்டி, ஒரு அகலில் சித்திரமூலப் பொடிபோட்டு இந்த முடிச்சுகளை ஒன்றுக்கொன்று படாமல் அதன்மேல்வைத்து, அதன்மேல் சித்திரமூலப்பொடி போட்டு, வேறு அகலை இதின்மேல்மூடி இடைவழியிருக்காமல் சீலைமண் செய்து, ஒருசாணாழம் பள்ளந்தோண்டி உள்ளே சமப்படுத்தி ௪-விராற்கடை ஆற்றுமணல்போட்டு, அதின்மெல் இந்த அகல்

களைவைத்து, அதின்மேல் ௪-விரற்கடை மணல்பரப்பி, அதின் மேல் ௧௨-சாண் உயரம் புடம்போடுக. இந்தப்புடத்தில்வைத்த அகல் ஆறினபிறகு உருண்டைகளை எடுத்துக்கொண்டு பிறகு அந்த அகல்களில் சாம்பலாய்ப்போன சித்திரமூலப் பொடியை எடுத்துவிட்டு வேறே பொடிபோட்டு முன்போல் உருண்டைக ளெல்லாம் செந்தூரமாகிறவரைக்கும் ௪-அல்லது ௫-தரம்புடம் வைக்க. பிறகு உருண்டைகளை எலலாம் வெவ்வேறு தாப்தாவில் கட்டி ஒருபானையில பாதியளவு பாலைஊற்றி அந்தப் பானைவாயின் குறுக்கே ஒரு பிளாசுவைத்து அகதப்பிளாச்சில் உருண்டை முடிச்சுகளை எல்லாம் பானையடியில் படாமல் பாலில்முழுகியிருக் குமபடி கயிற்றிற்கட்டித் தொங்கவிட்டு ஒரு சாமம் வேகவைத்து அந்த உருண்டைகளை எடுத்துக்கொண்டு தண்ணீர்விட்டலம்பி அதில் ௪-ல் ஒருபாகம் பச்சைக்கற்பூரமும், அப்படியே ஜாதிக் காய், மிளகு, கிராம்பும்சேர்த்து, இநத மொத்தமருந்தில் ௩௨-ல் ஒருபாகம் கஸ்தூரியும்சேர்த்து வெற்றிலைச்சாறுவிட்டு மெலிதாக அரைத்திடுக. பிறகு குலாப்தண்ணீரைவிட்டு ஒருசாமம் அரைத் து மாத்திரைகளாயச்செய்து நிழலில் உலர்த்திககொண்டு ஒரு தோலாவில் ௪௮-ல் ஒருபாகம் இந்தமருந்தை வெற்றிலையில்வைத் து சரீரத்துக்குத் தககபடிகொடுக்க. இது விருத்தோபதேசக் கிரமம். கீழ்ழ கிரந்தத்தில் சொல்லியிருக்கிற கிரமத்தையும் சொல்லுவோம். இந்தமருந்தை யுக்தபரிமாணமாக உட்கொண்டு வந்தால கட்டிளமைப்பருவமுடைய ௧௦௦-ஸ்ரீகளையு மனுபவிக்க லாம். அனுபானம்-பாலை நன்றுய்க்காய்சிகுடித்தல், மிருதுவான மாமிசங்களால் செய்தபதார்த்தம், கோதுமைபதார்த்தம், சர்க் கரை, பழவகைகள், இளநீர், இவை சேர்த்துக்கொள்ளலாம். இதின்குணங்கள் சரீரததில் திரைநீங்கும், மயிர் நரை உண்டா காது, மருந்துண்ணும்பொழுது என்னவயதோ அந்தத்தோற்ற மே பலநாளிருக்கும. சுரம் முதலான சகலவியாதியும் சொஸ்த மாகும். வியாதி யெவ்வளவு பிரபலமாயிருந்தாலும் அனுகூல முண்டு. இந்தமருந்து எவன்வசத்திலிருக்கிறதோ அவன் அநேக ஸ்ரீகளுக்குப் பிரியமுள்ளவனுயிருப்பான. வாதம், கபம், பித்தம் அக்கினிமநதம், இவைகளைச் சுத்தப்படுத்துகிறபடியினுலே எல் லா வியாதிகளையும் போக்குமென்பதற்குச் சந்தேகமேயில்லை.

## ஜன்னிபாதபயிரவரசம்.

116. வேண்டிய ஜாதிலிங்கம் ஒரேஉருண்டையாய்க்கொண் டுவந்து, சிறிய அடுப்பின்பேரில் ஒரு வோட்டைவைத்து அதில் ஜாதிலிங்கக் கட்டியைவைத்து, இலுப்பை நெய் அகலில்போட்டு, ஒருகட்டை விரலளவு திரிசெய்துகொளுத்தி அந்தஅடுப்பில்வை

த்துலிங்கம் ஒருபலத்துக்குக்கால்ஜாமமாக எவ்வளவுபலமிருக்கிற தோ அவ்வளவுநேரம் வேப்பம்பட்டை கியாழத்தில் சுருக்குகொடுக்க. இதுதான்லிங்கசுத்தி கட்டுகிறவிதம். துரிசு, வெடியுப்பு, வெண்காரம்,படிகாரம்,இந்தநாலும் சமாம்சம் இந்தநாலுக்கும்சமமானகெந்தகம் இந்த ஐந்தும் சேர்ந்து லிங்கக்கட்டிக்குச் சமமாக இருக்கவேண்டும். இந்த ஐந்துவகையையும் பொடிசெய்து அடுப்பின்மேல் ஓட்டைவைத்து அதில் இலிங்கக்கட்டியைப்போட்டு, கீழேதிரிகொளுத்தி இந்தப்பொடியைக் கொஞ்சங் கொஞ்சமாக அந்தக்கட்டியின்மேல் தூவி, இரும்புச்சலாகையினுல் திருப்பிக் கொடுத்தால் இந்தப் பொடியெல்லாம் உருகி அந்த ஓட்டில் ஒட்டிக்கொள்ளும்.பிறகு அந்தக்கட்டியை எடுத்து இலிங்கம் ஒருபலத்துக்குச்சித்திரமூலவேர் ஒருபலமாக சித்சிரமூலத்தைககொண்டுவந்திடித்து ஒரு புதியபானையிற்போட்டு வேரின்நிறைக்கு கசு-பாகம் தண்ணீர்சேர்த்து ஒருநாள் ஊறவைத்து மறுநாளில் ஒரேவிதமான விறகினுல் எரிதது நாலில் ஒருபாகம் இருக்கும்படி கியாழஞ்செய்துக்கொண்டு அந்த கியாழத்தை ஒரு சிறிய பானையில் ஊற்றி, அதில் இலிங்கக்கட்டியை தொங்கவிட்டு தீபாக்கினிபிரமாணம் சுவாலேபோட்டு, கியாழம்சுண்டின உடனே தீயை நிறுத்தி, இலிங்கக்கட்டியை வெளியேயெடுத்துத் தண்ணீர்விட்டுக் கழுவிவைத்துக்கொள்க. இதுதான் இலிங்கக்கட்டு. இரசகற்பூரம் சுத்திசெய்து கட்டும் விதம். வேண்டிய இரசகற்பூரம் கொண்டுவந்து முன்சொல்லியபடி அடுப்பில் ஓட்டைவைத்து ஒரு அகலில் இலுப்பை நெய்யைவிட்டு விளக்கேற்றி அந்த வோட்டின் கீழ்வைத்து ஓட்டில் ரசகற்பூரக் கட்டியை வைத்து, பலம் ஒன்றுக்குக் கால்சாமமாக வெள்ளைப்பூண்டு தைலத்தால் சுருக்குகொடுத்து பிறகு கோழிமுட்டைத் தைலத்தினுல் பலம் ஒன்றுக்கு ஒருநாழிகையாக சுருக்குகொடுத்திடுக. இதுதான் ரசகற்பூரசுத்தியும்கட்டும். பச்சைநாபி சுத்திசெய்கிறவிதம். வேண்டியபச்சைநாபியைகொண்டுவந்து துண்டு துண்டாக்கி ஒருபானையிற் கோமூத்திரம் நிரப்பி அதில் ஷை துண்டுகளை ங-நாள் ஊறவைத்து பிறகு கழுவி உளர்த்திக்கொள்க. இதுதான் பச்சைநாபி சுத்தி. மனேசிலேசுத்திசெய்யும்விதம். வேண்டியமனேசிலேகொண்டுவந்து இஞ்சிரசத்தில் ஒருஜாமம் அரைத்து உருண்டைசெய்து உலர்த்திக்கொள்க. இதுதான் மனேசிலேசுத்தி. தாளகம் சுத்திசெய்கிறவிதம். வெந்த சுண்ணும்புக்கல்லே கொண்டுவந்து ஒரு கலயத்தில் பாதிநிரப்பி வேண்டிய தாளகக்கட்டியை அதின்பேரில் வைத்துத் தென்னங்கள் ஊற்றி, சுண்ணும்பு ஆறினபிறகு தாளகக்கட்டியை எடுத்துக்கழுவி, பிறகு புரசம்பட்டைச்சாம்பலே ஒரு பானையிற் கால்பாகம்போட்டு, பிறகு கல்யாண பூசனிக்காயை திரு

திருகி, அந்த நீரைப்பானையில் பிழிந்து தாளகக்கட்டியை அதிற் போட்டு, அரைசாமம்வேகவைத்து எடுத்துக்கொள்க. இதுதான் தாளகசுத்தி.

சுத்திசெய்துகட்டின ஜாதிலிங்கம் பூ அ, சுத்திசெய்துகட்டின ரசகற்பூரம் பூ ச, சுத்திசெய்த பச்சைநாபி பூ க, சுத்தி செய்த மனோசிலை வி க, சுத்திசெய்த தாளகம் வி க சீனவெண்காரப்பொறி, மிளகு, திப்பிலி, வகைக்கு பூ க இவைகளில் ஜாதிலிங்கத்தைக் கல்வத்திற்போட்டு எலுமிச்சபழரசத்தில் எட்டுசாமம் கைவிடாமல் அரைத்து பிறகு ரசகற்பூரம்சேர்த்து கஉ-சாமம் அப்படியே அரைத்து, மற்ற சரக்குகளைப்போட்டு அதே ரசத்தில் கரு-ஜாமம் அரைத்து மாத்திரைசெய்துகொண்டு, இரண்டு குன்றுமணி அளவு உள்ளமருந்தை வியாதிக்குத்தக்கபடி கொஞ்சமாவது அதிகமாவது கொடுத்துக்கொண்டுவரலாம். அனுபானம் கங-வித ஜன்னிபாதத்தில் அதற்கு உசிதமான சுரசம்வாங்குவதுடன் இஞ்சிரசத்தையும் சேர்த்துக்கொண்டு அதிலிந்தமருந்தைக்கொடுத்தால். ஜன்னிபாதம் சொஸ்தமாகும். வாதசுரத்துக்கு சுக்கு, சித்தரத்தை, கண்டதிப்பிலி, இம்மூன்றையும் கியாழம்செய்து அதில் வெள்ளைக்குண்டுமணிஅளவு மருந்துசேர்த்து உ-வேளை ங-நாள் உட்கொண்டால் வாதசுரம் சொஸ்தமாகும். பித்த சுரத்துக்கு சுக்கு, மல்லி, கண்டங்கத்திரி, இந்த மூன்றையும் கியாழஞ்செய்து அதில் குன்றுமணிஇடை மருந்தைப்போட்டு உ-வேளை ங-நாள் கொடுத்தால் பித்தசுரம் சொஸ்தமாகும். கபசுரத்துக்கு சுக்கு, திப்பிலி, ஆடாதோடைவேர், இவைகளைக்கியாழஞ்செய்து அதில் உ-குன்றிமணியிடை மருந்து சேர்த்து உ-வேளை ங-நாள் கொடுத்தால், கபசுரம் சொஸ்தமாகும். இஞ்சிரசத்தில் உட்கொண்டால் மந்தம், அசீர்ணம் அக்கினிமந்தம் சொஸ்தமாகும். இது அனுபோகத்துக்கு வந்த மருந்து.

## சோர்ணபூபதிரசம்.

117. தங்கரேக்கு வி ரு, சுத்திசெய்தரசம் வி உ௦, கல்வத்திற்போட்டு எலுமிச்சம்பழரசத்தைவிட்டு ச-ஜாமம் அரைத்து பிறகு கஞ்சித்தண்ணீரினால்கழுவி, ஒருபானைவாயின்குறுக்கேஒரு பிளாசுவைத்து, இவற்றை ஒருதுணியிற்கட்டி, சித்திரமூலகியாழத்தினால் முழுகும்படி தொங்கவிட்டு ச-சாமம் வேகவைத்து, பிறகு சுத்தஜலத்திற்கழுவி மறுபடியும் கல்வத்திலிட்டு, சிறுசெருப்படிச்சாருவிட்டு ச-சாமம் அரைத்து, பிறகு தண்ணீர்விட்டுகழுவி அந்தக்கல்லையும் கருவி, மறுபடியும் கல்வத்திலிட்டு, சுத்தி செய்தகெந்தகம் வி உ௦, சேர்த்து ச-சாமம் அரைத்தால், மைபைப்போலாகும். பிறகு வ-சேர் ரசகற்பூரத்தை ஒரு ஓட்டில்வைத்து அந்த ஓட்டை அடுப்பின்பேரிலேற்றி அதன்கீழ் இலுப்பை

நெய்யால் தீபம் எற்றி, பசுபின்பாலினல் உ-சாமம் சுருக்குக்கொடுத்து, பிறகு ௨-சேர் ரசசெந்தூரக்கட்டியைக் கொண்டுவந்து முன்சொல்லியபடி ஒரு ஒட்டில்போட்டு, ஆடாதோடையிலைச்சாற்றினல் இரண்டுஜாமம் சுருக்கு கொடுத்திடுக. பிறகு அதே ஒட்டில் ஒருசேர் ஜாதிலிங்கக்கட்டியைவைத்து வேம்பின் இலைச்சாற்ருல் ச-ஜாமம் சுருக்குக்கொடுத்து மேற்சொல்லியபடி வ-சேர் இரசுற்பூர ௨-சேர் ரசசெந்தூரம், ஒரு சேர் ஜாதிலிங்கம் கல்வத்திலிட்டு மையாக அரைத்து வைத்திருக்கிற மருந்தோடு கலந்து இஞ்சிரசத்தால் கஉ-ஜாமம் அரைத்து, பிறகு எலுமிச்சம்பழச்சாறுவிட்டு மெழுகுபோலாகிறவரைக்கும் அரைத்து மாத்திரைகளாகச் செய்துகொண்டு ஒரு குன்றிமணியிடை உட்கொள்ளலாம். அசீர்ண சுரத்துக்கும், தருணசுரத்துக்கும், ஒன்றரைகுன்றி மணியிடையும், சீர்ணசுரத்துக்கு ஒரு குன்றிமணி யிடையும், மந்தத்துக்கு உ-குன்றிமணியிடையும், ஜன்னிபாதத்துக்கும் மற்ற எல்லாவிஷங்களும் ௩-குன்றிமணியிடையும் மருந்துகொடுக்கலாம்.

அனுபானம்-அசீர்ணசுரத்துக்கு இஞ்சிரசம், சீர்ணசுரத்திற்கு ஆடாதோடையிலை, பழயவேப்பின்பட்டைகியாழம். தருணசுரத்திற்கு இஞ்சி, சித்தரத்தை கோஷ்டம், இவற்றின்சுரசம், மந்தத்துக்கு இஞ்சி, ஓமம், கோஷ்டம் இவற்றின் சுரசம். ஜன்னிபாதத்துக்கு இஞ்சி, சித்தரத்தை, ஓமம், கோஷ்டம், கண்டதிப்பிலி, வெற்றிலை, இவற்றின்சுரசம், எல்லாவிஷத்துக்கும் அகஸ்தியர் குழம்பிலாவது அல்லது விஷத்திற்கு உபயோகமான மருந்தோடாவதுஇம்மருந்தைச் சேர்த்துக்கொடுக்கலாம். அதிவிடயம், கிராம்பு, பொன்முசட்டை, இம்மூன்றையும் கியாழம்செய்து அதில் ௨-குன்றிமணியிடை மருந்துசேர்த்துக்கொடுத்தால் அதிசாரம் சொஸ்தமாகும். சுக்கு, ஓமம், இந்தஇரண்டையும் மோர்விட்டரை அதின்ரசத்தைப் பிழிந்து அந்தரசத்தில் ஒருகுன்றுமணியிடை மருந்தைச்சேர்த்துக்கொடுக்கக் கிரானி சொஸ்தமாகும். இவ்விதமாய் அனுமானபேதத்தோடு கொடுத்துக்கொண்டுவந்தால் சகல வியாதியும் சொஸ்தமாகும்.

## வசந்தகுசுமாகரம் செய்யும்விதம்.

118. சொர்ணபஸ்பம், வெள்ளிபஸ்பம் வகைக்கு வ௲ கo, வங்கபஸ்பம் நாகபஸ்பம், காந்தசெந்தூரம், வகைக்கு வ௲ கரு, ரசசெந்தூரம் அப்ரகசெந்தூரம், பிரவாளபஸ்பம், முத்து, வகைக்கு வ௲ உo, இத்தமருந்துகளில் முத்தைப் புளிப்புத்தயிரில் ஒருநாள் ஊறவைத்து, பிறகு சுத்தமான தண்ணீரினல் கழுவி, முத்துகளும் மற்றமருந்துகளும் கொள்ளும்படியாக, நேயந்துபோகாத

கல்வத்தில் முதலில் முத்தைப்போட்டு, குலாப்தண்ணீரால் ச-ஜா மம் அரைத்து, பிறகு அதோடே ரசசெந்தூரம்போட்டு ஷை தண்ணீரால் அ-ஜாமம் அரைத்து, பிறகு மற்றமருந்துகளையெல் லாம் போட்டுப் பசுவின்பாலைவிட்டு உக-ஜாமம் அரைத்து காய்ந்த பிறகு கரும்புரசத்தைவிட்டு உக-ஜாமம்அரைத்து, ஆடாதோடை யிலைச்சாற்றாலும், பச்சைமஞ்சளின்சாற்றாலும், ரஸ்தாளிவாழைக் கிழங்கின் சாற்றாலும், தண்ணீர்விட்டான் கிழங்கின் சாற்றாலும், மலாகாசந்தனக்கட்டையின் கியாழத்தினாலும், வெண்டாமரைப்பூ ச்சாற்றினாலும், செந்தாமரைப்பூச்சாற்றினாலும், தாமரைப்பூவிலி ருக்கிற காயைநீக்கி அதின் இதழ் கேசரத்தின்சாற்றாலும், ஜாதி மல்லிகைப்பூ ரசத்தினாலும், தனித்தனி உக-ஜாமம் அரைத்து, பிறகு அதில் ஒருதோலா கஸ்தூரியைச்சேர்த்து குலாப்தண்ணீ ரால் உக-ஜாமம்அரைத்துத், கதம்பப்பூரசத்தினால் உக-ஜாமம் அரைத்து மாத்திரைசெய்துவைத்துக்கொண்டு, இதை ச-குன்றி மணி யளவாகவும் அல்லது சரீரத்துக்குத்தகுந்தபடி குறைவாக வாகிலும் அதிகமாகிலும் கொடுக்கலாம்.

அனுபானம்-தேன் வீ௵ க, நெய் வீ௵ உ, வெள்ளைக்கற்கண்டு வீ௵ ங இவற்றில் மருந்தைச்சேர்த்து உண்டால் மேகரோகமும் க்ஷயத்தில் சிலேத்மம் என்கிறக்ஷயமும், இரைப்பும், தாகமும், ரத்தவாந்தி, ரத்தபேதிகளும் ஸ்ரீகளுக்கு அதிரத்தப்பிரவர்த்த னம், மூத்திர அடைப்பு, மூத்திரகிரிச்சரம், அதாவது சொட்டு மூத்திரம் அசுமரி அதாவது மூத்திரதுவாரத்தில் கல்லடைப்பு, மூத்திரரோகம் அதாவது வெகுமூத்திரம், இவைகள் சொஸ்த கும். இந்த மருந்து அனேகவியாதிகளுக்கு கொடுக்கிறபடியினால் அந்தந்தவியாதியைத் தீர்க்கும்படியான கியாழத்தோடு சேர்த்துக் கொடுத்தல் அதிககுணம் செய்யும். வியாதியில்லாதவர்களுக்கு மேற்கண்டபடி அனுபானத்துடன் ஒருகுன்றிமணியிடை இந்த மருந்துகொடுத்தால் சரீரத்துக்கு விருத்தாப்பியம் சீக்கிரத்தில்வ ராது, கண்ணில் தேஜசுஉண்டாகும். சரீரத்தில் பலம், களை, கா ந்தி, அதிகமாகஉண்டாகும், பத்தியம் சம்பா அரிசி அன்னம், கோதுமைபக்ஷணம், பசுவின்நெய், பசுவின்பால், சர்க்கரையும்ம ற்ற ஷட்ரசங்களும் எதேச்சையாய் சேர்த்துக்கொள்ளலாம். ஆ காரத்தில் பரியாயமில்லை, நோயாளிக்கு மாத்திரம் வியாதிக்குதக் கபடி பத்தியம்வைக்கவேண்டியது.

இராஜமிருங்காம்செய்யும்விதம்.

119. ரசசெந்தூரம் வீ௵ ௩௰ சொர்ணபஸ்பம், வெள்ளிபஸ்பம் தாம்பிரபஸ்பம், முத்து, பவளபஸ்பம், மனோசிலை, காளகம்வகைக்கு வீ௵ க௰, கெந்தகம்சேர் கவ-மேற்சொல்லியிருக்கிறமருந்தையெல்

லாம் சேர்த்து எருக்கம்பாலேவிட்டு ச-ஜாமம் அரைத்து, திப்பிலி வர்ணமாயிருக்கிறபலகரையைக்கொண்டுவந்து அதன்கீழ்ப்பக்கத்தைத் தேய்த்துவிட்டு, இரண்டு பலகரையைச்சேர்த்து ஒரு டப்பியாகச்செய்து வேண்டிய பலகரைடப்பியில் மருந்தையெல்லாம் நிரப்பி, பலகரைக்குச் சமானபாகமாக சீனகாரத்தையும்சேர்த்து இந்த இரண்டையும் எருக்கம்பாலில் மெலிதாக அரைத்து அந்த டப்பாவின் இடுக்குக்குத் தடவி, அந்த டப்பாவையெல்லாம் ஒரு கலயத்திற்போட்டு அந்தகலயத்தின்வாயை ஒருவாணுவினுல்மூடி அந்த இடுக்குவழியில் மண்சிலேசெய்து, பிறகு அந்தகலயம் முழுவதுக்கும் மண்சிலேசெய்து நன்ருய்க் காயவைத்து, அந்த கலயத்தை ஒருபானையில் பாதி உமியை நிரப்பி, அதின்மேல் அந்த கலயத்தைவைத்து, பிறகு பானேமுழுவதும் உமியால்நிரப்பி அந்தப் பானையை ஒரு ஓட்டினுல் மூடி மண்சிலேசெய்து ௫-அடி சதுரமான ஒரு குழியைத்தோண்டி அதில் முக்கால்வரைக்கும் காட்டுவிரட்டிபோட்டு அதின்மேல் இந்த பானையை வைத்துக் காட்டு விரட்டியினுல் அந்த குழியைநிரப்பி, பூமியின்மேலும் தொடை உயரமாய் காட்டுவிரட்டியை அடுக்கிப் புடம்போடுக. பிறகு அது ஆறினவுடனே பானேயையெடுத்து அதிலிருக்கிற உமி பஸ்பமாகாவிட்டால் மறுபடியும் புடம்போட்டு உமி பஸ்பமானபின்பு அதை எடுத்து கலயத்திலிருக்கிற டப்பாவையெல்லாம் எடுத்துக் கொண்டு அந்த பலகரைக்கு மருந்து ஒட்டிக்கொண்டிருந்தால் அந்த மருந்து ஒட்டினபாகத்தையும் எடுத்துக்கொண்டு, மிகுதி பலகரையை எறிந்துபோட்டு, பிறகு இந்த மருந்தை ஆடாதோடை இலேயின் சாற்றைவிட்டு நன்ருய் அரைத்து, மாத்திரைசெய்து கொள்ளுக. இந்தமருந்து ௪-குன்றிமணிஇடை உட்கொள்ளலாம்.

அனுபானம்-திப்பிலி-௯, மிளகு-௧௯, இரண்டையும் வறுத்துப்பொடிசெய்து, அதோடே தேன்கலந்து இந்த மருந்தையும் சேர்த்துக்கொடுத்திடுக. பத்தியம்-நெய்யன்னமும் பாலும் கொடுக்கலாம். வெள்ளாட்டுப் பாலாயிருந்தால் உத்தமம். இந்தமருந்தினுல் க்ஷயரோகம் சொஸ்தமாகும். ஊஷ்ண சரீரத்திற்குத் தேனுக்கு பதிலாக வெண்ணெய் சேர்த்துக் கொள்ளுக. பசியெடுக்கும் போதெல்லாம் ஆகாரம்கொள்க.

## பஞ்சபாணரசம்.

120. அப்பிரகசெந்தூரம் சேர்-௨, சொர்ணபஸ்பம் சேர்-௮, வெள்ளிபஸ்பம்சேர்-௮, சாதிலிங்கரசம் சேர்-௧, சுத்திசெய்தகந்தகம் சேர்-௧, முதலில் ரசத்தையும், கெந்தகத்தையும் சேர்த்து நாலுஜாமம் அரைத்து, மைபோற்செய்து, அதில் மற்ற மூன்று பஸ்பத்தையும்சேர்த்து, வெள்ளே அழிஞ்சில் ரசத்தினுல் ௧௨-ஜாமம் அரைத்து,பிறகு அந்த மருந்தை உருண்டையாக்கி காயவை

த்து, பிறகு ரக்தசித்திரமூல இலைச்சாறும், நிலப்பனக்கிழங்கின் சாறும் சமமாகச்சேர்த்து, அந்தரசத்தினல் நோயில்லா ஆட்டின் மாமிசத்தை அரைத்து, உருண்டைசெய்து, அந்த உருண்டையின் மத்தியில் மேற்சொல்லிய மருந்தின் உருண்டையை தாப்தாவின் துண்டிற்போட்டுக் கட்டிவைத்து, அதைமாமிச வுருண்டையினல் மூடித் துணிசுற்றி, அந்தமாமிசபரிமணத்துக்குச் சரியாக இரும்புப்பாணயில் நல்லெண்ணெயை விட்டுக்காய்ச்சி, மாமிசபக்குவமாகிறவரையில் அந்த உருண்டையை வறுத்து, அது ஆறின பிறகு மாமிசத்தையெடுத்துவிட்டு, வேறேமாமிசத்தைக்கொண்டு வந்து மேற்சொன்னசாறு விட்டரைத்து மாமிச உருண்டையில் மருந்தைவைத்து மாமிசத்தாலே மூடித் துணிசுற்றி எண்ணெயிலே வறுத்திடுக. இவ்விதமாக மருந்து செந்தூரிக்கிற வரைக்கும் வறுத்துப்பிறகு, அந்தமருந்தைத் துணியிற்சுற்றி ஒரு பானையிற் பாலைவிட்டு, அதில் அம்மருந்து மூடிச்சை டோளேந்திரம்போல் தொங்கவிட்டுத் தீயிட்டு வேகவைத்திடுக. மாமிசத்தின் பரிமிதி மருந்தைப்பார்க்கிலும் அஷ்டகுணம், பாலின்பரிமிதி மருந்தைப் பார்க்கிலும் சோடசகுணம். பிறகு அந்த மருந்தைக் கல்வத்திலிட்டு, சுக்கு, திப்பிலி, மிளகு, பூனைக்காலிவிதை, நீர்முள்ளி விதை, நெருஞ்சில்விதை, நிலப்பனங்கிழங்கு, இவ்வேழுதினுசையும் சமமாகச்சேர்த்து எட்டுபாகம் தண்ணீர்விட்டு, நாலில் ஒரு பாகம் கியாழம்செய்துகொண்டு, அதைவிட்டு மருந்தை மெலிதாயரைத்து மாத்திரைசெய்துகொள்க. இம்மருந்தின்பரிமிதி நாலு குன்றிமணி யிடையுட்கொள்க. பத்தியம் - தேன் ஒரு பாகமும், அதற்கு இரட்டிப்பு நெய்யும் இந்த இரண்டோடும் இந்த மருந்தைச்சேர்த்து, சாயங்காலத்தில் உட்கொள்க. தேகத்துக்கு சகிக்கும்படியான பசுவின்பாலை அதின்மேல் குடித்திடுக. பிறகு ஸ்ரீசம்போகம் செய்குக. அப்படிச்செய்யாவிட்டால் சரீரத்துக்கு வியாதியுண்டாகும். எந்தநாளில் ஸ்ரீபோக மில்லையோ அந்தநாளில் இந்தமருந்தை யுட்கொள்ள வேண்டியதில்லை. அந்தந்த ரோகத்துக்குத் தகுந்த அனுபானத்தோடு இந்தமருந்தைக் கொடுத்தால் எல்லாவியாதியும் சொஸ்தமாகும்.

## காமதேவரசம்.

121. இலிங்கத்திலெடுத்த ரசம் வீ ௨, வெள்ளை அழிஞ்சில் வேரின் ரசத்தைவிட்டு ௨அ-ஜாமம் அரைத்துப் பிறகு ரசத்தைநன்ருய்க்கழுவி, சொர்ணபஸ்பம்வீ ௨, சுத்திசெய்த கெந்தகம் வீ ௬, முதலில்கெந்தகமும், ரசமும்சேர்த்து ௧-ஜாமம் அரைத்து, மையைப்போல்செய்துகொண்டு, பிறகு சொர்ணபஸ்பம் சேர்த்து வெள்ளை அழிஞ்சில்வேரின் கியாழம்விட்டு ௨௧-ஜா

மம் அரைத்து பிறகு ரக்தசித்திரமூலவேரின் கியாழத்தை விட்டு உக-ஜாமம் அரைத்து, நிலப்பனங்கிழங்கு ரசத்தைவிட்டு உக-ஜாமம் அரைத்து, பிறகுமருந்தை உருண்டையாகச்செய்து காயவைத்து, பிறகு நாலுபங்கு தத்காலத்தில் அறுத்த ஆட்டின்மாமிசத்தை இரத்தசித்திர மூலவேரின் கியாழத்தில் அரைத்து, அந்த மருந்து உருண்டைமுழுவதும்தடவி, பிறகுஅதின்மேல்உளுந்து மாவைத்தடவி, இவ்விதமாய் இருக்கிற பெரிய உருண்டையைப் பசுவின்நெய்யில் வறுத்து, அந்த உருண்டை சிவப்பாய் உள்ளே யிருக்கிறமாமிசம் நன்ருய்வெந்தபோது எடுத்து உளுந்துமாவையும் மாமிசத்தையும் எடுத்துவிட்டு இந்தமருந்து செந்தூரவர்ணமாகிறவரைக்கும் மேலேசொல்லியிருக்கிற விதமாகவே செய்து, பிறகு அந்தமருந்தை குலாப்நீர்விட்டு அரைத்து மாத்திரைகள் செய்து சீசாவில் நிரப்பிவைத்திடுக. இந்த மருந்தின் பிரமாணம் ஒருபணவிடை. பத்தியம் - தேன் வீ௳வ, நெய் வீ௳உ, சர்க்கரை வீ௳க, இந்த மூன்றையும்சேர்த்து அதில் மருந்தைக் கொடுத்திடுக. அதின்பேரில் பால்குடித்து, பிறகு லாடு, சீரணிபாயசம், முதலானதைச் சாப்பிடுக. சரீரத்துக்கு உசிதமான போகத்தையும் அனுபவிக்கலாம். இந்த அனுபானம் வியாதியில்லாதவர்களுக்கும் வீரியவிர்த்தி தேவையாயிருக்கிற மனிதர்களுக்கும் சொல்லியிருக்கிறது. வியாதியஸ்தர்களுக்குஅந்தந்த வியாதிக்குத்தகுந்த அனுபானத்தோடாவது அல்லது மருந்துமாத்திரம் கொடுத்தாலும் சகலவியாதியும் சொஸ்தமாகும். ரசம், சுவர்ணம், கெந்தகம், இந்தமூன்றும், அதிககுணமுள்ளவைகளும்சகலவிஷத்தைத் தீர்ப்பவைகளுமாகையால் இந்தமருந்தினுல் சரீரத்துக்குப்பாதையாகாது.மேலேசொல்லியிருக்கிற குணங்களில்ஒன்றும் தவராது.

## மதனசுந்தாரசம்.

122. இலிங்கத்தி லிருந்தெடுத்தரசம் வீ௳௰, கல்வத்திற் போட்டு.செந்தாமரைப்பூ ரசத்தைவிட்டு உக-ஜாமம் அரைத்து, பிறகு நெல்லிக்காய் கெந்தகம் நெய்யில் சுத்திசெய்து, பிறகு பாலில்சுத்திசெய்து, பிறகு கரும்பு இரசத்தினுல்சுத்திசெய்து, செங்கழுநீர் ரசத்தினுல் சுத்திசெய்து, இவ்விதமாய் சுத்திசெய்த ௰-வீ௳ கெந்தகத்தை ஒரு அடுப்பின்பேரில் ஓட்டைவைத்து, அந்தஅடுப்பில் கரிநெருப்புசெய்து, அந்தஓடுகாய்ந்தபிறகு அதில் இந்தகெந்தகத்தை இடித்துப்போட்டு கெந்தகம் தண்ணீர்போல் ஆனபின்பு, அதில் அரைத்துவைத்திருக்கிற ரசத்தைப்போட்டு, இரும்புசலாகையினுல் அதைப்புரட்டிக்கொடுத்து ரசமும் கெந்தகமும் சேர்ந்து, செந்தூரத்தைப்போல் ஆனபின்பு, ஓட்டைக் கீழே இறக்கிக்கொண்டு, அது ஆற ஆறப் புரட்டிக்கொடுத்து ஆறின்பின்பு ஓட்டில் ஒட்டிக்கொள்ளாதபடிக்கு மருந்தை யெல்

லாம் எடுத்துக்கல்வத்திற்போட்டு, மறுபடியும் செங்கழுநீர் ரசத்தினல் அரைத்து, காயவைத்துப் பொடிசெய்குக. அந்தப்பொடியை எ-மண்சீலைசெய்த காசிக்குப்பியில் போட்டு தாழிச்சட்டியில் ஒருபிடி மணல்போட்டு அதின்மேல் இந்த குப்பியை வைத்து, குப்பியைச்சுற்றிலும் அதின் வாய்வரைக்கும் மணல்நிரப்பி, குப்பியின்வாயை ஒரு ஓட்டினல்மூடி, தீபாக்கினி ஒரு ஜாமமும், கமலாக்கினி ௩-ஜாமமும், காடாக்கினி ௬-ஜாமமும், இவ்விதமாய் ஒரேவகையான விறகினல் சுவாலைபோட்டு, தானே ஆறினபிற்பாடு எடுத்துக் குப்பியை யுடைத்துப்பார்த்தால் செந்தூரமாயிருக்கும். அந்தச்செந்தூரம் வி ௪௦, சுவர்ணபஸ்பம்வி ௨௦, அப்பிரகசெந்தூரம் வி ௨௦, இந்த மூன்றையும்சேர்த்து ஒரு கல்வத்திற்போட்டு நிலப்பனங்கிழங்கின் சாற்றைவிட்டு ௩-ஜாமமும், பிறகு ரஸ்தாளி வாழைக்கிழங்கின் சாற்றைவிட்டு ௩-ஜாமமும் இலந்தம்பழகியாழத்தினல் ௩-ஜாமமும் அரைத்து, பிறகுமருந்தை பில்லையாகச்செய்து, ஈரம் காய்வதற்கு முந்தி ஒருபெரிய அகலில் முள் இலவம் பிசினின்பொடியைப் பரப்பி, அதின்மேல் அந்த பில்லையைவைத்து அதின்மேல் அந்தபிசின்பொடியை நிரப்பி வேறொரு அகலை அதின்மேல்மூடி, இடுக்குகளுக்கு மண்சீலை செய்து, ஒரு ஜாண் அடி பள்ளத்தைத்தோண்டி, அந்தப்பள்ளத்தின் அடியில் ௪-விரற்கடை மணலைப்போட்டு, அதின்பேரில் இந்த அகலைவைத்து அதின்மேல் ௪-விரற்கடை மணல்போட்டு, அதின்மேல் ௧௦-முழஉயரம் காட்டு விரட்டியை அடுக்கிப்புடம்போட்டு, தானே ஆறினபிற்பாடு அந்தமருந்தை எடுத்து, மறுபடியும் கல்வத்திற்போட்டு,நிலப்பனங்கிழங்கின்சாற்றினல் ௩-ஜாமமும், ரஸ்த்தாளி வாழைக்கிழங்கின் சாற்றினல் ௩-ஜாமமும், அஸ்வகெந்திவேர் கியாழத்தினல் ௩-ஜாமமும், மெலிதாய் அரைத்து மாத்திரை செய்துகொள்க. இந்த மருந்தின்பிரமாணம் ௨-பணவிடை.

அனுபானம் பத்தியம்-முள்ளிலவம்பிசின்பொடி பணவிடை ௨, தேன்பணவிடை ௪, நெய்பணவிடை ௬, சர்க்கரை வி ௧, இவற்றுடன் அந்தமருந்தைச் சேர்த்துக் கொடுத்திடுக. அதின்மேல் பால்குடித்திடுக. பிறகுவேண்டிய சிகஸாஎன்கிற கந்தப்பொடி கொண்டுவந்து அதற்குச் சமானமாக கோதுமைமாவு சேர்த்து இந்த இரண்டையும் முள்ளிலவம் இலைச்சாற்றோடு குழம்பாகப் பிசைந்து உடம்புக்குத் தடவிக்கொண்டு அரைஜாமம் உட்கார்ந்திருந்து பிறகு வெந்நீரில் ஸ்நானஞ் செய்குக. விசேஷமாய் புளிப்பு, கசப்பு, கார்ப்பு, இல்லாமற்படிக்கு மதுரமான ஆகாரத்தை யுண்ணுக. இவ்விதமாய் ௨௧-நாள் செய்தால் சரீரம் புஷ்டியாகும். எல்லாவியாதியும் பரிகாரமாகும். க்ஷயத்துக்கு அனுபானம் மரு

ந்துபணவிடை-உ, கோமூத்திரசிலாசத்பஸ்பம்பணவிடை-உ, திப்பிலிபொடி பணவிடை-உ, இவையெல்லாம் தேனிற் கலந்து கொடுத்திடுக. பித்தம் ஜாஸ்தியாயிருந்தால் தேனோடு நெய்யையும் கலக்கிக்கொடுத்திடுக. க்ஷயரோகம் சொஸ்தமாகும். அதிசாரத்துக்கு அனுபானம் - கிராம்பு, ஜாதிக்காய், அதிவிடயம், நாகேசுவரம் வகைக்கு வீ உ, நல்லெண்ணெயில் வறுத்துப் பொடிசெய்து, முக்கால் பக்குவமான மாதளம்பழத்தைக் கொண்டுவந்து அதை நாலுதுண்டாக அறுத்து அதில் மேற்சொல்லி யிருக்கிற பொடியைநிரப்பி அதில் அபினி வீ உ, வைத்து அந்தப் பழத்தின் வாயைமூடி அதின்மேல் நூலைக்கட்டி நாகக்கொழுந்தையும் மாங்கொழுந்தையும் அந்த மாதளம் பழத்தைச் சுற்றி அதின்பேரில் ஒரு விரற்கடைகனமிருக்கும் படியாய் பசுவின் சாணியைத் தடவி அந்த உருண்டையைக் காட்டுமுட்டை நெருப்பில் சுட்டு அதுநெருப்பான பிற்பாடு, அந்தச்சாம்பலை எடுத்துப்போட்டு மருந்தையும், மருந்துபற்றிக் கொண்டிருக்கிற கொழுந்தையும் சேர்த்துக்கொண்டு மற்றக்கொழுந்தை யெல்லாம் தள்ளிப்போட்டு மருந்துபற்றிக் கொண்டிருக்கிற கொழுந்தும், மாதளம்பழமும், அதிலிருக்கிற மருந்தும் அம்மியில்வைத்து, மைபோலரைத்துத் தயிரைவிட்டுக் குழம்பாகக் கரைத்து இரும்புக் கரண்டியில் போட்டு நெருப்பில்பிடித்து, பக்குவமாய்க்கெட்டியான உடனே இலந்தக் கொட்டையளவு உருண்டைசெய்து கொண்டு, தேனில் போட்டு வைக்கிறது. அவைகளில் ஒரு உருண்டையும் மேலே சொல்லியிருக்கிற மருந்தும் தேனில் குழம்பாகக் கரைத்துக்கொடுத்தால் ஐந்துவகை அதிசாரமும் சொஸ்தமாகும். சுக்கு, மல்லி, இவைகளை கியாழம் செய்து குடிக்கவும். மற்ற ரோகங்களுக்கும் அனுபான பேதமாய் கொடுத்தால் எல்லாவியாதிகளும் சொஸ்தமாகும்.

### க்ஷயரோகத்துக்கு சுவர்ணபஞ்சாமிருதரசம்.

123. இரசசெந்தூரம், சுவர்ணபஸ்பம், அப்பிரகசெந்தூரம், காந்தசெந்தூரம், வெள்ளிபஸ்பம், வகைக்கு வீ உ௦, கல்வத்திற் போட்டு ஆடாதோடை இலையின்சாறுவிட்டு ங-நாள் அரைத்து, பிறகு மருந்தையெல்லாம் ஒரு இரும்புக் கரண்டியில் எடுத்துக் கொண்டு நெருப்பின்மேல் அந்தக்கரண்டியைப் பிடித்துக் கொஞ்சம் பக்குவம்செய்து, மறுபடி கல்வத்திலிட்டு வெள்ளிண்டுச்சாற்றால் ஒருநாள் அரைத்து நெருப்பில்பக்குவஞ்செய்து, பிறகுஇஞ்சிரசத்தைவிட்டு ஒருநாள் அரைத்து மாத்திரைசெய்து கொள்ளுக. இந்தமருந்தின் பிரமாணம் ங-குன்றிமணி இடை. அனுபானம்-திப்பிலி-ரு, மிளகு-கூ, வறுத்துப் பொடிசெய்து மேற்சொல்லி யிருக்கிற மருந்தோடு சேர்த்துக் கொடுக்கவும். உடம்பில் வலியா

யிருந்தால் இந்தமருந்தைத் தேனோடு சேர்த்துக் கொடுக்க. மே லும் அந்தவலிக்கு இந்தமருந்தும் மேற்சொல்லியிருக்கிற பொடி யும் இந்த இரண்டையும் சேர்த்து அதற்குச் சமானமாக மைஷா குக்கிலத்தையும்சேர்த்து, சுக்கு, கண்டதிப்பிலி, மல்லி, இந்த மூன்றையும் வகைக்கு க-வீ சேர்த்து கியாழஞ்செய்து அந்த கியாழத்தில் குக்கிலத்தையும், திப்பிலி, மிளகு பொடியையும் மருந்தையும் போட்டுக் கொடுக்கலாம். பத்தியம்-பாகற்காய், கத் திரிக்காய், வற்றல்கள், மணத்தக்காளிக்காய், வெள்ளரிக்காய், கத் தரிக்காய், இவைகள் தள்ளுபடி. சுக்கு, சிறுகாஞ்சிவேர், நெருஞ் சில்வேர் வகைக்கு வீ க, அம்மியில்வைத்து நறுக்கி ஒருசேர் வெள்ளாட்டுப்பாலில் போட்டு இரண்டுசேர் தண்ணீர்விட்டு தண் ணீரெல்லாம் சுண்டிப்போய் பால்மாத்திரம் மிகுதியாயிருக்கும் படியாகக்காய்ச்சி அந்தப்பாலைமாத்திரம் எடுத்துக்கொண்டு அதில் வீ ௨ திப்பிலிப்பொடியைப்போட்டுக் குடிக்கிறதற்குக் கொடுக்க வும், க்ஷயம் சொஸ்தமாகும். க்ஷயத்திற்குச் சம்பந்தமான சுரம், சுவாசகாசம், ஆரோசிகம், அக்கினிமந்தம், முதலான வியாதி சொஸ்தமாகும். க்ஷயத்தோடே அதிசாரமும் சேர்ந்திருந்தால் மைஷாகுக்கிலத்துக்குப்பதிலாக கெந்தகத்தைச் சேர்த்துக்கொள் ளுக. கியாழத்தோடு யானைத்திப்பிலி, கிராம்பு, இந்த இரண்டை யும் ஒவ்வொரு வராகனிடை சேர்த்துக்கொள்ளுக.

## பஞ்சாமிர்தபற்படி (பற்படிஎன்றால் வில்லை.)

124. தங்கம் வீ கூ, சரிகைவெள்ளி வீ கஉ, சொகுசாவுக் குச்சேர்க்கிற தாம்பிரம் வீ கஅ, அப்பிரகசத்வம்வீ உச, லோக சத்வம் வீ கரு, காந்தசத்வம் வீ கரு, வெள்வங்கம் வீ ரு, காரீ யம் வீ ரு, இந்த எ-வகைகளையும் ஒரு குகையிற் போட்டுச் சீன காரமும்போட்டு உருக்கி, அதின் அரப்பொடிசெய்து, அந்த அர ப்பொடி கீழே சொல்லுகிற விதமாய் புடம்போடுக. கெந்தகம், மனோசிலை, தாளகம் வகைக்கு வீ ருஉ, இந்த மூன்றையும் மேற் சொல்லியிருக்கிற அரப்பொடியோடுசேர்த்து எலுமிச்சம்பழரசத் தை விட்டாவது, கொடிஎலுமிச்சம்பழ ரசத்தைவிட்டாவது உக- ஜாமம் அரைத்து, பிறகு அதைப் பில்லையாகத் தட்டிக் காயவை த்து, புடம்போடுக. ஒவ்வொருபுடத்துக்கும்நிமிளை, நீலாஞ்சனம், தாளகம், மனோசிலை, கெந்தகம் வகைக்கு வீ சூ௦, இந்த ஐந்தை யும் பொடிசெய்து அந்தப்பொடியில் இந்த மருந்தை புடம்வைக் கும் ஓட்டின்மேல்பரப்பி அதின்மேல் அந்தப்பில்லையை வைத்து, மிகுதியாயிருக்கிற பாதிபொடியை அந்த பில்லையின்மேற் பரப்பி, அதின்மேல்இரண்டாவது ஓட்டினால்மூடி மண்சிலைசெய்து, கெஜ புடம்போல நாலடி ஆழமுள்ள ஒரு பள்ளத்தைத்தோண்டி அதில்

காட்டுமுட்டைகளை நிரப்பி அதின்மத்தியில் இந்தமருந்தைவைத்துப்புடம்போடுக. இவ்விதமாய் உ௧-புடம்போட்டு, பிறகு அந்த மருந்தைநிறுத்துக்கொண்டு, அதற்குச்சமபாகமாகச்சுத்திசெய்த ரசத்தையாவது அல்லது ஜாதிலிங்கத்திலிருந்து எடுத்தரசத்தையாவது இந்த ரசத்துக்கு இரட்டிப்பாகச் சுத்திசெய்த கெந்தகம் இந்த இரண்டையும் கல்வத்திற்போட்டுப் பொடிசெய்து மையைப்போல் ஆனபிறகு இந்த மையோடு புடம்வைத்த மருந்தையும் போட்டு மெலிதாக அரைத்து பிறகு இந்தப்பொடியையெல்லாம் ஒரு இரும்புபாணுவில் போட்டு ஒரு கனப்புச்சட்டியில் இலந்தக் கரியை நிரப்பி நெருப்புண்டாக்கி அந்தநெருப்பாலே அந்த இரும்புபாணுவிலிருக்கிற மருந்தை உருக்குக. பிறகு பூமியின்மேல் ௪௦-விரற்கடை உயரமாய் பசுவின்சாணிக்கொண்டு ஒரு அடையாகச்செய்து அதின்மத்தியில் ஒருபள்ளம் செய்துகொண்டு அந்தப் பள்ளத்தில் வாழைக்குருத்தைப் போட்டு அதின்மேல் உருக்கியிருக்கிற அந்தமருந்தைஊற்றி, உடனேமருந்தை இன்னொரு வாழைக்குருத்தால்மூடிவைத்திடுக. இவ்விதமாய் போடுகிறவாழைக் குருத்துக்கு நெய்தடவி யிருக்க வேண்டியது. மருந்து ஆறின பிறகு அந்தமருந்தின் மேலும் கீழும் இருக்கிற வாழையிலையை எடுத்து அந்தமருந்தைப் பொடிசெய்து மறுபடியும் அந்த இரும்புப்பாணுவில்போட்டு கனற்சட்டியில் உருக்கி, உருக்கினபிற்பாடு மனோசிலை, தாளகம், கெந்தகம், இந்த மூன்றையும் சமமாகச்சேர்த்துக்கொண்டு பொடிசெய்து அந்தப்பொடிமருந்துக்குச் சமமாயிருக்கும்படி எடுத்துக் கொண்டு அதிவிடயம் கியாழத்தில் ஊறவைத்துப் பிறகு அதை எடுத்துக் காயவைத்துப் பொடி செய்துகொண்டு அந்தப்பொடியைக் கொஞ்சம்கொஞ்சமாக அந்த உருக்கின மருந்தில் போட்டு, அந்தப் பொடிமுழுவதும் மருந்தோடே சேர்ந்த பிற்பாடு மருந்தை எடுத்துப் பொடிசெய்து, அவியம்பட்டை, சுக்கு, மிளகு, கண்டதிப்பிலி, செஞ்சித்திரமூலம், கண்டங்கத்திரிக்காய், முருங்கைவேர், வகைக்கு சேர்-௧, நிறுத்துக்கொண்டு, அதற்கு அ-மடங்கான தண்ணீர்சேர்த்து, நாலில் ஒரு பாகமாக அந்தக் கியாழத்தைச் செய்துகொண்டு அதினால் மேற்சொன்ன மருந்தை அரைத்து, இரும்புபாணுவில்போட்டு இலந்தைக் கரிநெருப்பினால் பக்குவம்செய்து அரைத்து, மறுபடியும் பக்குவம்செய்குக. இவ்விதமாய் எ-தரம்செய்து பிறகு நொச்சிச்சாறு விட்டு அரைத்து மாத்திரை செய்து கொள்ளுகிறது இது சாக்ஷாத் பைரவநாதர்சொல்லியமருந்து. இந்தமருந்தின் பிரமாணம், இரண்டுகுன்றிமணியிடை. அனுபானம்-சுக்கு, திப்பிலி, மிளகு, இவைசமமாகச் சேர்த்துக்கொண்டு பொடிசெய்து வேளைக்கு ௨-குன்றிமணியிடையுள்ள பொடியை நெய்யோடு சேர்த்துக் கொ

ண்டு அதில் அந்த மருந்தைப்போட்டு இரண்டுவேளையாய் கொடுத்துக்கொண்டு வந்தால் க்ஷயரோகம் சொஸ்தமாகும். இதைத் தவிர சுவாசகாசம், விஷூசி, பிரமேகம், மகோதரம், வாயிலிருந்து நீர்விழுதல், ஆரோசிகம், வாந்தி, மார்வலி, எல்லாவிதமான மூலரோகங்களும், எல்லாவிதமான குஷ்டரோகங்களும், வாதசுரம், மலசம்பந்தம், கிராணி, கயரோகம், நானாவிதமானதொந்த ரோகங்கள், ஜீர்ணசுரம் விசேஷமாய் அக்கினிமந்தம், இந்தவியாதிகளுக்கு அந்தந்த வியாதிக்கேற்ற அனுபானத்தோடு இந்தமருந்தைக் கொடுத்தால் சொஸ்தமாகும். பத்தியம்-நல்லெண்ணெய், கடுகு, வில்வம், மாங்காய், பாகற்காய், குசும்பி இலையின்கறி, அதின் எண்ணெய், கத்திரிக்காய், புருவின்மாமிசம் சேர்க்கலாகாது.

(ஐயாகண்ணுபிள்ளை)

## திரிமூர்த்திகரந்த செந்தூரம்.

125. நல்ல ஊசிகாந்தம், நெல்லிக்காய் கெந்தகம், நூறுவருஷமான இரும்பின் அரப்பொடி வகைக்குசேர்-உ, ஒருகல்வத்திற் போட்டு, கற்றாழையாறுவிட்டு கஉ-நாளுக்குள்ளாக சஅ-ஜாமம் அரைத்து, கங-ம் நாள் காலையில் ஒருமுழம் விஸ்தாரமும் ஒரு ஒட்டைச்சாண் உயரமுள்ள ஒரு செந்தூரச்சட்டியின் மத்தியில் இந்த மருந்தை ச-விரற்கடை சக்கரமான அடையாகச்செய்து வைத்து, மருந்தில் தூசுவிழாதபடிக்கு அந்தச் சட்டியின்வாய்க்கு ஒருதுணியைக்கட்டி ந-நாள் வெய்யிலில் வைத்துக் காய்ந்தபிற்பாடு துணியை எடுத்துப்போட்டு வேறொரு சட்டியாலதை மூடி மண்சீலைசெய்து, இந்தச்சட்டியை வைக்கும்படி விஸ்தாரமான செந்தூரம்செய்கிற அடுப்பின்மேல்வைத்து ச-ஜாமம் கமலாக்கினி சுவாலைபோட்டு, பிறகு பெரிய விறகுகளால் உ0-ஜாமம் வடவாக்கினிசுவாலைபோட்டு. ஆகஇந்த உச-ஜாமம் சுவாலை போடுகிறதில் அடுப்பு நெருப்பினால் நிரம்பிப்போனால் சுவாலையை அவிக்காதபடி கொஞ்சங்கொஞ்சமாய் நெருப்பை எடுத்துப்போடுக; உச-ஜாமம் சுவாலைபோட்டபின்பு அடுப்பிலிருக்கிற நெருப்பையெடுத்துவிடாதபடிக்கு சுவாலையை மாத்திரம் நிறுத்துக. தானே மூன்று நாள் ஆறினபிற்பாடு மருந்தில் மணல்விழாதபடிக்கு மண்சீலையையெடுத்துப் போட்டுச் சட்டியைத்திறந்துபார்த்தால் இந்தமருந்து செந்தூரம் மிருதுவானபூவைப்போல்செவப்பாயிருக்கும். அந்தச் செந்தூரத்தை எடுத்துப் பொடிசெய்து ஒரு குப்பியில் நிரப்பிக் கொள்க.

அனுபானம் சரீரம்வெளுத்துப்போய்வாடியிருந்தாலும் தவிருத்தியில்லாமலிருந்தால் சீரகம், மிளகு, சுக்கு, கற்கண்டு நாலும் சமமாகச்சேர்த்துப் பொடிசெய்து, வேளைஒன்றுக்குவீ-உ, பொடி

போட்டு ௨-பணவிடை மருந்தைச்சேர்த்து ௨-வீ நெய்யிற்கலந்து இரண்டுவேளை ஒருமண்டலம் வாங்கினல் சொஸ்தமாகும். இச்சா பத்தியம். பித்த பாண்டுரோகம், விஷபாண்டுரோகம், ஊதுகா மாலை, கைகால்வீக்கம், பித்தவெட்டையினுல்வாய் வயிறுவீக்கம், இந்த வியாதிகளுக்குச் சங்கம்வேர் வீ ௨, மெலிதாக அரைத்து அதோடே ஒருபணவிடை செந்தூரத்தைச் சேர்த்து வெள்ளாட் டின் பச்சைப்பால் ௨-சேரோடும் கலந்து குடித்து, அதின்மேல் ௮-சேர் வெள்ளாட்டின் பச்சைப்பாலும் குடிக்கவும். சாயங்காலத் தில் வெள்ளாட்டுப்பாலைக்காய்ச்சி மேற்சொல்லியிருக்கிறவிதமாக மருந்துட்கொள்ளுக. இவ்விதமாய் இரண்டுவேளை எ-நாள் செய் தால் மேற்சொல்லியிருக்கிற வியாதிகள் சொஸ்தமாகும்.

பத்தியம்-வெள்ளாட்டின்பாலைக்காய்ச்சி சர்க்கரையும் சேர்த் துக்கொண்டு அந்தப் பாலன்னம் சாப்பிடுகிறது. இவ்விதமாய் எ-நாள் உப்பில்லாத பத்தியம்செய்கிறது. பிறகு அ-ம் நாள் தொ டங்கி சங்கஇலையையும் உப்பையும் சேர்த்து வறுத்து அந்த உப் பைச்சேர்த்துக்கொண்டு புளிபோடாதபடிக்கும், தாளிக்காதபடிக் கும், அரைக்கீரை, கத்திரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு சேர்த்துக் கொண்டுபால்மோர்இல்லாதபடி எ-நாள் மறுபத்தியம்செய்கிறது. இந்தமறுபத்தியம் எ-நாளும் சங்கம்வேரும் வெள்ளாட்டுப் பா லும் இல்லாதபடி ௨-பணவிடை செந்தூரத்தைமாத்திரம் தேனிற் கலந்து இரண்டுவேளையும் உட்கொள்கிறது. கரு-ம் நாளில் ஓமம் அரைத்துத் தடவிக்கொண்டு ஆரோக்கிய ஸ்நானம் செய்கிறது. பிறகு உ-நாள் கழிந்தபின்பு நலலெண்ணெய், ஆமணக்குநெய், நெய், இந்த மூன்றையும் சமமாய் சேர்த்துக்கொண்டு முக்கூட்டு செய்து அப்பியங்கனம் செய்கிறது. கரு-ம் நாள்முதல் புளிசேர்த் துக்கொள்ளலாம். இவ்விதமாய்ச்செய்தால் மேலேசொல்வி யிருக் கிற வியாதிகள் சொஸ்தமாகும். அப்படிக்கில்லாதபடி வியாதியில் கொஞ்சம் சேஷ்டையிருந்தால் பத்தியமில்லாமல் இச்சாபத்தியத் தோடு ௨-பணவிடை இந்த மருந்தை இரண்டுவேளை ஒருமாதம் உட்கொண்டால் வியாதி நிச்சயமாய் சொஸ்தமாகும். வீரியவிரு த்தி ரக்தவிருத்தியாகும். வெள்ளாட்டுப்பால் சேர்க்காவிட்டால் ஒவ்வொருவேளைக்கும் ஒருபணவிடை இந்தசெந்தூரத்தைத் தே னிற்கலந்து இரண்டுவேளை எ-நாள் உண்டு வெந்நீர்அன்னம் சாப் பிடுகிறது. மிளகு, கரிவேப்பிலை, இந்த இரண்டையும் பொடிசெ ய்து சேர்த்துக்கொள்ளலாம். மறுபத்தியத்திலும் மருந்து உண்டு மேற்சொல்லியிருக்கிற விதம் மறுபத்தியம் செய்கிறது; வியாதி சொஸ்தமாகும். துர்ப்பலமாகவும், சரீரத்தில் சக்தியில்லாமலு மிருந்து எ-நாள் உப்பில்லாதபத்தியம் செய்கிறதற்குச் சக்தியில்

லாவிட்டால் ரு-நாள் அல்லது ந-நாள் இந்தமருந்தை உண்டு உப்பில்லாத பத்தியம் செய்கிறது. எவ்வளவுநாள் பத்தியம் செய்கிறதோ அவ்வளவுநாள் மறுபத்தியம் செய்கிறது. பிறகு பத்தியமில்லாதபடி திர்க்கமாய் மருந்துண்டுவந்தால் மேற்சொல்லி யிருக்கிற வியாதிகள் சொஸ்தமாகும். இந்த மருந்தினால் ஆரோசிகம் உண்டாகாது, ரக்தவிர்த்தியாகும். பாண்டுரோகத்துக்கும் விஷபாண்டுக்கும் வீக்கம் காண்பிக்காததற்கு முன்பாக ஒருபணவிடை மருந்தைத் தேனிற்கலந்து ஒருமண்டலம் உட்கொண்டால் வியாதி ஜாஸ்தியாகாதபடி சொஸ்தமாகும். கிராணி உபத்திரவத்திற்கு சிறுநாகப்பூ, காய்ந்தவில்வப்பிஞ்சு, கிராம்பு, ஜாதிக்காய், திப்பிலி, சீரகம், கசகசா வகைக்கு வ௨ உ வறுத்துப் பொடிசெய்து வேளைக்கு அந்தப்பொடி வ௨ உ, செந்தூரம் பணவிடை உ, தேனில் சேர்த்து இரண்டுவேளை ஒருமண்டலம் கொடுக்க ஆறுவித கிராணியும்சொஸ்தமாகும். கைகால் சோர்ந்து சக்தியில்லாம லிருந்தாலும், எந்த வியாதியினாலாவது அடிக்கடி காயலாவாயிருந்தாலும் வேளைக்கு உ-பணவிடையுள்ள இந்தமருந்தைத்தேனிற்கலந்து இரண்டுவேளை ஒருமண்டலம் கொடுத்தால் ரக்தவிர்த்தியாய் வியாதி சொஸ்தமாகும். அக்கினிமந்தம், பித்தகுன்மம், பித்தவாய்வு, இந்த மூன்று வியாதிகளுக்கும் அரைக்கால்சேர் அப்ளாகாரத்தைக் கொண்டுவந்து அதை ஒருவரட்டியில்வைத்து கோழிப்புடமென்கிற புடம் போட்டு பிறகு அப்ளாகாரத்தையெடுத்து மெலிதாகப் பொடிசெய்து வேளைக்கு இந்தப்பொடியில் உ-விராகனிடையும், செந்தூரத்தில் வ-பணவிடையையும் ஒருபாத்திரத்திற்போட்டு அதில்பாதி எலுமிச்சம்பழரசத்தை விட்டுக்கலந்து இரண்டுவேளை அரைமண்டலம் உண்டால் தீரும். இது அனுபவத்திற்குவந்தமருந்து.

முத்துசாமி தீக்ஷதர்.

### மூலரோகத்திற்குக் கனக செந்தூரம்.

126. ஜாதிலிங்கத்திலெடுத்தரசம், சுவர்ணகிமிளைபஸ்பம், காந்தசெந்தூரம், அப்ரகசெந்தூரம், ஈயபஸ்பம், கருவங்கபஸ்பம், வகைக்கு வ௨ க0, பாலில் சுத்திசெய்த நெல்லிகெந்தகம் வ௨ சூ0, சுக்கு, திப்பிலி, மிளகு வகைக்குச்சேர் உ, இந்தமூன்றையும் கியாழம்செய்து மேற்சொல்லியிருக்கிற மருந்தைக்கல்வத்திற்போட்டு, இக்கியாழத்தைவிட்டு மூன்றுஜாமம் அரைத்துப்பிறகு ஒருபில்லையாகச்செய்து அந்தப்பில்லையை ஒரு ஓட்டில்வைத்து மேலோடு மூடி, ஒருஜாணுள்ள பள்ளத்தைத்தோண்டி அந்தப் பள்ளத்தில் நாலுவிரற்கடைமணல்போட்டு அதின்மேல் ஓட்டைவைத்து, அந்தப்பள்ளத்தை மணலினால்மூடி, தரைமட்டம்செய்து இரண்டு சாண் அகலமும் இரண்டுஜாண்உயரமும் இருக்குப்படியாய் காட்டு முட்டை அடுக்கிப் புடம்போட்டு ஆறினபிற்பாடு அந்தமருந்தை

எடுத்துக்கொண்டு சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு வீ௨௦, இவையெல்லாம் சேர்த்து கஉ-சேர் தண்ணீர்விட்டு மூன்றுசேர் கியாழஞ் செய்துகொண்டு, அந்தக்கியாழத்தைவிட்டு அந்த மருந்தை மெலிதாக அரைத்து மாத்திரை செய்து கொள்ளுக. இந்த மருந்தின்பிரமாணம் ஒரு குன்றிமணியிடை. மூலரோகம், வயிற்றுவலி, மிகவும் கடினமானநேத்திரரோகம், திரிதோஷத்தோடு கூடின க்ஷயம், இருமல், சுவாசம் அக்கினிமந்தம், சுரம், காதுவலி, தலைவலி, பல்லுவலி, பீனசம், மார்வலி, ஏகாங்கவாதம், தனுர்வாதம், கம்பவாதம், மூர்ச்சைவாதம், ஜீர்ணசுரம் இத்தியாதி வியாதிகள் சொஸ்தமாகும்.

அனுபானம்-வாதசுரத்துக்கு நெய், பித்த சுரத்துக்குத் தேன், சிலேத்மசுரத்துக்குத் திப்பிலிபொடி, வாதபித்தத்துக்கு ரு-வீ ரக்தசந்தனத்தில் ஒருசேர்தண்ணீர்விட்டு அதை அரைக்கால்சேர் கியாழம்செய்துகொண்டு அதில் மருந்து கொடுக்கிறது, சிலேத்மவாத சுரத்திற்குச் சுக்குக் கியாழத்தில் கொடுக்கிறது, பித்தவாதத்துக்கு நெய்யில் கலந்துகொடுக்கிறது, சிலேத்மபித்த சுரத்திக்கு இஞ்சிரசத்தில் கொடுக்கிறது, சன்னிபாதசுரத்துக்கு நொச்சிப்பட்டையின் ரசத்தில் சேர்த்துக் கொடுக்கிறது. பல்வலி, காதுவலி, கண்வலி, உடம்புவலி, நெஞ்சுவலி, வயிற்றுவலி, இவைகளுக்கும் ஜீர்ணசுரத்திற்கும், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, இந்தமூன்றிலும் இருக்கிறவிதையைஎடுத்துவிட்டு மேல் தோல்வகைக்கு வீ உ ஆக எடுத்துக்கொண்டு ஒருசேர் தண்ணீர்விட்டு அரைக்கால்சேர் கியாழமாகச்செய்து அதில் கொள்ளுகிறது. மேற்சொல்லியிருக்கிற வியாதிகளுக்கு இஞ்சிரசத்தில் கொடுத்தாலும் கொடுக்கலாம் அக்கினிமந்தத்துக்கு இஞ்சிரசத்திலேயே கொடுக்கிறது.கண்வலியும், தலைவலியுமிருந்தால் காசுக்கட்டி, ஏலம், இந்தஇரண்டையும் சமமாகச் சேர்த்துக்கொண்டு அரைத்துப் பற்றுப்போடுகிறது. மூர்ச்சைவாதத்துக்கும், ஏகாங்கவாதத்துக்கும், தனுர்வாதத்துக்கும், குமிழம்வேர் அரைக்கால்சேர் கொண்டுவந்து அதில் ஒருசேர்தண்ணீரைவிட்டு அரைக்கால்சேர் கியாழமாகச் செய்துகொண்டு அதில் மருந்துகொடுக்கிறது. பீனசத்துக்குப் பாலில் சேர்த்துக் கொடுக்கிறது. பாண்டுரோகத்துக்கும், க்ஷயரோகத்துக்கும், இருமலுக்கும், மஞ்சட்காமாலைக்கும் மிளகுபொடி, நெய், இந்த இரண்டோடும் சேர்த்துக்கொடுக்கிறது. அக்கினிமந்தமும், நாபிவலியுமிருந்தால் ஓமம், வாய்விளங்கம் இந்த இரண்டின் கியாழத்தில் கொடுக்கிறது. வாட்டுச்சுரம், ஆரோசிகமிருந்தால் வாழைப்பழத்தோடு சேர்த்துக் கொடுக்கிறது. ஸ்ரீசளுக்கு உதிர சம்பந்தத்தினால் வயிற்றுவலி அல்லது, இடுப்புவலி இருந்தால் இரக்தபோளத்தை சுவ-வீ முதல் உ-வீ

வரைக்கும் மெலிதாக அரைத்து அதில் கொடுக்கிறது. இவ்விதமாகக்கொடுத்தால் மேலேசொல்லியிருக்கிற வியாதி சொஸ்தமாகும். இந்தமருந்து நாகார்ச்சனர் சொல்லியது.

ஐயாகண்ணு பிள்ளை.

## பெரும்பாட்டுக்குப்பஞ்சாமிர்த செந்தூரம்.

127. ஊசிகாந்தம் பூ அ, ரசம், காரீயம், நாகம், வெள்ளீயம் வகைக்கு பூ உ, ஆக வகை ரு-க்கும் பூ கசு, இதில் காரீயம், நாகம், வெள்ளீயம், ஒரு கரண்டியிற்போட்டு உருக்கி மேற்சொல்லியிருக்கிற இரண்டு பலரசத்தையும் சேர்த்துக் கொண்டு இந்தமருந்தையும் ஊசிகாந்தத்தையும் ஒரு கல்வத்திற்போட்டுப் பொற்றலைக்கையாந்தகரைச் சாறுவிட்டு கஉ-ஜாமமும், கற்றாழை சாறுவிட்டு கஉ-ஜாமமும், கையாந்தகரைச்சாறுவிட்டு கஉ-ஜாமமும், அரைத்து மறுபடியும் பொற்றலைக்கையாந்தகரைச் சாற்றினால் கஉ-ஜாமம் அரைத்திந்தமருந்தை ஒருசாண் அகலமாய் மெலிதான அடையாகத் தட்டிவைத்துக்கொண்டு, செந்தூரச்சட்டியில்வைத்து, அதின்மேல் வேறொரு சட்டிமூடி மண்சீலைசெய்து அடுப்பின்மேல்வைத்து, நாலுஜாமம் கமலாக்கினிசுவாலைபோட்டு, இவ்விதமாக உச-ஜாமம் சுவாலைபோட்டு, ஆறினபிற்பாடு கல்வத்திலிட்டு மருந்தைப் பொடிசெய்து குப்பியில் நிரப்பிவைத்துக் கொண்டு வேளைக்கு ௧-பணவிடை வெண்ணெயிலாவது அல்லது பசுவின் நெய்யிலாவது கலந்து இரண்டு வேளை அரைமண்டலம் உட்கொண்டால் பெரும்பாட்டுவியாதி சொஸ்தமாகும். சீரகம், கற்கண்டு மெலிதாகப் பொடிசெய்து ௧-வீசு வெண்ணெயுப் சேர்த்து ௧-பணவிடை மருந்தைச் சேர்த்து இரண்டுவேளை ௧-மண்டலம் கொடுத்தால் நீர் இறங்கும்பொழுது எரிச்சலிருந்தால் சொஸ்தமாகும். துத்தியிலையோடு கால்விராகனிடை சீரகம் சேர்த்து மெலிதாக அரைத்துக் கழற்சிக்காயளவு, உருண்டைசெய்து, வேளைக்கு ௧-பணவிடை மருந்தைசேர்த்து இரண்டுவேளை அரைமண்டலமுட்கொண்டால் வெள்ளைமேகம் சொஸ்தமாகும். கீழாநெல்லிவேரைப் பசுவின்பாலைவிட்டு அரைத்து பெரியகழற்சிக்காயளவு உருண்டைசெய்து ௧-பணவிடை செந்தூரத்தைச்சேர்த்து உட்கொண்டு அதின்மேல் வ-சேர் பசுவின்பாலைக் குடித்திடுக. இவ்விதமாய் இரண்டுவேளை ௧-மண்டலம்செய்தால் மஞ்சள்பித்தமேகம் சொஸ்தமாகும். காலைவேளையில் காய்ச்சாதபாலும், சாயங்காலத்திற் காய்ச்சினபாலையும் உபயோகிக்க. தேனிலாவது அல்லது நெய்யிலாவது இச்சாபத்தியத்தோடு இரண்டு வேளை ஒரு மண்டலம்மருந்தை உட்கொண்டால் ரக்தவிர்த்தியாகும், இந்த மருந்து எந்த அனுபானத்தோடும் எந்த வியாதியாயிருந்தாலும் இச்சாபத்தியத்தோடு கொடுக்கலாம்.

## தாம்பிரபஸ்பம்.

128. சுத்தமான தாம்பிரத்தின் அரப்பொடி சேர்-ஙூ, வெள்ளைச்சங்கத்தின் பொடி சேர்-ஙூ, இந்தஇரண்டையும் கல்வத்திற்போட்டுக் குப்பைமேனி ரசத்தினால் கஉ-ஜாமம் அரைத்து பில்லையாகச்செய்து ஒரு ஓட்டில்வைத்து அதின்மேல் வேறொரு ஓட்டைமூடி, மண்சீலைசெய்து ஒன்றரைகெஜம் அகலம், ஒன்றரைகெஜம் உயரம் சக்கரமாக வரட்டியை அடுக்கி, அதின் மத்தியில் ஓட்டைவைத்துப் புடம்போடுக. தானே ஆறினபிற்பாடு மருந்தை ஒருகல்வத்திற்போட்டுக் குப்பைமேனிரசத்தைவிட்டு கஉ-ஜாமம் அரைத்திடுக. பிறகு மேற்சொல்லியிருக்கிறபடி புடம்போடுக, இவ்விதமாய் க0-தரம் புடம்போட்டுப் பார்த்தால் வெள்ளையாய்பஸ்பமாயிருக்கும். புடம்போடுகையில்பள்ளத்தைத்தோண்டி அதில் புடம்போடக் கூடாது. தரையின் மேல்தான் புடம்போடவேணும். க0-தரம் புடம்போடுகிறதற்கு முன்பாகவே மருந்து வெள்ளையாய்பஸ்பமாயிருந்தால் புடம்போடுகிறதைநிறுத்திவிடுக. க0-தரம் புடம்போட்டும் பஸ்பம் கொஞ்சம் கருப்பாயிருந்தால் வெள்ளையாகிற வரைக்கும் புடம்போடவும். இந்த பஸ்பத்தைப் பொடிசெய்து ஒருகுப்பியில் நிரப்பி வைத்துக்கொண்டு ஒருபணவிடை மருந்தை தேனிற் கலந்துகொடுத்து அதின்மேல் உ-வீசித்தரத்தையில் இரண்டுசேர் தண்ணீரைவிட்டு கால்சேர் கியாழஞ்செய்து குடித்திடுக. இவ்விதமாய் இரண்டுவேளை ஒருமண்டலம் கொடுத்தால் தீர்க்கமாயிருக்கிற சுவாசகாசம் சொஸ்தமாகும். சுழிமாந்தத்துக்கு வேளைஒன்றுக்கு ஒருபணவிடை பஸ்பத்தைத் தேனிற்கலந்து இரண்டுவேளை க0-நாள் கொடுத்தால் சொஸ்தமாகும். மூன்றுவருஷத்துக்கு மேற்பட்டு கஉ-வருஷத்துக்குட்பட்ட குழந்தைகளுக்குச் சுழிமாந்த மிருந்தால் இந்த பஸ்பத்தை ஒரு மண்டலம் கொடுத்தால் சொஸ்தமாகும். பெரியவர்களுக்குக் கபசம்பந்தத்தினால் கம்பியைப்போல் கபம்விழுந்துகொண்டிருந்தால் ஒருபணவிடை இந்தபஸ்பத்தை தேனிற்கலந்துகொடுத்து அதின்மேல் சுக்கு, சித்தரத்தை வகைக்குவீஉ, ஆகப்போட்டு அதோடே கால்சேர்தண்ணீர்விட்டுச் சொரசம் எடுத்துக்குடிக்கக் கொடுக்க. இவ்விதமாய் இரண்டுவேளை ஒருமண்டலங்கொடுத்தால் கபரோகம் சொஸ்தமாகும். கபவாய்வு சம்பந்தத்தால் இருமல், சுவாசம், காசாவேசம் இருந்தால் சுக்கு, திப்பிலி, மிளகு மூன்றையும் பொடிசெய்து அந்தப்பொடியில் ஒருவிராகனிடையும் ஒரு பணவிடைபஸ்பமும் தேனிற்குழம்பாகக் கலந்து இரண்டுவேளை ஒரு மண்டலம் கொடுத்தால் மேற்சொன்னவியாதி சொஸ்தமாகும்.

## குடோரி.

129. வெண்ணைபி பூடு ஒருபடி கோமூத்திரத்தில் மூன்று நாள் ஊறவைத்து எடுத்து மெலிதாய்க் கத்திரித்து ஒரு கல்வத்திற்போட்டு நறுக்கி மிளகு பூடு சேர்த்து, தண்ணீர்விட்டு மெலிதாக ௨௦-சாமம் அரைத்து பிறகு தூதுவளைக்காய் அளவாக மாத்திரைசெய்து காயவைத்திடுக. காய்ந்தபிறகு ஒரு குப்பியில் எடுத்துவைத்துக்கொள்ளுக. வேளை ஒன்றுக்கு ஒருமாத்திரைகொடுக்கலாம். அனுபானம்-ஏழு மிளகை ஒரு வெற்றிலையிற் சுருட்டி அதோடுகூட மேற்சொல்லியிருக்கிற ஒரு மாத்திரையையும் சுருட்டி மென்றுசாப்பிடுக. இவ்விதமாய் இரண்டுவேளை ௨-மண்டலம் செய்தால் குன்மசூலை சொஸ்தமாகும். வேளைக்கு மிளகு ஒரு வராகனிடையை கொஞ்சம் வறுத்துக்கொண்டு உபாயமாய்பொடிசெய்து இரண்டுசேர் தண்ணீர்விட்டு அரைக்கால்சேர் கியாழம்செய்துகொண்டு அந்த கியாழத்தில் ஒருமாத்திரையும் ஒருவராகனிடை தேனையும் சேர்த்து இரண்டுவேளை அரைமண்டலங் கொடுத்தால் சர்வாங்கவலியும் விருச்சிகவாய்வும் சொஸ்தமாகும். பெரிய முற்றின தேங்காயை ஒருதுவாரம்செய்து அதிலிருக்கிற தண்ணீரை ஊற்றிவிட்டு. கல்லுப்பு வ-சேர், இந்துப்பு வ-சேர் இந்த இரண்டையும் குன்றிமணிபோல் துண்டு துண்டாகச்செய்து இந்த துண்டுகளையும் வெள்ளாட்டின்மூத்திரம் எவ்வளவுகொள்ளுமோ அவ்வளவு மூத்திரமும் அந்தத் தேங்காயில்வார்த்து மருந்து வெளியே போகாதபடி ஒரு அடைப்பிட்டுப் பசுவின் சாணியை ஒரு அங்குலம் தடிப்பாய் அந்தத் தேங்காய்மேற்பூசி, பிறகு வரட்டியை அடுக்கி அதின்மத்தியில் தேங்காயைவைத்துப் புடம்போட்டு ஓடுமுழுவதும் எரிந்து தேங்காய்கூட பாதிஎரியும்படியான பக்குவமாய் எரித்துக்கொண்டு பிறகு அதை எடுத்து வெந்துப்போன ஓட்டை கத்தியால் எடுத்துப்போட்டு உள்ளேயிருக்கிற மருந்தையும் தேங்காயையும் அம்மியில்வைத்து அரைத்து ஒரு சீனபாத்திரத்தில் போட்டுவைத்துக்கொள்ளுக. வேளைக்குஎலுமிச்சம்பழரசம் அரைக்கால்சேரில் ஒருமாத்திரையை யரைத்து அதோடே தேங்காயின் மருந்தை ஒரு கழற்சிக்காய் அளவுசேர்த்துஇரண்டுவேளை அரைமண்டலம் உட்கொண்டால் அஷ்டகுன்மம் சொஸ்தமாகும். இச்சாபத்தியம். புரசம்பட்டை. ௧-வீ, சுக்கு, மல்லிவகைக்கு ௨-வீ சீரகம் ௧-வீ, இந்த நாலுவகையோடும் ௨-சேர் தண்ணீரைவிட்டு மூன்றுவீசம் சேர் கியாழம் செய்துகொண்டு அதில் ஒருமாத்திரை உரைத்து இரண்டுவேளை அரைமண்டலம் உட்கொண்டால் குன்மரோகத்தினல் உண்டான வயிற்றுவலி தீரும். சுக்கு, சித்திரத்தை, மிளகு, பரங்கிப்பட்டை, சங்கவேர், பிர

ப்பங்கிழங்கு, வெள்ளருகு, வகைக்கு உ-வீூ சேர்த்து அம்மியில் வைத்து நறுக்கி அதோடு உ-சேர் தண்ணீர்விட்டு அஷ்டபாகமாக கியாழம்செய்துக்கொண்டு அந்த கியாழத்தில் ஓர் மாத்திரை யுரைத்து அதோடே தேன் க-வீூ சேர்த்து இரண்டுவேளை அரைமண்டலம் கொடுத்தால் பக்கவாய்வு, மேகவாய்வு, முடக்குவாய்வு, விருச்சிகவாய்வு, சொஸ்தமாகும். பத்தியம்-புளி சேர்க்கக்கூடாது. வியாதி கொஞ்சம் குணப்பட்டு ஊஷ்ணமாயிருந்தால் புளிசேர்க்கலாம்.

## ஜாதிலிங்கக்கட்டு.

130. உலாந்தா ஜாதிலிங்கம் பூ உ, வெள்ளி அரப்பொடி பூ உ, கோழிமுட்டைகொண்டுவந்து அதிலிருக்கிற வெண்கருவெடுத்து அதில் ஜாதிலிங்கத்தை ஊறவைத்து அந்தஜாதிலிங்கத்தையெடுத்து அரப்பொடியிற்போட்டு 'ஒட்டிக்கொள்ளும்படி புரட்டிக்காயவைத்து, காய்ந்தபிறகு மறுபடியும் அந்தக்கருவில் ஊறவைத்து, அதையெடுத்து அரப்பொடியிற்போட்டுப் புரட்டுக இவ்விதமாய் அரப்பொடி ஆகிறவரையில் செய்திடுக. பிறகு அந்தக்கட்டியை காயவைத்து தாம்பிர அரப்பொடி கால்சேரில் இவ்விதமாகவே போட்டுப்புரட்டுகிறது. பிறகு இரும்பு அரப்பொடி கால்சேரிலும் இவ்விதமாகவே புரட்டுகிறது. இந்த மூன்று அரப்பொடியிலும் பிரட்டினபிற்பாடு குன்றிமணிப்பருப்பின் மேல் தோலெடுத்துப்போட்டு ஊறவைத்து, மெல்லிதாக அரைத்து, இதை ஒரு துணிக்குத்தடவி, அந்தத்துணியை மூன்றுசுற்றாக அந்தக்கட்டிக்குச்சுற்றிப் பிறகு சுண்ணாம்பு ஒருதுணியில்தடவி, இந்தத்துணியை அந்தக்கட்டிக்கு மூன்றுசுற்றாகச்சுற்றி, பிறகு மண்ணை மெல்லிதாக அரைத்துக்கொண்டு ஒருதுணிக்குத்தடவி யிதையும் அந்தக்கட்டிக்கு மூன்றுசுற்றாகச்சுற்றி அந்தக் கட்டியைகாயவைத்து நன்றாகக்காய்ந்தபிறகு காற்றில்லாத இடத்தில் ஆறுபடி உமியைப் போட்டு, அதின்மேல் இலிங்கக்கட்டியைவைத்துக் கட்டியின் மேல் சு-படி உமிபொட்டுப் புடமிக. உமியெரிந்துஆயினபிற்பாடு ஜாதிலிங்கத்தையெடுத்து அதின்மேலிருக்கிற கவசங்களையெல்லாம் ஜாக்கிரதையாகவெடுத்துப்போட்டு லிங்கத்தையெடுத்துப் பத்திரமாய்வைத்துக்கொள்ளுக. இவ்விதமாய்ச்செய்தால் லிங்கம் கட்டுப்படும். இந்தமருந்து வேளைக்கு ०-பண எடையை க-வீூ தேனில்சேர்த்து ஒருவேளைக்கொடுத்து அதின்மேல் சுக்கு சித்தரத்தை, பரங்கிப்பட்டை, சங்கவேர், பிரப்பங்கிழங்கு வகைக்கு வீூ உ, இரண்டுசேர் தண்ணீர்விட்டு அஷ்டபாகமான கியாழத்தைச் செய்துகொண்டு குடிக்க சகலவாதரோகவியாதிகளும் சொஸ்தமாகும்.

அனுபானம்-எலியாமணக்குவேர் கொண்டுவந்து நறுக்கிக் காயவைத்து இடித்து வடிகட்டினபொடி சேர்-க, சர்க்கரை சேர் க, இந்த இரண்டையும் சேர்த்து இதில் வ ௨ பொடியோடு ஒரு பணவிடை ஷ மருந்தைச் சேர்த்து இரண்டுவேளை ௧-மண்டலம் உட்கொண்டால் சுவாசகாசம் சொஸ்தமாகும். ஹ-சேர் இஞ் சிரசத்தில் ஒருபணவிடை மருந்தைச்சேர்த்து உட்கொண்டால் சொஸ்தமாகும். சித்திரத்தையின்ரசம் ஹ-சேர் எடுத்து அதில் ஒருபணவிடை மருந்தைப்போட்டுக்கொடுத்தால் கபரோகம் சொஸ்தமாகும்.

## கற்பூரசிலாசத்துபஸ்பம்

131. கற்பூரசிலாசத்து பூ க, வெண்காரப்பொடி பூ க இந்தஇரண்டையும் கலுவத்திற்போட்டு ரு-சேர் வெள்ளைத்துத்திவேரோடு ௨௦-சேர் தண்ணீர்விட்டு அஷ்டபாகமாக கியாழம்செய்து கொண்டு நாலுஜாமம் அரைத்து வில்லையாகச்செய்து காயவைத்துப் பிறகு அந்தவில்லையை ஒருஓட்டில்வைத்து அதின்மேல் வேறொரு ஓட்டைமூடி மண்சீலைசெய்து பத்துவரட்டிவைத்து புடம்போடுக. பிறகு கோழிமுட்டை வெள்ளைக்கருசேர்த்து நாலுஜாமம் அரைத்து வில்லைசெய்து மேலே சொல்லியிருக்கிறவிதமாய்ப்புடம்போடுக. இவ்விதமாக ரு-தரம் புடம்போட மருந்துபஸ்பம் ஆகும்.

நாலாங்காய்ச்சுவெடியுப்பு பூ க௦, பூநீர் பூ க௦, இந்த இரண்டையும் சேர்த்து எலுமிச்சம்பழ ரசத்தில் நாலுஜாமம் மெல்லிதாய் அரைத்து இரும்புக்கரண்டியில் எடுத்து நெருப்பில் வைத்துச் செவ்வையாய்க்காய்ச்சினால் அது சுண்ணம்பாகும். அந்த சுண்ணம்பை ஒரு பீங்கானிற்போட்டுப் பனியில்வைத்தால் அது தண்ணீர் ஆகும். அந்தத் தண்ணீரை கலுவத்திற்போட்டு ஷ கற்பூரசிலாசித்து பஸ்பம் அதோடுபோட்டு நாலுஜாமம் அரைத்து வில்லைசெய்து மேலே சொல்லியிருக்கிறபடி புடம்போடுக. பிறகு அந்தபஸ்பத்தை ஒருகுப்பியில் போட்டுவைத்துக்கொள்ளுக. வேளைக்குபணவிடை ௨-சீனிச்சக்கரையோடு சேர்த்து இரண்டுவேளை கால்மண்டலம் உட்கொண்டால் மூத்திர அடைப்பு சொஸ்தமாகும். மூத்திரஸ்தானத்தில் கல் அடைத்துக்கொண்டிருந்தால் அதுவும் சொஸ்தமாகும். காளகண்டத்தோடு இந்த மருந்தைச் சேர்த்துக் கொடுத்தால் காளகண்டம் அதிககுணம்கொடுக்கும். காளகண்ட மருந்தின் அனுபானத்தோடு இந்தமருந்தைச்சேர்த்துக் கொடுத்திடுக. இந்தப்பிரயோகம் அகஸ்தியர் சிந்தூரம் ;முந்நூற்றிலிருக்கிறது.

## கருவங்க சுன்னம்

132. இரசம் வீ௩, காரீயம் வீ௩, முதலில் காரீயத்தை உருக்கிக்கொண்டு அதோடு ரசத்தைச் சேர்த்து இவைகளோடு பொரிச்சமுட்டைத்தோல் வீ௩, சேர்த்து (பொரிச்ச முட்டையென்றால் குஞ்சு பொரிக்கப்பட்டதற்குப்பிறகு மீறுகிற முட்டையின் தோல்) ௪-ஜாமம் அரைத்து மெலிதாகச் செய்துகொண்டு ஒருகுகையில் நிரப்பிக் குகைசெய்யப்பட்ட மண்ணினால் ஒருபில்லைசெய்து அந்தபில்லையினால் குகையைமூடி, அந்த மண்ணினால் மண்சீலைசெய்து கொல்லன்உலையில் கரிநெருப்புச் செய்துகொண்டு, அதில் இந்தக்குகையைவைத்து, குகை உருகுகிற காலம் வரைக்கும் அதில்வைத்திருந்து பிறகு அதையெடுத்து நன்றாய் ஆறினபிற்பாடு மறுபடியும் அந்த உலையில்வைத்து உருகுகிறதருணத்தில் வெளியே யெடுத்து ஆறவைத்திடுக. இவ்விதமாய் ௫-தரம்செய்து பிறகு ௩-நாள் ஆறவைத்து நாலாம்நாள் எடுத்துப்பார்த்தால், மருந்தெல்லாம் சுண்ணாம்பைப்போல் பஸ்பமாயிருக்கும்; அதையெடுத்து வைத்துக் கொண்டு ஒரு பணவிடையுள்ள மருந்தைத் தேனிற்கலந்து இரண்டு வேளை ௧௦-நாள் உட்கொண்டால் வயிற்றுவலி சொஸ்தமாகும். அதிமதுரம் வீ௧, தண்ணீர்விட்டு மெல்லிதாக அரைத்து உருண்டை செய்துகொண்டு முள்ளங்கிசாறு வ-சேர் எடுத்துக்கொண்டு அரைத்துவைத்திருக்கிற அதிமதூரமும் ஒருபணவிடையுள்ள மேல் சொல்லியிருக்கிற மருந்தையும் சேர்த்துட்கொள்க; இவ்விதமாய் இரண்டுவேளை ஒரு மண்டலம் உட்கொண்டால் ௨௧-வித மேகவியாதி சொஸ்தமாகும்.

## நிமிளைசெந்தூரம்.

133. வெண்கலநிமிளைசேர்-௧, கல்வத்திற் போட்டுக் குப்பைமேனிரசத்தைவிட்டு ௪௦-ஜாமம் அரைத்துச் சுண்டுகிற தருணத்தில் அதை ௫௦-வில்லைகளாகச் செய்துலர்ந்தபிறகு ஒரு ஓட்டில் வைத்து மேல் ஓடுமூடி மண்சீலைசெய்து ஒன்றரை ஜாண் உயரம் ஒரு கஜம்அகலம் பள்ளந்தோண்டி, பாதிவரைக்கும் காட்டுமுட்டையால் நிரப்பி, அதின்மேல் ஓட்டை வைத்துக் குழிமூடுகிற வரையில் காட்டுமுட்டையால் நிரப்பிப் புடம்போட்டு, தீ நன்றாகப்பற்றினபோது ஒருகூடை உமியை மேல்கொட்டி புடம் எரிந்து தானேயாறினபிறகு மருந்தை யெடுத்து மேற்சொன்னபடி குப்பைமேனி ரசத்தாலரைத்து மறுபடியும் புடம்போடுக. இவ்விதமாய் மூன்றுவிசைபுடம்போட்டால் செந்தூரம் நன்றாகும். அதைப்பொடிசெய்து சீசாவில் நிரப்பிக்கொண்டு, செந்தூரத்தில் ௨-பணவிடை வெண்ணெயிற்கலந்து இரண்டுவேளை யொருமண்டலம் உட்கொண்டால் மூலமுளை வளராமல் உள்ளே யடங்கி நிற்கும்.

அசுவகந்திரசாயனத்தோடு செந்தூரம் ௨-பணவிடைகலந்து இரண்டுவேளை ௨-மண்டலம் உட்கொண்டால் கயரோகம் நீங்கும்.

### மேகசஞ்சீவிமாத்திரை.

134. வ-சேர் இடையுள்ள ஜாதிலிங்கக் கட்டியும் வ-சேர் இடையுள்ளரசசெந்தூரகட்டியும், இரும்புபாணுவில் வைத்துநெல்லிக்காய் ரசத்தால் க௬-ஜாமம் சுருக்கு கொடுத்திடுக. பிறகு இவற்றைக் கல்வத்திலிட்டு ௨-சேர் நாமக்கட்டியும்சேர்த்து,நல்ல தண்ணீர்விட்டு ந௨-ஜாமம்அரைத்து க-வீ யளவு மாத்திரைகள் செய்து உலர்த்திக்கொண்டு, ஒருபணவிடை மாத்திரையைத் தேனிற்கலந்து ஒருவேளை யுட்கொண்டு, சுக்கு, சித்தரத்தை, சிறுதேக்கு, பற்பாடகம், சிறுகாஞ்சொரி, கோரைக்கிழங்கு, நன்னாரிவேர் சீந்திற்கொடி, தேவதாரம், கோஷ்டம் வகைக்கு க-வீயாக எடுத்து இரண்டுசேர் தண்ணீர்விட்டுக் கியாழம் அஷ்டபாகமாகச் செய்து குடித்திடுக. இவ்விதம் இரண்டுவேளை பத்துநாள் உட்கொண்டால் ௬௪-வகை சுரங்கள் சொஸ்தமாகும். தாணசுரத்துக்கு புளிதள்ளுக. சீரணசுரத்துக்கு இச்சாபத்தியம். எவ்வித சுரமும்,பத்துநாளில் சொஸ்தமாகும். அஸ்திசுரத்துக்கு அசுவகந்திரசாயனத்தோடு ௨-பணவிடை மருந்தைச்சேர்த்து ௨௦-நாள் உட்கொண்டால் சொஸ்தமாகும். கீழாநெல்லிவேரை க௨-வீ நன்றாயரைத்து அதனுடன் ஒருபணவிடை மாத்திரையைச் சேர்த்து இரண்டையும் மெலிதாயரைத்து, பாலிற்கலந்து இரண்டுவேளை ௨-மண்டலம் உட்கொண்டால் மேகசுரம் சொஸ்தமாகும்.

### இரசபஸ்பம்.

135. இலிங்கத்திலெடுத்தரசம் வீ௪, கல்வத்திலிட்டு சுவர்முள்ளங்கிச்சாறுவிட்டு ந௨-ஜாமம் அரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஒரு ஓட்டில்வைத்து மேலோடுமூடி மண்சீலை செய்து கோழிப்புடம்போடப் பஸ்பமாகும். இருமலுக்கு ௨-பணவிடை மருந்தை தேனிற்கலந்து இரண்டுவேளை பத்துநாள் உட்கொண்டால் இருமல்சொஸ்தமாகும். கயரோகத்துக்கு அசுவகந்தி ரசாயனத்தோடாவது, வில்வாதி லேக்கியத்தோடாவது, மஹாதாளிசசூரணத்தோடாவது ௨-பணவிடைமருந்தைச்சேர்த்து ஒருமண்டலம் இரண்டுவேளை உட்கொண்டால் கயரோகம் சொஸ்தமாகும்.

### தீபனத்துக்கு அப்ளாகாரபஸ்பம்.

136. அப்ளாகாரம் சேர்-ஜ, ஒருவரட்டியின்மேல் பரப்பிக் கெஜபுடம்போடப் பஸ்பமாகும். சாம்பல்சேருமல் அந்தப்பஸ்பத்தையெடுத்துப் பொடிசெய்து ஒருசீசாவில் நிரப்பிக்கொண்டு ஒரு

எலுமிச்சம்பழ ரசத்தில் இரண்டு பணவிடை பஸ்பத்தைக் கலந் துண்டால் தீபனமுண்டாம். பித்தவாய்வு சொஸ்தப்படும். இந்த மருந்தைப் பத்துநாள் உட்கொள்க. இச்சாபத்தியம்.

## இ ரா ம ரா ரா வு.

பட்டாயத்து கருவங்கபஸ்பம்.

137. சுத்திசெய்த காரீயம் சேர்-கூ, நாலுசேர் சங்கஇலைச் சாற்றில் உக-தரம் உருக்கி ஊற்றி, அதைஒரு கம்பியாகச்செய்து கத்தியினாற்செதுக்கி, அந்தப் பொடியைக் கல்வத்திலிட்டு, தாம ரையிலைச்சாறுவிட்டு மெலிதாக அரைத்துக் கல்வத்தோடு வெயி லில்வைக்க, மேலே வெண்மையாயும், உள்ளேகருமையாயுமிருக் கும்; அந்தப்பொடியை யெடுத்துப் புதிய மண்சட்டியில்வைத்து, அந்தரத்தாமரையிலை கொஞ்சம் அதோடுசேர்த்துவறுக்க, அந்த ஈயமெல்லாம் பொடியாகும். அந்தப்பொடியில் அதிக மெலிதான பொடியைமாத்திரம் கரு-வீ எடுத்துக்கொண்டு கோழிக்குஞ்சு பொரித்த முட்டையின் உட்புறத்தோலை நீக்கிமேலோடு கரு-வீ சேர்த்து கல்வத்திற்போட்டு மெலிதாயரைத்து அந்தப்பொடியை யொருகுகைபிற்போட்டு வாயை ஒட்டுப்பில்லையால் மூடி மண்சீலை செய்து நன்ரு யுலர்த்திக் கொல்லனுலையில் வைத்துத் துருத்தி கொண்டு மூன்று நாலுமூட்டம்போட்டு அந்தக்குகையுருகும் சம யத்தில் குகையையெடுத்து ஆறவைத்துக் கொள்க. பிறகு குகை யை யுடைத்துப்பார்த்தால் தும்பைமலர்போல் பஸ்பம் வெண்மை யாயிருக்கும். மேற்படி பஸ்பம் ஒரு பணவிடையை நெய்யிற்கல ந்து ஏழுவேளை யுண்டால் மூர்ச்சைவாய்வு, பித்த அபஸ்மாரம், பிரமபித்தம், பிரக்ஞைபங்கம்செய்யும் சகல குற்றமும் நீங்கும். அந்தவியாதி உ-மாதம் அல்லது ச மாதத்துக் கொருதரம் வருகி றதாயிருந்தாலும் ரு-நாள் இம்மருந்தையுட்கொண்டு, பிறகு கரு- நாள்பொறுத்து மறுபடியும் ரு-நாள் மருந்துட்கொள்க. இவ்வித மாக மருந்துண்டுவந்தால் வியாதி சொஸ்தமாகும். தேனிலூற வைத்த புதிய கொடிமுந்திரிப்பழம் சேர்-ூ, சீனிச் சருக்கரை சேர்-ஞ, நாட்டுப்பசுநெய்சேர்-க, இம்மூன்றையும்சேர்த்து எலு மிச்சம்பழம் அளவாக காலைமாலைகளில் உண்டுவந்தால் மேற்சொ ன்னவியாதிகள் சொஸ்தமாகும்.

## து ம ா ள ரா வு.

வெள்ளிப்பிரவாளாதி மாத்திரை.

138. வெள்ளிரேக்கு, பவளம், முத்து சங்கம், பன்றிப்பல், கடல்நுரை, மான்கொம்பு, தாம்பிர அரப்பொடி, இளநீரில் வேக

வைத்தெடுத்த ஆமணக்குநெய் வகைக்கு வ—க, பச்சைப்பாக்கு-கரு, சூரத்துக்கடுக்காய்-கரு, இவற்றைக்கல்வத்திலிட்டு, நந்தியாவட்டைப்பூவின்ரசமும், நற்பசலைக்கீரைச்சாறும் சமபாகம்விட்டு கூ0-நாழிகை அரைத்து மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்தியெடுத்துக்கொண்டு, பரிமிதமாய் நந்தியாவட்டை ரசத்தில்உரைத்து இரண்டுவேளை கண்ணிற்போட நேத்திரரோகம் சொஸ்தமாகும். பத்தியம்-ஸ்ரீபோகத்தை நீக்குக. நித்திரை வேளையில் மேற்சொல்லிய ஆமணக்கு நெய்யை உள்ளங்காலில் தேய்த்துக் கொள்க. மருந்துகண்ணிற் போட்டபிறகு நந்தியாவட்டைப்பூச்செண்டைக் கண்ணில் ஒத்திக்கொண்டிருக்க. இவ்விதமாக ஒருமண்டலம் செய்துவரின் நேத்திரரோகங்கள் சொஸ்தமாகும்.

### கபரோகத்துக்கு மருந்து.

139. தூதுவளை வேருடன் கொண்டுவந்து பாலில் வேகவைத்து நிழலிலுலர்த்தி இடித்து வடிகட்டியசூரணம்சேர்-க, ஜாதிக்காய், சீரகம், இஸ்கோல்விதை வகைக்குதோலா-உ, ஜாதிபத்திரி, குங்குமப்பூ வகைக்கு வ—க, சீனிச்சருக்கரைசேர்-ரு, சேர்த்துக் கலந்து வைத்துக்கொண்டு, நாள் ஒன்றுக்கு இரண்டுவேளை வெள்ளாட்டுப்பாலில் வெருகடிபிரமாணம் ஒருமண்டலம் உட்கொண்டால் கபரோகம்சொஸ்தமாகும்.பத்தியம்-ஸ்ரீசம்போகம்கூடாது.

### காந்திசமனலேகியம்.

140. முற்றின நெல்லிக்காய்படி-உ, தேன்சேர்-ச, சீரகம் சேர்-க, சீனிச்சர்க்கரைசேர்-ரு, இவற்றைப் பால்காய்ச்சிய பானையிற்போட்டு மேல்வாயை யோட்டால்மூடிச் சீலைமண்செய்து, சுத்தமான பூமியிற்புதைத்து சச-நாள் வைத்திருந்து பிறகு எடுத்து நாள்ஒன்றுக்கு இரண்டுவேளை ஒரு மண்டலம் உட்கொண்டால் பித்தச்சூடுதணியும். ஸ்ரீபோகங்கூடாது. ஆரோக்கியமுண்டு.

## சேதுபண்டிதர்

### இரத்திநதிமாத்திரை.

141. மாணிக்கம், முத்து, பவளம், கோமேதகம், நீலம், பச்சை,புஷ்பராகம் ,வைடூரியம், வயிரம், படிகாரம், யானைக்கடைப்பல், காட்டுப்பன்றிப்பல், பசுமாட்டின்பல், ஆட்டின்பல்,எருமையின்பல், மான்கொம்பு, ஆமைமுதுகோடு, பொற்பொடி, வெள்ளிப்பொடி, தாம்பிரப்பொடி, துத்திநாகம்,காந்தம், மனோசிலை, புங்கம்வித்து, சுக்கு,திப்பிலி,மிளகு,ஏலம், சங்கம், பலகறை, மடல்துத்தம், நீலாஞ்சனம்,இந்துப்பு, வகைக்கு வ—க, இவற்றில் முதலில்

இரத்தினங்களைக் கல்வத்திலிட்டு பன்னீர்விட்டு அரைத்து மீந்த சரக்குகளையும் சேர்த்து பன்னீர்விட்டு ௩-நாளும், எலுமிச்சம்பழ ரசத்தில் ௩-நாளும் அரைத்து, ஏழாம்நாள்மாத்திரை செய்து நிழ லிலுலர்த்திஎடுத்துக்கொள்க. அனுபானத்தோடு உரைத்துக்கண் ணிற்போட நீர்முட்டல், திமிரம், சுக்கிரன், காசம், அமரம் சொ ஸ்தமாகும்.

## தாம்பிராதி மாத்திரை.

142. தாம்பிர அரப்பொடி வீ ௧௨, சங்கு வீ ௬, சுக்கு வீ ௧, திப்பிலி வீ ௧௦, அதிமதுரம் வீ ௧௨, கடுகுரோகிணி வீ ௬, கோஷ்டம், துத்தம், இந்துப்பு வகைக்கு வீ ௫, இவற்றை எலு மிச்சம்பழரசத்தை விட்டரைத்து அந்த உருண்டையைச்செப்புப் பாத்திரத்தில் தடவிவைத்து மறுநாள் எடுத்து அரைத்து முன் போற்செய்து, இவ்விதமாய் ௨௧-நாள் செய்தபிறகு மாத்திரைக ளாகச்செய்துகொள்க. தன்வந்திரிபகவான் சொன்ன முறை. இத னல் கண்ணில்வளரும் துர்மாமிசம், நீர்முட்டல், காசம், சுக்கி ரன், அமரம், படலம், திமிரமுதலியவை சொஸ்தமாகும்.

## நேத்திரரோக மாத்திரை.

143. பீதரோகணி வீ ௧, துத்தம் வீ ௧, லோத்திரம், மர மஞ்சள், கொம்பரக்கு, காவிக்கல், மஞ்சட்காவி, இரத்தசந்தனம், சந்தனம், நீலாஞ்சனம், வசம்பு, வகைக்கு வீ ௨, சங்கு, சீனகா ரம், இந்துப்பு, தாம்பிரப்பொடி, அதிமதுரம், தாமரைவித்து, புங் கன்விதை வகைக்கு வீ ௩, வாலுளுவையரிசி, வாய்விளங்கம், மிளகு, திப்பிலி, சுக்கு, கடுக்காய்தோல், தான்றிக்காய், வகைக்கு வீ ௪, சேர்த்துப் புங்கஇலைச்சாறுவிட்டு ஒருநாள்அரைத்து மாத் திரை செய்துகொள்க. இதனல், காசம், கண்ணில்விழுந்தபூ, பட லம், சுக்கிரன், தழும்பு, கண்திமிரம், அமரம், நீர்முட்டல், எரிவு, கண்தெரியாமலிருத்தல், கண்ணில் மாமிசம் வளர்தல்முதலிய நே த்திரரோகங்கள் சொஸ்தமாகும், பத்தியம், ஸ்ரீபோகம்நீக்குதல்.

## நாரிகேளாஞ்சனம்.

144. மரமஞ்சள், கடுக்காய், தான்றிக்காய், அதிமதுரம் நெ ல்லிமுள்ளி, வகைக்கு பூ ௧, இடித்து ஒருபாத்திரத்திற்போட்டு, ௨-இளநீரையும் சேர்த்து, இரண்டுநாள்ஊறவைத்து, மூன்றுநாள் அடுப்பிலேற்றியெரித்து, நாலிலொருபாகம்கியாழம்செய்து அதை நன்றாகப்பிசைந்து கெட்டித்துணியில் வடிகட்டி, அடுப்பிலேற்றி உபாயமாயெரித்து, நாலிலொன்றாகக் காய்ச்சி இறக்கிக்கொண்டு அதனுடன் பச்சைக்கற்பூரம் பூ ௧, இந்துப்பு வீ ௧, பொடித்துக் கலந்தபிறகு தேன் பூ ௰, சேர்த்து, ஒருவாரம்வைத்திருந்துஒரு வெந்தயம் அளவுகண்ணிற் போட்டுக்கொண்டால் சகல நேத்திர ரோகங்களும் தீரும்.

## கனகதாம்பிராதி மாத்திரை.

145. பொற்பொடி வ௵ உ, வெள்ளிப்பொடி வ௵ ச, திப்பிலி, வ௵ சு, இந்துப்பு வ௵ அ மடல்துத்தம், வ௵ க0, கோஷ்டம் வ௵ கஉ, அதிமதுரம் வ௵ கச, தாம்பிரப்பொடி வ௵ கசு, இவற்றை வெள்ளாட்டுப்பாலைச்சேர்த்து சுo, நாழிகை அரைத்து நன்றாய்ச் சுத்திசெய்திருக்கிற செப்புப்பாத்திரத்தில் சுற்றிலும் தடவிவைத்து மறுநாள்காலையிலெடுத்து, சாயங்காலபரியந்தமரைத்துமேற் சொல்லியபடி பாத்திரத்தில் தடவிவைத்து, இவ்விதம் ௩-நாள் செய்து ச-ம்-நாள் முதல் ச-நாள்சுத்த சலத்தை விட்டரைத்து அ-ம்-நாள் மாத்திரையாகச்செய்துநிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க. இதனால் நீர்முட்டல், சுக்கிரன், அமரம், திமிரம், படலம், காசம், பில்லம், இவைகளெல்லாம் நீங்கும்.

## இரத்தினாதிமாத்திரை

146. மாணிக்கம்,பச்சைமுத்து, பவளம்,வைடூரியம், தங்கப்பொடி, வெள்ளிப்பொடி, தாம்பிரப்பொடி, காட்டுப் பன்றிப்பல், காளைமாட்டுப்பல், ஆட்டின்பல், யானைப்பல், குதிரைப்பல், ஒட்டைப்பல், மடல்துத்தம், சங்கு, கடனுரை, மனோசிலை வகைக்கு வ௵ க, மிளகு வ௵ உ, வெள்ளாட்டின்பால் விட்டரைத்து மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திக் காய்ந்தவுடன் சுத்த சலத்தை விட்டு மையைப்போல் அரைத்து வைத்துக்கொண்டு, முலைப்பாலிலாவது அல்லது பனைமட்டைச் சாறிலாவது உரைத்து வெந்தயப்பிரமாணம் கண்ணிற்போட்டுக்கொள்ள திமிரம், காசம், படலம், சுக்கிரன், ரணசுக்கிரன், ஊஷ்ணமாம்சம் வளர்தல், வில்லம் முதலிய நேத்திரரோகஞ் சொஸ்தமாகும்.

---

## பரங்கிப்பேட்டை அப்புவைத்தியர்

### சங்கத்திராவகம்.

147. கல்லுப்பு,வளையலுப்பு, இந்துப்பு, வெடியுப்பு,கந்தவெடியுப்பு,நவாச்சாரம், சத்திச்சாரம், எவச்சாரம்வகைக்குசேர்-ஞ வெண்காரம், துத்தம், கெந்தகம், சவுக்காரம், எள்ளுமியைச்சாம்பலாக்கிஅதைத்தண்ணீரில் கரைத்துத் தெளிந்தநீரைக் காய்ச்சிய உப்பு பூ௯ க, நாயுருவிச் சாம்பலில் ௩-விசை காய்ச்சி யெடுத்த உப்பு பூ௯ க, படிகாரம் சேர்-௧, செவப்பு நவாச்சாரம் சேர் - ௧, இவைகளைக் கல்வத்திலிட்டு, உப்புமண் உ - படி ஒரு பாத்திரத்திற்போட்டு ச-படி தண்ணீர்விட்டுக் கரைத்துத் தெளிந்த நீர்கொண்டு எ-நாள் அரைத்துக் காயவைத்து பொடிசெய்து ஒருபானை

யிற்போட்டு, பானைவாயில் வாலையென்கிற யந்திரத்தைவைத்து, மண்சிலைசெய்து, அடுப்பின்மேல்வைத்து சுவாலைபோட்டு பத்திரமாய்த் திராவகமிறக்கிக்கொண்டு இந்த திராவகத்தை சீசாவில் நிரப்பிக்கொள்க. இஞ்சிரசத்தில் வேளை ஒன்றுக்கு எ-துளி திராவகத்தைவிட்டு இரண்டுவேளை இருபதுநாள் உட்கொண்டால் அஷ்டகுன்மம், சூலை அனுகூலமாகும். குன்மம் கொடுமையானதாயிருந்தால் வேளையொன்றுக்குத் திராவகம் பத்துத்துளிகொடுக்கலாம். இதனால்வயிற்றிலிருக்கிற வியாதியெல்லாம் சொஸ்தமாகும்.

## வசந்தகுசுமாகரம்.

148. பொன் வி௱ ௲, வெள்ளி வி௱ ௲, வெள்ளீயம், காந்தம், ரசம், அப்ரகம், பவளம், முத்து வகைக்கு வி௱ ௪, கல்வத்திலிட்டு பசுவின்பால், கரும்புரசம், தாமரைப்பூரசம், சண்பகப்பூரசம், இவற்றால் ஒவ்வொருநாளும் அரைத்து, புழுகு வி௱ ௨, அதனுடன் சேர்த்து ஒருநாள் அரைத்து, மாத்திரைசெய்துகொள்க. தேன், சர்க்கரை, நெய், இம்மூன்றுடன் சேர்த்து மருந்தை இருபதுநாள் உட்கொள்ள, பாண்டுரோகம், கிராணி, சூலை, மூத்திரக்கிரிச்சரம், மூலரோகம், இருபதுவகைவிஷசன்னி மேகரோகங்கள், மார்வலி, க்ஷயம், காசம், முதலியவியாதிகள் சொஸ்தமாகும்.

## இலகுராஜமிருகாங்கம்.

149. இரசபஸ்பம் பூ௵ க, சொர்ணபஸ்பம் வி௱ க, சங்குபஸ்பம், கந்தகம், முத்து வகைக்கு வி௱ ௨, வெண்காரப்பொரி வி௱ வ, கொடிவேலிக் கியாழத்தைவிட்டு நாலுசாமம் அரைத்து உருண்டைசெய்துலர்த்திக் குகையிற்போட்டு, குகைவாயை யோட்டுப்பில்லைபால்மூடி, மண்சிலைசெய்து, ஒருபானையிற் பாதிவரைக்கும் உப்பைநிரப்பி, அதின்மேல் குகைவைத்து, மேலே உப்பைநிரப்பி, பானைவாயை ஒருசட்டியால் மூடி இடுக்குகளில்லாமல் மண்சிலை செய்து, அடுப்பிலேற்றி, கமலாக்கினிவிதமாய் ௪-ஜாமம் சுவாலையாலெரித்து ஆறினபிறகு குகையிலிருக்கிறமருந்தை யெடுத்துப் பொடிசெய்து வைத்துக்கொண்டு, மிளகு-௧௦, திப்பிலி-௨, பொடி செய்து, மருந்து ௪-குன்றிமணி இடை தேனிற்கலந்து இரண்டு வேளை ௧-மண்டலம் உட்கொண்டால், க்ஷயம், காசக்ஷயம் முதலியவியாதிகள் நீங்கும்.

## மஹாராஜமிருகாங்கம்.

150. இரசபஸ்பம் பூ௵ க, சொர்ணபஸ்பம் பூ௵ க, கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழரசத்தால் இரண்டுநாள் அரைத்து, அதில்முத்து-பூ௵ ௨, கெந்தகம் பூ௵ ௪, சீனகாரம் பூ௵ ௨, சேர்த்து ஷைபழரசத்தைவிட்டு ௪-சாமம் அரைத்து, பிறகு அதை யெடுத்து ஒரு

துணியில்கட்டி, டோளேந்திரமாக முடிச்சை ஒருபானையில் தொங்கவிட்டு அதின்மேலுங்கீழும் உப்பைப்போட்டு கமலாக்கினிப்பிரமாணம் சுவாலையாலெரித்து, ஆறினபிறகு மருந்தை யெடுத்துக்கொண்டு பொடிசெய்து வைத்துக்கொள்க வேளை ஒன்றுக்குக் குன்றிமணியிடையுள்ள மருந்தைத்தேனிற்கலந்து இரண்டுவேளை உ-மண்டலம் உட்கொண்டால், ராஜக்ஷயம்சொஸ்தமாகும். சரீரம் சுத்தியாகும். அசுவகெந்தி ரசாயனத்தோடும் இந்த மருந்தைச் சேர்த்துக் கொடுக்கலாம்.

## ஹைபதிசூரணம்.

151. நெல்விமுள்ளி, வாய்விளங்கம், ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, இந்த கூ-வகையையும் சமமாகச்சேர்த்துக்கொண்டு பொடிசெய்து பொடியில் நாலில் ஒருபாகம் சிவதை வேர்ப்பொடியும், மூன்றுபாகம் சர்க்கரையும் அந்தப்பொடியோடு சேர்த்து வைத்துக்கொள்ளுக. இந்த சூரணம் உ-பூ வெந்நீரிற்போட்டு சாப்பிட்டால் குன்மம், அக்கினிமந்தம், கிராணி, சுவாசகாசம், கிருமிகுட்டம், வாய்வு, பித்தம், கபரோகம், சுக்கிலரோகம், ருத்திரரோகம் நீங்கும்.

## ஆக்கிராணவிரேசனம்.

152. இரசம், கெந்தகம், நேர்வாளம், காட்டாமணக்குவிதை, வெண்காரம், ஆமணக்குவிதை, தேவதாளிவிதை, சரக்கொன்றைப்புளி, கடுக்காய், சிவதைவேர், புரசம்விதை, இவைசமமாகச்சேர்த்து வெள்ளாட்டுப்பாலைவிட்டு மூன்றுநாள் அரைத்து, ஒரு முதிர்ந்த தேங்காய் நீரையூற்றிவிட்டு, அந்தத்தேங்காயில் மருந்தைநிரப்பி வெயிலில்வைத்தால் தைலமுண்டாகும். அந்தத் தைலத்தை ஒருபீங்கானில் வைத்துக்கொள்ளுக. அரைக்குன்றிமணி இடைத் தைலத்தை ஒரு புட்பத்தில்தடவி ஆக்கிராணித்தால் கூ-தரம் விரேசனமாகும். இந்தத் தைலத்தை நாபியில் மூன்றுவிசை தடவினல் வ-நாழிகைக்குள் பத்துவிசை விரேசனமாகும். இதற்கு மாற்று தண்ணீர்குடித்தால் பேதிநிற்கும். சூலை, குன்மம், மகோதரம், கவிசை அனுகூலமாகும்.

## சுகவிரேசனத்துக்கு மருந்து.

153. சுக்கு, மிளகு, திப்பிலி, கொடிவேலி, சீரகம், கடுக்காய், தான்றிக்காய், நெல்விமுள்ளி, சமமாகச் சேர்த்துப் பொடிசெய்து, பொடிக்குச்சமமாக வெல்லத்தை முதலிற் பாகுசெய்து, அதில்மேலே சொல்லியிருக்கிற பொடியைச்சேர்த்து, நெய்யைவிட்டுக்கிண்டி எடுத்து வைத்துக்கொண்டு உட்கொண்டால் சுகவிரேசனமாகும். மூலம், குன்மம், சூலை நீங்கும். பித்தத்தைத் தீர்த்து தீபனத்தையுண்டாக்கும்.

### இராஜயோக்கியமான நாபிவிரேசனம்.

154. வெள்ளைக்குன்றிமணி, நேர்வளம், வெள்ளைக் காக்கணம் சமூலம், இவைகளில் வெள்ளைக் காக்கணஞ்சாற்றால் மற்ற இரண்டு தினுசுகளை யரைத்து நாபியில் தடவினால் சுகவிரேசனமாகும். வயிற்றிலுள்ள வியாதிகள் நீங்கும்.

### மூலகுடாரம்.

155. மிளகு பூ க, திப்பிலி, பூ உ, சுக்கு பூ ங, கொடிவேலி பூ ச, காட்டுக்கருணைக்கிழங்கு பூ கரு, இவற்றைச் சூரணஞ்செய்து, அதனுடன் சர்க்கரைசேர்த்து உட்கொண்டால் இருபதுவகை மேகம் சொஸ்தமாகும்.

### மகாசுராங்குசம்.

156. இரசம், கெந்தகம், நாபி, இவைசமாம்சம், ஊமத்தைவிதை அதற்குச்சமாம்சம், சுக்கு, மிளகு, திப்பிலி, அவைகளுக்கு இரட்டிப்பு இவற்றைகல்வத்திலிட்டு எலுமிச்சம்பழரசத்தைவிட்டு மூன்றுஜாமம் அரைத்து, பிறகு குன்றிமணி அளவுமாத்திரைகள் செய்துக்கொண்டு அனுபானத்தோடு கொடுத்தால்தினசுரமும், இருமுறை, மும்முறை, நாலாமுறைக் காய்ச்சலும் சொஸ்தமாகும்.

### சூலைகுடாரம்.

157, இரசம், வெண்காரம், கெந்தகம், கடுக்காய், தான்றிக்காய், நெல்விமுள்ளி, சுக்கு, மிளகு, திப்பிலி, அரிதாரம், நாபி, தாம்ரபஸ்பம், நேர்வாளம், இவற்றைச் சமாம்சமாகச்சேர்த்து, கையாந்தகரைச் சாறுவிட்டு அரைத்து, குன்றிமணி இடைமாத்திரை செய்துக்கொண்டு, மிளகு கியாழத்தி லுட்கொண்டால் சூலைகள் சொஸ்தமாகும். இம்மருந்து விஷ்ணுசக்கரம் அசுரர்களைக் கொல்லுவதுபோல குன்மங்களைத்தீர்க்கும்.

### வாயு பித்த சிலேத்ம அமிருதரசம்.

158. சுக்கு, பூ உ, இந்துப்பு பூ உ, இந்தஇரண்டையும் சேர்த்துச் சூரணமாகச்செய்து அதில் இரண்டு வீ சூரணத்தை எலுமிச்சம்பழரசத்தில் உட்கொண்டால் வாந்தி, விக்கல், சிலேத்மம், ஆரோசிகம், வாய்வு, பித்தம் இவைகள் சொஸ்தமாகும், தீபனமுண்டாகும்.

### குன்மகுடாரம்.

159. பெருங்காயம் பூ ங, கல்லுப்பு வீ சு, சிற்றாமணக்குநெய் பூ கஉ, வெள்ளைப்பூண்டு பூ கரு, இவைகளைச் சேர்த்தரைத்து, கழற்சிக்காய் அளவு உண்டைசெய்து உட்கொண்டால் அஷ்டகுன்மம், சூலை, உதடுவெடிப்பு சொஸ்தமாகும்.

### மணிமதாதிசமரோகரசம்.

160. இந்துப்பு பூ சு, முன்னைவேர் பூ உ, சீரகம் பூ ௩ ஓமம் பூ ச, சுக்கு பூ ரு, திப்பிலி பூ சு, இவ்வகையெல்லாம் சேர்த்து, சமமாகக் கடுக்காயுங்கூட்டி, சூரணம்செய்து மூன்று விரல் கொள்ளும்படியான சூரணத்தை வெந்நீரிற்போட்டு உட்கொண்டால் விரேசனமாகும். தீபனமுண்டாகும். வாய்வு, மூல ரோகம், குன்மம், மலபந்தம், தீரும். தேகாரோக்கியமுண்டு.

### ஜனார்த்தனரசம்.

161. இலுப்பைப்பூ பூ க, கடுகுரோகணி பூ உ, சுத்தி செய்த நேர்வாளம் பூ ௩, இவைகளைச்சேர்த்து தண்ணீர் விட்டரைத்து, உளுந்தளவுமாத்திரை செய்து நிழலிலுலர்த்தி, சர்க்கரையோடு உட்கொண்டால், பித்தசுரம் தீரும். சுக்குகியாழத்தில் உட்கொண்டால், வாதசுரம் தீரும். திப்பிலிப்பொடி, தேன் இரண்டையும் சேர்த்து உட்கொண்டால் சிலேத்துமசுரம் அனுகூலமாகும்.

### பிரதாபமார்த்தாண்டரசம்.

162. பச்சைநாபி பூ க, வெண்காரம் பூ உ, நேர்வாளம் பூ ௩, சாதிலிங்கம் பூ ச, இவையெல்லாம் சேர்த்து எலுமிச்சம்பழரசத்தால் ச-ஜாமம் அரைத்து, மிளகு அளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி அனுபானசகிதமாய்க் கொடுத்தால் சகல சுரங்களையும் தீர்க்கும்.

### இரத்தபித்தத்துக்குமருந்து.

163. வெண்ணெய், சர்க்கரை, நெற்பொரி, கொடிமுந்திரிப்பழம், தேன், கோரைக்கிழங்கு, இவற்றைச் சமமாகச் சேர்த்துப் பொடிசெய்து, அந்தப்பொடியை நெய்யிற் கலந்துண்டால் இரக்த பித்தம் தீரும்.

### சந்தான சித்தி.

164. தாமரைக்கிழங்கு, கார்கோலி, வெள்ளெருக்குவேர், வெள்ளைக் காக்கணவேர், வெள்ளைக்குன்றிமணிவேர் வகைக்கு க-வீ பால் விட்டரைத்து, பாலிற்கலந்து ருதுவாய் ஸ்நானஞ் செய்கிற ௩-வதுநாள் தொடங்கி ௩-நாள் உட்கொளின் கெர்ப்ப முண்டாகும்.

அரசின்வேர், அரசமரத்திலிருக்கிற புல்லுருவி, வகைக்கு உ-வீ பாலில் அரைத்து, பாலிற்கலந்து ருதுவான மூன்றுநாள் தொடங்கி யுட்கொண்டால் கெர்ப்போற்பத்தியுண்டாம்.

வாகைமரத்தின்பூவைப் பிட்டுசெய்து பிசைந்தெடுத்துக் கொண்ட ரசத்துக்குச்சரியாகப் பசுவின்பால், நெய்சேர்த்து ருதுவான மூன்றுநாள்முதல் ரு-நாள் உட்கொண்டுவரக்கருத்தரிக்கும்.

சீதாசெங்கழுநீர் முழுவதும் பிட்டுவைத்து, ரசத்தை யெடுத்து அதற்குச்சமமாகப்பாலும் சேர்த்து ருதுவாகி ஸ்நானம் செய்கிறநாள்முதல் ரு-நாள்உட்கொண்டால் கெர்ப்பந்தரிக்கும். (சீதா செங்கழுநீர் என்றால் நெய்ச்சட்டியென்று சொல்கிறார்கள்.)

அதிமதூரம், கொடி முந்திரிப்பழம், இவ்விரண்டையும் சமமாகச்சேர்த்துக்கொண்டு பாலோடாவது, கஞ்சாஇலையோடாவது, ஸ்ரீகள் ருதுகாலமுதல் ரு-நாள் உட்கொண்டால் கருதரிக்கும்.

ருதுவாக மருந்து.

165. நாய்வேளைவேர் பூ க, வெந்நீரைவிட்டு அரைத்து வெந்நீரிற் குழப்பி ரு-நாள் உட்கொண்டால் பெண்கள் பக்குவமடைவார்கள்.

அழிஞ்சில்வேர் பூ க, பால்விட்டரைத்து ரு-நாள் உட்கொண்டால் பெண்கள் பருவமடைவார்கள்.

முள்ளிலவம்பட்டை ரசத்துடன் ஹு-சேர் பாலும் பஅ-சேர் தேனும் சேர்த்து உட்கொண்டால் ருதுமீரிடும்.

இலவங்கப்பட்டையைத் தண்ணீர்விட்டு நறுக்கியெடுத்த வ-சேர் ரசத்தில் ஹு - சேர் பாலும் பஅ - சேர் தேனும் சேர்த்து உட்கொள்ள பெண்டுகள் பருவமடைவார்கள்.

மகிழம்விதை பூ க, கால்படி மோரை விட்டரைத்து, காலையில் ரு-நாள் உட்கொண்டால் பெண்கள் ருதுவாவார்கள்.

அஸ்திசுரத்துக்கு மருந்து.

166. கருங்காலி, புரசயிலை, கொன்றையிலை, ஆவாரையிலை, மருதயிலை, தும்பையிலை, கடம்புவிதை, விளாவிலை, நெல்லிக்காய், அதிமதூரம், இவைசமமாகச்சேர்த்துக்கொண்டு, நல்லெண்ணெய் படி-க, அதோடு சேர்த்துப் பக்குவமாய்க் காய்ச்சிக்கொண்டு வேளைக்கு ஒருகாசிடை உ-வேளை இருபதுநாளுட்கொண்டால்,எலும்புருக்கியென்கிற வியாதி சொஸ்தமாகும்.

வாந்திக்குக்கொடுக்கும் மருந்து.

167. மருக்காரை, இலுப்பைப்பூ, பேய்ச்சுரைவிதை, வேப்பம்விதை, கோவைத்தண்டுரசம், பேய்க்கொம்மட்டிக்காய் ரசம், வெட்பாலைப்பட்டை, தேவதாரி, விழலரிசி, நிலவறஞ்சி, கொடிவேலியிலைச்சாறு, ஆமணக்குவேர், பேய்ப்பீர்க்கு விதை, புங்கம் விதை, திப்பிலி, உப்பு, வசம்பு, ஏலக்காய்த்தோல், கடுகு, இவையெல்லாம் வாந்தித்திரவியம் என்று அறிக. இவைகளில் சரீரத்துக்குத் தகுந்தபடி வ-ஹுமுதல் ௨-வீ வரைக்கும் தண்ணீரிலரைத்து ஷை தண்ணீரில் காலையில் ஒருவேளை உட்கொண்டால் வாந்தியாகும். நெஞ்சிலிருக்கும் கபம் யாவும் ஒழியும். மேற்கண்ட மருந்துகள் வாந்தித்திரவியமென்றறிந்து பிரயோகத்துக்குத் தகுந்தபடி சத்துரு மித்துரு பாகத்தை யறிந்து சேர்த்துக் கொடுக்க

லாமேதவிர வாந்தியிருக்கிறவர்களுக்கு சத்துரு மித்துருவில்லாத பிரயோகத்தோடு சேர்த்துக் கொடுக்கலாகாது. மேற்கண்ட மருந்து எந்தப்பிரயோகத்திலாவது சேர்த்துக்கொடுக்க வேண்டியதாயிருந்தாலும் சரீரத்துக்குத் தாங்கும்படியானதை யறிந்து அதிகமாய்ச் சேர்த்துக்கொள்ள வேண்டியதாயிருந்தாலும் அதைத்தள்ளிக் கொஞ்சத்திலேயே ச-ல் க-பாகத்தைச் சேர்த்துக் கொள்ளவும்.

## விரேசனத்திரவியம்.

168. நாகந்தி, நேர்வாளம், சிவதைவேர், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, காக்கணவேர், காக்கணவிதை, சதுரகள்ளிப்பால், வட்டக்கிலுகிலுப்பை, அவுரி, இல்லம்பால், எருக்கம்பால், கொன்றை, கம்பிளிக்கொண்டான் வேர், பேய்பீர்க்கு, பால், மூத்திரம், இவையெல்லாம் விரேசனத் திரவியங்களென்றறிக.

## விபக்த்திச் சூரணம்.

169. நெல்லிமுள்ளி, வாய்விளங்கம், ஏலம், கிராம்பு, சிறுநாகப்பூ, கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு பூ௱ க, சிவதைவேர் சூரணம் பூ௱ கல; சேர்த்து அதற்குச் சமபாகமாகச் சருக்கரையுஞ்சேர்த்து, வெருகடிப்பிரமாணந் தண்ணீரி லுட்கொண்டால் விரேசனமாகும். மந்தாக்கினி, சூலை, பவித்திரம், மேகம், சதிவாய்வினல் கணுக்களெல்லாம் வலிக்கும் வியாதிகள், மகோதரம், மார்புவலி, பாண்டு, இவைகள் நீங்கும்.

## அக்கினிகுமாரன்.

170. இரசம், கந்தகம், பச்சைநாபி, சங்குச்சுண்ணம்பு, இவையெல்லாஞ் சமமாகச் சேர்த்து அதற்குச் சரியிடை தாம்பிர பஸ்பம், வெண்காரம் அரைப்பங்கு, மிளகு எட்டுப்பங்கு, இவைகளைவறுத்து எலுமிச்சம்பழரசத்தினல் எட்டுசாமம் அரைத்துக் குன்றிமணியளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு மாமிசபதார்த்தம், வயிறுநிரம்பச் சாப்பிட்டு அதன்மேலே ஒருமாத்திரை உட்கொண்டால், சீரணத்துக்கு வரும். வாதரோகம், விசூஷி, அசீரணம், இவையெல்லாம் அனுகூலமாகும்.

## தாம்பிரசுத்தி.

171. அப்ரகம், ரசம், சீனுகாரம், குன்றிமணிபருப்பு, காதுகுரும்பி இவை வகை-க-க்கு வ௱ ௨, எருக்கம்பாலில் அரைத்துத் தாம்பிரத்தகட்டுக்குத்தடவி கல-வாட்டியில் புடம்வைக்கத் தாம்பிரஞ் சுத்தியாகும்.

## பஞ்சாமிர்தரசம்.

172. இரசசெந்தூரம், அப்ரகசெந்தூரம், காந்தசெந்தூரம், அரிதாரபஸ்பம், வங்கச்செந்தூரம், இவைகளெல்லாஞ் சமமாகச்

சேர்த்துத் திரிபலே கியாழத்திலரைத்து மிளகளவு மாத்திரைசெ ய்து நிழலிலுலர்த்தி அனுபானசகிதமாய் உட்கொண்டால் சகல ரோகமும் அனுகூலமாகும்.

மகாகுமரிரசம்.

173. இரசம் பூ க, நாபி பூ உ, காந்தம் பூ ரு, கெந்தகம் பூ அ, இரும்பு அரப்பொடி பூ கo, இவைகளேக்கல்வத்திலிட்டுக் கற்ருழை ரசத்தால் ங-நாளரைத்து வெண்கலப் பாத்திரத்தில் தட்டி வெயிலில்காய்ந்தபிறகு பொடிசெய்து டப்பியில் வைத்துக் கொண்டு ஒருபணவிடை மருந்தைத் தேனிற்கலந்து உட்கொண் டால் அஷ்டகுன்மம், மகோதரம், பீலிகை, சோகை, பாண்டு ரோகம், சூலே, இவை அனுகூலமாகும்,

முங்நீர்வாதக்கியாழம்.

174. சாரணேவேர், மரமஞ்சள், கடுக்காய், சீந்தில், சுக்குவ கைக்கு பூ டு. கோமூத்திரம் படி கரு-இவையெல்லாஞ் சேர்த்து க்கொஞ்சமிருக்கும்படியாய்க் கியாழம் செய்துகொண்டு குக்கிலம் வறுத்துப்பொடிசெய்து ங-பணவெடையெடுத்து ஷ கியாழத் தில் பஅ-சேரிற் சேர்த்துக் கொடுத்தால் வீக்கம், பாண்டு, உதரா வர்த்தம் சொஸ்தமாகும்.

கர்ப்பிணியின் சுரத்துக்குச் சிகிச்சை.

175. நன்னரிவேர், பெருநன்னரிவேர், கோரைக்கிழங்கு, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், சுக்கு, அதிமதூரம், சிற்ருமுட்டி வேர், பேராமுட்டிவேர், சீந்தில், தேவதாரி, சந்தனம், நிலப்பன ங்கிழங்கு இவையெல்லாஞ் சமமாகச்சேர்த்துக் கியாழம் வைத்து க்கொண்டு கொஞ்சங் தேன்சேர்த்துக் கர்ப்பிணிக்குக்கொடுத்தால் எவ்விதமான சுரமிருந்தாலுஞ் சொஸ்தமாகும்.

காரீயம் வெள்ளீயம் இவைகளின் சுத்தி.

176. நல்லெண்ணெய், கோமூத்திரம், புளித்தண்ணீர், புளி ப்புமோர், கொள்வெந்தசலம், எருக்கம்பால், வெள்ளாட்டுப்பால் இவைகள் ஒவ்வொன்றிலுந் தனித்தனி எ-தரம் காரீயத்தையும், வெள்ளீயத்தையும் தனித்தனி உருக்கி யூற்றிஞல் சுத்தியாகும்.

காரீய பஸ்பம்.

177. ஆடாதோடை ரசத்தையுங் காரீயத்தையும் ஒரு சட்டி யிற்போட்டு ஆடாதோடையின் கொம்பினுற்கிண்டிக்கிண்டி ச-சா மம் வறுத்தால் பஸ்பமாகும்.

காரீயசெங்தூரம்.

178. மேற்கண்ட காரீயபஸ்பத்தைக் கல்வத்திலிட்டு ஆடா தோடைச் சாறுவிட்டு ங-ஜாமம் அரைத்துப்பில்லேகள்செய்து கா

யவைத்து இருபதுவரட்டிகளிற்பத்துப்புடம்போட்டு ஓமக்கியாழத்தினற் பத்துபுடமும், கொட்டைக்கரந்தைச் சாற்றினல் பத்துபுடமும், வெற்றிலேச் சாற்றினல் பத்துதரங் கெஜப்புடம் போட்டாற் செந்தூரமாகும்.

### சோர்ண சுத்தி.

179. தங்கத்தகட்டுக்குச் செம்மண்ணினல் லேபங்கொடுத்து நெருப்பைப்போற் காய்ச்சினல் சுத்தியாகும்.

### சோர்ணபஸ்பம்.

180. மேற்கண்டபடி சுத்திசெய்த தங்கத்தகட்டை மெலிதாகத்தட்டி பூசு, எடுத்துக்கொண்டு நிமிளை பூவ, எலுமிச்சம் பழரசத்திலரைத்து அதினல் தகட்டுக்கு லேபங்கொடுத்து அந்தத்தகட்டை ஒருஓட்டில் வைத்துச் சீலேமண்செய்து கெஜபுடம் போடப் பஸ்பமாகும். மேற்கண்டபடி சுத்திசெய்த தங்கத்தை மெலியதகடாக அடித்து அந்தத் தகட்டுக்குச் சமபாக கெந்தகத்தைக் கரும்புரசம்விட்டு அரைத்து, அதைத் தகட்டுக்குப் பூசிக் காயவைத்து இவ்விதமாய் எ-தரம் செய்குக. பிறகு ஓட்டில்வைத்துச் சீலேமண்செய்து கெஜபுடம்போடுக. ஆறினபின் எடுத்துப்பார்க்கப் பஸ்பமாகும். இதில்ஒருபணவிடை அனுபானத்தோடு உட்கொண்டால்இராஜக்ஷயம் முதல் சகல க்ஷயரோகங்களும் இருமலும் சொஸ்தமாகும்.

### சோர்ணசெந்தூரம்.

181. மேற்சொல்லிய சொர்ணபஸ்பத்துக்குச் சமமான ஜாதிலிங்கஞ்சேர்த்து எருக்கம்பாலேவிட்டு ச-ஜாமம் அரைத்து பிறகு அரசம்பட்டைச் சாற்றைவிட்டு ச-நாளும், பூனேக்காலி வேர்க்கியாழத்தைவிட்டு ச-நாளும், செருப்படைச் சாற்றைவிட்டு ௬-நாளும் அரைத்துப்பில்லேகளாகச்செய்துகாயவைத்து,ஓட்டில்வைத்துச் சீலேமண்செய்து, காட்டுமுட்டையைக் கொண்டு ௫-தரம் புடம்போடச் செந்தூரமாகும். இதைஒருபணவிடை அனுபானத்தோடு உட்கொண்டால் சகல வியாதிகளும் நிவர்த்தியாகும்.

### தாம்பிரசுத்தி.

182. தாம்பிரத்தை ஈசலிறகுபோல் மெலிதானதகடாகஅடித்து நெருப்பைப்போற் காய்ச்சி, கொள் வெந்தநீரில் நனேத்திடுக. இவ்விதம் எ-தரஞ்செய்து பிறகு புளியிலேசாற்றிலும், புளித்த மோரிலும், பொன்னுங்காணிச்சாற்றிலும், கற்றாழைச்சாற்றிலும், இவை ஒவ்வொன்றிலும் அதைத்தனிதனிகாய்ச்சி எ-தரந் தோய்த்தால் சுத்தியாகும்.

### தாம்பிரபஸ்பம்.

183. மேற்சொல்லிய விதமாய்ச் சுத்திசெய்த தாம்பிரத்தகட்டுக்குச் சமமாகக் கெந்தகத்தை எருக்கம்பால்விட்டரைத்து தக

ட்டுக்கு லேபங்கொடுத்துக் காயவைத்துக் குகையிற் போட்டுக் குகையின்வாயை ஓட்டினால்மூடிச் சீலைமண்செய்து காயவைத்துக் கெஜபுடம் போட்டால் பஸ்பமாகும்.

### தாம்பிரசெந்தூரம்.

184. மேற்சொன்ன தாம்பிரபஸ்பத்தோடு திரிபலாதி கியாழத்தைச்சேர்த்து அரைத்து, பில்லைகள் செய்து காயவைத்துப் புடம்போடுக. இவ்விதம் எ-தரஞ்செய்குக. எருக்கம்பாலினால் எ-புடமும், செருப்படைச் சாற்றினால் எ-புடமும், ஆலம்பாலினால் எ-புடமும், விரற்சுண்டிக்கியாழத்தினால் எ-புடமும், அரசம்பட்டைச்சாற்றினால் எ-புடமும், கல்விச்சிப் பட்டைச்சாற்றினால் எ-புடமும்போடச் செந்தூரமாகும். ஒருபணவிடைசெந்தூரம் அனுபானத்தோடு உட்கொண்டால் வாந்தி, விக்கல், தாகம், மூர்ச்சை முதலிய வியாதிகள் நிவர்த்தியாகும்.

### வெள்ளீயபஸ்பம்.

185. வெள்ளீயம் பூ உ, மெல்லியதகடாக அடித்து, தாளகம் பூ க, புரசம்பட்டைச்சாறுவிட்டரைத்துத் தகட்டுக்குத் தடவிக்குகையிற்போட்டுக் குகையின்வாயை ஓட்டினால்மூடி சீலைமண் செய்து உலர்த்திக் கெஜபுடம்போடப் பஸ்பமாகும்.

### வெள்ளீயசெந்தூரம்.

186. மேற்சொன்ன பஸ்பத்தை யிதற்குமுன் கஎஅ-ல் சொல்லியிருக்கிற காரீயசெந்தூரஞ் செய்வதுபோல் செய்யச்செந்தூரமாகும்.

### வெள்ளீயபஸ்பம்.

187. வெள்ளீயத்தை ஒருசட்டியிற்போட்டு நாயுருவிவேரைச்சுட்டு அதின்சாம்பலைச் சட்டியில் கொஞ்சங்கொஞ்சமாய் ச-சாமம்போட்டு வறுத்தால் பஸ்பமாகும்.

### வெள்ளீயசெந்தூரம்.

188. மேற்சொன்ன பஸ்பத்தை எலுமிச்சம்பழ ரசம்விட்டு உ-சாமம் அரைத்துப் பில்லைசெய்து காயவைத்துக் கெஜபுடம் போடுக. இவ்விதம் ந-தரஞ்செய்யிற் செந்தூரமாகும்.

### வெள்ளி சுத்தி.

189. வெள்ளியை மெல்லிய தகடாயடித்துச் சிவக்கக்காய்ச்சிப் பழுபாகற்கிழங்குரசத்தில் தோய்க்கிறது. இவ்விதம் எ-தரஞ் செய்யச் சுத்தியாகும்.

### வெள்ளிபஸ்பம்.

190. சுத்திசெய்த வெள்ளியை ஈசலிறகுபோல் தகடடித்துக்காகநிமிளையை முலைப்பாலிலரைத்து எ-தரம் தகட்டுக்குப்பூசி

நிழலிலுலர்த்தி ஓட்டில்வைத்துச்சீலைமண்செய்து கெஜபுடம்போட்டால் பஸ்பமாகும். ஒருபணவிடை பஸ்பத்தை யெந்த வியாதிக்கும் கொடுக்கலாம். முன் சொல்லியிருக்கிற சொர்ணபஸ்பத்தைப் போல் வெள்ளிப்புடம்வைத்தால் பஸ்பமாகும்.

### வெள்ளிசெந்தூரம்.

191. மேற்சொன்ன வெள்ளிபஸ்பமும் அதற்குச் சமமாகச் சாதிலிங்கமுஞ் சேர்த்துக் கருவேலம்பட்டைக் கியாழத்தைவிட்டு ஒருநாளும், எருக்கம்பாலைவிட்டு ஒருநாளும், செருப்படைச்சாறு விட்டு ஒருநாளும், ஆலம்பாலைவிட்டுஒருநாளும், வெள்வேலம்பட்டைக் கியாழத்தைவிட்டு ஒருநாளும், கருப்பஞ்சாறுவிட்டு ஒருநாளும், அரைத்துக்காயவைத்து ஒவ்வொரு ரசத்திலும் அரைத்து ஓட்டில்வைத்துச் சீலைமண்செய்து கெஜப்புடம்போடுக இவ்விதமாயொவ்வொரு ரசத்தைவிட்டு எ-புடம்போட்டால் செந்தூரமாகும். ஒருபணவிடைச்செந்தூரத்தை அனுபானத்தோடு உட்கொண்டால் க்ஷயம்முதலான சகலவியாதிகளும் சொஸ்தமாகும்.

### வெண்கல சுத்தி.

192. வெண்கலத்தையுருக்கி ௩-தரம்புளி இலைச்சாற்றில் ஊற்றி, கொள்ளுவேவித்தநீரில் ௩-தரம்ஊற்றினால் சுத்தியாகும்.

### வெண்கலப்பஸ்பம்.

193. மேற்சொன்ன சுத்திசெய்த வெண்கல அரப்பொடியோடு அதற்குச்சமானமாகக்கெந்தகத்தையுஞ்சேர்த்து எருக்கம்பாலைவிட்டரைத்து வெயிலில் வைத்திடுக. இவ்விதமாய் எ-தரஞ் செய்து பிறகு வச்சிரகுகையிற்போட்டுக் குகையின் வாயைமூடிச் சீலைமண்செய்து எ-தரம் கெஜப்புடம் போட்டால் பஸ்பமாகும். இதினால் வயிற்றுவலி, மார்புவலி சொஸ்தமாகும்.

### வெண்கலச்செந்தூரம்.

194. மேற்கண்ட வெண்கலப்பஸ்பத்தையும் அதில்பாதி ஜாதிலிங்கத்தையும் அதிற்பாதி கெந்தகத்தையும் கெந்தகத்திற்பாதி ரசத்தையும் ஒன்றாய்ச்சேர்த்துக் கல்வத்திற் போட்டு ஆலம்பால், செருப்படை வேரின்சாறு, அரசம்பட்டைச்சாறு, கருவேலம்பட்டைக் கியாழம், புரசம்பட்டைக்கியாழம், பூனைக்காலிவேரின்கியாழம், எலுமிச்சம்பழரசம் இவை ஒவ்வொன்றிலும் ஒருநாளரைத்து, ஒவ்வொரு ரசத்திலரைத்தவுடன் கெஜப்புடம்போடுக; இவ்விதமாய் எ-தரம் புடம்போட்டால் செந்தூரமாகும். அப்படி ஆகாவிட்டால் மருந்தை ஒரு குகையிற்போட்டுக் கொல்லன் உலையில் வைத்தூதினால் சூரியோதயத்தைப்போற்செந்தூரமாகும். இது சகலவியாதிகளையுந் தீர்க்கும்,

## காந்தசுத்தி.

195, காந்தப்பொடியை எலுமிச்சம்பழரசம், புளித்தமோர் இவை ஒவ்வொன்றிலும் ஒருநாள்ஊறவைத்து மறுபடி காயவைத்தால் சுத்தியாகும்.

## காந்தபஸ்பம்.

196. சுத்திசெய்த காந்தமும் அதில் நாலிலொருபாகம் கந்தகமும் சேர்த்து எருக்கம்பால், சிறுபூளைவேர்க்கியாழம், புரசம்பட்டைக்கியாழம் இவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொருநாளரைத்துக் காயவைத்து ஒட்டில்வைத்துச் சீலைமண்செய்து கெஜப்புடம்போட பஸ்பமாகும்.

## காந்தசெந்தூரம்.

197. மேற்கண்ட காந்தபஸ்பமும் அதற்கு அரைப்பங்கான சாதிலிங்கத்தையும் சேர்த்து ஆகாசத் தாமரையின் கியாழத்திலாவது, விரற்சுண்டிவேர்க் கியாழத்திலாவது மூன்றுநாளரைத்து, செம்மண்ணினல் குகைசெய்து காயவைத்து அதைச் சுட்டுக்கொண்டு, அரைத்தமருந்தை அதிற்போட்டு மேலோடுமூடி, சீலைமண் செய்து காய்ந்தபிறகு மூன்று கெஜப்புடம்போட சூரியோதயம் போற் செந்தூரமாகும்.

## பவளசுத்தி.

198. எலுமிச்சம்பழரசத்தில் பவளம் ஒருநாள் ஊறவைத்து மறுநாள் வெந்நீரிற்கழுவச் சுத்தியாகும்.

## பவளபஸ்பம்.

199. மேற்கண்ட சுத்திசெய்த பவளத்தை எருக்கம்பாலில் ங-நாள் ஊறவைத்து அதை ஒட்டில்வைத்துப் புடம்போட பஸ்பமாகும். ஒரு பணவிடை யனுபானத்தோடு உட்கொண்டால், விக்கல், வாந்தி, சுரம், இருமல் அனுகூலமாகும்.

## முத்துசுத்தி.

200. முத்தை ஊமத்தங்காய்ரசத்தில் ஒருநாள் ஊறவைத்து அதையெடுத்துக் கழுவிப் புளியிலைச்சாற்றில் ஒருநாள் ஊறவைத்துக்கழுவினுற் சுத்தியாகும்.

## முத்துப்பஸ்பம்.

201. சுத்திசெய்த முத்துகளை வெள்ளைச் சிறுவழுதலைப்பழரசஞ்சேர்த்து ஒருநாள் ஊறவைத்து இரண்டாநாள் குகையிற் போட்டு அதின்வாய்மூடிச் சீலைமண்செய்து காய்ந்தபிறகு பள்ளத்தில் வைத்துக் கெஜபுடம்போட்டால் பஸ்பமாகும்.

## வைரசுத்தி.

202. வைரத்தைக் குதிரை மூத்திரத்தில் ங-நாள் ஊறவைத்து நாலாநாளெடுத்து வெயிலில் வைத்தாற் சுத்தியாகும்.

### வைரபஸ்பம்.

203. சுத்திசெய்த வைரத்தைப் பிரண்டைரசத்தில் ங-நாள் ஊறவைத்து நாலாநாள் வெயிலில் வைத்துக் காய்ந்தபிறகு குகையிற்போட்டுச் சீலைமண்செய்து கெஜப்புடம் போட்டால் பஸ்பமாகும்.

### மரகதசுத்தி.

204. நிலக்குமிழம்வேரையரைத்து உருண்டைசெய்து அதின்மத்தியில் மரகதத்தைவைத்து அந்த உருண்டையைச்சீலைமண் செய்து குக்கிடப்புடம்போட்டாற் சுத்தியாகும்.

### மரகதபஸ்பம்.

205. சுத்திசெய்த மரகதத்தைக் கண்டங்கத்திரிச் சாறுவிட்டுஒருநாளும், சிறுபூளைச்சாறுவிட்டு ஒருநாளும்அரைத்து, ஒட்டில்வைத்துக் காய்ந்த பிறகு சீலைமண்செய்து வராகபுடம்போடப் பஸ்பமாகும். இதில் ஒருபணவிடைபஸ்பத்தை அனுபானத்தோடு உட்கொண்டால் சகலவியாதிகளும் அனுகூலமாகும்.

### நீலசுத்தி.

206. நீலத்தைக் கழுதை மூத்திரத்திற்போட்டு ஒருநாள்வெயிலில் வைத்துக்கழுவச் சுத்தியாகும்.

### நீலபஸ்பம்.

207. சுத்திசெய்த நீலத்தைத் தேள்கொடுக்குஇலைச்சாறுவிட்டு ங-நாள் அரைத்துக் காய்ந்தபிறகுகுகையிற்போட்டுசீலைமண் செய்து கொல்லன் உலையில்வைத்து ஊதி ஆறவைத்தால் பஸ்பமாகும். சூலை முதலான வாய்வுகள் சொஸ்தமாகும்.

### மாணிக்கசுத்தி.

208. மாணிக்கத்தைக் குதிரை மூத்திரத்தில் ங-நாள் ஊறப்போட்டு ங-நாள் வெயிலிற் காயவைத்து வெந்நீரினாற் கழுவச்சுத்தியாகும்.

### மாணிக்கப்பஸ்பம்.

209. சுத்திசெய்த மாணிக்கத்தை எருக்கம்பால்விட்டு ங-நாள்அரைத்து ஒரு ஓட்டில்வைத்துச் சீலைமண்செய்து புடம்போடுக. இப்படி ங-தரஞ்செய்யப் பஸ்பமாகும். ஒரு பணவிடை பஸ்பத்தை அனுபானத்தோடுஉட்கொண்டால் வாய்வு, வாதம், மார்புவலி அனுகூலமாகும்.

### புஷ்பராகசுத்தி.

210. புஷ்பராகத்தை வெள்ளாட்டு மூத்திரத்திற் போட்டு ஒருநாள் வெயிலில்வைக்கச் சுத்தியாகும்.

## புஷ்பராகபஸ்பம்.

211. சுத்திசெய்த புஷ்பராகத்தோடு வழுதலைவேரின் ரசத்தைவிட்டு உ-சாமம் வெயிலில்வைத்துக் குகையிற்போட்டு, மேல் மூடிச் சீலைமண்செய்து, கொல்லனுலையில்வைத்து மேலுங் கீழுங் கரியைப்போட்டு, குகையுருகுகிறவரையிலூதி ஆறினுற் பஸ்பமாகும். ஒரு பணவிடை பஸ்பத்தை அனுபானத்தோடு உட்கொண்டால் சுரம், விக்கல், தோஷம் முதலானவை அனுகூலமாகும்.

## கோமேதகசுத்தி.

212. கோமேதகத்தைக் குதிரைமூத்திரத்தில் ந-நாள் ஊற வைத்து நிலக்குமிழம் இலைச்சாற்றில் ஒருநாள்ஊறவைத்து எடுக்கச் சுத்தியாகும.

## கோமேதகபஸ்பம்.

213. சுத்திசெய்த கோமேதகத்தைக் கருவூமத்தங்காய்ச்சாற்றில் ஒருநாள் ஊறவைத்து மறுநாள் குகையிற்போட்டு மேலோடுமூடிச் சீலைமண்செய்து கொல்லன் உலையில்வைத்து மேலுங்கீழுங்கரிபோட்டு ஊதுக. இவ்விதமாய் ந-தரம் ஊதப்பஸ்பமாகும். ஒருபணவிடை அனுபானத்தோடு கொடுத்தால் ஈரல்வலி, குடர்வாதம் அனுகூலமாகும்.

## வைடூரியசுத்தி.

214. வைடூரியத்தைக் குதிரை மூத்திரத்தில் ஊறவைத்து மறுநாள் வெயிலில்வைத்துமூன்றுநாள் கலியாணப்பூசினிக்காய்ச் சாற்றிற்போட்டு வெயிலில்வைத்துக் கழுவச் சுத்தியாகும்.

## வைடூரியபஸ்பம்.

215. சுத்திசெய்த வைடூரியத்தைச் சிறுபூளைவேர்ச்சாற்றில் ந-நாளூறவைத்துப்பிறகு வச்சிரக் குகையிற்போட்டு வாய்மூடிச் சீலைமணசெய்து ந-தரம் கெஜபுடமபோடப் பஸ்பமாகும். இது தவிர மருந்தோடுகூடிய இந்தக்குகையைக் கொல்லனுலையில் கரியின்பேரில்வைத்து உருகுகிறவரையிலூதி ஆறினுல்பஸ்பமாகும். அந்த பஸ்பம் அனுபானததோடு உட்கொண்டால் வயிற்றுவலி, சூலை, சுரம் அனுகூலமாகும்.

## அபிரேக் உற்பத்தியும் பேர்களும்.

216. அப்ரகமானது பார்வதியின்வீரியத்தினுலுண்டானது. அது நாலுவிதம். அவையாவன மண்டூகஅப்ரகம்,வச்சிரஅப்ரகம், நாக அப்ரகம், பிநாக அப்ரகம்.

## பிநாக அப்ரகபரீக்ஷை.

217. பிநாகஅப்ரகத்தைக் கொல்லன் உலையில்வைத்து ஊதினுல் சிவப்பாகமாறும்.

மண்டூகஅப்ரகபரீக்ஷை.

218. மண்டூக அப்ரகத்தைக் கொல்லன் உலையில் வைத்து ஊதினால் தவளையைப்போல் குதிக்கும்.

நாக அப்ரகபரீக்ஷை.

219. நாக அப்ரகத்தைக் கொல்லன் உலையில்வைத்துக் காய்ச்சினால் பாம்பு சீறுதலைப்போல் சத்தமுண்டாகும்

வச்சிர அப்ரக பரீக்ஷை.

220. வச்சிர அப்ரகத்தைக் கொல்லன்உலையில்வைத்துக் காய்ச்சினால் புகையைப்போற் பறந்துபோகும்.

அப்ரகத்தின்குணம்.

221. மண்டூக அப்ரகம் வியாதியை யுண்டுபண்ணும். பிநாக அப்ரகம் வாய்வைக் கண்டிக்கும். நாகஅப்ரகம்சிலேத்ம உபத்திரவத்தை உண்டுபண்ணும். வச்சிரஅப்ரகம் சகல வியாதியையுந் தீர்க்கும்.

அப்ரகவர்ணகுணம்.

222. அப்ரகவர்ணம் ச-விதம். சிவப்பு அப்ரகம் வாய்வு உபத்திரவத்தைக் கண்டிக்கும், வெள்ளை அப்ரகம் சிலேத்ம வியாதியைக்கண்டிக்கும், சொர்ணஅப்ரகம், உஷ்ணத்தைத்தீர்க்கும்,கிருஷ்ணஅப்ரகம் சகலவியாதியையுந் தீர்க்கும்.

அப்ரகநவநீதம்.

223. கிருஷ்ண அப்ரகத்தை ந-நாள் புளிப்புமோரில் ஊறவைத்து ச-வதுநாள் உரலிற்போட்டு மெல்லிய பொடியாயிடித்து மறுபடி ந-நாள் புளித்ததண்ணீரில் ஊறவைத்து ஒரு சட்டியின் வாய்க்குச் சவுக்கத்துணிகட்டி அதின்மேலில் பொடியைப்போட்டு அதற்கு அரைப்பங்குநெல்லையும் அதிற்போட்டுநீராகாரம்விட்டுக் கொஞ்சங் கொஞ்சமாகப் பிசைந்து வடிகட்டினால் அப்ரகப்பொடி சலத்தோடுசேர்ந்து சட்டியிலிறங்கும். பிறகு அதைத்தெளியவைத்து மேலேயிருக்கிற சலத்தை யூற்றிவிட அடியில் வெண்ணெயைப்போலிருக்கும். இது அப்ரக நவநீதம்.

அப்ரகசெந்தூரம்.

224. ஷை வெண்ணெயை கல்வத்திற் போட்டு பசுநெய்யிலொருநாளரைத்துக் கெஜப்புடம்போடுக. இவ்விதமாக நெய்யிலரைத்து ந-புடம்போடுக. பிறகு கொள்ளு இலைச்சாறுவிட்டரைத்து ந-புடம்போடுக. வெள்ளாட்டின் பாலைவிட்டரைத்து ந-புடம்போடுக. எருக்கம்பாலால் ந-புடம்போடுக. ஆலம்பாலால் ந-புடம்போடுக. காட்டுத் துளசிச்சாறு, கற்றாழைச்சாறு, கலியாணபூசினிக்காய்ச் சாறு, அரசம்பட்டைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, வெள்ளைச்சாரணைச்சாறு, தண்ணீர்விட்டான் கிழங்குச்

சாறு, நிலப்பனைக்கிழங்குச்சாறு, கொட்டைக் கரந்தைச்சாறு, நொச்சிச்சாறு, ஆடாதோடைச்சாறு, அசுவகெந்திக் கிழங்குச் சாறு, சீந்தில்வேர்ச்சாறு, விழுதியிலைச்சாறு, சங்க இலைச்சாறு, புரசம்பட்டைச்சாறு, முருங்கைச்சாறு இந்த ஒவ்வொரு சாற்றிலும் ஒவ்வொருநாளரைத்துத் தனித்தனிப் புடம்போடுக. இவ்விதமாய் ச-நாள் அரைத்து நாலுபுடம்போடச் செந்தூரமாகும். வாந்தி அரோசிகம், சுரம், மேகம், படுமூத்திரம், மூலரோகம் இவைகளெல்லாம் தீரும்.

அப்ரகச்செந்தூரம் (சஹஸ்திரபுடம்.)

225. கறுப்பு அப்ரகத்தின் வெண்ணெய் ஒவ்வொருசேர் ஒவ்வொருகல்வத்திலாகரு-சேர் ரு-கல்வத்திற்போட்டு அதினோடு ஒவ்வொருசேர் நெய்விட்டு ரு-மனிதர்களால் ச-சாமம் அரைத்த மருந்தை ரு-பில்லைகள்செய்துரு-ஓட்டில்வைத்து மேலோடுமூடிச் சீலைமண்செய்து ஒருகெஜஉயரம் ஒருகெஜஅகலத்தில் ரு-பள்ளந் தோண்டி அதிற்பாதிவரைக்கும் காட்டுமுட்டையைநிரப்பி அதின் மேலிந்த ஓட்டைவைத்து நிறையமுட்டைகளைபடுக்கிப் புடம்போடுக. ஆறினபிறகு ரு-ஓட்டிலிருக்கிறமருந்தையும் ஒரு கல்வத்திற் போட்டுப் பொடிசெய்து அந்தப்பொடியை ரு-பங்குசெய்து மேற் சொன்னபடி கல்வத்திற்போட்டு மேற்கண்டபடி நெய்விட்டரைத்துப் புடம்போடுக. இவ்விதமாய் ௱௦-புடமும், கொள்ளு இலைச் சாறுவிட்டு ௱௦-புடமும், வெள்ளாட்டுப்பாலைவிட்டு ௱௦-புடமும், எருக்கம்பாலைவிட்டு ௱௦-புடமும், ஆலம்பாலிலும் காட்டுத்துளசிச்சாற்றிலும் ரு0-புடமும், கற்றாழைச்சாற்றில் ருo-புடமும், பூசினிக்காய்ச்சாற்றில் ௱௦-புடமும், அரசம்பட்டைச் சாறு, பொன்னுங்காணிச்சாறு,வெள்ளைச்சாரணையிலைச்சாறு,தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு, நிலப்பனைக் கிழங்குச்சாறு, கொட்டைக்கரந்தியிலைச்சாறு, நொச்சிச்சாறு, ஆடாதோடைச்சாறு, அசுவகெந்திக் கிழங்குச்சாறு, சீந்தில் தண்டுச்சாறு, விழுதியிலைச்சாறு, சங்க இலைச்சாறு, புரசம்பட்டைச்சாறு, முருங்கை வேர்ப்பட்டைச் சாறு, இவை ஒவ்வொன்றிலுமரைத்து ருo-புடமாகப்போட்டால் மொத்தத்துக்கு ௲-புடமாகும். ஷ செந்தூரம் ஊமத்தம்பூவைப்போலிருக்கும். இதற்குச்சகஸ்திரபுட அப்ரக செந்தூரமென்று பேர். இந்த செந்தூரத்தை அரைக்கும்போது ஒவ்வொருசாற்றிலும் நாலுஜாமம் அரைக்கவேண்டும் ௲-புடம்போட்டபிறகு செந்தூரத்தையெல்லாம்ஒன்றாகச்சேர்த்து அரைத்துப் பொன்டப்பியிலாவது ஸ்படிக சீசாவிலாவது வைத்துக்கொள்ளுக. வேளைக்கு பணவிடைமருந்தை நெய், வெல்லம், சர்க்கரையோடு சேர்த்து ஒருமண்டலம் உட்கொண்டால் பிரமை, இருபத்தோருவித

மேகம், இருபத்தொருவிதமதுமேகம், பித்தம், அஸ்திதாபம், தாதுநஷ்டம், உஷ்ணரோகம், நிர்ப்பலசுரம் இவை அனுகூலமாகும்.

## இரசசெந்தூரம்.

226. சுத்திசெய்த ரசம்சேர்-க, சுத்திசெய்த கந்தகம் சேர்-க, இவ்விரண்டையுங் கல்வத்திலிட்டுக்கருந்துளசி ரசத்தைவிட்டு இரண்டுநாளரைத்துக் காயவைத்து, காசிக்குப்பியிற்போட்டுவாய் மூடி எழுமண் சிலைசெய்து ஒருபெரிய சட்டியில் ஆறுவிரற்கடை மணல்போட்டு அதின்மேல் குப்பியை வைத்து அதின்மேலும் அவ்வளவு மணல்போட்டு, சட்டியை அடுப்பிலேற்றி கீழ்தீபாக்கினியாலும், கமலாக்கினியாலும், காடாக்கினியாலும் ஒவ்வொரு நாளெரித்து ஆறவைத்து அந்தக்குப்பியை உடைத்துப்பார்த்தால் மாதுளம்பூ நிறம்போல் செந்தூரித்திருக்கும். ஒருபணவிடை செந்தூரத்தை யனுபானத்தோடு கூடக்கொடுத்தால் சன்னிபாதமுதலிய ரோகங்கள் நிவர்த்தியாகும்.

## இரசசெந்தூரம் (உசிதமானது.)

227. கெந்தகம், அரிதாரம், மனோசிலை, ரசம், காந்தம், நாபி, இவை சமவிடையெடுத்து வெவ்வேறுகச்சுத்திசெய்து எல்லாவற்றையும் ஒரு கல்வத்திலிட்டு, செருப்படைச்சாறுவிட்டு மூன்றுநாளரைத்து, மண்சீலைசெய்தகாசிக்குப்பியில் அரைப்பாகம் இம்மருந்தை நிரப்பி, மேலே கொஞ்சங் குறைவாகச் செருப்படைச்சாறுவிட்டு, அதின்மேல் நிலத்தாமரை வேரின் தூளைநிரப்பி, அதின் வாயை மூடி எ-மண்சீலைசெய்து ஒரு பெரியபானையில் கொஞ்சம் மணலைப்போட்டு, குப்பியை மேலேவைத்து, அதின்மேல் மணலை நிரப்பி, அடுப்பின்மேலேற்றி மூன்றுநாள் இரவும் பகலும் எரித்துத் தானே ஆறவிட்டு எடுத்துப்பார்த்தால் மாதுளம்பூ வர்ணம் போற் செந்தூரமாகும். ஒருபணவெடை செந்தூரத்தை யநுபானத்தோடு உட்கொண்டால் நரை, திரை, மூப்பு, குஷ்டம், வாய் குளறல், கூன், செவிடு, நொண்டிநடத்தல், வாய்ப்புற்று, பிளவை, பனிச்சைப்பிசாசு, குமரகண்டவலி, காக்கைவலி, முசற்கண்வலி, சர்வகிரந்தி, ரணம் முதலான மஹாரோகங்களும் மரணவஸ்தையும் நிவர்த்தியாகும்.

## பாலார்க்க ரசசெந்தூரம்.

228. சுத்திசெய்த ரசம் பூ-அ, சுத்திசெய்த கெந்தகம் பூ-உ, இந்த இரண்டையும் கல்வத்திலிட்டு, கருந்துளசி ரசத்தைவிட்டு மூன்றுநாளரைத்து நிழலில் உலர்த்திக் காசிக்குப்பியிற் போட்டு அதின்வாயைமூடி, எ - மண்சீலைசெய்து வாலையெந்திரத்தில் மூன்றுவிரற்கடை மணல்பரப்பி, மேலேகுப்பியைவைத்து மணல்

நிரப்பி, அடுப்பிலேற்றி, தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினி யால் மூன்றுநாள் இரவும் பகலுமெரித்து, ஆறினபிறகு எடுத்துப் பார்க்க அருணோதயம்போற் செந்தூரித்திருக்கும். இம்மருந்தில் ஒருபணவிடை உட்கொள்ளலாம்.

அனுபானம் நெற்பொறியைப் பொடிசெய்து அதில் இந்த மருந்தை ௧௦-நாள் கொடுத்தால் சுரம் சொஸ்தமாகும். சர்க்கரை யில் ௧௦-நாள் கொடுத்தால் சுரந்தீரும். திப்பிலிப் பொடிபோட்டு ௧௦-நாள் உட்கொண்டால் சீதசுரம் தீரும். சாதிக்காய்ப்பொடிபோட்டு உட்கொண்டால் சுரம் அதிசாரம் தீரும். கடுக்காய்-தான்றிக் காய்-நெல்லிமுள்ளி இந்தமூன்றையுஞ் சமனிடைசூரணஞ்செய்து உட்கொண்டால் அசீரணசுரம் தீரும். அதிவிடயப்பொடியி லுட் கொண்டால் கிராணிதோஷம் அனுகூலம். கந்தையைச்சுட்டு அந் தச்சாம்பலில் ௧௦-நாள் உட்கொண்டால்அதிசாரம், ரத்தப்பிரமை அனுகூலம். கொடிவேலிக் கியாழத்தில் உட்கொண்டால் அஷ்ட குன்மந்தீரும். தசமூலிக்கியாழத்தில் உட்கொண்டால் சன்னிபாத தோஷம் அனுகூலமாகும். பஞ்சமூலிக்கியாழத்தில் ரு-நாள் உட் கொண்டால்தோஷசுரம் நீங்கும். சுக்கு மல்லி இரண்டையுஞ்சே ர்த்துக் கியாழம்வைத்து, ரு-நாள் உட்கொண்டால் அரோசிகம், சுரம் சொஸ்தமாகும். அஸ்வகெந்திச்சாற்றில்இரண்டுவேளை இரு பதுநாள் உட்கொண்டால் கர்ப்பாந்திரப் பவித்திரந்தீரும். விழுதி ரசத்தில் இரண்டுவேளைஉட்கொண்டால்கெர்ப்பம்விப்பிரிதிதீரும். பெருமரப்பட்டை ரசத்தில் உ௦-நாள் உட்கொண்டால் மகோதரம் கவிசை சொஸ்தமாகும். கையாந்தகரை மிளகு இரண்டையு மரை த்து அதில் உட்கொண்டால் பாண்டு தீரும். துளசிரசத்தில் உ௦- நாள் உட்கொண்டால் விக்கல், மூலசுரம், அனுகூலமாகும். துரா வேரின் ரசத்தில் ௧௦-நாள் உட்கொண்டால் வாதரோகந் தீரும். கொடிப்பாகல் ரசத்தில் ௧௦-நாள் உட்கொண்டால் கிருமி குஷ்டம் தீரும். காசாணுதயிலத்தில் உட்கொண்டால் இருபது வகை மேக வியாதிகள் சொஸ்தமாகும். எல்லாரோகங்களுக்கும் அதின்அனு பானத்தையறிந்து அதோடு உட்கொண்டால் எல்லாவியாதிகளும் அனுகூலமாகும்.

## குருரசசெந்தூரம்.

229. சுத்திசெய்தரசம், சுத்திசெய்தகெந்தகம்,சாரணைவேர் வகைக்கு பூ உ, கல்வத்திலிட்டு நன்றாயரைத்துக் காசிக்குப்பியி ல்நிரப்பி அதின்வாயை மாக்கல்லால்மூடி உப்புமண்ணும் சுக் கான்கல்லுஞ்சேர்த்தரைத்து எ-தரஞ்சீலைமண்செய்து வாலேந்தி ரத்தின் அடியில்-ச-விரற்கடை மணல்போட்டு அதின்மேல் குப்பி யைவைத்து அடுப்பின் மேலேற்றி மெதுவாக ௧உ-சாமம் எரித்து

ஆறினபிறகு எடுக்கச் செந்தூரமாகும். அதற்கு அரைப்பாகம் ரசபஸ்பத்தைச்சேர்த்துக் கல்வத்திற்போட்டுப்பொடிசெய்து வைத்துக்கொள்க. இம்மருந்தில் நெல்லெடை அனுபானத்தோடுஉட்கொண்டால் அஷ்டகுன்மம், பிராந்தி, வலி, மேகரணம் இவை சொஸ்தமாகும். தவிர வெல்லம், தேன், சர்க்கரை இவைகளிலும் கொடுக்கலாம்.

நவாசாரசெந்தூரம்.

230. சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த கெந்தகம் வகைக்கு பூ கo, நவாச்சாரம் பூ ரு, ஒருகல்வத்திலிட்டு முருங்கைப்பூச் சாறுவிட்டு கஉ-சாமமரைத்து நிழலில்காயவைத்து, காசிக்குப்பியில் நிரப்பி மாக்கல்லால்வாய்மூடி எ-சீலைமண்செய்து அடிகெட்டியாயிருக்கும்படியான ஒருசட்டியில் ந-விரற்கடை யுப்பைப்பரப்பி அதில்குப்பியை வைத்து, குப்பியை சுற்றிலும் உப்புப்போட்டு, நிறையமணலைப்போட்டு வேறொருசட்டியால்மூடிச் சீலைமண் செய்து காற்றில்லாத விடத்தில் அடுப்பைவைத்து அதின்பேரில் சட்டியைவைத்து கஉ-சாமம் கமலாக்கினியாக எரித்தால் குங்குமம்போற் செந்தூரமாகும். ஒருபணவிடைச்செந்தூரத்தை அனுபானத்தோடு உட்கொண்டால் குன்மம், சூலை, கைகால்இழுத்துக் கொள்ளுதல், ரணம் சொஸ்தமாகும்.

சொர்ணசெந்தூரம்.

231. சுத்திசெய்த ரசம்பூ அ. சுத்திசெய்தபொன் பூ ச, சுத்திசெய்த மனோசிலை பூ எ, சுத்திசெய்தஅரிதாரம் பூ சு,சுத்திசெய்த கெந்தகம் பூ கஉ, கல்வத்திட்டுமாதுளம்பூச்சாற்றினால் ந-நாள் அரைத்துக்காயவைத்துக் காசிக்குப்பியில் நிரப்பி, சீலைமண்செய்து ஒருசட்டியில் ச-விரற்கடை மணல்போட்டு அதின்பேரிற்குப்பியைவைத்து, சட்டிநிறையமணல்போட்டு ந-நாள்இரவும் பகலும் கமலாக்கினிச் சுவாலைபோட்டு ஆறினபிறகு பார்த்தால் மாதுளம்பூநிறத்திற்செந்தூரமாகும். ஒருபணவிடைச் செந்தூரத்தை அனுபானத்தோடு கo-நாள்உட்கொண்டால் சுவாசம்,க்ஷயம், இருமல், சுரம்,குன்மம்,சொஸ்தமாகும். இது அனுபோகமருந்து.

அம்சபிரயோகரச செந்தூரம்.

232. சுத்திசெய்தரசம்பூ கo, சுத்திசெய்தகெந்தகம்பூ கo, செருப்படைச்சாற்றோடு சேர்த்துக் கல்வத்திற்போட்டு அ-சாமம் அரைத்து, பிறகு தூதுவளைக்காய்போல் உருண்டை செய்துகொண்டு நிழலிற் காயவைத்துக் காசிக்குப்பியிற்போட்டு வாய்மூடிச் சீலைமண்செய்து ஒருசட்டியிலிரண்டு விரற்கடை யுப்பை போட்டு அதின்மேல் அந்தக்குப்பியைவைத்து சுற்றிலும் உப்புப்போட்டு மணலாற்சட்டியைநிரப்பி, மேல்சட்டிமூடிச்சீலைமண்செய்து, அடுப்பில்வைத்துக் கமலாக்கினியாக கஉ-சாமம் எரித்து ஆறினபிறகு எடுத்துப்பார்த்தால் செந்தூரமாயிருக்கும். இந்தசெந்தூரத்துக்கு சு-ல், ஒருபாகம் நாபியும், நாபிக்குச்சமமாகமிளகும், இந்த மருந்

தோடு சேர்த்துப்பொடிசெய்து மூங்கில் குழாவில் வைத்துக்கொண்டு, குன்றிமணியிடை மருந்தை அனுபானத்தோடு உட்கொண்டால் சன்னிவாதம், வலி, சுரம், சூலை, ரணம் சொஸ்தமாகும்.

### அக்கினிகுமாரன்.

233. சுத்திசெய்தரசம், சுத்திசெய்தகெந்தகம், நாபி, எஃகு அரப்பொடி, இந்த ச-வகையும் சமமாகச்சேர்த்து செருப்படைச் சாறுவிட்டு ந-நாள் அரைத்து, தூதுவளைக்காய் பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிற் காய்ந்தபிறகு காசிக்குப்பியிற் போட்டு வாய்மூடிஎ-தரஞ்சீலைமண்செய்து வாலேந்திரத்தில் ச-விரற்கடை மணலைக்கொட்டி அதிலிந்தக் குப்பியை வைத்து, சட்டிநிறைய மணல்போட்டு அடுப்பில் வைத்து, கமலாக்கினியாக கஉ-சாமம் எரித்து ஆறினபிறகு பொடிசெய்து வைத்துக்கொண்டு உளுந்தளவுமருந்து இஞ்சிரசத்தில் உட்கொண்டால் சுரம், சுரதோஷம், சன்னிபாதம் சொஸ்தமாகும்.

### பிரதாபஅக்கினிகுமாரன்.

234. சுத்திசெய்தரசம், தாம்பிரபஸ்பம், நாபி, மிளகு, சுக்கு, யவச்சாரம், சதிச்சாரம், நவசாரம், சமுத்திரலவணம், அட்டுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, கல்லுப்பு, இவைகளெல்லாஞ் சமமாகச்சேர்த்துக்கொண்டு அவைகளில நாபி, சுக்கு, மிளகு, இந்த மூன்றையும் வேறாக எடுத்துவைத்து, மற்ற சரக்குகளெல்லாங் கல்வத்திற்போட்டு இஞ்சிரசத்தைவிட்டு ஒருநாளரைத்துக் காயவைத்துக் காசிக்குப்பியில் நிரப்பிவாய்மூடி எ-தரஞ் சீலைமண்செய்து வாலேந்திரத்தின் அடியில் மணல்போட்டு மேலேகுப்பிவைத்து மேலும் மணல்போட்டு அடுப்பில் வைத்து, தீபாக்கினி ஒருநாள்போட்டு ஆறினபிறகு மருந்தையெடுத்து அதோடு முன் எடுத்துவைத்த மூன்று சரக்குகளையுஞ் சேர்த்து இஞ்சிரசம் விட்டு அரைத்து நிழலிற்காயவைதது்க்கொண்டு, குன்றிமணியிடை மருந்து இஞ்சிரசத்தில் உட்கொள்ளலாம். இதர அனுபானத்தோடுங் கொடுக்கலாம். சகல சன்னிபாத சுரம், சூலை, அஷ்டகுன்மம், குடல்வாதத்தையும் தீர்க்கும்.

### பிராணக்கினிகுமாரன்.

235. இரசம், நாபி, அப்ரகம், கந்தகம் இவைகளைச் சமமாகச்சேர்த்துப் பற்பாடகச்சாறுவிட்டு ந-நாள் அரைத்து வச்சிரக்குகையிற்போட்டுச் சீலைமண்செய்து இந்தக்குகையை ஒரு பள்ளத்திற்வைத்து, அந்தப்பள்ளம் நிறைய மணல்போட்டு அதின்மேல முழவுயரம்காட்டுமுட்டையைபடுக்கிப்புடம்போடுக. ஆறினபிறகு மருந்தையெடுத்துக்கல்வத்திற்போட்டு மச்சத்தின்பிச்சு சேர்த்து

ஒருசாமமும்,வெள்ளாட்டின்பிச்சு சேர்த்து உ-சாமமும், மயிலின் பிச்சுசேர்த்து க-சாமமும் அரைத்து, குன்றிமணியளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு, அனுபானத்தோடு உட்கொண்டால் சகலசுரத்தையும் சன்னியையுந்தீர்க்கும்.

திவ்விய அக்கினிகுமாரன்.

236. இரசம், வெள்ளைப்பாஷாணம், இரண்டையும்சமமாகச் சேர்த்துக்கொண்டு கொடிவேலிவேரின் கியாழம்விட்டு ச-சாமம் அரைத்துப் பில்லைகள்செய்துகாயவைத்து வச்சிரக்குகையில்போட்டு வாய்மூடி, சீலைமண்செய்து ஒருகுழியில் பாதிமணல்கொட்டி அதின்மேல் குகையைவைத்து மணலாற் குழியைநிரப்பி வரட்டியடுக்கிப் புடமபோட்டு ஆறினபிற்பாடு மருந்தை யெடுத்து நாவிலொருபாகம் நாபியைச் சேர்த்துக் கல்வத்திலிட்டு, சுக்கு,மிளகு, திப்பிலி இந்தமூன்றின் தைலத்தைவிட்டு ஒருசாமமும், நெருஞ்சில் இரசத்தை விட்டு ஒருசாமமும், சின்னியிலைச்சாறுவிட்டு ஒருசாமமும், முன்னையிலைச்சாறுவிட்டு ஒருசாமமும் அரைத்துக்குன்றிமணியளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திக்கொண்டு, அனுபானத்தோடு உட்கொண்டால் சன்னிபாதத்தையும் சமஸ்த சுரங்களையுந் தீர்க்கும்.

உத்தம அக்கினிகுமாரன்.

237. சுத்திசெய்தரசம், அப்ரகபஸ்பம், தாம்பிரபஸ்பம், காந்தபஸ்பம், எஃகுபஸ்பம், நாபி இவைகளையெல்லாம் சமமாகச்சேர்த்து, செருப்படைச்சாறுவிட்டு ஒருநாளரைத்துக் காயவைத்துக் குப்பியிற்போட்டு அதின்வாய்மூடி எ-சீலைமண்செய்து வாலேந்திரத்தின் சட்டியில் மணலைப்போட்டு அதின்மேரிற் குப்பியை வைத்து மேல்மணல்போட்டு அடுப்பில்வைத்துக்கமலாக்கினியால் சு-சாமம் எரித்தபிறகு மருந்தைப் பொடிசெய்துவைத்துக்கொண்டு, உளுந்தளவு அனுபானத்தோடு உட்கொண்டால் சன்னிபாதம், சுரம், வேறுவியாதிகளும் சொஸ்தமாகும். இச்சாபத்தியம். தாகமெடுத்தால் இளநீர், கரும்பு, பானகம் இவை கொடுக்கலாம்.

பூதேஸ்வரரசம்.

238. சுத்திசெய்தரசம், நாபி, கந்தகம், நேர்வாளம், சாதிலிங்கம் இவைகளைச் சமாம்சம்சேர்த்துக் கல்வத்திலிட்டு, கொடிவேலிகியாழம்விட்டு ஒருநாளரைத்து, கொடிவேலிக் கியாழத்தை ஒருபாத்திரத்திற்போட்டு, அதின்வாயில் ஒரு பிளாச்சு போட்டு, ஷை மருந்தை கோமேளந்திரமாய்க் கட்டிச் சுவாலைபோடுக. மறுபடி அந்த மருந்தையெடுத்துக் கல்வத்திலிட்டுக் கெண்டைமீன் பிச்சால் ஒருநாளும், கொடிக்கள்ளிச்சாறுவிட்டு ஒருநாளும் அரைத்து, உளுந்தளவு மாத்திரைசெய்து நிழலிற் காயவைத்துக் கொ

ண்டு, இஞ்சிரசத்தில் ஒருமாத்திரைஉட்கொண்டால் சகலசுரமும் சொஸ்தமாகும். எருக்கம்வேர்க் கியாழத்தில் உட்கொண்டால் சகலவித சன்னிபாதம்தீரும். இதற்குப்பத்தியம் தயிரன்னம்; தாகத்துக்கு மோர் சாப்பிடலாம்.

திரிபுராந்தகரசம்.

239. சுத்திசெய்தரசம், கந்தகம், அப்ரகபஸ்பம் இவைகளை ச்சமமாகச்சேர்த்துக் கல்வத்திலிட்டுக் கையாந்தகரைச் சாறுவிட்டு ஒருநாள் அரைத்து, பிறகு குகையிற் போட்டுச் சீலைமண்செய்து, குக்கிடப்புடம்போடுக. ஆறினபிறகு மருந்தைக் கல்வத்திலிட்டுக் கெண்டைமீன்பிச்சால் ஒருநாளும், வாத்தின் பிச்சாலொருநாளும் காட்டுப்பன்றியின் பிச்சால் ஒருநாளும் அரைத்துக் குன்றிமணியளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திக் கொண்டு, இஞ்சிரசத்தில் ஒருமாத்திரை யுட்கொண்டால் பித்தசுரம், வாதசுரம், சிலேத்மசுரம் மாந்தசுரம், சன்னிபாதசுரம், தொந்தசுரம், முதலான சகலசுரமும் சொஸ்தமாகும். இச்சாபத்தியம். மோரன்னம் சாப்பிடலாம், சர்க்கரைபானகம் சாப்பிடலாம்.

பத்திரகாளிரசம்.

240. சுத்திசெய்தரசம், நாபி, அப்ரகபஸ்பம், சுக்கு, மிளகு, திப்பிலி, கந்தகம், வெண்காரம், ஊமத்தம்விதை, இந்துப்புஇவைகளெல்லாம் சமமாகச் சேர்த்துப் பொடிசெய்து, வச்சிரக் குகையிற்போட்டுச் சீலைமண்செய்து நன்ருய்க் காய்ந்தபிறகு வாலுகயந்திரத்தில் அடியில்மணல்போட்டு, அதின்மேல் குகையைவைத்து, யந்திரத்தை மணலால் மூடி அடுப்பில்வைத்து, தீபாக்கினி உ-சாமம் எரித்து ஆறினபிறகு மருந்தைக் கல்வத்திற்போட்டு, கெண்டைமீன் பிச்சால் ஒருநாள் அரைத்து மாத்திரை செய்து நிழலிற் காயவைத்துக்கொண்டு, அனுபானத்தோடு உட்கொண்டால் சகலசுரமும், சர்வதோஷமும், சர்வசன்னியும் அனுகூலமாகும்.

புவனேஸ்வரரசம்.

241. கௌரிபாஷாணம், அப்ரகபஸ்பம், நாபி, மனேசிலை, ரசம், நேர்வாளம், இவைகளை சமமாகச்சேர்த்து மிதிப்பாகற்சாறுவிட்டு ந-நாளரைத்து நாலாநாள் ஒரு ஓட்டில்வைத்து மேலோடு மூடிச் சீலைமண்செய்து, குக்கிடப்புடம்போடுக. ஆறினபிறகு மருந்தைக் கல்வத்திலிட்டு நன்ருய்அரைத்து மூங்கிற்குழாவில் வைத்துக்கொண்டு, ஒரு குன்றிமணியிடை இஞ்சிரசத்திலாவது திரிகடுகு கியாழத்திலாவது உட்கொண்டால் சர்வசுரம், சர்வசன்னி சொஸ்தமாகும்.

## நாராயணரசம்.

242. கந்தகம், சுக்கு, மிளகு, திப்பிலி, அப்ரகம், கடுகுரோகணி, அரிதாரம் இவைகளைச்சமமாகச்சேர்த்துப் பஞ்சகோலகியாழத்தைவிட்டு இரண்டுநாளரைத்து நிழலிற்காயவைத்து, வச்சிரக்குகையிற்போட்டு வாய்மூடிச்சீலைமண்செய்து குக்கிடப்புடம்போட்டு, பிறகு கல்வத்திலிட்டு நழைநரிபிச்சையும் மச்சத்தின்பிச்சையும் போட்டு வகைக்கு ஒருநாள் அரைத்துக் குன்றிமணியளவு மாத்திரைசெய்து வைத்துக்கொண்டு வெற்றிலைச்சாற்றில் உட்கொண்டால் தோஷசுரம், விஷசுரம், சன்னிபாதம் சொஸ்தமாகும்.

## வைஷ்ணவவீரரசம்.

243. ஜாதிலிங்கம், நாபி, கடுகுரோகணி, சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு, இவைகளைச் சமமாகச் சேர்த்துக் கொடிவேலிக்கியாழத்தைவிட்டு ஒருசாமம் அரைத்து, தோளேந்திரமாய்கொடிவேலிக்கியாழத்தில் தொங்கவிட்டு சுவாலைபோட்டு யாறினபிறகு எடுத்து வைத்துக்கொண்டு, உளுந்தளவு மருந்தை இஞ்சிரசத்தில் உட்கொண்டால் மந்தசுரம், சன்னிபாதசுரம், விஷசுரம், பிராணசுரம் அனுகூலமாகும்.

## இலட்சுமிநாராயணரசம்.

244. கந்தகம், துரிசு, சீனக்காரம், அரிதாரம் இவைகளைச் சமமாகச்சேர்த்து, சாரணைவேர்க்கியாழத்தைவிட்டு மூன்றுசாமம் அரைத்து தோளேந்திரமாய் அந்தக்கியாழத்தில் விட்டு, ஒருசாமம் சுவாலைபோட்டு ஆறினபிறகு எடுத்துக் குன்றிமணியளவு மாத்திரை செய்துகொண்டு, அனுபானத்தோடு ஒருமாத்திரை உட்கொண்டால், வாதசுரம், விஷசுரம், பித்தசுரம், சிலேஷ்மசுரம், சன்னிபாதசுரம் அனுகூலமாகும்.

## இரணியகர்ப்பரசம்.

245. பொன், வெள்ளி, தாம்பிரம், பவளம், கந்தகம், மனோசிலை, அரிதாரம், கடுகுரோகணி இவைகளையெல்லாஞ் சமமாகச் சேர்த்து வெள்ளாட்டுப் பால்விட்டு ஒருநாளரைத்துக் குகையிற் போட்டு வாய்மூடி எ - சீலைமண்செய்து கெஜப்புடம்போட்டு ஆறினபிறகு பொடிசெய்து வைத்துக்கொண்டு உளுந்து பிரமாணம் அனுபானத்தோடு உட்கொண்டால் வாதசுரம், பித்தசுரம், சிலேஷ்மசுரம், திரிதோஷசுரம், தொந்தசுரம் முதலியவை தீரும்.

## கமலாசனரசம்.

246. இரசம், அப்ரகம், கந்தகம், லோகம், தாம்பிரபஸ்பம் இவைகள் சமமாகச்சேர்த்து வேப்பிலைச் சாறுவிட்டு கூ - சாமம்

அரைத்துக் குன்றிமணியளவு மாத்திரைசெய்து கொண்டு காய வைத்து, ஒரு காசிக்குப்பியில் அவைகளைப் போட்டு வாய்மூடிச் சீலைமண்செய்து அந்தக்குப்பியை வாலயந்திரத்தில்வைத்து ௪-சாமம் கமலாக்கினியாகளரித்து ஆறினபிறகு பொடிசெய்து காயவை த்துக்கொண்டு ஒரு நெல்லெடை மருந்தை அனுபானத்தோடு உட்கொண்டால் சன்னிபாதம், சர்வசுரம், சுவாசகாசம் தீரும்.

## பிதாமஹரசம்.

247. இரசம், நாபி, லிங்கம், கடுகுரோகணி, லோகம், செம்பு, பழையகிட்டான், அரிதாரம் இந்த அ-வகைகளில் பஸ்பம் செய்யவேண்டியமருந்துகளை பஸ்பம்செய்து சுத்திசெய்யவேண்டு பவைகளை சுத்திசெய்து பிறகு எல்லாம் சமமாகச் சேர்த்துக்கொ ண்டு எருக்கம்வேர்க்கியாழத்தினல் ௩-சாமம் அரைத்துக் குன்றி மணியளவு மாத்திரைகள் செய்து காயவைத்துக் காசிக் குப்பியிற் போட்டு வாய்மூடி, சீலைமண்செய்து வாலையந்திரத்தில் வைத்து, அடுப்பின்மேலேற்றிக் கமலாக்கினியாக ௩-நாள் எரித்து ஆறின பிறகு பொடிசெய்து வைத்துக்கொண்டு குன்றிமணியெடைஅனு பானத்தோடு உட்கொண்டால் சகலசுரமும், சன்னியும், சுவாச காசமும், கபமும், இருமலும் அனுகூலமாகும்.

## பார்வதிரசம்.

248. வசம்பு, ரசம், கந்தகம், அப்ரகம், நாபி, இவைகளெல் லாம் சமமாகச்சேர்த்துக் கொட்டைக்கரந்தைச் சாறுவிட்டு ஒரு நாளரைத்து உலர்ந்தபின் குகையில்வைத்து மேல்மூடிச் சீலைமண் செய்து பூப்புடம்போட்டு ஆறினபிறகு மருந்தைக் கல்வத்திற் போட்டு, அடைக்கலான் குருவிப் பிச்சைப்போட்டு இரண்டுநா ளரைத்துக் குன்றிமணியளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி அனுபானத்தோடு உட்கொண்டால் தோஷசுரம்முதல் சர்வசுரங் களும் அனுகூலமாகும்.

## கலியாணரசம்.

249. அரிதாரம், கந்தகம், சங்கின்சுன்னம், நவசாரம் இவை யெல்லாம் சமமாகச்சேர்த்து எலுமிச்சம்பழ ரசத்தைவிட்டு ஒரு நாளரைத்து தோளேந்திரமாய்க்கட்டி ஷை பழரசத்தில் தொங்க விட்டுளரித்து, சொற்பபூப்புடம்போட்டு மருந்தைப்பொடிசெய்து மூங்கிற்குழாவில் வைத்துக்கொண்டு, இரண்டு உளுந்தளவு அனு பானத்தோடு உட்கொண்டால் சர்வசுரமும் அனுகூலமாகும்.

## இரசபைரவம்.

250. இரசம், கந்தகம், நாபி, லிங்கம், சீனுகாரம்இவையெல் லாம் சமமாகச்சேர்த்துக் கல்வத்திலிட்டுக் கொடிவேலின் கியாழ

த்தைவிட்டு ஒருநாளரைத்துக் காயவைத்துக் குப்பியில்நிரப்பி வாலுக யந்திரத்தில் வைத்து வாய்மூடி சீலைமண்செய்து கமலாக்கினியாக இரண்டுசாமம் எரித்து ஆறினபிறகு பொடிசெய்து வைத்துக்கொண்டு, குன்றிமணியிடை மருந்து திரிகடுகு சூரணத்தில் உட்கொண்டால் பித்தசுரம்,சன்னிபாதசுரம்,சிலேத்மசுரம்தீரும்.

வீரவிக்ரமரசம்.

251. இரசம், சீனகாரம், கந்தகம், நாபி, எட்டிவிதை, இந்துப்பு, கண்டதிப்பிலி, பெருங்காயம். இவையெல்லாம் சமமாகச் சேர்த்துப் பொடிசெய்து தோளேந்திரமாய்த் தொங்கவிட்டு, ஒரு சாமம்எரித்து, ஆறினபிறகு பன்றியின் பிச்சைப்போட்டு ஒருநாளரைத்துக் குன்றிமணியிடை மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்திடுக. அனுபானத்தோடு உட்கொண்டால் சன்னிபாதசுரம் நீங்கும்.

திரிவிக்கிரமரசம்.

252. சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம், சுத்திசெய்த அரிதாரம் இவைகளைச்சமமாகச் சேர்த்துக் கல்வத்திலிட்டுக் கையாந்தகரைச் சாறுவிட்டு ச-சாமம் அரைத்து நிழலிலுலர்த்திக் காசிக்குப்பியிற் போட்டு வாய்மூடிச் சீலைமண்செய்து வாலுகாயந்திரத்தின் அடியில் மணல்போட்டு மேல்குப்பிவைத்து மணலால்மூடி அடுப்பில் வைத்துத் தீபாக்கினியாக ச-சாமம் எரித்து ஆறவிட்டுப் பொடிசெய்து மூங்கிற் குழாவில் வைத்துக்கொண்டு, குன்றிமணியிடை நொச்சிச்சாற்றில் உட்கொண்டால் சன்னிபாதசுரம், சுவாசகாசம், க்ஷயம் அனுகூலமாகும்.

சயவிக்ரமரசம்.

253. நாபி, மனோசிலை, அரிதாரம், கந்தகம், சீனகாரம் இவைகளைச் சமமாகச்சேர்த்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழ ரசத்தைவிட்டு ங-நாளரைத்து அந்த ரசத்திலே தோளேந்திரமாய் மருந்தைதொங்கவிட்டு, ஒருநாளெரித்துப் பிறகுமருந்தைப்பொடிசெய்து மச்சத்தின் பிச்சைவிட்டு ஒருசாமம் அரைத்துக் குன்றிமணியளவாக மாத்திரை செய்துகொண்டு அனுபானத்தோடு உட்கொண்டால் சன்னிபாதம், சூலை, சுரம், அனுகூலமாகும்.

பூதபைரவரசம்.

254. இரசம், கந்தகம், தாம்பிரபஸ்பம் மூன்றையும் சமமாகச்சேர்த்துக் கொடிவேலிக் கிழாம்விட்டு இரண்டு சாமம் அரைத்து; குகையிற்போட்டு வாய்மூடிச்சீலைமண்செய்து, வாலுகாயந்திரத்தில்வைத்து, ஒருநாள் எரித்து ஆறினபிறகு பூனைப்பிச்சைப் போட்டு இரண்டுசாமம் அரைத்துக் குன்றிமணியிடை மாத்திரை

செய்து அனுபானத்தோடு உட்கொண்டால் தாந்திரிக சன்னிபாத சுரம் அனுகூலமாகும். தாகமெடுத்தால் இளநீர் கொடுக்கலாம்.

### விஜயபைரவரசம்.

255. இரசம், பாஷாணம், நாகபஸ்பம், காரீயபஸ்பம், அப்ரகம் இவை சமமாகச்சேர்த்து, திரிகடுகு கியாழம்விட்டு இரண்டு சாமம்அரைத்து, குப்பியிற் போட்டு அதின் வாய்மூடிச் சீலைமண் செய்து வாலுக யந்திரத்தில் அடியில்மணல்போட்டு அதில் குப்பியைவைத்து, கமலாக்கினியால் ச-சாமம் எரித்து ஆறினபிறகு நாயின் பிச்சைச்சேர்த்து ஒருசாமம் அரைத்து உளுந்தளவு மருந்தைக் காய்ச்சின இளநீரிலுட்கொண்டால் அந்தகசன்னி அனுகூலமாகும். இச்சாபத்தியம்.

### உக்ரபைரவரசம்.

256. தாம்பிரபஸ்பம், அயம், சதிச்சாரம், எவாச்சாரம்,நவசாரம், இரசம் இவையெல்லாம் சமமாகச்சேர்த்து, பஞ்சலோகக் கியாழத்தில் ஒருநாள் அரைத்து, பிறகு அந்த கியாழத்தில் தோளேந்திரமாய் உ-சாமம் எரித்து ஆறினபிறகு கோழிப்பிச்சைச் சேர்த்து ஒருநாளரைத்து இரண்டு உளுந்தளவு மாத்திரைசெய்து கொண்டு, தேன் திப்பிலிப்பொடியிற்கலந்து உட்கொண்டால் உருத்தாக சன்னிதோஷம் சொஸ்தமாகும்.

### சன்னிபாதபைரவம்.

257. இரசம், நாபி, அப்ரகம், கந்தகம், காரீயம், சீனக்காரம் இவை சமமாகச்சேர்த்து, ஆலம்பால் விட்டு ஒருநாளரைத்து அந்தப்பாலில் தோளேந்திரந்தொங்கவிட்டு ஒருநாள் எரித்து, ஆறினபிறகு மச்சத்தின்பிச்சைப்போட்டு ஒருநாளும், எருமைப்பிச்சைப்போட்டுஒருநாளும், மயில்பிச்சைப்போட்டு ஒருநாளும்அரைத்து உளுந்தளவுமாத்திரைசெய்துகொண்டு திப்பிலிக்கியாழத்தில் உட்கொண்டால் ரக்திஷ்டீவிசன்னி அனுகூலமாகும்.

### காருண்யபைரவம்.

258. இரசம், அப்ரகம், சமமாகச்சேர்த்துக்கையாந்தகரைச் சாறுவிட்டு ஒருநாளரைத்து, நிழலிலுலர்த்திக் குகையிற் போட்டு வாய்மூடிச் சீலைமண்செய்து, வாலுக யந்திரத்தில் நடுவில் மணல் போட்டுக் குகையைவைத்து அந்தயந்திரத்தை அடுப்பேற்றி ஒருநாள்எரித்து ஆறினபிறகு காட்டுப்பன்றிப் பிச்சைவிட்டு ஒருநாளரைத்து,மயில்பிச்சுவிட்டுஒருநாளரைத்து,உளுந்தளவு மாத்திரைசெய்து, அனுபானத்தோடு உட்கொண்டால் பிரலாபசன்னி அனுகூலமாகும். பத்தியம் மோரன்னம், தாகத்துக்கு இளநீர் கொடுக்கலாம்.

## சித்திபைரவரசம்.

259. இரசம், அரிதாரம், இரண்டையும் சமமாகச்சேர்த்து, கற்றாழைச்சாறுவிட்டு ஒருசாமம் அரைத்து, அந்தச்சாற்றில்தோளேந்திரம் தொங்கவிட்டு, இரண்டு சாமம் எரித்து, பிறகு மச்சத்தின்பிச்சைவிட்டு இரண்டுசாமம் அரைத்து, இரண்டுஉளுந்தளவு மாத்திரைசெய்து தேன் - திப்பிலி-இவற்றோடு உட்கொண்டால், ஜிம்மகஜன்னி சொஸ்தமாகும்.

## கபாலபைரவம்.

260. இரசம், பெருங்காயம், சதிச்சாரம், எவச்சாரம்,நவசாரம், சுக்கு,மிளகு, திப்பிலி, கந்தகம், கரியுப்பு, கல்லுப்பு, சவட்டுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, கொடிம்வலிவேர்ப்பட்டை,மருள்வேர்ப்பட்டை, எருக்கம்வேர்ப்பட்டை, பிரண்டை வேர்ப்பட்டை, காட்டுக்கருணைக்கிழங்கு, கடுக்காய், தான்றிக்காய், நெல்விமுள்ளி, நாபி, இவைகளைச் சமமாகச்சேர்த்து எருக்கம்வேர்க் கியாழத்தைவிட்டு இரண்டுநாளரைத்து வாலுகயந்திரத்தில் வைத்து இரண்டு சாமம் எரித்து ஆறினபிறகு நாயின் பிச்சைச்சேர்த்து ஒருநாளரைத்துக்குன்றிமணியளவு மாத்திரைசெய்துக்கொண்டு, காய்ச்சின இளநீரோடு உட்கொண்டால் அபிநியாசசன்னி சொஸ்தமாகும். பத்தியம்-தயிர்ச்சாதஞ் சாப்பிடலாம். மேலும்இந்தமருந்து அனுபான சகிதமாய் உட்கொண்டால் விஷசுரத்தைத்தீர்க்கும்.

## மஹேந்திரரசம்.

261. சுத்திசெய்தநாபி, இரசம், அரிதாரம், மனோசிலை,தொட்டிப்பாஷாணம், இவை சமமாகச்சேர்த்து ஊமத்தையிலைச்சாற்றால் ஒருநாளரைத்து அந்தரசத்தில் தோளேந்திரமாய்த் தொங்கவிட்டு தீபாக்கினியாக ஒருநாளெரித்து ஆறினபிறகு பொடிசெய்து வைத்துக்கொண்டு அனுபான சகிதமாய் உட்கொண்டால் சகல சன்னிபாதமும் அனுகூலமாகும்.

## இரசராஜரசம்.

262. இரசம், மனோசிலை,துத்தம்,கந்தகம்,லிங்கம், வெள்ளைப்பாஷாணம், இவை சமமாகச்சேர்த்து வேப்பம் ஈர்க்குக்கியாழத்தைவிட்டு ஒருநாளரைத்துக் காயவைத்துக்குகையிற்போட்டு வாய்மூடிச் சீலைமண்செய்து குக்கிடபுடம்போட்டு ஆறினபிறகு ஆட்டுப்பிச்சோடுசேர்த்து ஒருநாளும், எருமைக்கிடாப்பிச்சோடு சேர்த்து ஒருநாளும்அரைத்துக் குன்றிமணியளவு மாத்திரை செய்துகொண்டு திரிகடுகு கியாழத்தில் உட்கொண்டால் ௧௩-வித சன்னியும் சொஸ்தமாகும். மேலும் இதர அனுபானத்தோடும் சேர்த்துக் கொடுக்கலாம்.

## மகாபைரவம்.

263. இரசபஸ்பம், தாம்பிரபஸ்பம், லோகபஸ்பம், அப்ரக பஸ்பம், காந்தபஸ்பம், இவைகளைச் சமமாகச் சேர்த்துக்கொண்டு செருப்படைரசத்தைவிட்டு ஒருநாளரைத்துக் காயவைத்துக் குப்பியிற்போட்டு வாய்மூடி எ-தாஞ்சீலைமண்செய்து வாலுகயந்திரத்தில்வைத்துக் கமலாக்கினியாய் ஒருநாள் எரித்து ஆறினபிறகு பொடிசெய்து ஒரு குன்றிமணியெடை அனுபானத்தோடு உட்கொண்டால் சகல சந்நியும், சந்நிபாதமும் சொஸ்தமாகும்.

## மகாபைரவரசம்.

264. சாதிலிங்கம்,மிளகு,சீனக்காரம், நாபி,திப்பிலி, இவையெல்லாஞ் சமமாகச் சேர்த்து எலுமிச்சம்பழ ரசம்விட்டு ந-நாளரைத்து அந்த ரசத்தில் தோளேந்திரமாகத் தொங்கவிட்டு இரண்டு சாமம் எரித்து, மருந்தையெடுத்துக் கொண்டு இஞ்சிரசத்தைவிட்டு மூன்றுநாளரைத்து, உளுந்தளவு மாத்திரை செய்து கொண்டு அனுபானத்தோடு உட்கொண்டால் சன்னிபாதம், அதிசாரம் அனுகூலமாகும்.

## காலபைரவம்.

265. அரிதாரம், கந்தகம், அப்ரகம், சீனக்காரம், யவாச்சாரம், சதிச்சாரம், படிகாரம், இந்துப்பு, கரியபோளம், மிளகு, இவைசமமாகச்சேர்த்துக் கல்வத்திற் பொடிசெய்து செருப்படைச்சாறுவிட்டு ஒருசாமம்அரைத்து, அந்தச்சாற்றிலேயே தோளேந்திரமாய் ஒருநாள் தொங்கவிட்டு எரித்து ஆறினபிறகு, மச்சத்தின் பிச்சைச்சேர்த்து ஒருநாளரைத்து எருமைக்கடாப் பிச்சைச் சேர்த்து ஒருநாளரைத்து, பன்றி பிச்சைச்சேர்த்து ஒருநாளரைத்து, ஆமைப் பிச்சைச்சேர்த்து ஒருநாளரைத்து உளுந்தளவு மாத்திரைசெய்து கொண்டு இஞ்சிரசத்தில் உட்கொண்டால் சன்னிபாதசுரம் தீரும். அனுபான சகிதமாய் உட்கொண்டால் தோஷசுரம் முதலான சகல சுரமும் அனுகூலமாகும். பத்தியம்-தயிரன்னஞ்சாப்பிடலாம். மோர், இளநீர் குடிக்கலாம்.

## சூசிகாமுகம்.

266. இந்துப்பு, அப்ரகம், கந்தகம், மனோசிலை, அரிதாரம், வெண்காரம், துத்தம், நேர்வாளம், நாபி, சீனக்காரம், லிங்கம், இவைசமமாகச்சேர்த்து அதற்குச்சமமாக, ரசத்தையும் அதோடு சேர்த்து இலுப்பை நெய்யுஞ்சேர்த்து மூன்றுநாளரைத்து அந்த எண்ணெயிலே தோளேந்திரமாய் தொங்கவிட்டு ஒருசாமம் எரித்து ஆறினபிறகு நல்லசர்ப்பத்தின்பிச்சை அதோடுசேர்த்து இரண்டுநாளரைத்துக் காயவைத்து, ஒருடப்பியில் வைத்துக்கொண்டு

தலையில் ரு-இடத்திற்கீறி குன்றிமணியெடையுள்ள மருந்தை யெலுமிச்சம்பழரசத்திலரைத்துக் கீறின இடங்களில்தேய்த்தால் கங-வித சந்நியும் அனுகூலமாகும்.

## பிராணேஸ்வரரசம்.

267. அரிதாரம், அப்ரகம், கந்தகம் வகைக்கு பூ கഠ, இரசம் பூ ஙഠ, இவற்றைச் சேர்த்து நிலப்பனங்கிழங்கின் கியாழம்விட்டு ங-நாளரைத்து நிழலிலுலர்த்திக் காசிக்குப்பியிற் போட்டு அதின்வாய்மூடிச் சீலைமண்செய்து வாலுகாயந்திரத்தில் அடியில் மணலைப்போட்டு அதின்மேற் குப்பியைவைத்து மணலால்நிரப்பி மந்தாக்கினியாக ஒருநாளெரித்து ஆறினபிறகு ஊமத்தம்விதைத் தைலத்தைவிட்டு ஒருநாளும், திரிகடுகு தைலம்விட் டொருநாளும், பிரண்டைச்சாறு விட்டொருநாளும், பழுபாகற் கிழங்குச் சாறு விட்டொருநாளும், சீந்திற்சாறு விட்டொருநாளும், பேய்ப்புடற்சாறு விட்டொருநாளும், திரிபலைகியாழம்விட்டொருநாளும், கையாந்தகரை ரசம்விட்டொருநாளும் அரைத்து மச்சத்தின் பிச்சையும், எருமைக்கடாப்பிச்சையும், ஆட்டுப்பிச்சையும், காட்டுப் பன்றி பிச்சையும் இவை ஒவ்வொன்றையுஞ் சேர்த்து ஒவ்வொரு சாமம் அரைத்து, இரண்டு உளுந்தளவு மாத்திரைசெய்து காய வைத்துக்கொண்டு அனுபானத்தோடு உட்கொண்டால் சகல சந்நியும் சொஸ்தமாகும்.

## மிருத்துஞ்சயரசம்.

268. தாம்பிரபஸ்பம், அப்ரகம், அரிதாரம், ரசம், கந்தகம், கடல்நுரை, இவைகளைச் சமமாகச்சேர்த்துச் சேவகனார்கிழங்குச் சாறுவிட்டு ச-சாமம் அரைத்து நிழலிலுலர்த்திக் குகையிற்போட்டு வாய்மூடிச் சீலைமண்செய்து கசபுடம் போட்டானபிறகு, மயில், ஆடு, சர்ப்பம், மச்சம், இவைகளின் ஒவ்வொன்றின் பிச்சைவிட்டு ஒவ்வொரு சாமம் அரைத்து இரண்டு உளுந்தளவு மாத்திரைசெய்துகொண்டு அனுபானத்தோடு உட்கொண்டால் சந்நிபாதம், சர்வசுரம் அனுகூலம்.

## மிருத்தோத்தரபனரசம்.

269. சதிச்சாரம், யவச்சாரம், நவாசாரம், ரசம், உப்பு, இந்துப்பு, வளையலுப்பு, அட்டுப்பு, பொட்டிலுப்பு, சாதிலிங்கம், வெள்ளைபாஷாணம், தொட்டிப்பாஷாணம், கௌரிபாஷாணம், மனோசிலை, அரிதாரம், வசம்பு, கந்தகம், மஸ்தகக்கறள், கோஷ்டம், தாம்பிரபஸ்பம், சீனக்காரம், லோகபஸ்பம், இவை சமமாகச்சேர்த்து, திரிகடுகு கியாழம்விட்டரைத்து நிழலிலுலர்த்திக் குப்பியிற் போட்டு வாய்மூடி சீலைமண்செய்துவாலுகயந்திரத்திற்கீழேமணல்

போட்டு மேற்குப்பிவைத்து, மணல்நிரப்பித் தீபாக்கினியாக ௪-சாமம் எரித்து ஆறினபிறகு வெள்ளைபபூண்டு தைலம்விட்டு ௩-நாளும், நேர்வாளத்தயிலத்தால் ௩-நாளும், கொடிவேலிக் கியாழத்தால் ௩-நாளும், நாகப்பாம்பின் பிச்சைப்போட்டுஒருநாளும், மயிலின் பிச்சைப்போட்டு ஒருநாளும், ஆமைப்பிச்சைப்போட்டு ஒருநாளும், எருமைக்கடாப் பிச்சைப்போட்டு ஒருநாளும், வெள்ளாட்டுப்பிச்சைபோட்டு ஒருநாளும் அரைத்துக் குன்றிமணியிடை மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி அனுபானத்தோடு உட்கொண்டால், சமஸ்தவித சன்னியும் அனுகூலமாகும். இச்சாபத்தியம். பிணியாளனுக்குச் சந்தனம்பூசி இராஜோபசாரமுஞ் செய்யலாம்.

## திரிமூர்த்திரசம்.

270. துத்தம், வெங்காரம், வெள்ளைப் பாஷாணம், இந்தமூன்றையும் சமமாகத் தேனோடு சேர்த்து ஒரு சட்டியிற்போட்டுத் தீபாக்கினியாக ஒருநாள் எரித்து ஆறினபிறகு கல்வத்திற் போட்டுப் பாகலிலைச்சாறுவிட்டு இரண்டுசாமம் அரைத்து, அந்தச்சாற்றில் தோளேந்திரமா யிரண்டுசாமம் எரித்து ஆறவைத்துக் கல்வத்திற்போட்டு, ஊமத்தஞ்சாறுவிட்டு ஒரு சாமம் அரைத்துக் குன்றிமணியளவுமாத்திரைசெய்து நிழலிலுலர்த்திப் பசும்பாலில் உட்கொண்டால் சீதசுரம் தீரும். பத்தியம்-பச்சைப்பயறு கஞ்சி கொடுக்கவும்.

## பிரம்மாஸ்திரரசம்.

271. துத்தம், வெண்காரம், வெள்ளைப்பாஷாணம், கௌரி பாஷாணம், தொட்டிப்பாஷாணம், கந்தகம், மனோசிலை, நாபி, நேர்வாளம், சாதிலிங்கம், அப்ரகம், இந்துப்பு, மிளகு, சவட்டுப்பு, சதிச்சாரம், யவச்சாரம், படிகாரம், சீனக்காரம், பெருங்காயம், இவைகளைச் சமமாகச்சேர்த்து அதற்குச்சமமாக ரசத்தையும்சேர்த்து, சித்திரமூலத்தைலம்விட்டு ரு-நாளரைத்து, அந்தத்தைலத்திலே தோளேந்திரமாய்த்தொங்கவிட்டு, ஒருநாள்எரித்து ஆறின பிறகு மயில்பிச்சு, எருமைக்கடாபிச்சு, சர்ப்பத்தின்பிச்சு, முயல் பிச்சு, நரிப்பிச்சு, நாய்ப்பிச்சு இவை ஒவ்வொன்றையும்விட்டு ஒவ்வொருநாளரைத்துக்குன்றிமணியளவு மாத்திரைசெய்துகொண்டு ஒருமாத்திரையைஎலுமிச்சம்பழத்தில்உரைத்து உச்சியைக்கீறிப் போட்டுத் தேய்த்தால் அபத்தியசன்னி, அபஸ்மார்க்கம், ஊமை, பொட்டை, காதடைக்கிறசன்னி சகலதோஷமும்அனுகூலமாகும்.

## வீரப்பிரதாபரசம்.

272. இரசம், நாபி, பெருங்காயம், சதிச்சாரம், யவச்சாரம், படிகாரம், சுக்கு, மிளகு, திப்பிலி, தாம்பிரபஸ்பம், சொர்ணபஸ்பம்,

முத்து, பவளம் இவையெல்லாம் சமமாகச்சேர்த்து, திரிபலாதி கியாழம்விட்டு மூன்றுநாளரைத்துக் குகையிற்போட்டு, வாய்மூடிச்சீலைமண்செய்து, கெஜபுடம்போட்டு ஆறினபிறகு கல்வத்திலிட்டு மச்சத்தின்பிச்சு, எருமைக்கடாப்பிச்சு, மயில்பிச்சு, வெள்ளாட்டுப்பிச்சு, காட்டுப்பன்றிபிச்சு, ஒவ்வொன்றிலும் அஞ்சஞ்சு நாளரைத்துக் குன்றிமணியளவுமாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி அனுபானத்தோடு உட்கொண்டால் கரு-வித சன்னியும் அனுகூலமாகும்.

பரஞ்சோதிரசம்.

273. பொன், வெள்ளி, வங்கம், பவளம், முத்து, ரசம், அரிதாரம், கந்தகம், அப்ரகம் இவை சமமாகச்சேர்த்து, கஞ்சாஇலைச்சாறுவிட்டு ச-சாமம் அரைத்துக் காசிக்குப்பியிற்போட்டு வாய்மூடிச்சிலைமண்செய்து வாலுகயந்திரத்தில்மணலைப்போட்டு அதில் குப்பியைவைத்து அதின்மேலும் மணலைப்போட்டுக் கமலாக்கினியாக ஒருநாள்எரித்து ஆறினபிறகு பொடிசெய்து மூங்கிற் குழையிற்போட்டுவைத்துக்கொண்டு குன்றிமணிஎடை மருந்தைச்சுத்த சலத்தில் உட்கொண்டால் சன்னிபாதம், கபவாதம், குமரகண்டம், தனுர்வாதம் இவைகள் அனுகூலமாகும். பத்தியம்-தயிரன்னம் சாப்பிடலாம். சுத்தஜலம் சாப்பிடலாம்.

இராசராசேஸ்வரிரசம்.

274. இரசம், கந்தகம், அரிதாரம், அப்ரகம், சதிச்சாரம், யவச்சாரம், படிகாரம், பெருங்காயம் இவையெல்லாம் சமமாகச்சேர்த்துக்கொடிவேலிக் கியாழம்விட்டு இரண்டுநாளரைத்துக் காய்ந்தபிறகு குகையிற்போட்டு சீலைமண்செய்து வாலுகயந்திரத்தில் அடியில்மணல்போட்டு மேல்குப்பிவைத்து மணல்நிரப்பி இரண்டு சாமம்எரித்து ஆறினபிறகு கல்வத்திட்டுமச்சத்தின்பிச்சைப்போட்டு ஒருநாளரைத்துக் குன்றிமணியளவு மாத்திரை செய்துகொண்டு அனுபானத்தோடு உட்கொண்டால் சகலவித சன்னியும் சன்னிபாதமும் சொஸ்தமாகும்

சகந்நாதரசம்.

275. சுத்திசெய்தரசம், தாம்பிரபஸ்பம், வங்கபஸ்பம் இவைகளைச்சமமாகச் சேர்த்து மிளகரணைப் பட்டைச்சாறுவிட்டு இரண்டுஜாமம் அரைத்துக்காயவைத்து, குகையிற்போட்டுச்சீலைமண் செய்து, குக்கிடப்புடம்போடுக. ஆறினபிறகு கல்வத்திலிட்டு, பன்றியின்பிச்சால் ஒருநாளரைத்துக் குன்றிமணியளவுமாத்திரை செய்து இஞ்சிரசத்தில் உட்கொண்டால் சன்னிபாதம் தீரும்.

காலாக்கினிருத்ரரசம்.

276. சதிச்சாரம், யவச்சாரம், படிகாரம், உப்பு, பொட்டுப்பு, வளையலுப்பு, அட்டுப்ப, இந்துப்பு, ரசம், நாபி இவைகளைச் சமமாகச்சேர்த்துத் திரிபலை கியாழத்தில் ங-நாளரைத்துக் குகையிற்போட்டு வாய்மூடிச் சீலைமண்செய்து வாலுக யந்திரத்தில் மணல்போட்டு அதில் குகையைவைத்து அதின்மேலும் மணல்போட்டுக் கமலாக்கினியாக ஒருநாளெரித்து ஆறினபிறகு மச்சத்தின் பிச்சைபோட்டு இரண்டுநாளும் சர்ப்பத்தின் பிச்சைப் போட்டு இரண்டுநாளும் அரைத்துக் குன்றிமணி யளவுமாத்திரை செய்துகொண்டு நிழலிலுலர்த்தி அனுபானத்தோடு உட்கொண்டால் சகலவித சன்னியும் சொஸ்தமாகும். பத்தியம்-தயிரன்னம் இளநீர், கரும்புரசம் பானஞ்செய்யவும்.

தன்வந்திரிரசம்.

227. இரசம், நாபி, அப்பிரகம், லோகம், பொன், முத்து, சதிச்சாரம், யவச்சாரம். படிகாரம், நிமிளை, வங்கம், லிங்கம், திப்பிலிமூலம், இவை சமமாகச்சேர்த்துக் கொடிவேலிகியாழம், செருப்படைச்சாறு, பஞ்சகோலக்கியாழம், எருக்கம்வேர்க்கியாழம், கையாந்தகரைச்சாறு, மேற்சொன்ன ஒவ்வொரு ரசத்திலும் அஞ்சஞ்சுநாள் அரைத்து மருந்தைக் குப்பியிற்போட்டு வாய்மூடிச் சீலைமண்செய்து, வாலுகயந்திரத்தில் வைத்து மேலுங்கீழும் மணல்போட்டுக்கமலாக்கினியாக ங-சாமம் எரித்து ஆறினபிறகு கல்வத்திலிட்டு, மச்சத்தின் பிச்சு, எருமைக்கடாபிச்சு, மயில் பிச்சு, வெள்ளாட்டுப்பிச்சு, இவை ஒவ்வொன்றிலும் அஞ்சஞ்சுநாளரைத்து, உளுந்தளவு மாத்திரை செய்துகொண்டு அனுபானத்தோடு உட்கொண்டால் சகலசந்நிபாதமும் சொஸ்தமாகும்.

மணிபூஷணரசம்.

278. அரிதாரம், லிங்கம், வங்கபஸ்பம், காரீயபஸ்பம், அப்ரகபஸ்பம், தாம்பிரபஸ்பம் இவையெல்லாம் சமமாகச்சேர்த்து அதற்குச் சமமாக ரசமுஞ்சேர்த்து நொச்சிச்சாறுவிட்டு ச-சாமம் அரைத்துக் குகையிற்போட்டு, மேல் மூடிச் சீலைமண்செய்து வாலுகயந்திரத்தில் வைத்து மேலுங்கீழும் மணல்போட்டுக் கமலாக்கினியாக ச-சாமம் எரித்து ஆறினபிறகு மச்சத்தின் பிச்சு, எருமைக்கடாப் பிச்சு, ஆமைப்பிச்சு, காட்டுப்பன்றிப்பிச்சு, மயிற்பிச்சு, ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு நாளரைத்து வைத்துக் கொண்டு, இரண்டுநெல்லளவு அனுபானத்தோடு உட்கொண்டால் சமஸ்த சந்நிபாதமும் சொஸ்தமாகும். இச்சாபத்தியம்.

### தாவள்யரசம்.

279, தாளகம், வங்கபஸ்பம், காரீயபஸ்பம், இரசம், சீனக்காரம், சதிச்சாரம், யவச்சாரம், படிகாரம், உப்பு, வளையலுப்பு, அட்டுப் , பொட்டுலுப்பு, இந்துப்பு, நாபி, கௌரிபாஷாணம், இவையெல்லாம் சமமாகச்சேர்த்து வேப்பம் ஈர்க்குக் கியாழத்தைவிட்டு ஒருநாளரைத்துக் குகையில் வைத்து, வாய்மூடிச் சீலைமண்செய்து, வாலுகயந்திரத்தில் மேலுங்கீழும் மணல்போட்டு, காடாக்னியாக ஒருநாளெரித்து ஆறவிட்டு மயில்பிச்சு, வெள்ளாட்டுப்பிச்சு, சர்ப்பத்தின்பிச்சு, இவை யொவ்வொன்றையும் ஒவ்வொருநாள் வெவ்வேறாக விட்டரைத்து, உளுந்தளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி அனுபானத்தோடு மருந்தை யுட்கொண்டால், சந்நிபாததோஷம் சமஸ்தமும் அனுகூலமாகும். பத்தியம்-தயிரன்னம் உட்கொள்க.

### ரோகபஞ்சீனரசம்.

280. இரசபஸ்பம், அப்ரகபஸ்பம், தாம்பிரபஸ்பம், நாபி, இவையெல்லாம் சமமாகச்சேர்த்து எலுமிச்சம்பழரசம்விட்டு இரண்டுநாளரைத்து, அந்தஇரசத்திலே தோளேந்திரமாய்க் கட்டித் தொங்கவிட்டு ஒருநாளெரித்து ஆறினபிறகு, நாயின்பிச்சைச் சேர்த்து ஒருநாளரைத்துக் குன்றிமணியளவு மாத்திரைசெய்து, அனுபானத்தோடுஉட்கொண்டால் சகலசந்நியும் அனுகூலமாகும்.

### சந்திரசேகரரசம்.

281. சுத்திசெய்தரசம், சுத்திசெய்தகந்தகம், மிளகு, சீனக்காரம், இவை சமமாகச்சேர்த்து மச்சத்தின் பிச்சைப்போட்டு மூன்றுநாளரைத்துக் குன்றிமணியளவு மாத்திரைசெய்து இஞ்சிரசத்தில் சர்க்கரையில் உட்கொண்டால் வாய்வு, பித்தம்-சிலேஷ்மம். சிலேஷ்மசுரம், முறைச்சுரம், அனுகூலமாகும். மோரன்னம், பத்தியம்.

### வீரபத்திரரசம்.

282. சுத்திசெய்தரசம், நாபி, அப்ரகம், கந்தகம் இவை சமமாகச்சேர்த்து இஞ்சிரசம்விட்டு ஒருநாளரைத்து, உளுந்தளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி இஞ்சிரசத்தில் ௩-நாள் உட்கொண்டால் ௧௩-வித சன்னியும் சொஸ்தமாகும். பத்தியம்வெள்ளாட்டுப்பால் அன்னம் சாப்பிடுக,

### சர்வரோகஹரிரசம்.

283. சுத்திசெய்த கெந்தகம், இரசம், லிங்கப், நாபி, நேர்வாளம், கடுக்காய், தான்றிக்கால், நெல்லிமுள்ளி, சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கொடிவேலி வேர்ப்பட்டை இவை சமமாகச் சேர்த்து, கையாந்தகரைச் சாறுவிட்டு ௩-நாளரைத்து குன்றி

மணியிடை மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி, சீதசுரத்துக்கு இஞ்சிரசத்திலும், மார்புவலிக்கு சக்கரையிலும், சூலே, குன்மம், க்ஷயம், பாண்டு இவைகட்கு இஞ்சிரசத்திலும், தீபனத்துக்குநெல்லிக்காய்ரசஞ் சேர்ந்த தேனிலும், ஆம்ல பித்தத்துக்குக்கடுக்காய் கியாழத்திலும், பித்தவாய்வுக்குத் திரிபலாதி கியாழத்திலும், வெந்நீரிலும், மூலத்துக்குச் சர்க்கரையிலும் பிரண்டைரசத்திலும் இன்னும் சகலவியாதிகட்கும் அனுபான பேதமாய் உட்கொண்டால் சொஸ்தமாகும்.

## பஞ்சான்னரசம்.

284. இரசம், கெந்தகம், அப்ரகம், சுக்கு, மிளகு, திப்பிலி முத்தக்காசு, நாபி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, இவைகளைச் சமமாகச்சேர்த்து இடித்து வடிகட்டிச் சூரணத்துக்கு இரண்டுபங்கு பழையவெல்லஞ்சேர்த்து நன்ருயரைத்துக்குன்றிமணியளவு மாததிரைசெய்து மிளகுபொடி, நெய் இவைகளில் இரண்டுவேளை ஒருமண்டலம் உட்கொண்டால் கஅ-குஷ்டம், குன்மம், மகோதரம், அனுகூலமாகும். இதரவியாதிகளுக்குக் கொடிவேலிக் கியாழத்திலும், பித்தத்துக்கு இஞ்சிரசத்திலும், சூலேக்கு யவச்சாரஞ்சேர்ந்த வெந்நீரிலும், ஆமைச்சூலேக்குச் சுக்குத்தூளிலும் ஓமத்தூளிலும், இதர வியாதிகளுக்கு அனுபானபேதமாய் உட்கொள்க.

## ஆக்கிரசிம்மரசம்.

285. நேர்வாளம், கெந்தகம், நாபி, இரசம், இவைகளைச் சமமாகச்சேர்த்து, பொடிசெய்து குன்றிமணியிடை பொடியைச் சர்க்கரையோடுசேர்த்து உட்கொண்டால், சதலசுரமும் சொஸ்தமாகும்.

## சண்டேச்சுரரசம்.

286. இரசம், கெந்தகம் மனேசிலே, நாபி, இவை சமமாகச்சேர்த்து நொச்சியிலே ரசம்விட்டு, இரண்டுநாளரைத்து இஞ்சிரசத்தி லிரண்டுநாளரைத்து, குன்றிமணியளவு மாத்திரைசெய்து, நிழலிலுலர்த்தி, இஞ்சிரசத்திலொரு மாத்திரை யுட்கொண்டால், சன்னி தீரும். தக்கோலக்கியாழத்தி லுட்கொண்டால், சுரம்தீரும். பத்தியம்-மோரன்னஞ் சாப்பிடலாம்.

## மானினிமகரத்வஜரசம்.

287. செங்கழுநீர், கோஷ்டம், ஏலம், இலவங்கம், இலவங்கபத்திரி, முத்தக்காசு, நீர்முள்ளிவேர், தண்ணீர்விட்டான்கிழங்கு, சீரமதூரம், அசுவகந்திக்கிழங்கு, நிலேக்குமிழம் வேர்ப்பட்டை, பொன்னுங்காணிவேர், பெருநன்னரிக்கிழங்கு, நெருஞ்சில்வேர், இலவம்பிசின், சீந்திற்கிழங்கு, இவற்றைச் சமமாகச்சேர்த்திடித்து, வடி

த்து, இதற்கிரட்டிப்பான சீந்திற்சர்க்கரை சேர்த்து, தான்றிக்கா யளவு மருந்து தேனோடுசேர்த்துக் காலையிலும், பசுவின்பால், சுக்கு சலத்தோடாவது சேர்த்து மாலையிலும் உட்கொண்டால் நாவரட்சி அனுகூலம். சர்க்கரையோடுட்கொண்டால் மதுமேகம், பிரமேகம், கைகால் கண் எரிவு, யோனிதோஷம், லிங்கதோஷம், வீரியநட்டம், சர்வசுரம், சகல ஊஷ்ணமும் அனுகூலமாகும். அதிகமாய் வீரியவிர்த்தியாகும்.

கனகசெந்தூரரசம்.

288. பொன், வெள்ளி, சீனக்காரம், நாபி, இரசம், வங்கபஸ்பம், லிங்கம், நிமிளை, காந்தபஸ்பம், அப்ரகம், காரீயம், எஃகு, தாம்பிரபஸ்பம், இவைகளைச் சமமாகச்சேர்த்து, அதற்குச் சமமாகக் கெந்தகமுஞ்சேர்த்துக் கொடிவேலிக் கியாழத்தை விட்டு உ-சாமம் அரைத்து, வச்சிரக்குகையிற்போட்டு வாய்மூடிச் சீலை மண்செய்து குக்கிடப்புடம்போட்டு, மருந்தையெடுத்து அதோடு திரிகடுகுபொடிசேர்த்து வைத்துக்கொண்டு, குன்றிமணியிடை இஞ்சிரசத்தில் உட்கொண்டால் சந்நிபாதம் அனுகூலம். பசுவின் நெய்யில் உட்கொண்டால் வாந்தி அனுகூலம். பித்தசுரத்துக்குத் தேனிலும், சிலேஷ்மசுரத்துக்குத் திப்பிலிப்பொடியிலும், வாத பித்த சுரத்துக்குப் பெருங்காயத்திலும், சூலைக்கு நிலப்பனக்கிழங்கு ரசத்திலும், இதரவியாதிகளுக்கு அனுபானபேதமாய் உட்கொண்டால் அவை அனுகூலமாகும்.

அரித்ராவடகம்.

289. மஞ்சள், வேப்பிலை, திப்பிலி, மிளகு, மரமஞ்சள், வாய் விளங்கம், பெருங்கோரைக்கிழங்கு, சுக்கு, இந்த எட்டையுஞ் சமமாகச்சேர்த்து, வெள்ளாட்டுமூத்திரத்தில் ஒருநாள் ஊறவைத்து மறுநாளதை யெடுத்து அரைத்து, குன்றிமணியிடை மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி, அசீரணசுரத்துக்கு வெந்நீரிலும், அதிசாரம் கிராணிகளுக்கு மூன்றுநாள் மோரிலும், சர்ப்பவிஷத்துக்கு அ-மாத்திரை யுள்ளுக்குக் கொடுத்து, ஒருமாத்திரைமோரிலுரைத்து கடிவாயிலுந் தடவுக. கண்ணில் சிவப்புநீரொழுகல், திமிரம், புழுவெட்டினூற் கண்மயிருதிரல் இவைகளுக்குக்கோமூத்திரத்தில் அல்லது சலத்திலுரைத்துக் கண்ணிற்போடுக. திரிதோஷவிஷம் சுரத்துக்கு வெல்லத்திலும், ரத்த அதிசாரத்துக்கு ஏலம், லவங்கபத்திரி இவைகளைவறுத்துப் பொடிசெய்து அதோடுசேர்த்தும், பாண்டுக்குக் கோமூத்திரத்திலும், தேள்கடிக்கு எருக்கம்பாலில் மாத்திரையுரைத்துக் கடிவாயில் தடவுக. இவ்விதமாய் சகலவியாதிகளுக்கும் தக்க அனுபானத்தோடு உட்கொண்டால் சொஸ்தமாகும்.

பிரதாபமார்த்தாண்டம்.

290. இரசம் பூ க, லிங்கம் பூ உ, நேர்வாளம் பூ ௫, இவைகளைநேர்வாள இலைரசத்தினால்ஒருசாமம் அரைத்துக்குன்றி

மணியளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திக்கொண்டு வாதசுரத்துக்கு வெல்லத்தில் உட்கொள்ளுக. பத்தியம்-பகலிற்கஞ்சி கொடுத்திடுக, இரவில் தயிர்ச்சாதம் மறுநாள் ஆனந்தபைரவ மாத்திரையை யுட்கொள்ளுக. இவ்வித அனுபானத்தோடு உட்கொண்டால் தருணசுரம் அனுகூலமாகும்.

### தாபசுராங்குசம்.

291. சாதிலிங்கம் பூ உ, நாபி பூ க, கடுகுரோகிணி பூ ச இவைகல்வத்திலிட்டு சுத்தசலம்விட்டரைத்து உளுந்தளவுமாத்திரைசெய்து நிழலிலுலர்த்திவைத்துக்கொண்டு ஒருமாத்திரையை முலைப்பாலிலாவது சர்க்கரையிலாவது சேர்த்து உட்கொண்டால் தாபசுரம் அனுகூலமாகும்.

### வாதசுரக்கியாழம்.

292. நல்லசந்தனம், கோரைக்கிழங்கு, சுக்கு, பற்பாடகம், இவைசமமாகச்சேர்த்து அதோடு ஒருபடி சலம்விட்டு எட்டிலொருபாகமாய்க் கியாழஞ்செய்து ரு-நாள் உட்கொண்டால் வாதசுரம் சொஸ்தமாகும்.

### முறைவாதசுரக்கியாழம்.

293. சண்பகப்பூ, ஆமணக்குவேர், கொத்தமல்லி, சுக்கு, தக்காளிவேர், செருப்படைவேர், இவைசமமாகச்சேர்த்து ஒருபடி தண்ணீர்விட்டு எட்டிலொருபங்காய்க் கியாழஞ்செய்து மூன்று நாள் இரண்டுவேளையுங் கொடுத்தால், இராமபாணம் இராவணனைக் கொன்றதுபோல் இந்தமருந்து வியாதியைக்கொல்லும்.

### முறைபித்தவாதசுரக்கியாழம்.

294. ஆரைவேர், இலந்தைவேர், சிற்றாமுட்டிவேர், தேள்கொடுக்குவேர், சுக்கு, கடுக்காய் இவைசமமாகச்சேர்த்து ஒருபடிதண்ணீர்விட்டு எட்டிலொரு பாகங்கியாழஞ்செய்து ரு-நாள் உட்கொண்டால் பித்தவாத சுரம் அனுகூலமாகும்.

### சந்ததசுரக்கியாழம்.

295. சிறுதேக்கு, பற்பாடகம், சுக்கு, நிலவேம்பு, ஆடாதோடை, திப்பிலி, கோஷ்டம், சீந்திற்கொடி இவைசமமாகச்சேர்த்து ச-படி தண்ணீர்விட்டு ०-படியாகக்கியாழஞ்செய்து ரு-நாள் இரண்டுவேளை திப்பிலிப்பொடியைத் தேனிற்கலந்து உட்கொண்டு, அதின்மேற் கியாழத்தையும் உட்கொண்டால், அசீரணசுரம், சிலேத்துமசுரம், விஷசுரம், சந்ததசுரம், ச-நாளைக்கொருமுறை வருஞ்சுரம், இவைகள் அனுகூலமாகும்.

### தாபசுரக்கியாழம்.

296. திப்பிலி, கண்டதிப்பிலி, செவ்வியம், கொடிவேலிவேர், சுக்கு, இவைசமமாகச்சேர்த்து, படிசலம் விட்டு, எட்டிலொருபா

கம் கியாழஞ்செய்து இவ்விதமாய் ரு-நாள் இரண்டுவேளை உட்கொண்டால் தாபசுரம், அக்கினிமந்தம், அசீர்ணவாய்வு, வாதசுரம் குன்மம், சூலை, மகோதரம் முதலான வியாதிகள் அனுகூலமாகும்.

பித்தசுரக்கியாழம்.

297. கோரைக்கிழங்கு, பற்காடம், வெட்டிவேர், சந்தனம், விலாமிச்சைவேர், சுக்கு, இவைசமமாகச் சேர்த்து ஒருபடிசலம் விட்டு எட்டிலொன்ருய்க்காய்ச்சி ங-நாளிரண்டுவேளை உட்கொண்டால் பித்தசுரந்தீரும்.

முறைபித்தசுரக்கியாழம்.

298. கோரைக்கிழங்கு, நன்னரிவேர், சந்தனம், தண்ணீர்விட்டான் கிழங்கு, சீந்திற்கிழங்கு, சுக்கு, கோஷ்டம், அதிமதுரம், ஆலம்விதை இவைசமமாகச்சேர்த்து, படிசலம்விட்டு எட்டிலொன்ருய்க்காய்ச்சி, மூன்றுநாளிரண்டு வேளைசர்க்கரை, தேனில் உட்கொண்டால் பித்தசுரம் தீரும்.

மகாதாபசுரக்கியாழம்.

299. மாவிலிங்கப்படை, யவச்சாரம், எருக்கம்பட்டை, கொடிவேலிவேர்ப்பட்டை, இஞ்சி, கண்டதிப்பிலி, இவை சமமாகச் சேர்த்து ஒருபடி ஜலம்விட்டு எட்டிலொன்ருய்க்காய்ச்சி ங-நாளிரண்டுவேளை யுட்கொண்டால் தாபசுரமும் சன்னிபாதமும் அனுகூலமாகும்.

அதிசாரதாபசுரக்கியாழம்.

300. கோத்தமல்லி, சீரகம், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், சந்தனம், கோரைக்கிழங்கு, சர்க்கரை, கற்பூரம், கோஷ்டம், அதிமதுரம், தாமரைக்கிழங்கு, அத்திப்பட்டை, அரசம்பட்டை, ஆலம்பட்டை, இஞ்சிப்பட்டை, மாம்பட்டை, நெல்லிப்பருப்பு, இவை சமமாகச்சேர்த்து ஒருபடி சலம்விட்டு எட்டிலொன்ருகக்காய்ச்சி ரு-நாளிரண்டுவேளை யுட்கொண்டால் அதிசாரதாபசுரம் சொஸ்தமாகும்.

வாந்திக்கு அனுபானம்.

301. ஏலம், கிராம்பு, சாதிக்காய், நெற்பொரி, சர்க்கரை, அதிமதுரம், தேன், கடுக்காய், சீந்திற்சர்க்கரை, குமட்டிமாதுளம்பழம், விளாம்பழம், வில்வவேர், புங்கம்வேர், இவைகளெல்லாம் வாந்திக்கு அனுபானம், வாந்தியை நாசமாக்கும்.

விக்கலுக்குமருந்து.

302. நண்டுவளையிலிருக்கிற சலத்தை யெடுத்துக் கொடுத்தால் விக்கல்தீரும். மயிலினிறகைச்சுட்டு அந்தச்சாம்பலோடு தே

ணேக்கலந்து கொடுத்தால் விக்கல்நிற்கும். குளவிக்கூண்டைச்சுட்ட சாம்பலைத் தேனிற்கலந்து கொடுத்தால் விக்கல்நிற்கும். நாயுருவியைச்சுட்ட சாம்பலைத் தேனிற்கலந்து கொடுத்தால் விக்கல்நிற்கும். ஒருசவுக்கத்தை வர்த்தியாகத்திரித்து நாசியில்விட்டுத் தும்மல்வந்தால் விக்கல் அனுகூலமாகும். வெண்கலக் கிண்ணத்திற் சிற்றாமணக்கெண்ணெய்விட்டு ஒரு அகலில் ஷை எண்ணெயைக் கொஞ்சம் ஊற்றிப்பெரிதாய் வர்த்திபோட்டு ஷை கிண்ணத்தையதின்மேற்பிடித்து எண்ணெய்சூடேறினவுடனே சம்பா அரிசிச் சாதத்தைப் பொட்டணங்கட்டி எண்ணெயில் தோய்த்து முதுகு முள்ளந்தண்டில் ஒத்தடம்போட அனுகூலமாகும். பசுவின்பாலேட்டைச் சுத்தமான நல்லெண்ணெயில் நனைத்து உள்ளுக்குக் கொடுத்தால் விக்கல் அனுகூலமாகும்.

பிராணசுரத்துக்கு அனுபானம்.

303. சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, இஞ்சி, நொச்சில், கொடிவேலி, கையாந்தகரை, ஆடாதோடை, சீந்திற்கொடி, முருங்கைப்பட்டை, வெற்றிலை, சர்க்கரை, துளசி, கிராம்பு, வெள்ளைப் பூண்டு, இவைகளை அனுபானமாய்ச் சேர்த்துக்கொடுத்தால் சகல சுரமுந்தீரும்.

பிராணசுரக்கியாழம்.

304. மணத்தக்காளிசமூலம், பேராமுட்டிவேர், நாய்த்துளசி, வசம்பு, சுக்கு மரமஞ்சள், மஞ்சள், இவை சமமாகச்சேர்த்து ஒருபடிசலம்விட்டு அஷ்டபாகம் கியாழஞ்செய்து ௩-நாளுட்கொண்டால் பிராணசுரம் சொஸ்தமாகும்.

முறைபிராணசுரக்கியாழம்.

305. கொடிமுந்திரிப்பழம், சீந்திற்கிழங்கு, மணத்தக்காளி வேர், நெய்ச்சட்டிவேர், சிற்றாமுட்டிவேர், சுக்கு, திப்பிலி, இவை சமமாகச்சேர்த்து மேற்சொன்ன விதமாய் கியாழஞ்செய்து ௫-நாளிரண்டுவேளை யுட்கொண்டால் வியாதிதீரும்.

இரத்தபித்தத்துக்குமருந்து.

306. மூங்கிலிலை, வெட்டிவேர், கோரைக்கிழங்கு, விலாமிச்சம்வேர், மாதுளம்பிஞ்சு, வெள்ளரிவேர், பச்சைப்பயற்றின்வேர், சுக்கு, இவை சமமாகச்சேர்த்து ஒருபடிசலம்விட்டு அஷ்டபாகக் கியாழஞ்செய்து ௫-நாளிரண்டுவேளை யுட்கொண்டால் இரத்தபித்தம் அனுகூலமாகும்.

மூர்ச்சைக்குமருந்து.

307. நெருஞ்சில்வேர், அஸ்வந்திக்கிழங்கு, பூனைக்காலிவேர், தண்ணீர்விட்டான்கிழங்கு, சுக்கு, கோரைக்கிழங்கு, சீரகம், இவை

சமமாகச்சேர்த்து மெல்லியதாக நறுக்கியிடித்து, படிசலம்விட்டு அஷ்டபாகக் கியாழஞ்செய்து ரு-நாள் இரண்டுவேளை உட்கொண்டால் மூர்ச்சை அனுகூலமாகும்.

## இரத்தஅதிசாரத்துக்குமருந்து.

308. பெருமரப்பட்டை பூக, மாதுளைச்சாறு, வாழைப்பூச்சாறு, தென்னம்பூச்சாறு, இவைவகை க-க்கு வீசம்படிவிட்டு மேற்சொல்லியிருக்கிற பட்டையையரைத்து மீதிரசம் அதோடு சேர்த்து ரு-நாள் உட்கொண்டால் இரத்தஅதிசாரம் அனுகூலமாகும்.

## குடிநீரளவைகூறல்.

309. குறியிட்டிராத பாண்டங்களின் குடிநீர்படி யளவைக் கண்டு வடிக்க வேண்டுமாயின் அப்பாண்டத்திலிட்ட சரக்குகளை நீருண்ட சரக்கெனக்கூறும்படி நனைத்து மட்டமாகப்பரப்பி எவ்வளவு குடிநீர்வேண்டுமோ அவ்வளவுநீரைவிட்டு அந்தநீருள்ள அளவை ஒருகோலில் குறிப்பெடுத்துக்கொண்டு பின்பு விடவேண்டிய நீரையெல்லாம் விட்டு எரித்து அக்கோலின் குறிக்குச்சரியாக நிற்குமாயின் அதுவே அளவுள்ள குடிநீராகும்.

த. சு. தே.

## நேர்வாளத்தின் உற்பத்தியுங்குணமும்.

310. நேர்வாளத்தின் புஷ்பம், இலை, காய், வேர், இவைகளிலும் பேதியாகிற குணமிருக்கிறது. இது நேப்பாள தேசத்திலிருந்து வந்ததினுலிது நேர்வாளம் என்னும் பெயர்பெற்றது. நேர்வாளத்தைச் சுத்திசெய்து அதிலிருக்கும் மூளையையும் சவ்வையும் எடுத்துவிட்டுப் பிறகு உபயோகிக்க வேண்டும். சுத்திசெய்யாமல் உபயோகித்தால் வயிற்றுக்கடுப்பும் வாந்தியும்உண்டாகும். வாளத்தை வெகுசாக்கிரதையாய்க் கையாடவேண்டும். எருமைச் சாணத்தைக் கழுநீரிலாவது காடிநீரிலாவது கரைத்து நேர்வாளக்கொட்டைகளை துணியில்முடிந்து அதிற்போட்டு வேகவைத்து மறுபடி அந்தக்கொட்டைகளையுடைத்து முளையும் சவ்வுமெடுத்து விட்டுப் புளித்தமோரில் கO-நாள் ஊறவைத்து உபயோகப் படுத்தலாம். சுத்திசெய்த வாளம், ஆமணக்குமுத்து, மிளகு, இம்மூன்றையும் சமவிடைசேர்த்து பசுவின்பாலாவது பழச்சாறுவதுவிட்டு அரைத்துத் துவரைப்பிரமாணம் மாத்திரைசெய்து ஒரு மாத்திரை வெந்நீரில் உட்கொள்ள நன்றாய்ப்பேதியாகும். அதிகமானுல் வசம்புக்கொழும் மோர்சாதம்சாப்பிடலாம். நேர்வாளமாத்திரைகள் நரம்புகளைப்பற்றிய வலிமுதலான ரோகங்களை நீக்கும்மருந்தாம். அதிக பலவீனமுள்ளவர்களுக்கும் வயற்றில் தாபனரோகங் கண்டிருப்பவர்களுக்கும் வயதுசென்றவர்களுக்கும் கர்ப்பிணிகளுச்கும் நேர்வாளமாத்திரை கொடுக்கலாகாது. நேர்வாள இலைச்சூரணத்தை நல்லபாம்பு கடித்த இடத்திலரைத்துப் போடலாம்.

## வாந்திபேதிமாத்திரை.

311. மிளகு, பெருங்காயம், அபின் வகைக்கு, ௵ வபரு இவைகளைச்சேர்த்து மெல்லிதாக அரைத்து கஉ-மாத்திரை செய்துகொண்டு அரைமணிக் கொருதரம், வாந்திபேதி நிற்கிறவரையில் கொடுக்கவேண்டியது. ஏழுமுதல் பதினறுவயதுள்ளவர்களுக்குப் பாதிமாத்திரைகொடுக்கலாம். வங்காளதேசத்தில் இந்த மாத்திரைமிகவும் அனுபோகமானதாக ட்றஸ்ஸர் ஜெகநாத நாய்க்கரால் சொல்லப்பட்டது.

## மிர்தார்சிங்கிசெந்தூரம்.

312. மிர்தார்சிங்கியை யொருகலயத்திற் போட்டு, எலுமிச்சம்பழரசம்விட்டு வாய்மூடிச் சீலைமண் செய்து குழியில் அ-நாள் புதைத்து எடுத்துக்கழுவிப்போட்டு ௸ மருந்துக்கு ச-ல் ஒரு பங்கு கந்தகங்கூட்டி, பொற்றலைக்கையான் சாற்றால் ஒருசாமமரைத்து, பில்லைசெய்து காயவைத்துத் தரையிற் குழிதோண்டி செங்கற்றூள்நாழிகீழேபரப்பி அதின்மேல் பில்லைவைத்து மேலேநாழிதூள் போட்டுமூடி, அதன்மேல் பத்து எருவடிக்கிப் புடம்போட்டெடுத்து மறுபடியும் பொற்றலைக்கையான் சாற்றாலரைத்து, பில்லைசெய்து காயவைத்துச் சீலைமண்செய்து புடம்போடுக. இவ்விதமாக மூன்றுபுடமானபிறகு மறுபடியும் பொற்றலைக்கையான்சாறுவிட்டரைத்துக் காயவைத்துக் கிளிஞ்சிற் சட்டியில் வைத்து மேலுங் கிளிஞ்சிற்சட்டிமூடி, மூன்று சீலைமண்செய்து, பத்தெருவிற் புடம்போடச் செந்தூரமாகும். இதை பணவெடை, தேன், வெண்ணை முதலிய அனுபானங்களில், லேகியகிருத சூரணகியாழம், இவைகளிற்சேர்த்து உட்கொண்டால், எல்லா வியாதிகளும், சொஸ்தமாகும்-பத்தியம். நோய்க்குத்தக்கபடி வாய்வு பதார்த்தங்களை நீக்கிப் பத்தியம் நடத்தவேண்டியது.

## பவுத்திரபுண்ணுகிப்புரைவிழுந்ததற்குமருந்து.

313. திருமேனிப் பத்திரியென்கிற குப்பைமேனியைப் பேசாமற் கொட்டைப்பாக்களவு கசக்கி ஆழாக்கு சிற்றாமணக்கெண்ணையிற்போட்டு, இலைவேகிறவரையில் எரித்து வெந்தவுடன் மத்தித்துக் காலையில் உட்கொண்டால் விரேசனமாகும். இவ்விதம் ஒருமண்டலத்தில் ரு-தடவை உட்கொண்டால் ச-கண்முதல் எ-கண்வரையில் விழுந்து நீர்மலம் வந்தபோதிலும் ரணமாறி அனுகூலமாகும். தினகாலம் ௸ மூலிகையின் சூரணத்தைச் சிற்றாமணக்கெண்ணையிலாவது நல்லெண்ணெயிலாவது கெச்சைக்காயளவு உருட்டி உட்கொண்டு வாலாம். எவ்விதப்பவித்திரங்களும் அனுகூலமாகும். பத்தியம்-ஆகாதபதார்த்தங்கள் தள்ளிப் பத்திய பதார்த்தங்களை உபயோகித்துக் கொள்ளலாம். இது திருப்பாங்

குன்றம் சுப்பிரமண்ணியரால் ஒரு பக்தனுக்குச் சொற்பனத்திற் சொல்லி அனுபோகத்தில் வந்தது.

## கண்மருந்து.

314. எம்புராவேர் சமூலங் கொண்டுவந்து சுத்தமாய்க் கழுவிப்போட்டு சீரகஞ்சேர்த்து நையத்தட்டி முலைப்பாலில்பிசறி வெள்ளைத்துணியில் பொட்டலங்கட்டி ௩-நாள் ஆறுவேளை கண்ணிற் பிழியச் சகல கண்வியாதியுந்தீரும். ஷ மூலிகையைச் சுத்தமாய்க்கழுவிக் கல்வத்திற்போட்டுக் குழவியிலொட்டும்படி யரைத்துக் கயிறுசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு சுத்தசலத்திலாவது முலைப்பாலிலாவது உரைத்துக் கண்ணிற்போடக் கண்வியாதிகள் நிவர்த்தியாகும்.

## செம்புப்பச்சைசெய்யும்விதம்.

315. செம்புபாத்திரம் அரைப்படி யளவுதயார்செய்து அதில்ஆழாக்கு எலுமிச்சம்பழரசத்தைவிட்டு வில்வஇலைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு வகைக்கு ஆழாக்கு விட்டு ஷசாறு வகையிருக்கிற கிண்ணத்தில், சரு-அரைக்காசு சல்லியைக்கூடப்போட்டு வாய்க்குச் செப்புச் சில்லால்மூடி யிந்தக் கிண்ணம் அமிழத்தக்க பள்ளமுள்ள மண்சட்டியில் பசுந்தயிர்விட்டு ஷ கிண்ணத்தை நடுவில்வைத்து, கிண்ணத்தில் விளிம்புவரையில் தயிரிறுக்கும்படியாய்ப்பார்த்து, மேற்சட்டிமூடியேழுசீலைமண்செய்து, இடுப்பளவு பள்ளம்வெட்டிப் பாதிவரையில் வெள்ளாட்டு எருவைப்போட்டு, அதின்மேலிந்த சட்டியை வைத்து, மேலும் எருவைப்போட்டு அமுக்கி, சுரு-மாதஞ் சென்றெடுக்கப் பச்சை வர்ணமுங் கிருஷ்ண வர்ணமுமாயிருக்கும். ஷ கிண்ணத்திலும் சட்டியிலு மிருக்கிற பச்சையெல்லாம் சூர்கத்தியினால் வழித்தெடுத்துக் கொள்ளுக. இந்த பச்சை வீசு, பீதரோகிணி வீசு, இரண்டையும் நந்தியாவட்டைப்பூச்சாறுவிட்டு ச-நாளரைத்துக் கயிறுசெய்து நிழலிலுலர்த்தி முருங்கைப்பூச்சாறு, காங்கணப்பூச்சாறு, தும்பைப்பூச்சாறு, வெற்றிலைச்சாறு, குட்டிப்பனைமட்டைச்சாறு, தேன் இதுகளிலுரைத்துக் கண்ணிற்போடக் கண்வியாதி யெல்லாந்தீரும். ஷ பச்சையும் பசுவெண்ணெயுஞ் சமமாகச் சேர்த்துக்கொண்டு அந்தி சந்தி கண்ணிற்போட நேத்திரரோகம் கூசு-ம் அனுகூலமாகும்.

## பாவனகடுக்காய்.

316. சூரத்துக்கடுக்காய் சதைப்பற்றுளதாய் க௦௦-கொண்டுவந்து, சுத்த சலத்தில் ஊறவைத்து ௩-நாள் சென்றபிறகு ஷ சலத்தை யெடுத்துவிட்டுப் புதியஜலம்விட்டு மறுபடியும் ௩-நாள் ஊறவைத்து இவ்விதம் ௩-முறைசெய்து பிறகு ஷ கடுக்காயை

விகைபோக்கிக்கண்டநிறைக்கு ச-ல் ஒருபங்கு கல்லுப்புசேர்த்து புளித்தமோரை ஷ மருந்து நிறையவிட்டுப் பீங்கானில்அல்லது மண்பாத்திரத்திற் போட்டு வெய்யிலில் நீர் சுவறக் காயவைத்து மிளகு, இந்துப்பு,பச்சைவசம்பு, ஓமம், வகைக்கு பூ அ, சித்திர மூலப்பட்டை, கண்டத்திப்பிலி, செவ்வியம், திப்பிலி, வகைக்கு பூ ச, ஷ சரக்குகளைத்தூள்செய்து கடுக்காயில்தூவி யெலுமிச் சம்பழரசம் செல்லுமானதுவிட்டுப் பிசறிநிழலிலும் வெய்யிலிலு முலர்த்தி மறுபடி யெலுமிச்சம்பழ ரசமும் இஞ்சிச்சாறும் நாழி விட்டு, கைபாற்பிசறி நிழலிலும் வெய்யிலிலுங் கொஞ்சம்ஆறவை த்து, சாடியில்வைத்துக் கொள்ளவும் இதைக்காலைமாலை ஆகாரங் கொள்ளும்போது கொட்டைப்பாக்களவு உட்கொண்டால் சூலை, வாந்தி, குன்மம், முத்தோஷம் சுவாசகாசம், சுரம், கிரகணி, மூலம், நாசிகாபீடம், பாண்டுவீக்கம், அரோசிகம், மார்பச்சூலை, வயிற்றுவலிகள் போகும். தேகபுஷ்ட்டியுந் தாதுவிருத்தியு மாகும். பத்தியம்-சங்கமம்தவிர இச்சாப்பத்தியம்.

நாகராதித்தயிலமென்கிறசுக்குத்தைலம்.

317. மாவுள்ளசுக்கை விஷம் என்கிற தோலை அறச்சீவி கற ணைகறணையாகநறுக்கி பூ அ0-நிறுத்துக் குடிநீர்ப்பாண்டத்திலி ட்டு அடுப்பேற்றி யெட்டுமரக்காலாற்றுச்சலத்தைவிட்டு கமலாக் கினியாக எரித்து எட்டிலொருபங்காக்கி, தயிலபாத்திரத்திற்வடி த்து ஷ கிஷாயத்தில் அறையென்கிற யிரண்டுபடி நல்லெண் ணெயும் இரண்டுபடி பசுவின்பாலையும் கூடவிட்டு, சிற்றரத்தை, சுக்கு, மிளகு, திப்பிலி, கோரைக்கிழங்கு, மஞ்சிஷ்டி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், அகிற்கட்டை, தண்ணீர்விட்டான் கிழங்கு, எருக்கின்வேர், பட்டை, கடுகுரோகிணி, கோஷ்டம், கொடிவேலிவேர், தேவதாரிப்பட்டை, சந்தனக்கட்டை, வெள் ளைக்குங்கிலியம், செவ்வியம், ஆமணக்கின்வேர், வெள்ளலத்திப் பட்டை, பேரீச்சங்காய், கொடிமுந்திரிப்பழம், இந்துப்பு யென் னும் உச-வகை சரக்குகளையும் தனித்தனியே மிகவும் நுண்ணிய பொடியாகச்செய்த தூளை ஒவ்வொன்றும் வ-பூ விழுக்காடு நிறு த்துமுற்கூறிய எண்ணெயில் விட்டு கஸ்தூரி குங்குமப்பூபொடி இரண்டும் அறை அறை வீ வடிகலத்தில்போட்டு வைத்துக்கொ ண்டு மெழுகுபதத்தில் வடிகடத்தில் வடித்துக்கொள்ளவும். அவ் வாறுவடித்த தைலத்தை நெல்லுக்குள் ஒருமாதம் வைத்தெடுக்க சுத்தியாம். இதன்பெருமையை நம்மால் கேட்க வேண்டுவதில்லை. அதுவேதனது தொழிலால் யாவருக்கும் தெரிவிக்கும், ஆயினும் அதனை ஆளுமுறைமையை ஆராயுமிடத்தில் துவாலை சிகிச்சை யென்கிற மேற்பூச்சியினால் தேகத்தில் நிலைத்த ஆவர்த்தவாதங்க ளெல்லாம் நீங்கும். நாசிகளில் நசியம்பண்ணினால் பீனிசரோகங்க

ளும் தலைவலிகளும் ஒழியும். வாயிலிட்டுக்கொப்புளித்தால் பல்லு களின் வேரைப்பற்றிய வாதநோயும் பல்லறணையென்கிற ரோக மும் நீங்கும். காதுக்குளிரண்டுதுளிவிட்டால் கர்ணசூலைநிவர்த்தி யாம். மெதுவாகிய தோலில் பிரைவைத்துதைத்தகுல்லாவில் தயி லம்விட்டுச்சிரசில் போட்டுக்கொண்டால் சிரரோகம் தீரும். ஸ்நா னஞ்செய்தால் பலம்பொருந்திய கோழைக்கட்டுகளும் சுரவாத ரோகமும் தீரும். இச்சாபத்தியம். ஷை தைலத்தை ஸ்நானஞ்செ ய்தால் புளிதள்ளவும். அறைப்பு உசிலம்பொடி.

இரணசஞ்சீவிதைலம்.

318. தாளகம் வ௯க, பத்துச்சேங்கொட்டையை பாதிபாதி யாகநறுக்கிஇரண்டையும் சேர்த்துப்பொடிசெய்து காம்புநீளமுள் ள ஆலக்கரண்டியில் போட்டு நல்லெண்ணெய் பூ௯ கம, விட்டு தழ லில்வைத்து ஷை தாளகமும் எண்ணெயும்உறவு சேர்ந்தவுடனே ஒரு அகலச்சட்டியில் கழுநீரும் சுத்தசலமும் சேர்த்து ஊற்றி அதில் ஷை தைலத்தை ஊற்றிவிட்டு மறுநாளொரு பீங்கானில் வாரெண்ணையாயெடுத்து வழித்துக்கொள்ளவும். ஷைதைலத்தை கோழியிறகால் எடுத்து மேகரணங்களுக்குப் போட்டால் அனு கூலமாகும். வெற்றிலையில் தடவி உள்ளுக்குக்கொள்ள சன்னிபா தந்தீரும். ஷைதைலம் உபயோகப் படுத்துங் காலத்தில் காலையில் தோசை, இட்டலி, பழயசாதம் இவைகளிலொன்றை எருமைத் தயிரில்கலந்துபூர்த்தியாக வயிறுநிரையச்சாப்பிட்டு தைலம்தடவி ஒருஜாமம் ஊறவைத்து உசிலம் பொடியிட்டு தேய்த்து இளவெ ன்னீரால் குளிப்பிக்கவும். இவ்வாறே ஏழுநாள் குளித்தால் இரண ங்கள்ஆறும். ஷை தைலத்தை வாரெண்ணையா யெடுக்கும்போது மறுபடி ஒருதரம் நீர்ச்சுண்ட காச்சிக்கொள்ளவும். இது சுப்பிர மணியபண்டிதர் அனுபோகித்து வந்தது.

மேகரணமாற்றுமூலிகை.

319. ஆதொண்டையிலையை ஏழு இலை தலைமாற்றி மாற்றி அடுக்கித் தழலில் வாட்டி ஆறுதரணத்தின் பேரில் வைத்துக்கட் டினால் ரணமாறும்.

இந்தஸ்திரீக்குக்கெர்ப்பந்தரிக்காதென்றறிக.

320. ஒரு ஆலக்கறண்டியில் தணல்நெருப்பை அள்ளி அதி ல் மட்டிப்பாலைவிட்டு அந்தப்புகையை பரிட்சிக்கிறபெண்களைமுத லில் சிறுநீர்போக்கிவரச்சொல்லி உடனே ஷை புகையை குய்யஸ் தானத்தில்படும்படி செய்வித்தால்உடனே மறுபடியும்சிறுநீர்விட நேர்ந்தால் அந்த ஸ்திரீக்குக் கெர்ப்பமுண்டு, இல்லையாயில் சென்ம மலடென்றறியவேண்டியது.

கெர்ப்பந்தரிக்க.

321. ஊர்க்குருவிமூளையைச் சாராயத்தில்உரைத்துக்குடித் திடுக. பெண்குறியில் பூசிவரவிரைவில் கெர்ப்பந்தரிக்கும்.

பாலசஞ்சீவியெண்ணெய்.

322. வெள்ளைச்சாரணைச்சாறு, வேளைச்சாறு, மேனிச்சாறு, நொச்சியிலைச்சாறு, உத்தாமணியிலைச்சாறு, நாய் வேளைச்சாறு, கையாந்தகரைச்சாறு, ஈயக்கொடிச்சாறு, சங்க இலைச்சாறு, துளசிச்சாறு, கண்டங்கத்திரிச்சாறு, தூதுவளைச்சாறு, பூவரசம்பழுப்புச்சாறு, புங்கம்பால், முலைப்பால், கம்மாறுவெற்றிலைச் சாறு, பொடுதலைச்சாறு வகைக்குபடி-௨, வெள்ளைப்பூண்டுத்தைலம்படி-பது, வசம்பு, ஓமம், சிற்றரத்தை, சுக்கு, திப்பிலி, மிளகு பூ௲ க, விளக்கெண்ணெய் படி-உ, வேப்பெண்ணெய் படி-௨, மேற்கண்ட சரக்குகளையெல்லாம் ஷை இரசங்களினால் மைபோலரைத்துஷை எண்ணெய்களில் இரசங்களையும்விட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்துக்கொண்டு, கருஞ்சீரகம் பூ௲ க, கடுக்காய்த்தோல் பூ௲ க, கடுகுரோகிணி பூ௲ உ, தனித்தனியே பொன்னிறமாகவறுத்து ஆர்க்கப் பொடிசெய்துபோட்டுக்கலக்கிவைத்துக்கொண்டு பெரியகுழந்தைகளுக்கு கவ-வீ௲யும், சிறியகுழந்தைகளுக்கு உ-வீ௲ யுங்காலையில் மூன்றுநாளைக்குக்கொடுத்திடுக; வியாதி கடினமாகஇருந்தால் ஐந்துநாளைக்குக் கொடுக்கலாம். குழந்தைகள் பலமும் வயதும் நிதானித்துக்கொடுக்க. இராத்திரிக்குக் கொடுக்க வேண்டிய கியாழம். மிளகு வீ௲ உ, சாம்பல் செய்து, சுக்கு வீ௲ க, நறுக்கிப் போட்டு அரைசேர்ஜலம்விட்டு அரைக்காற்சேராய்க் காய்ச்சிக் கொடுத்திடுக. தீரும் வியாதிகள்-அள்ளுமாந்தம், ஊளமாந்தம், போர்மாந்தம், வாதமாந்தம், சீதளமாந்தம், நாசிமாந்தம் இவை முதலியன தீரும். பத்தியம்-சமயோசிதமாய்ச் சொல்லுக.

ஐவகைப்பொடி.

323. சுண்டைக்காய் வற்றல், நாய்க்கடுகு, வேப்பம்பூ, உளுந்து, எள்ளு, இவைகளைத் தனித்துச் சமமாய் வறுத்துப் பொடி செய்துகொண்டு தகுந்த உப்பும்மிளகும் வறுத்துப் பொடிசெய்து கொண்டு ஷை எல்லாப்பொடிகளையு மொன்றாய்க்கலந்து ஓர் புதுப்பாண்டத்தில் எடுத்து வைத்துக்கொண்டு, வேண்டும் பொழுது சாதத்தில் நெய்யையும் பொடியையும்சேர்த்து முன்னே சாப்பிடலாம். வாதசீதளத்தைக் கண்டிக்கும்.

சகலமேகத்துக்கும் மதுஸ்மிகலேகியம்.

324. பரங்கிப்பட்டைசேர்-௩, வெள்ளைச்சாரணைவேர், குப்பைமேனிவேர், கொடிக்கள்ளி, முதியார்கூந்தல், தும்பைவேர், சிறுகுறிஞ்சிவேர், சிற்றாமுட்டிவேர், பேராமுட்டிவேர், எருமையாட்டான்கொடி, சித்திரமூலவேர், சத்திச்சாரணைக்கிழங்கு, கோரைக்கிழங்கு, நிலப்பனங்கிழங்கு, சீந்திற்கொடி, வெறுகன்கிழங்கு

அமுக்கிராக்கிழங்கு, வெள்ளறுகு, சங்கம்வேர், பிரப்பங்கிழங்கு, மாவிலிங்குவேர், முற்றினவேப்பம்பட்டை, வில்வவேர், தண்ணீர் விட்டான்கிழங்கு, பற்பாடகம், நிலஆவாரை, ஆற்றுமுள்ளிவேர், முருங்கைவேர், வெள்ளைக் காக்கணவேர், சிவதைவேர், வகைக்கு தூக்கு-ந, இவையெல்லாம் மெல்லிய துண்டுகளாகச்செய்து பெரிய பானையிற்போட்டு, தண்ணீர்விட்டு, எட்டிலொருபாகங் கியாழமெடுத்து வைத்துக்கொண்டு, மஞ்சள்இலை, கையாந்தகரை, தும்பை, தழுதாழை, இஞ்சி, பொடுதலை, நொச்சில், எருக்கிலை, பிரமியப்பூண்டு, சத்திச்சாட்டறணை, ஓரிதழ்த்தாமரை, பொற்றலைக்கையான், செருப்புள்ளடி, தினுசுக்கு தூக்கு-ந, கொண்டுவந்துஇடித்து ஒருபடிரசமெடுத்து, ஷை கியாழத்திற்சேர்த்து எலுமிச்சம் பழம் - கருo-பிழிந்த இரசம், உc-தேங்காய்ப்பால், முலைப்பால் படி-க, சேர்த்து, பசுவின்பால்படி-உ, கூடவிட்டுக் கடுக்காய், தான்றிக்காய், நெல்விமுள்ளிவகைக்கு பூ கo, சுக்கு, மிளகு, வகைக்கு பூ எ, திப்பிலி, தாளிசபத்திரி, செவ்வியம், சிறுநாகப்பூ, வாய்விளங்கம், ஓமம், கருஞ்சீரகம், சிற்றரத்தை, திப்பிலிமூலம், பேய்ப்புடல் வகைக்கு பூ ச, கற்கடகசிங்கி, தக்கோலம், வால் மிளகு, மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், கிராம்பு, கொத்தமல்லி, இந்துப்பு, சடாமாஞ்சில், ஏலம், சீரகம் வகைக்குபூ உ, குங்குமப்பூ வீ உ, சீனிச்சர்க்கரை பூ கூo, நெய் பூ சரு, தேன் பூ சரு, மேற்சொல்லியபால், கியாழம் சாறுவகைகளில் சர்க்கரை போட்டுக்கரைத்து அடுப்பேற்றி பாகுசெய்து மேற்சொல்லிய கடைச்சரக்கும், பரங்கிப்பட்டையும்உரலிலிடித்து வஸ்திரகாயஞ்செய்து பாகிற்சேர்த்துஷை நெய்யுந்தேனுஞ்சேர்த்து லேகியபக்குவத்தில் எடுத்துக்கொள்க. இந்த லேகியம் காலைமாலைகளில் புன்னைக்காயளவு உட்கொண்டால் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகளும் அனுகூலம். இந்தமருந்தை வைத்தியர்கள் செய்து கொடுக்கு முன்னமே பிரபுக்களிடத்தில் தங்கக்கடகம் செய்து போடவேணுமென்று பேசிக்கொண்டு ஆரம்பிக்கலாம்.

### ஆருத இரணம் புற்றுக்கு பிளாஸ்திரி.

325. வெள்ளைக்குங்கிலியம் பூ க, மனிதர் எலும்புசுட்டது பூ க, இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு, ஒருபலம் பசுவெண்ணெயைக்கூடப்போட்டு அரைத்து, அதில்இலிங்கம்வீ உ, பூரம் வீ உ, சேர்த்து இரண்டு சாமமரைத்துச் செப்பு அல்லது ஈயச் சிமிழில் வைத்துக்கொள்க. மெல்லியதுணியில் தடவி இரணங்களின் மேற்போட, எலும்பைப்பற்றிய ரணங்களுமாறும்.

### விஷப்பிரதிவிஷம்.

326. எட்டிக்கு நாவல்பட்டையும், வெண்ணுபிக்குத் தான்றிக்காயும், ஊமத்தைக்குத் தாமரைக்கிழங்கும், கள்ளிக்குஆவாரை

ப்பட்டைக்கியாழமும், அலரிக்குக் கடுக்காய்கியாழமும், எருக்கஞ் செடி, பால், வேர்களுக்கு, எள்ளுஞ்சர்க்கரையும், கழுதை வண்டோட்டுக்கு நல்லசங்கம்பழமும், சுண்ணாம்புக்கு மஞ்சளும், வாளத்துக்கு வசம்பும், செவதைக்கு வெள்வேலன்பட்டைக் கியாழமும், பாஷாணத்துக்கு மிளகும், குன்றிவேருக்குவெண்காரமும், கருநாபிக்குச் சிறுகீரையும், வெற்றிலை நல்லெண்ணெய்க்கு முற்றின தேங்காயும்பாலும், நெல்வேர் சர்க்கரைக்கு விலாமிச்சைவேர்க் கியாழமும், வாழைப் பழத்துக்குச் சுக்குக்கியாழமும், பலாச்சுளைக்கு இளவெந்நீர்நெய்யும், மாங்காய்க்குத் தேங்காய்ப்பாலும், தேன் நெய்களுக்கு வெந்தகரியும், விரம் பூரங்களுக்குக் கந்தகம் வெண்ணெயி லிழைத்துக் கொடுத்துத் தேங்காய் வழுக்கையும் உடனே கொடுத்திடுக.

### நல்லப்பாம்புவிஷம்தீரமருந்து.

327. எருக்கு மூன்று இதழுடைய கொத்து-௩, தும்பைச் சமூலம் ஒருசெடி, குப்பைமேனி ஒருசெடி, மிளகு க00-எல்லாம் சேர்த்து நன்றுயரைத்து, கழற்சிக்காயளவு மூன்று உருண்டை செய்து உள்ளுக்குக்கொடுத்து, முருங்கையிலைநசியம்பிழிய அனுகூலம்.

### இதுவுமது.

328. நல்லபாம்பின்பிச்சை வெற்றிலையில் மடித்துக் கொடுக்க விஷம்தீரும். இலுப்பைக்கட்டியைச் சிறுநீர் விட்டரைத்து நசியமிடவிஷமிறங்கும். ஆணுக்குப் பெண்ணின் சிறு நீரும், பெண்ணுக்கு ஆணின் சிறு நீரும் உபயோகித்திடுக. மிளகு, வெற்றிலை, உப்பு, மூன்றையும் நறுக்கிக்கலிகமும், நசியமுமாக உபயோகிக்க அனுகூலமாகும்.

### தேள்விஷம்தீர.

329. வெள்ளைப்பாஷாணம் பூ௳க, நாலாங்காய்ச்சல் வெடியுப்பு வ-சேர், எருக்கம்பால்விட்டரைத்து, பாஷாணத்துக்குக்கவசமிட்டு, சீலைமண்செய்து அவிபுடமிட் டெடுத்துக்கொள்க. தேள் கொட்டினவிடத்தில் உமிநீர், அல்லது சுத்தஜலம்விட்டு மருந்தை இழைத்துக்கொட்டினவாயில் தடவவிஷம்தீரும். கப்புக்கால்பூவைக்கடித்த இடத்தில் கசப்பேறத்தேய்த்தால் விஷமிறங்கும். கற்றாழைச்சோற்றைக் கடித்த இடத்திற்றேய்த்து உள்ளுக்குக் கொடுக்க விஷமிறங்கும். நெய்ச்சட்டி இலையைக் கடிவாயில்தேய்க்க விஷமிறங்கும். நத்தைச்சூரி இலையை உள்ளுக்குக் கொடுக்க விஷமிறங்கும். கொம்புத்தேனைக் கடிவாயில் தடவ விஷமிறங்கும். வெண்குன்றிவேரை வெந்நீரிலுரைத்துப் பஞ்சிலூட்டி, இடத்தில் கொட்டினால் வலது மூக்கிலும், வலத்தில் கொட்டினால் இடது மூக்கிலும் நசியம்பிழியவிஷமிறங்கும். குப்பைமேனி உப்புக்கல்லுடன்

வைத்துக்கசக்கிக் கொட்டினபாகத்துக்கு மறுபாகம் காதில்பிழிய விஷமிறங்கும். குழாய்க்கந்தகம் குளிர்ந்த சலத்தில் உரைத்துப் போட விஷமிறங்கும்.

நண்டுவாய்க்காலி விஷம்தீர மருந்து.

330. எட்டிவேர்ப்பட்டையை நெல்லிக்காயளவு அரைத்து, ஆழாக்குவெந்நீரில் கரைத்து உள்ளுக்குக்கொடுத்துக் கடிவாயில் கத்தரிக்காயைச் சுட்டுக்கட்டினால் விஷம் தீரும்.

இரத்தமண்டலி விஷத்துக்கு.

331. ஆனைவணங்கி இலையை எலுமிச்சங்காயளவு அரைத்துச் சுத்தசலத்திற்கலந்து உள்ளுக்குக்கொடுக்க விஷம்தீரும்.

பூரான்கடி விஷம்தீர.

332. குப்பைமேனிச் சாற்றைப் பிழிந்துதடவப்போகும்.

பேநாய்க்கடிக்கு.

333. சோற்றுக்கற்றாழையும் கறியுப்பையும் சமமாக இடித்துக்கடிவாயில் ங-நாள்கட்டுவதும்தவிர, பேயத்திவேர், ஆலம்பட்டை, வேப்பிலை, மூன்றும்வகைக்கு பூ கா, இடித்து ஒருபடிகழுநீரிற்போட்டுக் கொதிப்பித்துக் குழம்பாயிறக்கி ஏழுநாள் மேலே பூசி விஷத்துக்குக்கொடுக்கும் பேதிமருந்து உள்ளுக்குக்கொடுக்க அநுகூலமாகும்.

தாளகபஸ்பம்.

334. தாளகம் பூ க, சுத்திசெய்து செகப்புக் கத்திரிக்காய் நீளமுள்ளதா யெடுத்துக் குடைந்து தாளகத்தை யுள்ளேவைத்து இறுகக்கட்டி, சிறு கலியாணப்பூசுணிக்காயைக் கத்தரிக்காய் செல்லும்படி துளைத்து, உள்ளேவிட்டுத்துளைத்தெடுத்த பில்லையாலே மூடி, ஏழுசீலைமண்செய்து குழிவெட்டிக் காட்டெருவினாற் கெஜப்புடம்போடப் பஸ்பமாம். இந்தப் பற்பத்தை ஒரு குன்றி யெடை பத்தியத்துடன் அனுபானத்தில் உட்கொண்டால் கபரோகம் நிவர்த்தியாகும்.

இதுவுமது.

335. கழுதைக்குறத்தியென்கிற கழுதைப்புலியின்மலத்தை ரு-பூ கொண்டுவந்து தாளகம் பூ க, சுத்திசெய்து ஒரு ஓட்டில் கீழே ஷை மலம் உ௪-பலத்தைப் பரப்பி அதின்மேல்தாளகம்வைத்து, அதை மற்றப்பாதிமலத்தால் மூடி, மேலோடுமூடி, மண்சீலைசெய்து, எட்டு வராட்டியில் புடமிடப் பஸ்பமாகும். ஒரு குன்றி எடைமருந்தைத் திரிகடுகு சமபாகம் வறுத்துப் பொடிசெய்து, நெய், தேன் கலந்து உட்கொள்ளக் கபரோகம் நிவர்த்தியாகும், பத்தியபோசன முத்தமம்.

## இரசபஸ்பம்.

336. கரியபனங்காயுள்ள மரத்தினது இளங்குருத்தின் மட்டைச்சாறுவிட்டு, ரு-வீசு வாலரசத்தைக்கல்வத்திலிட்டு அரைத்து ஷ பனேயோலே நாலுவிரற்கடை இரட்டையேடு நறுக்கி, அதில் அரைத்த ரசத்தைவைத்து, அதை யவ்வோலையினுல் நாலடுக்கு மூடிச் சீலைமண்செய்து க௦-வராட்டியில் புடமிடப் பஸ்பமாகும்.

## மேகவேட்டைகள் கிரந்திமுதலானரோகநிவாரண மருந்து.

337. பிரமதண்டியென்கிற குடிகட்டிப் பூண்டும், உக-மிளகும், பூண்டு பல் எ-ம் சேர்த்து எலுமிச்சங்காயளவு அரைத்து, ந-உருண்டைகள் செய்து, உட்கொண்டு நீராகாரம் குடித்திடுக. விரேசனமாகும். பத்தியம்-கச்சைக்கருவாடுகுழம்பு ஆகும். மோரன்னம் உட்கொள்ளலாம். இவ்வாறு ந-முறை மருந்துண்டால் மேகரோகங்கள் நிவர்த்தியாகும்.

## தாதுவிருத்திமருந்து.

338 கர்ச்சூரக்காய்-கக, கொண்டுவந்து விதையை நீக்கி, மைசாட்சி ஒருகாசு எடை பொடிசெய்து, ஷ காய்களுள் நிரப்பி, சணற்பிரி நாரால் தளர்ச்சியாய்க்கட்டி உளுத்தமாவை யறைத்துக் காய்க்குக்கவசஞ்செய்து மண்பாண்டத்தில்வைத்து, அதில் ஆவின்பால் ஒருபடிவிட்டு, பால் சுவறக்காய்ச்சிஎடுத்துக்கொள்க. காலைமாலையிலும் ஒவ்வொருகாய் உட்கொண்டால் தாதுவிர்த்தியாகும்.

## தாதுவிருத்திமருந்து.

339. கர்ச்சூரக்காய்-அ௦, கொண்டுவந்து, விதை நீக்கி அந்தக்காய்களுள் ஓமத்தைப்பொடித்து நிரப்பி நாரினுற்கட்டி, அவைகளை யொருமண்பாண்டத்தில் வைத்து, தேனைக்காய்முழுகும்படிவிட்டு, அடுப்புக்குள் அ-விரற்கடையின்கிழ் புதைத்து ஒருநாள் அடுப்பில் சமையல்செய்து, மறுநாள் கலயத்தை யெடுத்து, ஒவ்வொருகாய்மேலும் தங்கரேக்குசுற்றி, காலையிலும் மாலையிலும், ஒவ்வொருகா யுண்ணுக. நல்லஉணவுகள் உட்கொள்ளவேண்டும். இரவில் பால் நன்ருகக் காய்ச்சிக் கற்கண்டுசேர்த்து உட்கொள்க.

## கோரோசனைமாத்திரை.

340. சுக்கு பூ க, இதனைச் செம்மண்ணரைத்துத் தடவி, உமிக்காந்தலில் வைத்தெடுத்து மேற்ருேல் போக்கி, அதனேடு, வெந்நீரிலூரவைத்துக்கசக்கியெடுத்ததிப்பிலியரிசி பூ க, இப்படியேசெய்த மிளகு பூ க, கஸ்தூரி வீசுவ, தங்கரேக்கு வீசுவ, கோரோசனை வீசுஹ, இவற்றைக்கல்வத்திலிட்டு ஓமக்கியாழத்தை

யாவது, கம்மார்வெற்றிலைச் சாறுவதுவிட்டு அரைத்து, பச்சைப் பயறளவு மாத்திரைகள் செய்குக. குழந்தைகட்குத்தேனில், அல்லது முலைப்பாலில், ஷி மாத்திரை ஒன்றை யிழைத்துக் கொடுக்கச் சகலதோஷங்களும்தீரும். பெரியவர்களுக்குஞ் சமயமறிந்திம் மாத்திரையை யுபயோகிக்கலாம்.

ஜவாஹிர்மோரா.

341. நல்ல சிவப்பு தோலா-க0, பச்சைத்தோலா-க0, வைடூரியம்தோலா-சூ, கோமேதகம் தோலா-எ, புஷ்பராகம்தோலா-எ, மிளகு பிரமாணம் சூரத்து முத்து தோலா-க0, பவளம் தோலா-சூ, கருப்புப்பவளம் தோலா-உ, தங்கரேக்கு தோலா - க0, வெள்ளி ரேக்குதோலா - அ, கஹிரபா தோலா - எ, சமாக் தோலா-உ, பாவுஸ்ஹார் தோலா-உ, நல்ல கஸ்தூரிதோலா - ௩, பச்சைக் கற்பூரம் தோலா - உ, மூங்கிலுப்பு தோலா - க, அஜரூல்ஹேஹூத் தோலா-ு,இவைகளைப்பசும்பாலில்ஊறப்போட்டு மறுநாள் எடுத்து இப்படி ௩-தினம்செய்து முதலில் ரத்தினங்களைச் சமாக் என்கிற கல்வத்திற்போட்டு மெலிதாய்ப் பொடிசெய்து கொண்டு, இரண்டாவதுகஹரபாவைப் பொடிசெய்து, ௩-வது அஜரூல்ஹேஹூத்பொடிசெய்து, ச-வது பாவுஜார்சமாக், பொடிசெய்து இவையெல்லாங்கூட்டிக் கல்வத்திற்போட்டுத் தங்கரேக்கு, வெள்ளி ரேக்கு, பச்சைக்கற்பூரமும்போட்டுக் கொஞ்சம்பன்னீர்விட்டு உ-சாமம் அரைத்துக் கஸ்தூரிசேர்த்து, நல்லபன்னீரால் கஉ0 - சாமம் அரைத்து, சிளமாத்திரைகளாய்ச்செய்து நிழலிற்காயவைத்து, வெள்ளைச்சீசாவிற் போட்டுவைத்திடுக. அனுபானம்முலைப்பாலில், தேனில், நெய்யில், லேகியத்தில், ஷர்ப்பத்தில், அந்தந்த ரோகத்திற்குத்தக்கபடி அறிந்துகொடுக்கவேண்டியது. தீரும்வியாதிசகல சுரங்கள், க்ஷயரோகம், சுவாசரோகம், வெட்டைஅஸ்தி, கிரந்திகள், தாதுநஷ்டம், இரத்தகாசம், பித்தம், கபம், வாய்வுகள், நரம்பைப்பற்றினரோகம், மாரடைப்பு, மயக்கம், உதிரச்சிக்கல், வலிப்புகள், மஞ்சட்காமாலை,பீனிசம், மூளையைப்பற்றின ரோகங்கள், பெரும்பாடு, ஜன்னி,சைத்தியம், கபவாதநோய்கள், இருதயகமல வியாதிகள், ஈரலைப்பற்றியவியாதிகள், நீர்ப்பையைப் பற்றிய வியாதிகள், முதலியசகலரோகங்களுக்கும் அனுபானந்தெரிந்த பண்டிதர்கள் கொடுத்தால் அனுகூலமாகும். இந்தமருந்து இலாஜகானி அகிம்யுனானி அவர்களால் சொல்லப்பட்டது.

அசீர்ணபேதி உஷ்ணவாய்வுக்கு மருந்து.

342. உலர்ந்தமுளகாய் பூ க0, வெடியுப்பு, வளையலுப்பு, கந்தகவெடியுப்பு, உவருப்பு, கரியுப்புவகைக்குபூ க, புளித்ததயிர்

படி-உ, மேற்கண்ட உப்புவகைகளைத்தயிரிற்போட்டு, முளகாயை யும் கூடசேர்த்துத் தினமும் வெயிலில் முளகாயைமாத்திரம் உல ர்த்தி மறுபடி தயிரிற்போட்டு, இப்படி தயிர்முழுதும் முளகாயிற் சுவறுமட்டும் உலர்த்திப்பின் முளகாயைஒருபுதுப்பாண்டத்திலெ டுத்துக்கொள்க. அசீர்ணம், உஷ்ணவாய்வுகளால் வருந்துவோர் இந்த உலர்த்தினமுளகாயில் இரண்டுகாய்களை நெருப்பிற் சுட்டுத் தூள்செய்து அன்னத்திற்கலந்து நெய்யுடனுண்ண அனுகூலம். தீபனமில்லாதவர்கள் இம்முளகாயை மோரன்னத்துடன் உண்டா லும் அனுகூலம் உண்டு.

பாபுவைத்தியர் சிந்தாமணி மேவா.

343. சுக்கு, திப்பிலி, மிளகு, பற்பாடகம், குரோசானிஓம ம், சாதிக்காய், சாபத்திரி, சிறுநாகப்பூ, அதிமதுரம், ஏலம், சிற் றரத்தை, சன்ன லவங்கப்பட்டை, தாளிசப்பத்திரி, நீர்முள்ளிவி தை, வகைக்கு வ-டு, மைலாலக்கடி, சாலாமிஸ்ரி, ருமம்மஸ்த்தகி, இஸ்கோல், சாரப்பருப்பு, துத்திவிதை, நத்தைச்சூரிவிதை, வாகை விதை, நன்னாரிவிதை, வெட்பாலையரிசி, திராட்சப்பழம், பேரீச் சம்பழம், கண்டத்திப்பிலி, கொண்டை சீனிக்கிழங்கு, கோட்டம் வகைக்கு பூ க, செங்கழுநீர்க்கிழங்குவற்றல், நெய்தற்கிழங்குவற் றல், ஆம்பல்கிழங்குவற்றல், அமுக்கிராக்கிழங்குவற்றல், ஆவாரை விதை, முருங்கைவிதை, நாயுருவிவிதை, கசகசா வகைக்கு பூ உ, குங்குமப்பூ, தாமரைப்பூவின் கேசரம், வகைக்கு பூ வ, வாதுமை பருப்பு, அக்குரோட்டு, பிஸ்தாபருப்பு, கையாந்தகரைவிதை, சிறு காஞ்சொறிவிதை, பூனைக்காலிவிதை, தினுசுக்கு பூ ௨, வெங்காய விதை பூ க, பரங்கிப்பட்டைபூ க, கோதுமைமா, மூங்கிலரிசிமா, வகைக்குப்படி-வ, அல்லிவிதை, செங்கழுநீர்விதை, சாமையரிசி, தினையரிசி, பச்சைப்பயிறு, உளுந்து, நெற்பொறி, புல்லரிசி, பச் சைக்கடலை, கோடைக்கண்ணியரிசி, திப்பிலி, வகைக்கு மாவுபடி- ஹ, கடைச்சரக்குகளுந் தூள்பண்ணி வடிகட்டி யெடுத்துக்கொ ண்டு கற்கண்டு சேர்-சு, பால்சேர்-உ, இரண்டையுஞ் சேர்த்துப் பாகுசெய்து ஷை தூள்வகையாவும் பாகுடன்சேர்த்துப்பிசைந்து நாலுவிராகனெடையுள்ள வடைசெய்து பசுநெய்யில்வறுத்து வை த்துக்கொள்க, வேளைக்கு-உ, வடை சாப்பிட்டுவந்தால்-அசு, வாத மேகம், பித்தமேகம், தந்திமேகம், சீப்பிரமியம், இரத்தபிரமியம், மூத்திரக்கிரிச்சம், கிராணி, யோனிச்சூலை, அஸ்திகததோஷம், அஸ்திகதசுரம், எலும்புருக்கி தோஷம் இவை சொஸ்தமாகும். தாதுபுஷ்டி, தேகபுஷ்டி, தேககாந்தி உண்டாகும். இச்சாபத்தியம்.

கலியாணகிருதம்.

344. அரசு, அத்தி, பழமுண்ணிப்பாலை, குளப்பாலை, புளி மாதுளை, ஆவாரை, சிறுகாஞ்சொறி, பெறுவழுதுணம், சிறுகளா, தொட்டாற்சுருங்கி, மஞ்சிட்டி, ஆற்றுத்தும்மட்டி, வள்ளைக்கொடி,

முசுமுசுக்கை, கறுந்தாளி, நன்னாரி, பெருநன்னாரி, தரா, பம்பந்தரா, வெள்ளைச்சாறடை, கற்றாழை, இவ்வேர்வகை-உக, தண்ணீர்விட்டான்கிழங்கு, தாமரைக்கிழங்கு, கருநெய்தல் கிழங்கு, கோரைக்கிழங்கு, மஞ்சள், மரமஞ்சள், ஆலம்விழுதின்கொழுந்து, ஆலின்புல்லூரித்தழை, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சாதிக்காய், லவங்கம், லவங்கப்பட்டை, ஏலம், சிறுநாகப்பூ, சிறுசண்பகப்பூ, இலுப்பைப்பூ, சடாமாஞ்சில், வாய்விளங்கம், யானைத்திப்பிலி, சிறுகச்சோரம், கிரந்திதகரம், அதிவிடையம், ஓமம், சதகுப்பி, சரளதேவதாரம், புத்திரஜீவிவிதை, வெள்ளிலோத்திரப் பிசின், திராக்ஷப்பழம், இச்சரக்குகள்-௩௦, ஆக ௫௪-சரக்குகளையும்புனிதப்படுத்தி வெவ்வேறாக வெய்யிலில் உலர்த்தி ஒவ்வொரு சரக்கிலும் கொஞ்சம்கொஞ்சமாக எடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து வகை க-க்கு பூ ஹ-ஆ-நிறுத்து ஒன்றுபடக்கலந்து பசுப்பாலில் விதிப்படி சுத்திசெய்து வைத்துக்கொண்டு மற்றைச்சரக்குகளை வகை க-க்கு பூ க-ஆ நிறுத்துத் தறிக்கத் தக்கவைகளைப் பொடியாகத் தறித்து, எல்லாம் ஒருமிக்க நையஇடித்துஒருபுதிய பாத்திரத்தில் கொட்டி, ஆற்றுச்சலம்படி அ-விட்டு கஉ-படியாகச் சுருக்கிய கிழாயத்தை வடிகட்டிப் பழகிய பாத்திரத்தில் ஊற்றி, இதில் கலியாணப்பூசினிக்காய், இருள்கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, கரும்பு, ரஸ்தாளிவாழைப்பழம், நெல்லிப்பழம், முசுமுசுக்கை, பிரமிஇலை, பொன்னாங்காணி, கொத்தான்கொடி, இளநீர் தெளித்து இடித்தபச்சைப்பயறு, இப்பதினோருவகைரசமும், செவ்விளநீரும் வகைக்கு படி-கவ, பசுப்பால்படி-௩, நெய் படி-உ, இவைகளைச்சேர்த்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துச் சலபாகம் பாதி சுண்டுந்தறியில் முன்பு சுத்தித்தகல்க சூரணத்தைச் சிறுகச் சிறுகத்தூவி இடைவிடாமல் துழாவிக்காய்ச்சி இளமெழுகுபதத்தில் நெய்யை வடித்துச் சிறிய சுடுகையுடன் ஒருபீங்கான்சாடியில்விட்டுச் சில்விட்டு வஸ்திரபந்தனஞ்செய்து ஆறுநாள் தானியபுடம் வைத்தெடுத்து, உதயகாலத்தில் கால்பலம் அளவாக இரண்டு மண்டலம் அல்லது ஒருமண்டலம் சாப்பிடவேண்டும். இந்தக்கிருதம்வாதபித்தமயம், உன்மாதம், சித்தவிப்பிரமயம், கிரிச்சரம், அஸ்மரி, மேகம், கிருமிரோகம், யோனிச்சூலை, மலட்டுரோகம், இவை முதலிய பிணிகளை நீக்குவதுந்தவிர தேகத்தில் நல்லஅழகையும் பலத்தையும் சோணிதபரிசுத்தியையும் தரும். ஆதலால் இவ்வண்ணம் சுக்கில சோணிதங்களைப் போஷித்துக் காலமறிந்து போசனமும்புணர்ச்சியும் ஆயுள்வேதவிதிப்படி வழுவாது நடப்பவர்கள் அரோக திடகாத்திரமும், பூரணாயுளும், சந்தான சௌபாக்கியமும், அறம் பொருள் இன்பம் வீடு என்கிற சதுபுருஷார்த்தங்களும் பெற்று மங்களகரமாக வாழ்வார்கள்.

வைத்தியராஜசிந்தாமணி

முதல்பாகம் முற்றிற்று.

அகஸ்தியமுனிவர்

அருளிச்செய்த

# அபிராமி மெய்ஞ்ஞான நாடி.

ஆதிபரா பராமாகி யகண்டமான
அமுதலிங்க ளருளாலே யந்நாள்வாமப்
பாதியிடத் தபிராமி வல்லியாத்தாள்
பரைமனேன் மணிக்குரைத்த ஞானநாடி
பூதலத்தோர் நாடிவகை நன்றாய்த்தேர்ந்து
பூதவகை நோய்வகைக ளுளவிற்காண
நீதலத்திற் சொல்லெனவே யெனக்குச்சொன்னாள்
நேர்ந்திரைப்பே னடியது மூலந்தானே.

1. மூலத்தி லெழுபத்தீரா யிரமாம்நாடி முளைத்தெழுந்து வலைபோல முடிந்ததோடே, கோலமாய்ப் பதின்மூவாயிர நரம்புங் கோர்வையாய் சூழ்ந்திருக்குங் கூட்டிற்குள்ளே, காலமாம் நாடி பத்து வாயுபத்துங் கதித்ததெல்லா முக்கோர்வைப் பகையினாலே, நாலநாலாயிரத்து நானூற்று நாற்பத்தெண் ணோய்மிகுந்து பேர் பிறக்கு நாட்டலாமே.

2. நாட்டிலுள்ள மானிடர்க்கு வருநோய்கண்டு நாடிபத்து வாயுபத்திடங் குறியுங்கண்டு, கூட்டிலுள்ள பிணிதீர்க்க வவிழ்தங் கண்டு கொடுப்பதற்குள் ளசாத்திய சாத்தியமுங்கண்டு, ஏட்டிலு ள்ள நான்முறையுங் கைம்முறையுங்கண்டு எண்ணரிய வயித்திய னாய்ப் புகழும்பெற்று, தேட்டமுள்ள சுகிர்தகுண முடையோனை யுஞ் சிறைமீட்டுப் பிழைக்கவைத்தா லவனேதாதா.

3. தாதாவென் றுரைப்பதற்குத் தகுமோவிந்த சாத்திரத் தை யிகழ்ச்சிக்குஞ் சண்டாளர்க்கே, மாதா பிதாவினுட மனங் கோணமல் மகாபெரியோ ருரைக்கின்ற மொழிமீறாமல், வேதா ந்தமூர்த்திகளை யறிந்துபோற்றி மேதைமிகுநீதிகளும், விளங்கத் தோற்றி காதினுபதேசகுரு வோதக்கேட்டுக் கைச்சிகிச்சை பெற் றவனே யோகசித்தன்.

4 சுற்றன்றிப் பலநூலும் பார்த்துக்கொண்டு சுழன்றுழ ன்ற பண்டிதரே யவிழ்தஞ்செய்து, குற்றமொடு கொடும்பாவஞ் செய்திடாமல் குருமுறையா யவிழ்தங்கள் முடித்துக்கொண்டு, முற்றன்றிக்கொலைமுதன்மா பாவஞ்செய்து முகியாத வெழுநரகில் வீழ்ந்திடாமல், கத்தனடி கண்டுபிணி தீர்க்கத்தானே கண்டித மாய் பண்டிதத்தைக் கருதிப்பாரே.

5. பாரப்பா நோயினிடபிராயநேர்மை பகைத்துவந்த நாள் பிணியைக் கூர்ந்தறிந்து, தீரப்பா அவனிடத்திற் குறையுண்டானல் திருவுளத்தை நோக்கித்தன்மஞ் செய்யவைத்து, சேரப்பா பகைஞரையுஞ் சிநேகமாக்கித் தெளிவாக விருமனது மொருமனதாக, நேரப்பா அவிழ்தங்கள் கையாலீய நிச்சயமாய்ச் சித்திக்கு மிதுவே நீதி.

6. நீதியா யவிழ்தங்கள் சேர்க்கும்போது நிர்ணயமாய்ச் சரக்குகளைச் சுத்திசெய்து, ஆதி மங்களவார முகூர்த்தங் கோலி அளவுடனே அவிழ்தங்க ளரைத்தபின்பு, ஓதியே தெய்வநமசிவாயவென்றிறைஞ்சி யுயிரெழுத்தை யுருவேற்றியுருண்டைபண்ணி, பாதியாயவிழ்தங்க ளீயும்போது பரிகார நடக்கைதனக் குறுதி கேளே.

7. கேளப்பா வயித்தியர்க்கு யோகம்வேணும் கேட்குமுன்னே சொல்லமெத்த கல்விவேணும், தாளப்பா சரக்குவைப்புக் குணமுங்கண்டு கணப்பொழுதில் நீத்துமுப்பூ அறியவேணும், சூளப்பா வியாதிகண்டு அவிழ்தமீயச் சூட்சுமமாம் புத்தி தந்திரமும்வேணும், நாளப்பா ஜீவர்கள்மீ திரக்கம்வேணும் நற்குணமாம் வாதிமகன் கிரிகையிதே.

8. வாதிமகன் வயித்தியன்றன் குணத்தையாயில் வாகாகக் கைபார்த்து முகத்தைப்பார்த்து, சோதியுடன் மலஜலத்தின் பரிசைகூபார்த்துச், சொல்லிடுவான் வியாதிதனை யறிந்துநன்றாய், சேதிகள்தா னவனுக்குத் தென்புசொல்லித் தேகத்தைத் தொட்டு மெள்ளப் பார்த்துக் கொள்வான், நீதியுடன் கடவுளைத்தான் பணிந்துகொண்டு நிச்சயமா யவிழ்தவகை யிடுவான்கண்டாய்.

9. கண்டாயோ ஆடவர்க்கு வலக்கரமுமாகும் கருவுடனே பெண்பிள்ளைக் கிடக்கரமாமென்றோம், வென்றான இடக்கையை வலக்கையாலேந்தி, மேலான வலக்கையை யிடக்கையா லேந்தி, நன்றாகக் கைதேய்த்து நெட்டிவாங்கி நாட்டுமூவிரலுக்கு விரலண்டாமே, அண்டாமல் நெல்லிடைக்குவிட்டுப்பார்க்கில் அசைவாகும் வாதபித்த சேத்துமமுமாமே.

10. ஆமென்ற புலனுடைய வாதந்தானே அப்பனே கோழியுடை நடைபோலாகும். ஏமென்ற வுயிருடைய பித்தந்தானே யிரைமேயுங் காக்கையுடை நடைபோலாகும், ஓமென்ற சதமுடைய ஐயந்தானே ஒட்டமில்லா மந்தியுடை நடைபோலாகும், நாமென்ற வாதபித்த சேத்துமத்தின் நடையிவ்வா றென்றுண்மை நாட்டுங்காணே.

11. காணப்பா வாதமுன்னும் பித்தம்பின்னுங் கடையாக ஐயமது தோற்றவேணும், பேணப்பா பிணியோருக் கிப்படியே கண்டாற் பிணிதீர்ந்து போச்சுதென்று புகழ்ச்சிகூறு, ஊணப்பா

மூவருமே வரிசைதப்பி யூணில்லாப் பறவையைப்போ லுயர்ந்து நின்றால், தாணப்பா இப்படியேகண்டோர்க்கெல்லாஞ் சத்தியமாய் ஜீவிக்குந் தப்பாதுண்மை.

12. உண்மையுள்ள மூவருமே ஒடுக்க மாகி ஒப்பில்லா வா தமது வுலாவிநின்றால், திண்மைவினை யகற்றவே செயலுண்டாகி ஜென்மித்து வயிற்றிலே பித்தம்நின்று, நன்மையாய்க் கனல்மூட் டித் தெளிவு தந்து நயமாகச் சிவமயமதாக்கிவைக்கும், அண்மை மனங்கலங்காமற் றுணிவுகொண்டு அருளான அவிழ்தங்க ளறி ந்துமூட்டே.

13. மூட்டியே மூவருமே மூடமானால் மூதண்டசன்னியுட மூர்க்கமாகும், மூட்டியே மூவருமே முடிகிநின்றால் முத்தோஷஞ் செனிக்கின்ற முறைமையாகும், கோட்டியே வாதமது குளிர்ந்து நின்றால் குணமில்லை மரணத்தின் கூறதாகும், வாட்டியேவாதமது மழுங்கிநின்றால் மறிபடா மரணமென்று மதிக்கலாமே.

14. மதிக்கலா மூவருமுன் னிட்டுதைத்தால் வந்தநோய் தீர்ந்து விடுமரண மில்லை, பதிக்கலா மூவரும்பின் னிட்டுதைத் தாற் பழியாகிப் பிணிமீறும் பகைத்துக் கொல்லும், குதிக்கலாம் வாதமது கொதித்து நின்றால் கொடுமைசெய்யுஞ் சுரங்களிட கூற தாகும், விதிக்கலாம் வாதமது மெலிந்து நின்றால் வேகமாய்நின்ற சுரம் விட்டுப்போச்சே.

15. போச்சுதப்பா நல்லோர்க்கு வந்தநோய்கள் பொல்லாத பாவிகட்குப் போகாதப்பா, ஏச்சுதப்பா பகைத்துவந்த நோய்க் குணங்க ளிதமறியா வயித்தியனின் னெளிமைகண்டு, வாய்ச்சுதப் பா இந்நூல்தான் வயித்தியர்க்கு வகைதொகையாய்வயித்தியரைச் செயிக்கத்தானே, ஆச்சுதப்பா முன்சொன்ன இருநூற்றைந்தும் ஆமிந்த நூலுக்கு ஆதிமூலம்.

16. மூலமதி லெழுபத்தீ ராயிரமாநாடி முளைத்தெழுந்து சுழிந்திடத்தை மொழியொணாது, காலனு யிடறுகின்ற நோய்கட் கெல்லாங் கருவுடனேசுழிமிகுத்த கையிற்குள்ளே, காலையேவாத மது வுதிக்கவேணும் கடுமத்தியம் பித்தமது தோன்றவேணும், மாலையே ஐயமது கதிக்கவேணும் வளமான நாடியென்று மதிக்க லாமே.

17. காலமே வாதமது மெலிந்து நின்றால் கதிர்சாயும் பொ ழுதிலந்த மரணமாகும், பாலமே நடுப்பித்த மெலிந்து நின்றால், பானுவுதையந்தனிலே மரணமாகும், மாலையே ஐயமது மெலிந்து நின்றால் மரணமில்லைவந்தநோய்தீர்ந்துபோகும்,கூலமாயிப்படியே பகுத்து நன்றாய்க் குறிப்பறிந்து கூறுவர்கள் பெரியோராமே.

18. ஆமாகே ளடிதுடிதான் அசைந்துதைத்தால் அசைவா கக் கடைதுடிதான் புதைந் திதைத்தால், பூமாகேள் அவிழ்தமிட

வியாதி தீர்ந்து புணர்ப்பாக வுணர்த்துகின்ற நாடியாகும், ஓமாகேள் அடிதுடிதான்குறைந்து தைத்து உரமாகக்கடைதுடிதான் சுரந்துதைத்தால், வீமாகேள் மணிமந்திர அவிழ்தத்தாலும் மீளாது விதிமுடிந்த நாடியாகும்.

19. ஆகமாநாடிமுற்றும் பாதமொத்து வீழ்ந்தால் அவிழ்தமிடு பிழைப்பார்கள் அதிஷ்டமுண்டு, சோகமாய் நாடி முற்றும் பாதமற்று வீழ்ந்தால் தொலையாத மரணமென்று சொல்லலாகும், ஏகமாய் நாடிவிழுந்திருவர்களி லொருவர் எழுந்தாலும் நின்றாலு மரணமில்லை, வேகமாய் நாடிமுற்றும் விழுந்த பின்னையும் விழுந்தாலும் நின்றாலும் பிழைப்ப தில்லை.

20. இல்லையாய்ப் பித்தமுன்னும் வாதம் பின்னும் எழும்பினால் அசாத்தியத்தின் னாடியாகும், எல்லையாம் வாதமுன்னும் பித்தம் பின்னும் எழும்பிடவே சாத்தியத்தி னாடியாகும், மல்லையாம் வாதமது அமர்ந்துநின்றால் வயிற்றிலே சோறிருந்து மந்தமாகும், கல்லையாய் வாதமது கதித்து நின்றால் களைப்புண்டாந் தீபனத்தி னாடியாகும்.

21. ஆகமமாம் சாத்திரத்தின் கூறைக்கண்டு அவனிக்குள் மானிடர்க்கு அறையக்கேளு, மாகமாம் வாதத்தின் சரீரக்காரன் வாழிப்பாய் தேகமுள்ள வடிவனாவன், யோகமாம் பித்தத்தின்சரீரக்காரன் உறுதியாந்தேகமுள்ள குணவானாவன், பாகமாஞ் சேத்துமத்தின் சரீரக்காரன் பருமமாந் தேகமுள்ள திடவானாவன்.

22. நாவனும் வாதத்தின் சரீரக்காரன் நாதமாங்குரல் நீண்டுபேசும்வண்ணம், பாவனும் பித்தத்தின் சரீரக்காரன் பதறியே குரல்விண்டு துடியாம்பேச்சு, கோவனும்சிலேத்துமத்தின் சரீரக்காரன் குமுறியே குரல்விண்டு இடியாம்பேச்சு, மூவனும் சென்மித்த சத்தமல்லால் மொழிந்தமற்றச் சத்தமெல்லா மபதமாமே.

23 ஆமப்பா வாதசுரம் மலந்தம்பித்து அங்கமெல்லாம் நொந்துபுண்ணாய்க் குளிருமுண்டாம், பூமப்பா பித்தசுரம் ஜலந்தம்பித்துப் பித்தமுண்டாந்தேகமுற்று மெரிவுண்டாகும், காமப்பா ஐயசுரம் உமிநீர்ஸ்த்தம் பித்துக் கணுவெலும்பைக் குடைந்து கபநீருண்டாகும், ஓமப்பா இவைசுரமூன்றல்லாவில்லை ஒட்டுசுரம் வாயுவினா லுதித்தவாறே.

24. வாறாக மூரிக்கொட்டாவி கொண்டால்வாதத்தால்வந்த சுரம் வலுத்ததாகும், பேறாக வாயினீர் குழப்பங்கண்டால் பித்தத்தால் வந்தசுரம் பிலத்ததாகும், கூறாகச்சளிசெருமல் சினுக்குண்டானால் கொடுங்கபத்தால் வந்தசுரங்கோபமாகும், மூறாக இவையாவு முச்சுரங்களாகும் மூர்க்கத்தை யொடுக்க வல்லோர் முறையைக் கூறே.

25. கூறுமே உறைப்பான கல்க்கம்போட்டால குலைந்துநின்ற சுரம்பாதி ஒடுங்கிப்போச்சு, பாறுமே வழலைசத்தி வாங்கிப்போட்டால் பரந்துநிறை சுரம்பாதி ஒடுங்கிப்போச்சு, காறுமே ஆக்கிராணப்பொடியைப்போட்டால் கடந்துநின்ற சுரம்பாதி ஒடுங்கிப்போச்சு, தீருமே கருமசுத்தி இவை மூன்றுஞ்செய்தால் ஜெடத்திலுள்ள நோயையெல்லாந் திருப்புவோமே.

26. ஓமென்ற மலக்கட்டைக் கழியவைத்தால் உடலிலுள்ள வாதையெல்லாம் ஓடிப்போச்சு,தாமென்ற சிருநீரைத் தெளியவைத்தால் சடத்திலுள்ள வேகமெல்லாந் தணிந்துபோச்சு, கூமென்ற உமிழ்நீரை முரியவைத்தால் கூட்டிலுள்ள பகையெல்லாங் குலைந்துபோச்சு, கோமென்ற இவைமூன்றும் களங்கமற்றால் கொல்லவந்த காலனையும் வெல்லலாமே.

அபிராமிமெய்ஞ்ஞானநாடி முற்றிற்று.

---

## அவுஷதங்கோள்ளநாள்.

அனுஷம், அஸ்தம், சித்திரை, சோதி, மிருகசிரிடம், அவிட்டம், புனர்ப்பூசம், பூசம், உத்திரதிரயம், சதயம், ரோகணி, திருவோணம், ரேவதி இந்த நாட்களில் சராராசிகளும் கன்னியாதல் உதயமாக இருத்தைகளிலே, ௨, ௬, ௭, ௮, இவ்விடம்சுத்தியாக, செவ்வாய், வெள்ளி, வாரஉதயங்களாக, அவுஷதம் உட்கொள்ள நன்றும்.

## இராட்சசசிகிச்சை.

ஆயில்யம், திருவாதிரை, மூலம், கேட்டை, இந்நாட்களிலே நாயிறு, சனி, செவ்வாய்வார உதயங்களில கன்னி, துலாம், கற்கடகம், மேடம் இவ்விராசிஉதயத்திலே, அட்டமசுத்திஉண்டாக, பக்கச்சித்திரையென்று சொல்லிய திதிகளிலே புண் அறுத்தல், சுடுதல், காரமிடுதல், அட்டைவிடுதல் முதலிய இராட்சச வயித்தியம் செய்யலாம்.

## நோய்மிருத்துநாள்.

முப்பூரம், கேட்டை, பரணி, கார்த்திகை, திருவாதிரை, சதயம், அவிட்டம், சோதி, ஆயில்யம் இந்நாட்களும், நவமி, சதுர்த்தி, சஷ்ட்டி, துவாதசி திதிகளிலும், செவ்வாய், சனி, நாயிறு, இவ்வாரங்களிலும் வியாதிகாணில் மிருத்துநாள்.

## நோய்தீர்ந்துநீராட.

இரேவதி, புனர்பூசம், சோதி, உத்திரதிரயம், மகம், ஆயில்யம், ரோகணி இந்நாள்களும், திங்கள், வெள்ளி இராசிவார உதய அங்கிஷங்களும் ஒழிந்த சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, தசமியில் முற்சொன்ன குரூர நாள்வாரஉதயஅங்கிஷங்களிலே நோய்மாறிக் குளிக்க நன்மைதரும்.

## தினபலன்.

ஜன்மநக்ஷத்திரமுதல் வேண்டிய தினநக்ஷத்திரம் வரையிலுண்டான எண்ணிக்கையையும், ஆதிவாரமுதல்அன்றுதினவார வரையிலுண்டான எண்ணிக்கையையும், பிரதமை முதல் அன்று தின திதிவரையிலுண்டான எண்ணிக்கையையும் ஒன்ருய்க்கூட்டி ஒன்பதில் கழிக்கமிச்சம் க-ஆனுல் வியாகுலம், உ-ஆனுல் சுபம், ௩-ஆனுல் கொடியசொல், ௪-ஆனுல் பந்து, ரு-ஆனுல் பெண்போகம், சு-ஆனுல் சுபம், எ-ஆனுல் கலகம், அ-ஆனுல் நற்சொல்.

## புடத்திட்டம்.

காடைப்புடம். காட்டெருவு ரு-பூ உள்ளது உ; கவுதாரி எருவு ௩; கோழி எருவு க0; வராகத்துக்கு எருவு ரு0; கனபுடம் எருவு அ00; கஜபுடம் எருவு ௲.

இரண்டுவராகம்கொண்டதுஒருகெஜபுடமென்றும், ரு00பூ எடையுள்ளது கெஜபுடமென்றும் சிலநூல்கள் சொல்கின்றன.

## எரிபபுத்திட்டம்.

ஒருபெருவிரல் திட்டம் ஒருவிறகு தீபாக்கினி, இரண்டுவிறகு கமலாக்கினி, ஐந்துவிறகு காடாக்கினி.

## ஊதும்விவரம்.

உருக்குகிறதற்கு ஒற்றைத் துருத்தி, களங்கம் செய்வதற்கு உ-துருத்தி, சத்து எடுக்க ௪-துருத்தி.

## மருந்துகள் செய்யுங்காலம்.

ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஊதுவதற்குக்காலம்; ஐப்பசிமீ சத்துஎடுக்கக் காலம்; தை, மாசி, பங்குனி, காரம், சுன்னம், ஜெயநீர் எடுக்கும் காலம்; சித்திரை, வைகாசி, ஆனி குரு முடிக்கும் காலம்; ஆடி, ஆவணி, ஐப்பசி, புரட்டாசி திராவகம் செந்தூரம் செய்யுங்காலம்.

## வச்சிரக்குகை.

புற்றுமண் எடை-உ, செங்கூழாங்கல் எடை-உ, சுட்டவுமி எடை-சு, கழுதைலத்தி எடை-உ, பழங்கந்தைஎடை-உ, இவற்றைத்தூள்செய்து ஜலம்விட்டு புளிக்கவைத்து, பிசைந்து மெலிதாக அம்மியிலரைத்துக் குகைசெய்திடுக.

களிமண் எடை-ரு, இரும்புச்சிட்டம் எடை-உ, உமிக்கரி எடை-உ, கோணிக்கந்தை எடை-க, களிப்பாக்கு எடை-௧, இவற்றைத்தூளாக்கி ஊறவைத்து, அரைத்துக் குகைசெய்குக.

## பொட்டுக்காண்டியளவு.

தெலுங்குப்பிராமணர் மங்கிலியப்பொட்டின் அளவு.

## முட்டைக்காண்டிவிவரம்.

கோழிமுட்டையின் நுனியமிழப் போதுமான இடமுடைய காண்டி.

பூ -பலம் வீ -விராகனெடை
பது-வீசம், ஹ-அரை ௰ல வ-கால் ௨-அரை ஐ-முக்கால்

நிறுத்தலளவை.

செஞ்சாலிநெல்லு அல்லது பச்சைப்பயறு ச-கொண்டது குன்றிமணி-க, குன்றிமணி-ஙஉ-கொண்டது விராகனெடை-க, விராகனெடை-க-க்கு பணவிடை-ஐ, ஒன்றேகால் விராகனெடை கொண்டது கழஞ்சி-க, க௦-விராகனெடைகொண்டது பலம்-க, பலம் ௬அ கொண்டது சேர்-க, சேர்-ரு கொண்டது வீசை-க, பலம்-ரு௦ கொண்டது தூக்கு-க, கோதுமை கஅ௦-கொண்டது தோலாஒன்று, தோலா-க-க்கு விராகனெடை-ஙவ.

க்ஷத்ரியர் இரசம்.

துவரம்பருப்பு நல்லதாய் படிக-க்குத் தண்ணீர் ச-படிவிட்டு ஒருபடியாகவெடுத்து, மிளகாய் அனலில்சுட்டு மெலிதாக அரைத்து வீ கஐஹ, மிளகு வீ ஙஐ, சீரகம் வீ கவ, இவற்றை முக்கால்பாகமாயரைத்தும் பூண்டு வீ கவ, பச்சை கருவேப்பிலை வீ கவ, புளிசேர்-வ, ஒருசேர்தண்ணீரில்கரைத்து ஷை ஜலத்தில் விடுக. உப்புசேர்-ஹ போடுக, ஷை சாமான்களை பருப்புசலத்தில் சேர்த்து இரண்டுகொதி கொதித்தவுடன் கீழே இறக்கித் தாளிப்புக்கு வேறேபாத்திரம்வைத்து நெய்சேர்-ஹ, உளுத்தம்பருப்பு வீ ஙஐ, வெங்காயம்-வீ உ௨, இடித்துப்போட்டுச் சிவந்துவரும்போது கடுகு வீ கவ, சீரகம் வீ ௨ஹ, பச்சை கருவேப்பிலை வீ கவ, காயம் வீ வ, போட்டுக்கரண்டியால் திருப்பிச் சப்தம் நின்றவுடன் ரசத்தைத்தாளிப்பில் ஊற்றி ஒருகொதி வந்தவுடன் கொத்தமல்லிகீரை வீ உ௨, சேர்த்துக் கீழேயிறக்கிவிடுக.

கிருஷ்ணமிருதம்.

கோதுமைநொய்சேர்-க, நெய்யில்வறுத்து, ச-சேர் பால்விட்டுவேகவைத்து எடுத்துப் பாதுமை பருப்புசேர்-௨, முந்திரிப்பருப்பு சேர்-௨, பால்விட்டு அரைத்துச் சர்க்கரைசேர்-எ, நசுக்கின ஏலக்காய் வீ க, ஒருஈயம்பூசினபாத்திரத்தில் ரு-சேர்ஜலம்விட்டு கக-சேர் பால்விட்டு ஷை சர்க்கரையைச் சேர்த்துச் சுண்டக்காய்ச்சி ரு-சேராய் வரும்போது ஷை பருப்புதினுசும் ஏலக்காயும் சேர்த்து ஷை ரவைபக்குவம் செய்ததையும் சேர்த்து, மூன்று கொதி வந்தவுடனே பச்சைக்கர்ப்பூரம் வீ வ, குங்குமப்பூ வீ ௨, பன்னீர் ஒருசேரிற்கரைத்து வடிகட்டிக்கொண்டு, கசகசாசேர்-௨, பால்விட்டு அரைத்து வடிகட்டி ஷை நீரிற்கலந்து பதத்திலிறக்கி ஆரவைத்து உபயோகித்துக்கொள்க.

வைத்தியராஜசிந்தாமணி

முற்றுப்பெற்றது.

| | பக்கம். |
|---|---|
| அக்கினிகுமாரன் | 79, 86, 90 |
| அக்கினிமந்தத்துக்கு | 7 |
| ,, | 12 |
| ,, | 14 |
| ,, | 15 |
| ,, | 16 |
| ,, | 17 |
| ,, | 32 |
| அஸ்வகந்திரசாயனம் | 2 |
| அஸ்வகந்திலேகியம் | ,, |
| அசீர்ணசுரத்துக்கு | 12 |
| அசீர்ணபேதிக்கு | 118 |
| அஷ்டகுன்மத்துக்கு | 27 |
| அஷ்டாதிசூரணம் | 15 |
| அண்டவாதத்துக்கு | 25 |
| ,, | 28 |
| அதிசாரதாபசுரக்கியாழம் | 106 |
| அதிமதுரக்கிருதம் | 10 |
| அஸ்திசுரத்துக்குமருந்து | 75 |
| அபிராமிமெய்ஞ்ஞானநாடி | 121 |
| அப்ரகஉற்பத்தியும் பேர்களும் | 83 |
| அப்ரகசெந்தூரம் | 84 |
| | 85 |
| அப்ரகத்தின்குணம் | 84 |
| அப்ரகநவநீதம | ,, |
| அப்ரகபரீட்சை | 83, 84 |
| அப்ரகவர்ணகுணம் | ,, |
| அப்ளாகாரபஸ்பம் | 66 |
| அமிருதரசம் | 73 |
| அம்சப்பிரயோகரச்செந்தூரம் | 88 |
| அரக்கெண்ணெய்தைலம் | 26 |
| அரத்தைலேகியம் | 5 |
| அரிதகிலேகியம் | 15 |
| அரித்ராவடகம் | 104 |
| அவுஷதங்கொள்ளநாள் | 125 |
| ஆக்கிரசிம்மரசம் | 103 |
| ஆக்கிராணவிரேசனம் | 72 |
| ஆசனம் வெளியில் விழுந்திருப்பதற்கு செய் | 23 |
| ஆமலகலேகியம் | 12 |
| ஆம்பல்பித்தத்துக்கு | 11 |
| ,, | 13 |
| ஆயுசுகிண்ணியைசோதிப்பு | 30 |

| | பக்கம். |
|---|---|
| ஆரோசிகத்துக்கு | 12, 14, 31 |
| ஆருதவிரணம்புற்றுக்குபிளாஸ்திரி | 114 |
| ஆனந்தபைரவன் | 37 |
| இங்காஷடகம் | 16 |
| இடுப்புவலிக்கு | 19 |
| இந்த ஸ்ரீக்கு கெர்ப்பந்தரிக்காதென்பது | 112 |
| இரசசெந்தூரம் | 38 |
| ,, | 86 |
| ,, | 87 |
| ,, | 88 |
| இரசபஸ்பம் | 66 |
| ,, | 117 |
| இரசபைரவம் | 93 |
| இரசராஜரசம் | 96 |
| இரணசஞ்சீவிதைலம் | 112 |
| இரணியகர்ப்பரசம் | 92 |
| இரத்தஅதிசாரத்துக்கு | 108 |
| இரத்தகாசத்துக்கு | 7, 10 |
| இரத்தசோஷணத்திலுல்வாடிப்போகிறதற்கு | 41 |
| இரத்தக்ஷயத்துக்கு | 17 |
| இரத்தபித்தத்துக்கு | 13 |
| ,, | 74 |
| ,, | 107 |
| இரத்தமண்டலிவிஷத்துக்கு | 116 |
| இரத்தவாந்திக்கு | 13 |
| இரத்திஞதிமாத்திரை | 68 |
| இராஜமிருகாங்கம் | 34 |
| ,, | 48 |
| ,, | 71 |
| இராஜாராஜேஸ்வரிரசம் | 100 |
| இராட்சசசிகிச்சை | 125 |
| இருத்துரோகத்துக்கு | 4 |
| இருமலுக்கு | ,, |
| ,, | 6 |
| ,, | 26 |
| ,, | 42 |
| இலகுராஜமிருகாங்கம் | 71 |
| இலட்சுமீநாரயணரசம் | 92 |
| உக்ரபைரவரசம் | 95 |
| உத்தமஅக்கினிகுமாரன் | 90 |

| | பக்கம். |
|---|---|
| உஷ்ணத்துக்குஏலாதிசூரணம் | 10 |
| உஷ்ணவாயுவுக்கு | 118 |
| உன்மத்தத்துக்குமருந்து | 30 |
| உன்மாதபித்தத்துக்குநசியம் | 29 |
| ஊஷ்ணவாய்வுக்கு | 18 |
| ஊதும்விவரம் | 126 |
| ஊறலுக்குசாமிநாதநெய் | 30 |
| எஃகுபஸ்பம் | 40 |
| எரிகுன்மத்துக்கு | 30-31 |
| எரிப்புதிட்டம் | 126 |
| ஏரிவுக்கு | 18 |
| எலிகடிக்குமருந்து | 28 |
| எலும்புருக்கிமேகத்துக்கு பூசினிக்காய்நெய் | 9 |
| ஏலாதிசூரணம் | 10 |
| ,, | 11 |
| ஐ (ஹை) பதிசூரணம் | 25 |
| ,, | 72 |
| ஐவகைப்பொடி | 113 |
| கணபதிமூலரசம் | 1 |
| கண்டாமலகலேகியம் | 12 |
| கண்ணோய்க்குமாத்திரை | 27 |
| கண்மருந்து | 110 |
| கபரோகத்துக்குமருந்து | 68 |
| கபரோகத்துக்குமிருமலுக்குநெய் | 4 |
| கபாலபைரவம் | 96 |
| கமலாசனரசம் | 92 |
| கருவங்கசுன்னம் | 65 |
| கருவங்கபஸ்பம் | 67 |
| கர்ச்சூராதிரசாயனம் | 13 |
| கர்ச்சூராதிலேகியம் | ,, |
| கலியாணகிருதம் | 119 |
| கலியாணரசம் | 93 |
| கர்பூரசிலாசத்துபஸ்பம் | 64 |
| கனகசெந்தூரம் | 58 |
| கனகசெந்தூரரசம் | 104 |
| கனகதாம்பிராதிமாத்திரை | 70 |
| காதில்குத்தலுக்குஎண்ணெய் | 25 |
| காதில்சீழ்வருகிறதற்குதைலம் | ,, |
| காந்தசுத்தி | 81 |
| காந்தசெந்தூரம் | 41 |
| ,, | 56 |
| ,, | 81 |
| காந்தபஸ்பம் | ,, |
| காந்திசமனலேகியம் | 68 |
| காமதேவரசம். | 50 |
| காயசித்திலேகியம் | 2 |
| காரீயசுத்தி | 77 |
| காரீயசெந்தூரம் | ,, |
| காரீயபஸ்பம் | ,, |
| காருண்யபைரவம் | 95 |
| காலபைரவம் | 97 |
| காலாக்கினிருத்ரரசம் | 101 |
| காளகண்டஞ்செய்யும்விதம் | 31 |
| காளகண்டமேகநாராயணசெந்தூரஞ் செய்வதற்குதிராவகம்இறக்குகிறவிதம் | ,, |
| கிரந்திக்கு | 117 |
| கிராணிகபாடம் | 24 |
| ,, | 38 |
| கிராணிக்கு | 15 |
| கிருகிருப்புக்கு | 11 |
| கிருஷ்ணாமிர்தம் | 127 |
| குடிநீரளவை | 108 |
| குடோரி | 62 |
| குருரசசெந்தூரம் | 87 |
| குறிவிவரம் | 127 |
| குன்மகுடாரம் | 73 |
| குன்மத்துக்கு | 15 |
| ,, | 39 |
| கெர்ப்பந்தரிக்க | 112 |
| கெர்ப்பந்தரிக்காத ஸ்ரீ இன்னாரென்பது | ,, |
| கெர்ப்பிணியின்சுரத்துக்கு | 77 |
| கைகால்எரிவுக்கு | 14 |
| கைநடுக்கலுக்கு | 10 |
| கோடாசுளிரசம் | 39 |
| கோமேதகசுத்தி | 83 |
| கோமேதகபஸ்பம் | ,, |
| கோரோசனைமாத்திரை | 117 |
| சகந்நாதரசம் | 100 |
| சகலஉஷ்ணத்துக்கு | 10 |
| சகலமேகத்துக்கு | 17 |
| ,, | 113 |
| சகலவாய்வுக்கும் | 16 |
| சங்கதிராவகம் | 70 |
| சஞ்சீவனம் | 36 |
| சண்டேச்சுரரசம் | 103 |
| சண்முகசெந்தூரம் | 1 |
| சந்ததசுரக்கியாழம் | 105 |
| சந்தானசித்தி | 74 |
| சந்திரசேகரரசம் | 102 |

| | பக்சம். |
|---|---|
| க்ஷத்திரியர்ரசம் | 127 |
| க்ஷயத்துக்கு | 5 |
| க்ஷயத்துக்குதைலம் | 8 |
| க்ஷயமுதலானரோகங்களுக்கு | 34 |
| க்ஷயரோகத்துக்குசுவர்ணபஞ்சாமிர்தரசம் | 53 |
| க்ஷயரோகத்துக்குமகாக்ஷாபகாதிலேகியம் | 6 |
| சயவிக்கிரமரசம் | 94 |
| சரபங்கவில்வாதிலேகியம் | 18 |
| சர்வரோகஹரிரசம் | 102 |
| ஜவாஹிர்மோரா | 118 |
| ஜஹர்த்தனரசம் | 74 |
| ஜன்னிபாதபயிரவரசம் | 41 |
| ,, | 95 |
| ஜாதிலிங்கக்கட்டு | 63 |
| சித்தப்பிரமத்துக்குமருந்து | 30 |
| சித்திபைரவரசம் | 96 |
| சிந்தாமணிமேவா | 119 |
| சிருங்காதிசூரணம் | 3 |
| சிலேஷ்மத்துக்காத்தைலேகியம் | 5 |
| சிலேத்மஅமிருதரசம் | 73 |
| சீதசுரத்துக்குமாத்திரை | 39 |
| சீதபஞ்சரசம் | 37 |
| ஜீர்ணசுரத்துக்கு | 3 |
| ஸ்ரீகள் சரியானகாலத்தில்ருதுவாகாமலிருக்கிறதற்கு | 32 |
| சுகவிரேசனத்துக்கு | 25 |
| ,, | 72 |
| சுக்குதைலம் | 111 |
| சுரத்துக்கு | 3 |
| ,, | 26 |
| ,, | 77 |
| சுரபேதகுளிகை | 39 |
| சுராங்குசம் (மகா) | 38 |
| ,, | 73 |
| சுவாசத்துக்கு | 26 |
| சுவாசக்ஷயம் டு - க்கும்தாம்பிரபிரயோகம் | 40 |
| சூசிகவாய்வுக்கு | 15 |
| ,, | 16 |
| சூசிகாமுகம் | 97 |
| சூலைகுடாரம் | 73 |
| செம்புபச்சைசெய்யும்விதம் | 110 |
| சொரிசிரங்குக்குமருந்து | 29 |
| சொர்ணசுத்தி | 78 |
| சொர்ணசெந்தூரம் | 78 |
| ,, | 88 |
| சொர்ணபஸ்பம் | 78 |
| சொர்ணபஞ்சாமிர்தரசம் | 53 |
| சொர்ணபூபதிரசம் | 46 |
| சொர்ணானந்தபைரவன் | 36 |
| சௌபாக்கியசுண்டி | 16 |
| தந்தரோகத்துக்கு | 22 |
| தந்தவாய்வுக்கு | ,, |
| தந்தவியாதிகளுவாய்கொப்புளிக்கிறகியாழம் | 23 |
| தந்தவந்திரிரசம் | 101 |
| தலைநடுக்கலுக்கு | 10 |
| தாதுவிர்த்திக்கு | 19-20-21 |
| ,, | 34 |
| ,, | 117 |
| தாபசுரக்கியாழம் | 105 |
| ,, | 106 |
| தாபசுராங்குசம் | 105 |
| தாம்பிரசுத்தி | 76 |
| ,, | 78 |
| தாம்பிரசெந்தூரம் | 79 |
| தாம்பிரபஸ்பம் | 61 |
| ,, | 78 |
| தாம்பிராதிமாத்திரை | 69 |
| தாவள்யரசம் | 102 |
| தாளகபஸ்பம் | 116 |
| தாளிசசூரணம் | 12 |
| தாளிசவடகம் | 7 |
| திப்பிலியாதிலேகியம் | 5 |
| திரிபுராந்தகரசம் | 91 |
| திரிமூர்த்திகாந்தசெந்தூரம் | 56 |
| திரிமூர்த்திரசம் | 99 |
| திரிலோக்கியசிந்தாமணி | 35 |
| திரிவிக்கிரமரசம் | 94 |
| திவ்விய அக்கினிகுமாரன் | 90 |
| தினபலன் | 126 |
| தீபனத்துக்கு | 16 |
| ,, | 66 |
| தீபனமில்லாதவர்களுக்கு | 17 |
| தும்மட்டிக்காய்கடுகு | 27 |
| தேள்விஷந்தீரமருந்து | 115 |
| தேற்றான்கொட்டைலேகியம் | 6 |
| ,, | 21 |
| நண்டுவாய்க்காலிவிஷந்தீர | 116 |
| நல்லபாம்புவிஷந்தீரமருந்து | 115 |

| | பக்கம் |
|---|---|
| நவசாரசெந்தூரம் | 88 |
| நாகஅப்ரகபரீட்சை | 84 |
| நாகாதித்தைலமென்கிற சுக்கு தைலம் | 111 |
| நாபிவிரேசனம் | 73 |
| நாராயணரசம் | 92 |
| நாரிகேளாஞ்சனம் | 69 |
| நிமிளை செந்தூரம் | 65 |
| நிம்பாதிலேகியம் | 14 |
| நிறுத்தலளவை | 127 |
| நீலசுத்தி | 82 |
| நீலபஸ்பம் | ,, |
| நேத்திரரோகத்திற்கு | 26-27 |
| ,, | 69 |
| நேர்வாளஉற்பத்தியுங்குணமும் | 108 |
| நோய்தீர்ந்துநீராட | 125 |
| நோய்மிருத்துநாள் | ,, |
| பஞ்சகாசத்துக்கு | 4 |
| பஞ்சகோலாதிசூரணம் | 14 |
| பஞ்சபாணரசம் | 49 |
| பஞ்சாக்கினிசெந்தூரம் | 32 |
| பஞ்சாமிர்தசெந்தூரம் | 60 |
| பஞ்சாமிர்தபற்படி | 54 |
| பஞ்சாமிர்தம் | 36 |
| பஞ்சாமிர்தரசம் | 76 |
| பஞ்சான்னரசம் | 103 |
| பத்திரகாளிரசம் | 91 |
| பாஞ்சோதிரசம் | 100 |
| பல்வலிக்கு | 22 |
| பவழசுத்தி | 81 |
| பவழபஸ்பம் | ,, |
| பவுத்திரம்புணுகிபுரைவிழுந்த தற்கு மருந்து | 109 |
| பழயசுரத்துக்கு | 26 |
| பாரிசவாய்வுக்குபூப்புடத்தைலம் | 40 |
| பார்வதிரசம் | 93 |
| பாலசஞ்சீவியெண்ணெய் | 113 |
| பாலார்க்கசெந்தூரம் | 86 |
| பாவனகடுக்காய் | 110 |
| பிதாமஹரசம் | 93 |
| பித்தஅமிருதரசம் | 73 |
| பித்தஎரிகுன்மத்துக்குமருந்து | 30 |
| பித்தசுரக்கியாழம் | 106 |
| பித்தத்துக்கு | 10 |
| ,, | 11 |
| ,, | 13 |

| | பக்கம் |
|---|---|
| பித்தத்துக்கு | 14 |
| ,, | 18 |
| பித்தவாய்வுக்கு | 12 |
| ,, | 18 |
| பித்தவெட்டைக்கு | 17 |
| பிராகஅப்ரகபரீட்சை | 83 |
| பிப்பலாதிரசாயனம் | 4 |
| பிரதாபஅக்கினிகுமாரன் | 89 |
| பிரதாபமார்த்தாண்டம் | 38 |
| ,, | 104 |
| பிரதாபமார்த்தாண்டரசம் | 74 |
| பிரம்மாஸ்திரரசம் | 99 |
| பிராணசுரக்கியாழம் | 107 |
| பிராணசுரத்துக்கனுபானம் | ,, |
| பிராணக்கினிகுமாரன் | 89 |
| பிராணேஸ்வரரசம் | 98 |
| பீனசத்துக்குகல்பம் | 29 |
| பீனிசசுவாசத்துக்குதைலம் | 8 |
| புடத்திட்டம் | 126 |
| புஷ்பராகசுத்தி | 82 |
| புஷ்பராகபஸ்பம் | 83 |
| புவனேஸ்வரரசம் | 91 |
| புழுவெட்டுக்குமை | 28 |
| பூசினிக்காய்நெய் | 9 |
| பூதபைரவரசம் | 94 |
| பூதேஸ்வரரசம் | 90 |
| பூநாகஜயநீர்சரக்குகட்டு | 27 |
| பூப்புடத்தைலம் | 40 |
| பூரணசந்திரோதயம் | 34 |
| பூரணசந்திரோதயரசம் | 43 |
| பூரான்கடிவிஷந்தீர | 116 |
| பெரும்பாட்டுக்கு | 9 |
| ,, | 41 |
| ,, | 60 |
| பேநாய்கடிக்கு | 116 |
| பொட்டுக்காண்டி | 126 |
| பொருமலுக்கு | 15 |
| மகாகுமரிரசம் | 77 |
| மகாசுராங்குசம் | 38 |
| மகாசூபகாதிலேகியம் | 6 |
| மகாதாபசுரக்கியாழம் | 106 |
| மகாபைரவம் | 97 |
| மகாபைரவரசம் | ,, |
| மகாராஜமிருகாங்கம் | 71 |
| மகேந்திரரசம் | 96 |
| மணிபூஷணரசம் | 101 |

| | பக்கம். |
|---|---|
| மணிமதாதிசமரோகாசம் | |
| மண்டூக அப்ரகபரீட்சை | 84 |
| மதனகாமேசரிதைலம் | 20 |
| மதனசுந்தரரசம் | 51 |
| மதுஸ்மிகலேகியம் | 113 |
| மயக்கத்துக்கு | 18 |
| மாகதசுத்தி | 82 |
| மரகதபஸ்பம் | ,, |
| மருந்துகள்செய்யுங்காலம் | 126 |
| மலட்டுவலிக்குகடுகு | 29 |
| மன்மதசிந்தாமணிலேகியம் | 19 |
| மாணிக்கசுத்தி | 82 |
| மாணிக்கபஸ்பம் | 82 |
| மாரெரிச்சலுக்குமருந்து | 30-31 |
| மாணிமகரத்வஜாசம் | 103 |
| மிருதார்சிங்கிசெந்தூரம் | 109 |
| மிருத்துஞ்சயரசம் | 98 |
| மிருத்தோத்தாபனரசம் | ,, |
| முட்டைக்காண்டி | 126 |
| முத்துசுத்தி | 81 |
| முத்துபஸ்பம் | ,, |
| மூர்ச்சீர்வாதக்கியாழம் | 77 |
| முறைபித்தசுரக்கியாழம் | 106 |
| முறைபித்தவாதசுரக்கியாழம் | 105 |
| முறைபிராணசுரக்கியாழம் | 107 |
| முறைவாதசுரக்கியாழம் | 105 |
| மூத்திரகிருச்சாத்துக்கு | 32 |
| மூர்ச்சைக்குமருந்து | 30 |
| ,, | 107 |
| மூலகுடாரம் | 73 |
| மூலரோகத்திற்கு | 58 |
| மூலவாய்வுக்கெண்ணெய் | 23 |
| மூலிகைவிஷ அறிவிப்பு | 30 |
| மெருகன்கிழங்குகடுகு | 3 |
| மேகசஞ்சிவிமாத்திரை | 66 |
| மேகத்துக்கு (சகல) | 113 |
| மேகபித்தவாய்வுக்கு | 13 |
| மேகாணமாற்றுமூலிகை | 112 |
| மேகவெட்டைகிரந்திக்கு | 117 |
| ருதுவாகமருந்து | 75 |
| ரோகபஞ்சினரசம் | 102 |
| வங்கபஸ்பம் | 42 |
| வங்குக்குமேலேதடவும்மருந்து | 28 |
| வசந்தகுசுமாகரம் | 34-47-71 |
| வச்சிரஅப்ரகபரீக்ஷை | 84 |
| வச்சிரக்குகை | 126 |

| | பக்கம். |
|---|---|
| வயிறெரிவுக்கு | 31-41 |
| வயிற்றுக்கடுப்புக்குலேகியம் | 24 |
| வறட்சிக்குபூசினிக்காய்நெய் | 9 |
| வாதசிலேத்துமஅக்கினிமந்தத்துக்கு | 7 |
| வாதசுரக்கியாழம் | 105 |
| வாந்திக்குஅனுபானம் | 106 |
| வாந்திக்குகியாழம் | 31 |
| வாந்திக்குக்கொடுக்கும்மருந்து | 75 |
| வாந்திக்குநெய் | 9 |
| வாந்திபேதிமாத்திரை | 109 |
| வாயுஅமிருதரசம் | 73 |
| வாய்வுக்கு | 5 |
| ,, | 16 |
| விக்கலுக்குநெய் | 9 |
| விக்கலுக்குமருந்து | 106 |
| விஜயபைரவரசம் | 95 |
| விஷப்பிரதிவிஷம் | 114 |
| விபக்திசூரணம் | 76 |
| விரேசனத்திரவியம் | ,, |
| விரேசனத்துக்கு | 72-73 |
| வில்வாதிகுழம்பு | 17 |
| வில்வாதிலேகியம் | ,, |
| ,, | 18 |
| வீரபத்திரரசம் | 102 |
| வீரப்பிரதாபரசம் | 99 |
| வீரவிக்கிரமரசம் | 37-94 |
| வீரியவிர்த்திக்கு | 19-20-21 |
| வெண்கலசுத்தி | 80 |
| வெண்கலசெந்தூரம் | ,, |
| வெண்கலபஸ்பம் | ,, |
| வெள்ளிசுத்தி | 79 |
| வெள்ளிசெந்தூரம் | 80 |
| வெள்ளிபஸ்பம் | 79 |
| வெள்ளிப்பிரவாளாதிமாத்திரை | 67 |
| வெள்ளீயசுத்தி | 77 |
| வெள்ளீயசெந்தூரம் | 79 |
| வெள்ளீயபஸ்பம் | ,, |
| வெள்ளைப்பாஷணசுத்தி | 40 |
| வெறிபித்தத்துக்குமருந்து | 30 |
| வைரேரியசுத்தி | 83 |
| வைரேரியபஸ்பம் | ,, |
| வைஷ்ணவவீரரசம் | 92 |
| வைரசுத்தி | 81 |
| வைரபஸ்பம் | 82 |